

# மைத்ரி

## திருப்புமுனை

MAITHRI - THE TURNING POINT

# மைத்ரி

## திருப்புமுனை

**MAITHRI - THE TURNING POINT**

**MAITHRI - THE TURNING POINT**

First Print - 2017 January

ISBN : 978-955-1948-07-8

Published By
**President's Media Division**

# மைத்ரி திருப்புமுனை

**MAITHRI - THE TURNING POINT**


ஆசிரியர்
**ரவி ரத்னவேல்**

Editor
**Ravi Rathnaveil**

உதவி ஆசிரியர்
**வதீஸ் வருணன்**

Associated Editor
**Vathees Varunan**

ஆசிரியர் குழு:
**நடராஜா ராமலிங்கம்**
**எப். எம். ஐயூப் கான்**
**தம்பிராஜா நேசராஜ்குமார்**
**பத்மகலா பழனிவேல்**

Editorial Team
**Nadaraja Ramalingam**
**F.M.Ayoob Kahn**
**Thambirajah Nesarajkumar**
**Bathmakala Palanivel**



# உள்ளடக்கம்


- முன்னுரை 7
- படிக்கற்களாக மாறிய தடைக் கற்கள் 9-12
- மைத்ரியின் குடும்பப் பின்னணி 13-16
- கடல் பார்த்த கதை 17-19
- அபூர்வமான அரசியல் பிரவேசம் 20-24
- மறக்க முடியாத மாணவப் பருவம் 25-31
- தும்புத்தடி பூசை 32-33
- முதல் மேடைப்பேச்சு 34-36
- செய்யாத தவறுக்கு கிடைத்த தண்டனை 37-45
- நேர்மை தவறாமை 46-50
- தோல்வி ஏற்படுத்திய சிக்கல் 51-53
- அரச சேவைக்கு முற்றுப்புள்ளி 54-56
- அரசியலுக்காக தொழிலை கைவிடுதல் 57-58
- காதல் கதை 59-64
- மைத்ரியின் நிழல் 65-66
- கவிழ்ந்து கிடந்த கட்சி 67-69
- துப்பாக்கிச் சூடு 70-73
- சாக்கடையில் தள்ளிய குண்டர்கள் 74-75
- பொலிஸ் வாகனத்தில் தலையை வைத்தமை 76-78
- வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட பேச்சாளர் 79-81

- பெரும்புள்ளிகள் மத்தியில் ஒரு சிறுபுள்ளி 82-84
- தாய்க்கும் மகனுக்கும் இடையில் சிக்கிய மைத்ரி 85-87
- தந்தையின் மறைவு 88-90
- பாராளுமன்ற பிரவேசம் 91-94
- பொலிஸ் சுற்றிவளைப்பு 95-98
- கொல்ல வந்தவனை வாழ வைத்தல் 99-101
- ஜனாதிபதி பிரேமதாச பற்றிய அனுபவம் 102-104
- பகிடியின் பாரதூரம் 105-108
- மகாவலி அமைச்சர் பதவி 109-111
- மாறுவேடத்தில் சென்ற பயணம் 112-114
- மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் உதயம் 115-120
- பாலம் பற்றிய கனவு 121-124
- பொலன்னறுவைப் பிள்ளைகள் 125-127
- சுதந்திரக் கட்சியின் செயலாளர் 128-132
- சில துன்பியல் அனுபவங்கள் 133-135
- புலிகளின் தாக்குதலிகளிலிருந்து தப்பிப் பிழைத்தல் 136-141
- இறுதி யுத்தத்தின் பதில் பாதுகாப்பு அமைச்சர் 142-143
- மாற்றத்துக்கு வித்திட்ட காரணங்கள் 144-146
- அந்த நீண்ட இரவு 147-150
- பாப்பரசரும் இலங்கை அரசியலும் 151-155
- பொது வேட்பாளர் 156-197
- சர்வதேச ரீதியில் இருளில் இருந்த இலங்கை 198-203
- அரசியலில் உச்சம் தொட்ட கிராமப்புற இளைஞன் 204-218
- இன்றைய தலைவர்களே இன்றைய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும் 219-228

# முன்னுரை

மைத்ரிபால சிறிசேன அவர்கள் இலங்கையின் சமகால அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அரசியல்வாதிகளில் ஒருவராவார். இலங்கையின் முதன்மை அரசியல் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரான அவர் நான்கு தசாப்தங்களுக்கும் மேலான அரசியல் அனுபவம் மிக்கவர். பொலன்னறுவையை பிரதிநிதித்துவப்படுத்தி அரசியலில் பிரவேசித்த இவரது அரசியல் பயணமானது கரடுமுரடான துன்பியல் பாதை என்பது அவருடன் நெருங்கிப் பழகிய சிலருக்கு மட்டுமே தெரியும்.

"மைத்ரி - திருப்புமுனை" இந்த பண்பட்ட அரசியல்வாதி தொடர்பில் எழுதப்பட்ட சுயசரிதையோ, மிகைப்படுத்திய அறிக்கையோ அல்ல. இது மைத்ரிபால சிறிசேன எனும் உண்மையான அரசியல் வகிபாகம் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற முறைகளையும் முகங்கொடுத்த சவால்களையும் ஒளிவு மறைவின்றி கூறும் நூலாகும்.



# படிக்கற்களாக மாறிய தடைக் கற்கள்

இலங்கையின் அரசியல் போக்கை மாற்றியமைத்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் பயணம் 65 வருடங்களைத் தாண்டிவிட்டது. அக்கட்சியின் தலைவர் பதவியை வகிக்கும் பல்லேவத்த கமராலலாகே மைத்ரிபால சிறிசேன எனும் மைத்ரிபால சிறிசேன அவர்களின் வயதும் அதற்கு சமனானதாகும். இது ஒரு அபூர்வமான நிகழ்வாகும்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்கள் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகி 1951 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்து 24 மணித்தியாலங்கள் ஆவதற்கு முன்னர், அதாவது செப்டெம்பர் 03 ஆம் திகதி காலையில் பல்லேவத்த கமராலலாகே சிறிசேன, ஏ.டி நந்தாவதி தம்பதியினரின் புதல்வராக மைத்ரிபால இவ்வுலகில் பிறந்தார்.

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த மைத்ரி இந்த நாட்டின் எதிர்காலம் குறித்த தீர்மானங்களை மேற்கொள்ளும் அதி உயர் பதவிக்கு வருவார் என அவரது பெற்றோர் கூட அன்று நினைத்திருக்க மாட்டார்கள்.

பொலன்னறுவை லக்ஸ உயன பாடசாலையில் அரிச்சுவடி பயின்ற அவர் அங்கிருந்து தோப்பாவெவ மகா வித்தியாலயத்திற்கும் பின்னர் உயர் கல்விக்காக பொலன்னறுவை றோயல் கல்லூ ரிக்கும் சென்றார். பாடசாலைப் பருவத்திலேயே மைத்ரியின் அரசியல் பயணமும் ஆரம்பமானது. அவர் புத்தகங்களில் இருந்து மட்டுமல்லாமல் அன்றாட வாழ்க்கை அனுபவங்களில் இருந்தும் அரசியலுக்கான பக்குவத்தைப் பெற்றுக்கொண்டார். பாடசாலைப் பருவத்திலிருந்தே துடிப்பான ஆளுமை மிக்கவராக விளங்கிய அவர், பாடசாலை மாணவராக இருந்தபோதே பொலன்னறுவை

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அமைப்பின் செயலாளர் பதவியை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆயினும் மைத்ரிபால சிறிசேனவின் அரசியல் பயணம் இலகுவானதாக அமையவில்லை. அதனால் பல்வேறு வகையான சுக, துக்க அனுபவங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் சிறைவாசம் அனுபவிக்கும் நிலையும் ஏற்பட்டது.

1971 ஆம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். இத்தனைக்கும் அவருக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையில் எந்தவித தொடர்பும் இருக்கவில்லை. தனது கட்சி ஆட்சியில் இருந்தபோதே நிரபராதியான தான் சிறை வாழ்க்கையை அனுபவிக்க நேர்ந்ததையிட்டு அவர் கட்சியின் மீது வெறுப்புக் கொள்ளவில்லை. கட்சியை விட்டுச் செல்லவுமில்லை. மாறாக கட்சியை அவர் அதிகமாகவே நேசித்தார்.

1974 ஆம் ஆண்டு கூட்டுறவு வழங்கல் உத்தியோகத்தராக மைத்ரி தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். அதன் பின்னர் கிராம உத்தியோகத்தராக நியமிக்கப்பட்ட அவர், அந்தப் பதவியில் இருந்து கொண்டு தனது அரசியல் கருத்தைப் பிரதிபலிக்க முடியாது என்பதால் 1978 ஆம் ஆண்டு அரச சேவைக்கு விடைகொடுத்து கிராம சேவகர் பதவியிலிருந்து விலகினார். 1980 ஆம் ஆண்டு எப்பாவெல கூட்டுறவுச் சங்கத்தின் வழங்கல் அலுவலராகவும், கல்வி அதிகாரியாகவும் சிறிது காலம் கடமையாற்றினார்.

கட்சியின் முன்னேற்றத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பின் காரணமாக 1979 ஆம் ஆண்டு மைத்ரிக்கு பொலன்னறுவை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்டச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. கட்சியின் சார்பில் பல்வேறு சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. பல வெளிநாட்டுப் பயிற்சிச் செயலமர்வுகளிலும் அவர் கலந்துகொண்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அப்போது அதிகாரத்திலிருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினால் பலவீனப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நாடளாவிய ரீதியில் கட்சியைக் கட்டியெழுப்பும் பொறுப்பு மைத்ரி போன்ற இளைஞர்களிடமே வழங்கப்பட்டது. இந்த அர்ப்பணிப்பின் காரணமாக அவர் 1981 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அகில இலங்கை இளைஞர் சம்மேளனத்தின் செயலாளர் பதவிக்கும் அதற்கு இரண்டு வருடங்களுக்குப் பின்னர் 1983 ஆம் ஆண்டு அதன் தலைமைப் பதவிக்கும் அவர்

நியமிக்கப்பட்டதுடன், கட்சியின் தீர்மானங்களை மேற்கொள்ளும் மத்திய செயற்குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார். திறமையான இளைஞர்களின் பங்களிப்பு கட்சியைக் கட்டியெழுப்புவதற்கு அவசியம் என அறிந்த அப்போதைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் மைத்ரியை பொலன்னறுவை தொகுதி அமைப்பாளராக நியமித்தார்.

1988, 1989 காலப்பகுதி மக்கள் விடுதலை முன்னணியின் கெடுபிடிகள் நிறைந்திருந்த காலமாகும். எனினும் மைத்ரி அந்த சவாலுக்கும் முகங்கொடுத்தார். 1989 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு முதல் முறையாக அவர் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். அதன்போது எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து ரஜரட்ட மக்களின் குரலை பாராளுமன்றத்தில் ஒலிக்கச் செய்தார்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் 17 வருடகால ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைப் பிடித்தது. பல வருடங்கள் கஷ்டப்பட்டு தமது கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவர இரவு பகலாக உழைத்த மைத்ரிக்கு நீர்ப்பாசன பிரதி அமைச்சர் பதவியே வழங்கப்பட்டது. தனது பிரதேசத்தில் கஷ்டப்படும் விவசாய சமூகத்திற்கு சேவை செய்வதற்கு நீர்ப்பாசன பிரதி அமைச்சர் பதவி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை விட பெறுமதி வாய்ந்ததென அவர் கருதினார்.

1997 இல் மைத்ரி மகாவலி அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டார். பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் காணி, நீர்ப்பாசன, மின்சாரத்துறை அமைச்சருமான சி.பீ சில்வா, 1970 ஆம் ஆண்டு தோல்வியடைந்ததன் பின்னர் பொலன்னறுவை மாவட்டத்திற்கு 27 வருடங்களுக்குப் பின்னரே அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பொறுப்பு கிடைக்கப்பெற்றது.

1997 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உபசெயலாளராக நியமிக்கப்பட்ட மைத்ரி 2001 ஜூன் மாதம் கட்சியின் பொதுச் செயலாளரானார். அன்று முதல் அவர் கட்சியின் செயலாளரின் பணிகளை சீரான முறையில் மேற்கொண்டு அதற்கு புதிய உத்வேகமளித்தார். 2006 ஆம் ஆண்டு விவசாய, நீர்ப்பாசன, மகாவலி, சுற்றாடல்துறை அமைச்சர் பதவிக்கும், 2007 ஆம்

ஆண்டு விவசாய அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர் பதவிக்கும், 2010 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சர் பதவிக்கும் மைத்ரி நியமிக்கப்பட்டார்.

அத்தோடு பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியின் முக்கிய பதவியான சபை முதல்வர் பதவிக்கும் அவர் நியமிக்கப்பட்டார். 26 வருடங்கள் தோல்வியுறாது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்திருப்பதுடன், 2005 ஆம் ஆண்டு முதல் அரச பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பதிற்கடமை அமைச்சராக ஐந்து சந்தர்ப்பங்களில் பணியாற்றியுள்ளார். எல்.ரி.ரி.ஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பாதுகாப்புப் படையினரின் பிடிக்குள் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் மைத்ரிபால சிறிசேனவாகும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையே 2004 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திலும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்குமிடையே 2006 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திலும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் கைச்சாத்திட்ட கட்சியின் செயலாளர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

பொலன்னறுவை மாவட்டத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகித்த மைத்ரிபால சிறிசேன, அவரது 26 வருட பாராளுமன்ற வாழ்க்கையிலும், நான்கு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட அரசியல் வாழ்க்கையிலும் பொலன்னறுவை மாவட்டத்திற்கும் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் பெற்றுக்கொடுத்த உயிர்த்துடிப்பான பங்களிப்பை முழு நாடும் அறியும்.

இப்பங்களிப்புகளை எதிர்காலத்திலும் அவர் குறைவின்றி வழங்குவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அந்த வாய்ப்பினை அவருக்கு வழங்கும் வகையிலேயே இந்நாட்டு மக்கள் 2015 ஜனவரி 08 ஆம் திகதி மைத்ரிபால சிறிசேன அவர்களை ஜனாதிபதி பதவியில் அமர்த்தினார்கள்.



# மைத்ரியின் குடும்பப் பின்னணி

இரண்டாம் உலகப் போரில் இலங்கை பங்குபற்றவில்லை. ஆயினும் அதில் பிரித்தானியப் பேரரசு சார்பில் இலங்கையர்கள் பங்குபற்றினார்கள். அவ்வாறு பிரிட்டிஸ் ரோயல் இராணுவத்தில் இணைந்து உலகப் போரில் பங்குபற்றிய அல்பிரட் சிறிசேன, உலகப் போர் முடிவில் பிரிட்டிஸ் படையிலிருந்த



இலங்கையர்களுக்கு ஓய்வு பெறக் கிடைத்த வாய்ப்புக்கமைய ஓய்வு பெற்றார்.

மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள யாகொட எனும் கிராமத்திலேயே அல்பிரட் சிறிசேன, ஏ.டி.நந்தாவதி தம்பதியினர் நிரந்தரமாக வசித்து வந்தனர். அதேவேளையில் உலகப் போரில் பங்குபற்றி ஓய்வுபெற்ற படையினரை கௌரவிக்கும் நோக்கிலும், நாட்டின் அபிவிருத்தியை கருதியும் பிரதமர் டி.எஸ். சேனாநாயக்க பொலன்னறுவை பிரதேசத்தில் பராக்கிரம சமுத்திரத்தை அண்டிய பகுதியில் ஒவ்வொருவருக்கும் ஐந்து



ஏக்கர் வயற்காணியையும் மூன்று ஏக்கர் மேட்டுக்காணியையும் வழங்கி, குடியமர்த்தினார்.

இள வயதிலேயே ஓய்வுபெற்றிருந்த அல்பிரட் சிறிசேன, தனது குடும்பத்தாருடன் பொலன்னறுவைக்கு சென்று லக்ஸ உயன எனப் பெயரிடப்பட்ட குடியேற்ற கிராமத்தில் குடியமர்ந்து விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினார். அல்பிரட் சிறிசேனவும், மனைவி நந்தாவதியும் எஸ்.எஸ்.சீ (தற்போதைய க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு சமனான) சித்தியடைந்தவர்களாக இருந்ததால் அல்பிரட் சிறிசேனவிற்கு கிராம விதானையார் பதவியும் (தற்போதைய கிராம அலுவலர் பதவி), திருமதி சிறிசேனவிற்கு ஆசிரியர் பதவியும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது.

இதன்படி கம்பஹாவில் பிறந்த மைத்ரி பொலன்னறுவை சென்றதற்கான காரணிகளில் இரண்டாம் உலகப் போரும் ஒன்றாக அமைந்துவிட்டது. தந்தையார் கிராம விதானையாராக கடமையாற்றியபோதே விவசாயத்திலும் ஈடுபட்டார். தாயார் ஆசிரியையாக இருந்த போதிலும் தான் கற்பித்த மிகப் பின்தங்கிய பாடசாலையிலேயே பிள்ளைகளையும் சேர்த்தமை அவர்கள் மனித நேயம் மிக்க, சமூகத்தில் அடி மட்டத்திலுள்ள மக்களையும் நேசிப்பவர்களாகவே இருந்தார்கள் என்பதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அவர்கள் நினைத்திருந்தால் ஆடம்பரமான நகர வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் சமூக பொறுப்புடன் வாழ பிள்ளைகளுக்கு வழிகாட்டியதன் காரணமாகவே சிறு வயதிலேயே சண்முகதாசனின் சமதர்ம கோட்பாடுகளின் பால் மைத்ரி ஈர்க்கப்பட்டிருக்கலாம். பின்னர் அவரை விட்டு விலகிய போதிலும் பொதுப் பிரச்சினைகளில் தலையிடும் பாங்கு, சமூக நியாயத்துக்காக குரல் கொடுத்தல் போன்ற குணவியல்புகளைத் தொடர காரணமாக அமைந்திருக்கும்.

மாணவர்களுக்கு நியாயம் கிடைக்க குரலெழுப்பியதன் காரணமாக மாணவப் பருவத்திலேயே சிறைசெல்லுதல், சிறையிலிருந்தபோதே உயர்தர பரீட்சை எழுதியமை, வாசிப்பின் மூலம் தன்னை பூரணப்படுத்திக்கொள்ள எடுத்துக்கொண்ட முயற்சி, கூட்டுறவுத்துறை, ஊடகத்துறை, பொது நிர்வாகம் என பல விடயங்களிலும் பட்டறிவைப் பெற்றமை, சோவியத் யூனியனில் (தற்போதைய ரஷ்யா) டிப்ளோமா பயிற்சியைப் பெற்றதுடன் கியூபாவுக்கு சென்று பொதுஉடைமைத் தொடர்பான அனுபவத்தை பெற்றமை போன்றவையே இடைவிடாத போராட்டத்திற்கு காரணமாக அமைந்தது எனலாம்.

ஆரம்பத்திலிருந்தே பணமீட்டும் சுயநலத்துடன் அரசியலில் ஈடுபடாமல் உண்மையிலேயே மக்களுக்காக, சமூகத்துக்காக தன்னால் இயன்றளவு பணியாற்ற வேண்டும் என்ற சமத்துவ கோட்பாட்டுடன் அரசியலில் ஈடுபட்டதன் காரணமாகவே கறை படியா கரங்களுடன், எவரும் குற்றஞ்சாட்ட முடியாத ஓர் அரசியல் வகிபாகமாக இன்றுவரை மைத்ரி திகழ்கிறார்.

அதன் காரணமாகவே அவர் தனது அமைச்சுப் பதவியையும், அனைத்து வசதி வாய்ப்புகளையும் கைவிட்டு, தனது உயிரையும் குடும்பத்தினரின் உயிரையும் பணயம் வைத்து கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிட்டார்.



# கடல் பார்த்த கதை

பொலன்னறுவை லக்ஸ உயன வித்தியாலயத்தின் அதிபர் சிறிசேன விஜேசிறிவர்த்தன மாத்தறையைச் சேர்ந்தவர். தேசிய உடையணியும் அவர் எல்லோராலும் நேசிக்கப்படுபவர். அவரது மனைவியும் ஆசிரியை என்பதனால் அவர்கள் பாடசாலை விடுதியிலேயே தங்கியிருந்தனர். அதிபரின் பிள்ளைகளும் அப்பாடசாலையிலேயே கல்வி கற்றுவந்தனர். மைத்ரிபால சிறிசேன மாணவனும் அப்பாடசாலையிலேயே படித்தார்.

மாணவன் மைத்ரிபாலவின் தந்தை விதானையார் என்பதனால் அதிபர் குடும்பத்துடன் நெருக்கமான உறவு இருந்தது. அதனால் மைத்ரிபாலவுக்கு அதிபரின் வீடு பரிச்சயமானதாகவே இருந்தது. ஒரு நாள் "மைத்ரிபால கடலைப் பார்த்திருக்கிறீரா?" என்று அதிபர் கேட்டார். "இல்ல சேர்" என்றார் மைத்ரி. 14 வயதாகியும் மைத்ரி, கடலைக் கண்டிருக்கவில்லை.



விடுமுறைக் காலத்தில் அதிபர் தனது குடும்பத்தாருடன் ஊருக்கு போவது வழக்கம். "இம்முறை ஊருக்குப் போகும் போது மைத்ரியையும் கூட்டிக்கொண்டு போக வேணும். மைத்ரிபால கடலையே பார்க்காதவர். அதனால் அவருக்கு கடலைக் காட்ட வேண்டும்." என்று அதிபர் மைத்ரியின் தந்தையிடம் கூறினார். அதற்கு மைத்ரியின் தந்தையும் உடன்பட்டார். அதற்கமைய மைத்ரிக்கு மாத்தறை செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்லும் புகையிரதம் காலை 9.30 மணிக்கு லக்ஸ உயன புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்டு மாலை 5.00 மணிக்கு கொழும்பை வந்தடைந்தது. கொழும்பு கோட்டையிலிருந்து கடுகதிப் புகையிரதத்திலேயே மாத்தறைக்குச் செல்ல வேண்டும். புகையிரதம் கோட்டையைத் தாண்டியவுடன் கடலைக் காணும் பாக்கியம் மைத்ரிக்கு கிடைத்தது. வாழ்க்கையில் முதல் தடவையாக கடலைக் கண்டதனால் அவர் மகிழ்ச்சியில் கூச்சலிட்டார். மாத்தறை செல்லும் வரை அவரது கண்கள் கடலைப் பார்த்தவாறே இருந்தன. அது அவருக்கு ஒரு புதிய அனுபவத்தைக் கொடுத்தது.

மாத்தறையில் ஒருவாரம் தங்கியிருந்த மைத்ரி ஊருக்கு திரும்பியதும் அந்த புதிய அனுபவத்தை நண்பர்களிடமும், உறவினர்களிடமும் பகிர்ந்து கொண்டார்.

அன்று 14 வயதுவரை கடலைக்கூட கண்டிருக்காத சிறுவனாக இருந்த மைத்ரியே இன்று நாட்டின் தலைவராக வந்துள்ளார். அவரது அரசியல் வாழ்வின் 40 ஆண்டு நிறைவையும், பாராளுமன்ற வருகைக்கு 18 ஆண்டு நிறைவையும் குறிக்கும் முகமாக 2007

பெப்ரவரி 15 ஆம் திகதி பொலன்னறுவை புலஸ்தி மண்டபத்தில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்வில் மைத்ரி தனக்கு கற்பித்த ஆசிரியர்களை அழைத்து வந்து அவர்களை வணங்கி கௌரவப்படுத்தினார். மைத்ரிக்கு கடலைக் காட்டுவதற்கு கூட்டிச்சென்ற சிறிசேன விஜேசிறிவர்த்தனவும் அந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.



# அபூர்வமான அரசியல் பிரவேசம்

மைத்ரிபால சிறிசேன அப்போது தோப்பாவெவ மகா வித்தியாலயத்தின் மாணவனாக இருந்தார். 10 வயதான அந்தச் சிறுவன், தனது கற்றல் நடவடிக்கைகளுக்கு புறம்பாக மற்றுமொரு விடயத்திலும் அதிகம் அக்கறை காட்டினான். அவ்வப்போது அரசியல் தொடர்பாக வெளியாகும் புத்தகங்களை வாசிப்பதற்கும் அது தொடர்பாக கேட்டறிந்து கொள்வதற்கும் அவன் மிகுந்த ஆர்வம் காட்டினான். இக்காலப்பகுதியில் அவனது பாடசாலைக்கு ஒரு இளைஞன் அடிக்கடி வந்து போனார். அவரது கைகளில் சீன கம்யுனிசவாதிகளின் வெளியீடான "தொழிலாளி" என்ற பத்திரிகை இருக்கும். அரசியல் பற்றிய ஆர்வம் கொண்டிருந்த மைத்ரிக்கு அவ் இளைஞன் அப் பத்திரிகையை கொடுத்தார். அதில் அச்சிறுவனுக்கு விருப்பமான பல விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. வளர்ந்தவர்கள் பலரும் இவ்வெளியீட்டை கவனத்தில் எடுக்காத நிலையில், வீட்டில் உள்ளவர்களுக்கும் தெரியாமல் சிறுவன் மைத்ரி அப்பத்திரிகையை தொடர்ந்தும் வாசிக்கப் பழகியிருந்தான். அதுமட்டுமன்றி அரசியல் தொடர்பில் எழுதப்பட்ட பல விடயங்களை வாசிப்பதற்கும் அது தொடர்பாக கேள்விகளை எழுப்புவதற்கும் பழகியிருந்ததுடன், அதன் மூலம் அப்போதைய தேசிய மற்றும்

சர்வதேச அரசியல் குறித்தும் அதிகம் அறிந்து வைத்திருந்தான். ஒரு தேர்ந்த அரசியல்வாதிக்குரிய அடிப்படை அரசியல் அறிவு இதன் மூலமே அவனுக்குக் கிடைத்தது.

தனது அரசியல் அறிவு மற்றும் அது தொடர்பான ஆர்வம் என்பவற்றை தனக்குள் மறைத்துக்கொள்ள விரும்பாத அச்சிறுவன், அதனை தனது வகுப்பிலும் ஊரிலும் உள்ள நண்பர்களுக்கு எடுத்துக் கூறியதுடன், தன்னிடமிருந்த புத்தகங்களையும் பத்திரிகைகளையும் கூட பரிமாறிக்கொண்டான்.

மைத்ரியின் பாடசாலைக்கு வந்து சென்ற அந்த இளைஞன் புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் மட்டுமன்றி உலக மக்களால் போற்றப்படும் மாவோ சேதுங் உள்ளிட்ட தலைவர்களைப் பற்றிய நூல்களையும் மாணவர்களுக்குக் கொண்டுவந்து கொடுத்தான். இதன் காரணமாக உலகத் தலைவர்கள் குறித்து மைத்ரி மனதில் உயர்ந்த மதிப்பு ஏற்பட்டிருந்ததுடன், அவர்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதில் ஆர்வமும் ஏற்பட்டது. அதன் விளைவாக மைத்ரி சீன கம்யூனிசவாத கொள்கை மீது ஈர்க்கப்பட்டார். இதற்கிடையில் "தொழிலாளி" என்ற பத்திரிகையை விநியோகித்து வந்த இளைஞன் ஒரு நாள் ஒரு அபூர்வமான செய்தியொன்றைக் கொண்டு வந்தான். சீன கம்யூனிசத் தலைவர்கள் பங்குபற்றும் கூட்டமும், புதியவர்களுக்கு விடயங்களைத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடலும் கிரித்தலே பிரதேசத்தில் நடைபெற உள்ளது என்பதே அச்செய்தியாகும். செய்தியைக் கேட்டதும் அரசியல் தகவல்களை அறிந்துகொள்ள பேரார்வம் கொண்டிருந்த மைத்ரியும் அவரது சில நண்பர்களும் தோழர் ஜயசேகரவின் வீட்டில் இடம்பெற்ற அக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய கிரித்தலே பிரதேச முக்கியஸ்த்தராக இருந்த சீன கம்யூனிஸ்ட்டுகளின் தலைவராக இருந்த யூ.எஸ். சண்முகதாசன், எஸ்.டி பண்டாரநாயக்க உள்ளிட்ட பலர் அக்கலந்துரையாடலுக்காக வருகை தந்திருந்தனர். அதுவே மைத்ரிபால சிறிசேன எனும் இளைஞன் சீன கம்யூனிஸ்ட்டுகளின் கூட்டமொன்றில் பங்குபற்றிய முதலாவது சந்தர்ப்பமாக இருந்தது.

இக்காலப் பகுதியிலேயே 1965 மே தினமும் இடம்பெற்றது. அத்தோடு அது ஒரு விசேட தினமாகவும் அமைந்தது. அந்த வருட உலகத் தொழிலாளர் தினமும், வெசாக் பௌர்ணமி தினமும் ஒரே நாளில் அமைந்தமையால் மே மாதம் 01 ஆம் திகதி பௌத்தர்கள் என்ற வகையில் சமய நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும்,

மே 02 ஆம் திகதி அரசியல் கட்சிகள் உலகத் தொழிலாளர்கள் தினத்தை கொண்டாடும் ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்துமாறும் அப்போதைய அரசாங்கம் மக்களைக் கேட்டுக் கொண்டது.

அரசாங்கத்தின் அக்கோரிக்கையை சீன கம்யூனிஸ்டுக்களைத் தவிர்ந்த ஏனைய எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டன. மே முதலாம் திகதி உலகத் தொழிலாளர் தினமாகும். எனவே அன்றைய தினம் நடத்தவேண்டிய ஊர்வலங்கள், கூட்டங்கள் தேசிய முதலாளித்துவ வர்க்கத்திற்கும் உலக ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிரான போராட்டமாக முன்னெடுக்க வேண்டும். அந்தத் திகதியை தம்மால் மாற்ற முடியாது. மே 02 ஆம் திகதி கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதாக இருந்தால் அவை தொழிலாளர் வர்க்கத்தின் திருமண விருந்தாகவே இருக்கும். ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகள் மே 02 ஆம் திகதி ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்தினாலும் நாம் அதைச் செய்யப் போவதில்லை. நாம் உலக தொழிலாளர் தினமான மே 01 ஆம் திகதியே அதனை கொண்டாடுவோம் என தோழர் சண்முகதாசன் சீன கம்யூனிஸ்ட் அமைப்பாளர்களின் கூட்டத்தில் தெரிவித்தார். அந்த வகையில் மே 01 ஆம் திகதி அனைவரும் கொழும்புக்கு வரவேண்டுமென கட்சியின் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மே 01 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு சீன கம்யூனிஸ்ட் கட்சியினர் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் ஒன்றுகூடினர். பொலன்னறுவையைச் சேர்ந்த மைத்ரியும் அங்கு வந்திருந்தார். முழு நாட்டிலிருந்தும் சுமார் 200 தொடக்கம் 300 பேர்வரை அங்கு வந்திருந்தனர். கொடிகளையும் பதாதைகளையும் ஏந்திக்கொண்டு டட்லியின் அரசாங்கத்திற்கும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதத்திற்கும், சோவியட் ஏகாதிபத்தியவாதத்திற்கும் எதிராக அவர்கள் ஊர்வலம் செல்லத் தயாரானபோது குண்டாந் தடிகளுடன் லொறிகளில் அங்கு வந்திறங்கிய பொலிஸார் அங்கு கூடியிருந்தவர்களை துரத்தித் துரத்தி அடித்தனர். தோழர் சண்முகதாசன், எஸ்.டி. பண்டாரநாயக்க ஆகியோர் எங்கு சென்றார்களென்றே தெரியவில்லை. கொழும்பு வீதிகளைப் பற்றி அறிந்திராத மைத்ரியும் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக ஓடினார். கொழும்பிலிருந்து இரவு 08 மணிக்கு இரவு தபால் புகையிரதம் பொலன்னறுவைக்கு செல்லும் என்பதை மட்டுமே அவர் அறிந்து வைத்திருந்தார்.

தாக்குதலின் காரணமாக அச்சமடைந்திருந்த இளைஞர் மைத்ரி புகையிரதத்தில் ஏறி ஒரு ஓரத்தில் அமர்ந்து பெருமூச்சு விடலானார். அடுத்தநாள் அதிகாலை மூன்றரை மணியளவில் புகையிரதம் பொலன்னறுவையை சென்றடைந்திருந்தது. மைத்ரியின் முகத்தில் ஒரு உற்சாகம் தெரிந்தது. தம்மைப்பற்றி அவருக்கு பெருமையாகவும் இருந்தது. அவர் ஒரு வெற்றிக்களிப்புடன் புகையிரதத்திலிருந்து இறங்கினார். புரட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு ஜாம்பவானாக தன்னை எண்ணிக்கொண்டு அவர் வீட்டுக்குச் சென்றார்.

மறுநாள் இடம்பெற்ற ஏனைய கட்சிகளின் மே தினக் கூட்டங்களைக் குழப்ப சீன கம்யுனிஸ்டுக்கள் எடுத்த முயற்சி பெரும் கலவரத்திலேயே முடிந்தது. இந்த நிகழ்வு சீன கம்யூனிஸ்டுகள் தொடர்பில் மைத்ரியின் உள்ளத்தில் வெறுப்பை ஏற்படுத்தியது. கம்யுனிஸ்டுகாரர்கள் நடந்துகொண்ட விதம் பிழை என்பதே அவரது எண்ணமாக இருந்தது. அச்சமயம் மைத்ரி 16 வயது இளைஞனாக இருந்தபோதிலும் அவர் மார்க்ஸிய நூல்களை வாசித்திருந்தார். அச்சமயம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்பட வேண்டுமென்பதே முக்கிய தேவையாக இருந்தது. அப்படியிருந்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன இணைந்து நடத்திய கூட்டத்தை இவ்வாறு குழப்புவது பிழையானது என்றே அவரது உள்ளம் கூறியது.

சீன கம்யுனிஸ்டுகள் குறித்து அவரது உள்ளத்தில் அச்சம் ஏற்படுவதற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது. சீன கம்யூனிஸ்டுகள் கிரித்தலை காட்டிலேயே தமது அரசியல் வகுப்புக்களை நடத்தி வந்தனர். அங்கு பகல் உணவாக எங்காவது சேனையொன்றிலிருந்து பிடுங்கிய மரவள்ளிக் கிழங்கு மட்டுமே கிடைத்தது. ஆயினும் உறுப்பினர்கள் உணவைச் சாப்பிடுகின்றபோது தலைவர்கள் எவரும் அங்கிருப்பதில்லை. மைத்ரி இதுகுறித்து தொடர்ந்தும் அவதானிக்கலானார். மதிய உணவு முடிந்து சில மணி நேரங்களின் பின்பே தோழர் சண்முகதாசனும் ஏனைய தலைவர்களும் எங்கிருந்தாவது மீண்டும் அங்கு வந்து சேர்வார்கள். ஒரு சில நாட்கள் செல்கையில் மைத்ரி இது தொடர்பில் சண்முகதாசனிடம் "நாமெல்லோரும் ஒன்றாக வந்து படிக்கின்றோம். தாமரை இலையில் மரவள்ளிக் கிழங்கு சாப்பிடுகின்றோம். மார்க்ஸியம் பற்றிப் பேசினாலும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடும்படி எமக்குப் போதித்தாலும், உணவு வேளையில் தோழர்கள் யாரும் இங்கிருப்பதில்லையே" எனக் கேட்டார். "தோழரே எனக்கு வயிற்று

நோவு, எனவே எனக்கு இதனைச் சாப்பிட முடியாது. அதனால்தான் நான் பொலன்னறுவையிலுள்ள விடுதிக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வருகின்றேன்'' என அதற்கு ஒரு ஆச்சரியமான பதிலைக் கூறினார் சண்முகதாசன். தாம் தாமரை இலையில் மரவள்ளிக் கிழங்கு சாப்பிடும்போது தலைவர்கள் விடுதிக்குச் சென்று சாப்பிடும் வித்தியாசம் மைத்ரியை சிந்திக்க வைத்தது.

இலங்கையின் சீன கம்யுனிஸ்டுக்களைப் பற்றி அவரது உள்ளத்தில் வெறுப்பு ஏற்படுவதற்கு இவ்வாறான விடயங்கள் காரணமாய் அமைந்தன. அதனால் சீன கம்யுனிஸ்டுக்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்வதில்லையென மைத்ரி உறுதியாக தீர்மானித்தார். மே தினக் கூட்டத்தில் சீன கம்யுனிஸ்டுக்கள் நடந்துகொண்ட விதமும் மைத்ரிக்கு பிடிக்கவில்லை என்பது சுதந்திரக் கட்சியின் பிரதேச தலைவராக இருந்த லீலாரத்ன விஜேசிங்கவுக்கு தெரியவந்தது. மைத்ரியை சந்தித்த அவர் "மே தினத்தில் நடந்த நிகழ்வு குறித்து நீங்கள் வெறுப்படைந்துள்ளீர்கள் என நான் அறிகின்றேன். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து செயற்பட விருப்பமில்லையா?'' என சுற்றிவளைக்காது நேரடியாகவே மைத்ரியிடம் கேட்டார். "எனக்கும் இப்போது சீன கம்யுனிஸ்டுக்கள் போதுமென்றாகிவிட்டது.'' என மைத்ரி கூறினார். மைத்ரிக்கு வாழ்த்துத் தெரிவித்த லீலாரத்ன விஜேசிங்க விரைவில் மீண்டும் சந்திப்பதற்கு ஒரு நாளைக் குறித்துச் சென்றார்.

ஏற்கனவே அறிவித்திருந்ததன்படி 1967 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி மாலை மைத்ரி லீலாரத்ன விஜேசிங்கவின் வீட்டுக்குச் சென்றார். அன்றுதான் பொலன்னறுவை இளைஞர் அமைப்பை ஸ்தாபிப்பதாக இருந்தது. அங்கு சுமார் 100 இளைஞர்கள் வந்திருந்தனர். மைத்ரி அப்போது சாதாரண தரப் பரீட்சையும் எழுதியிருக்கவில்லை. அப்போதைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பின்படி தொகுதி அமைப்பாளர் வயோதிபராக இருந்தாலும் அவரே இளைஞர் அமைப்பின் தலைவராகவும் நியமிக்கப்படுவார். அதற்கமைய லீலாரத்ன விஜேசிங்க பொலன்னறுவைத் தொகுதியின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதுடன், செயலாளராக மைத்ரி தெரிவு செய்யப்பட்டார். கூட்டம் நிறைவடைந்ததும் விஜேசிங்க மைத்ரியின் முதுகில் தட்டி "மைத்ரி நீங்கள் நன்றாகப் படியுங்கள். உங்களுக்கு நல்லதொரு தொழிலை பெற்றுத் தருகின்றேன்'' என்று கூறினார். இந்த நிகழ்வோடு வாழ்க்கை தொடர்பான புதிய எதிர்பார்ப்பும் ஒரு பொறுப்பு வாய்ந்த செயலாளர் என்ற எண்ணமும் மைத்ரியின் மனதில் ஏற்பட்டது.



# மறக்க முடியாத மாணவப் பருவம்

1970ஆம் ஆண்டில் மைத்ரிபால சிறிசேன பொலன்னறுவை றோயல் கல்லூரியில் உயர்தர மாணவனாக இருந்தார். பாடசாலைகளில் மாணவர் இயக்கங்களை ஸ்தாபிப்பதற்கான வாய்ப்பு அப்போதைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

பல்கலைக்கழகங்களில் மாத்திரமே மாணவர் இயக்கங்களை ஸ்தாபிப்பதற்கான வாய்ப்பு இருந்தது. எனினும் அரசியல் பற்றிய அதீத ஆர்வத்துடன் செயற்பட்ட மைத்ரிபாலவிற்கு தமது பாடசாலையில் மாணவர் இயக்கமொன்றினை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆயினும் கம்யுனிஸ்ட் கட்சி யாப்பில் அதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை தேசிய மாணவர் இயக்கமே கம்யுனிஸ்ட் கட்சியின் மாணவர் இயக்கமாக இருந்து வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி சார்பான ஆசிரியர்கள் சிலரின் உதவியுடன் மைத்ரி, பொலன்னறுவை றோயல் கல்லூரியில் இலங்கை தேசிய மாணவர் இயக்கத்தின் கிளையொன்றை ஆரம்பித்து அக்கிளையின் தலைவராகவும் செயற்பட்டார். அதனால் அவர் ஒரு வகையில் பாடசாலை அதிபருக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும் மாணவராக இனம் காணப்பட்டார். பாடசாலையில் ஏற்படும் பிரச்சினைகளின் போது மாணவர் சார்பாகச் செயற்பட்டார். அவரது பிடிவாதக் குணத்தினால் சிறைக்கு செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் நாள் மைத்ரியின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நாளாக அமைந்தது. பொலன்னறுவை றோயல் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு போட்டி 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி இடம்பெறவிருந்ததுடன், விளையாட்டுப் போட்டிக்காக இல்லங்களை அமைப்பதற்கு மூங்கில் தடிகள் தேவைப்பட்டன. மாணவர்களும் ஆசிரியர்களும் இல்லங்களை அமைப்பதற்குத் தேவையான மூங்கில்களை பல இடங்களில் தேடியும் கிடைக்காததால் நம்பிக்கை இழந்த நிலையில் பாடசாலைக்குத் திரும்பி வந்தனர். மைத்ரி வசித்து வந்த பொலன்னறுவை புதிய நகர வீட்டுக்கு சிறிது தொலைவில் உள்ள 2ஆம் வாய்க்காலுக்கு அண்மையில் மூங்கில் மரப்புதர் ஒன்று காணப்பட்டது. எனினும் உரிமையாளர் அந்த மூங்கில் புதரிலிருந்து மூங்கில் வெட்ட விடுவதில்லை என்ற விடயம் மைத்ரிக்கு தெரிய வந்தது. மாணவர் இயக்கத்தின் தலைவரான மைத்ரியால், மூங்கில் கிடைக்காது மாணவர்கள் பட்ட சிரமத்தை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவர் உடனடியாக மூங்கில் புதரின் உரிமையாளரின் வீட்டிற்கு சென்று அவர்களிடம் "எங்களுக்கு சில மூங்கில் மரங்கள் தேவைப்படுகின்றன. அவற்றை வெட்ட விடுங்கள்" எனத் தயவாகக் கேட்டார். "உங்களுக்கு தருவதற்கு இங்கு மூங்கில் மரங்கள் இல்லை"என வீட்டார் கூறினர்.

தனது மிதி வண்டியினைத் திருப்பிக்கொண்டு பாடசாலை மைதானத்திற்கு சென்ற மைத்ரிபால "எவ்வளவு மூங்கில் மரங்கள் வேண்டும்? யாருக்கு வேண்டும்? தேவையானவர்கள் என்னுடன் வாருங்கள்" எனக் கூறினார். தமக்கும் மூங்கில் மரங்கள் தேவை எனக் கூறிக்கொண்டு சுமார் 100 பேர் மைத்ரியின் பக்கம் வந்தனர். கூட்டத்தினரைக் கூட்டிக்கொண்டு மூங்கில் உரிமையாளரிடம் சென்ற மைத்ரிபால "பாடசாலை விளையாட்டுப் போட்டிக்காக இல்லங்கள் அமைக்கத் தேவையான சில மூங்கில்களை கொண்டு செல்ல வந்துள்ளோம்" என்றார். ஆயினும் உரிமையாளரிடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. "நீங்கள் உங்களுடைய வேலையை செய்யுங்கள். நாங்கள் மூங்கில்களை வெட்டிக்கொண்டு போகிறோம்" எனக் கூறிவிட்டு கையில் கத்தியுடன் நின்ற மாணவர்களுடன் சேர்ந்து மைத்ரியும் மூங்கில்களை வெட்ட ஆரம்பித்தார்.

வெட்டிய மூங்கில்களை அவர்கள் வாய்க்கால் ஊடாக அனுப்பி வைத்தனர். சில நிமிடங்களில் அங்கிருந்து சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த றோயல் கல்லூரி வாயிலுக்கு அண்மையில் ஓடும் வாய்க்காலில் மிதந்து வந்த மூங்கில்களை அங்கிருந்த மாணவர்கள் கரை சேர்த்தனர். இதனிடையே அந்த வீட்டின் தாயும் மகளும் மைத்ரிபால உள்ளிட்ட இளைஞர்களை கடுமையான சொற்களால் திட்டத் தொடங்கியதால் மாணவர்களும் அதற்கு பதிலாக அவர்களை திட்டத் தொடங்கியதுடன் தடிகளைக் கொண்டு தாயும் மகளும் அவர்களைத் தாக்கவும் தொடங்கினர். மாணவர்களும் தங்களது தேவை பூர்த்தியானதால் அங்கு நிற்காமல் பாடசாலையை நோக்கிச் சென்றனர்.

சில மணித்தியாலங்களின் பின்னர் இரவு எட்டு மணியளவில் பொலன்னறுவை றோயல் கல்லூரி விளையாட்டு மைதானத்துக்குள் பொலிஸ் டிரக்கும் ஜீப்பும் நுழைந்தன. அப்போது மாணவர்கள் இல்ல விளையாட்டுப் போட்டிக்காக இல்லங்களை அமைத்துக் கொண்டிருந்தனர். டிரக்கும் ஜீப்பும் விளையாட்டு மைதானத்தின் மத்தியில் நிறுத்தப்பட்டதையடுத்து மாணவர் கூட்டம் அச்சம் கொண்டது. இந்த நேரத்தில் பொலிஸார் திடீரென எதற்காக அங்கு வந்துள்ளனர் என்பது மாணவர்களுக்கு புதிராக இருந்தது. பொலிஸார் ஏன் வந்துள்ளனர் என்பது பற்றி மைத்ரியும் இன்னும் சில மாணவர்களும் விசாரித்துப் பார்த்தனர். மூங்கில் உரிமையாளரான பெண்மணியும் அவரது மகளும் பொலிஸ் டிரக்கில் அமர்ந்திருப்பதைக் கண்ட மாணவர்கள் குழப்பத்திற்குள்ளாகினர். ஏதோ விபரீதம் நடக்கவிருப்பதாக அவர்களுக்குத் தோன்றியது.



அதிபருடன் உரையாடிய பொலிஸ் அதிகாரி "சில மாணவர்கள் இவர்களது வீட்டுக்குச் சென்று மூங்கில் மரங்களை வெட்டியுள்ளனர். அது மட்டுமன்றி அந்த வீட்டுப் பெண் பிள்ளையை துஷ்பிரயோகத்திற்குட்படுத்தவும் முயற்சித்துள்ளனர். தாங்கள் சேகுவேராக்கள் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். இதனால் மாணவர்களுக்கு எதிராக பாரதூரமான முறைப்பாடு ஒன்று இருக்கின்றது. நாங்கள் அந்த மாணவர்களை கைது செய்யவே வந்துள்ளோம். அவர்கள் எங்கே என தேட வேண்டியுள்ளது." என கூறினார்.

பின்னர் அங்கிருந்த மாணவர்கள் அனைவரையும் வரிசையில் நிற்கும்படி பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டார். அவ்வேளையில் அங்கு கிட்டத்தட்ட 300 முதல் 400 மாணவர்கள் வரை கூடியிருந்தனர். அவர்கள் அனைவரும் ஒரே வரிசையாக நின்ற பின்னர் மூங்கில் உரிமையாளரான தாயும் மகளும் தங்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட மாணவர்கள் யாரென அடையாளம் காட்டத் தொடங்கினர். அடையாளங் காட்டப்பட்ட மாணவர்களை பொலிஸார் தமது டிரக்கில் ஏற்றிக்கொண்டனர். அவ் வரிசையில் மைத்ரிபாலவும் நின்றிருந்தார். மூங்கில் மரங்களை வெட்டச் சென்றவர்களும், வெட்டச் செல்லாதவர்களும் டிரக் வண்டியில் ஏற்றப்பட்டபோதிலும் மைத்ரிபாலவுக்கு எவரும் எந்தவித உத்தரவையும் போடவில்லை.

மாணவர்களை ஏற்றிய பொலிஸ் வாகனம் புறப்பட்டதும் மைத்ரிபால மிதிவண்டியில் ஏறி வேறொரு திசையை நோக்கி அவசரமாகச் சென்றார். அச்சமயம் அப்பகுதியின் பட்டினசபைத்



தலைவராக இருந்த பௌத்தசார என்பவரை சந்திப்பதற்கே அவர் சென்றிருந்தார். "சேர் பாருங்களேன் வேலையை, மூங்கில்களை வெட்டினோம் என்று எமது மாணவர்களை பொலிஸார் கைது செய்துவிட்டார்கள். அங்கு வேறு எதுவுமே நடக்கவில்லை. இல்லங்களை அமைப்பதற்காக மூங்கில் கேட்டோம். அவர்கள் தரவில்லை இதுதான் நடந்தது" என மைத்ரி பட்டினசபைத் தலைவருக்கு நடந்த விடயங்களைத் தெளிவுபடுத்தினார். அவரும் உடனடியாக பொலிஸ் அதிகாரியை தொடர்புகொண்டு "அவர்கள் பாடசாலை மாணவர்கள். அதனால் முறைப்பாட்டினை கடுமையாக எழுத வேண்டாம். அவர்கள் சொல்வதையும் கேட்டு எப்படியாவது இருதரப்பினரையும் சமாதானம் செய்யுங்கள். அங்கு நடந்தவற்றை விட கூடுதலாக வீட்டுக்காரர்கள் கூறியுள்ளார்கள். அவர்கள் சொல்வது போன்ற குற்றங்களை பாடசாலை மாணவர்கள் செய்வார்களா?" எனக் கேட்டார். பட்டினசபைத் தலைவரின் விளக்கத்தையடுத்து கைது செய்யப்பட்டிருந்த மாணவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

திட்டமிட்டவாறே விளையாட்டுப் போட்டிகள் மறுநாள், அதாவது 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி நடைபெற்றன. விளையாட்டுப்போட்டி முடிவடையும்போது இரவாகியிருந்தது. அப்போது மைத்ரிபாலவின் துவிச்சக்கர வண்டியை வேறு ஒரு மாணவன் கொண்டு சென்றிருந்தமையால் வீட்டிற்கு செல்லும் பேரூந்தில் ஏறுவதற்காக இரண்டு கிலோ மீற்றர் தொலைவிலிருந்த பேரூந்துத் தரிப்பிடத்திற்கு நடந்தே வந்து சேர்ந்தார் மைத்ரி.

எனினும் வீட்டிற்கு செல்வதற்கான பேரூந்து கிடைக்கவில்லை. இரவாகிக் கொண்டிருந்ததால் வீட்டிற்குச் செல்லும் எண்ணத்தை கைவிட்டு விட்டு பொலன்னறுவை பழைய பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் வசித்த தனது நண்பனின் வீட்டில் மைத்ரிபால அன்றைய இரவைக் கழித்தார்.

அந்த வீட்டாருடன் இரவு உணவை சாப்பிட்டுவிட்டு உறங்கிக் கொண்டிருந்தபோது நள்ளிரவு 1.00 மணியளவில் பட்டாசு வெடிப்பது போன்ற சத்தத்துடன் அந்த பிரதேசமே அதிர்ந்தது. வீட்டில் இருந்தவர்கள் இந்த சத்தத்தினைக் கேட்டு பெரிதும் கலவரமடைந்தனர். அந்த வீட்டு உரிமையாளரின் கடையொன்று பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் இருந்தது. "நான் புது வருடத்திற்கு விற்பதற்காக பட்டாசு கொண்டு வந்திருந்தேன். யாரோ அதற்கு தீ வைத்து விட்டார்கள் போல. அதனால்தான் இந்த சத்தம் கேட்கின்றது. வாருங்கள் பார்ப்போம்." எனக் கூறிக்கொண்டு வீட்டு உரிமையாளர் மைத்ரியையும் அழைத்துக்கொண்டு கடையை நோக்கிச் சென்றார். பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இலங்கை போக்குவரத்து சபை பேரூந்தொன்று நிறுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்தவர்கள் கூக்குரலிடும் சத்தம் கேட்டது. இரு தரப்புக்கிடையே துப்பாக்கிச் சூடு இடம்பெறுவதை அவர்கள் நன்றாக அவதானித்தனர். பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலிருந்த அரச மரத்தின் கீழ் பொலிஸாரோ அல்லது இராணுவத்தினரோ இருந்ததையும் அவர்களால் பார்க்க முடிந்தது. அவர்களிருவருக்கும் திரும்பி ஓடுவதைத் தவிர வேறுவழி ஏதும் இருக்கவில்லை.

அடுத்த நாள் பொழுது விடிந்தது. மக்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டும் இரகசியமாகப் பேசிக்கொண்டும் இருந்தனர். பின்னர் விசாரித்துப் பார்த்ததில் சேகுவேரா இயக்கத்தை சேர்ந்த குழுவொன்று பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும், அதனால் பொலிஸ் நிலையத்துக்கு மட்டுமன்றி தாக்குதல் நடத்த வந்த குழுவுக்கும் பாதிப்பு ஏற்பட்டதும் தெரியவந்தது. அது 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதி இரவு இடம்பெற்ற சம்பவமாகும். இதனால் நகரத்தில் பேரூந்துப் போக்குவரத்தும் இடம்பெறவில்லை. எனவே மைத்ரி தனது வீட்டிற்கு செல்ல வழி இருக்கவில்லை. துப்பாக்கிச் சூட்டின் காரணமாக உயிரிழந்தவர்களின் உடல்கள் பொலிஸ் நிலையத்தைச் சுற்றிலும் சிதறிக் கிடந்தன.

நடந்தே வீட்டுக்கு சென்ற மைத்ரி முதல் நாள் இரவும், அன்று முற்பகலும் தான் அனுபவித்த அந்த பயங்கரமான நிகழ்வுகளை, திரைப்பட இரசிகர் ஒருவர் தனது மனங் கவர்ந்த காட்சியொன்றை அதனைப் பார்க்காதவர்களுக்கு விபரிப்பதைப் போன்று, அவரது வீட்டாருக்கும் அயலவர்களுக்கும் விபரித்தார்.

# தும்புத்தடி பூசை

மைத்ரிபால சிறிசேனவின் தந்தை ஒரு சாதாரண விவசாயி என்பதால் வயல் வேலைகளில் தந்தைக்கு உதவியதன் காரணமாக கிராமத்து வயல் வெளிகள், வரம்புகள், மைத்ரிக்கு அத்துப்படி. அறுவடை காலத்தில் மைத்ரி தனது சமவயதுத் தோழர்களுடன் வயல் காணிகளில் *வொலிபோல்* விளையாட்டில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

நெல் அறுவடைக்குப் பின்னர் வயல்களிலுள்ள வைக்கோல்கள் தீக்கிரையாக்கப்படுவதால் மைத்ரிக்கும் தோழர்களுக்கும் பந்து விளையாட இடம் கிடைக்கவில்லை. மைத்ரி அதற்கொரு மாற்றுத் திட்டத்தைத் தேடினார். மைத்ரியும் தோழர்களும் சேர்ந்து லக்ஸ உயன குடியேற்றப் பகுதியில் இருந்த காட்டுக் காணியொன்றைத் துப்பரவு செய்து அங்கு *வொலிபோல்* திடலொன்றை அமைத்தனர்.

மைத்ரி அந்தக் காலத்தில் பொது வேலைகளில் ஆர்வமும் திறமையும் காட்டி வந்தார். அத்துடன் வொலிபோல் விளையாட்டிலும் திறமைசாலியாக இருந்தார். இதனால் கிராமத்து இளைஞர்கள் மைத்ரியின் பேச்சுக்கு செவிசாய்த்ததால் அவர்களைப் பொது வேலைகளுக்காக இணைத்துக்கொள்ள மைத்ரியினால் முடிந்தது. கிராமத்தில் சிரமதான இயக்கம் ஒன்றையும், மத விவகாரங்களுக்கான நிலையமொன்றையும், 'முன்னேற்ற பிரஜைகள் சபை' என்ற பெயரில் அமைப்பொன்றையும் மைத்ரி உருவாக்கினார். பாடசாலை நேரத்தின் பின்னர் மைத்ரி அதிக காலத்தை இந்தச் சபையிலேயே செலவிட்டார்.

ஒரு நாள் வொலிபோல் விளையாடிக் கொண்டிருந்தபோது இளைஞர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது. அதனால் *வொலிபோல்* விளையாட்டும் அத்துடன் நிறுத்தப்பட்டது. மைத்ரி அப்போது பொலன்னறுவை றோயல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அவர் சைக்கிளிலேயே பாடசாலைக்குச் சென்றுவந்தார். ஒரு நாள் மைத்ரி பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தபோது இக்கட்டான நிலைக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

முதல் நாள் மோதலுடன் சம்பந்தப்பட்டிருந்த இளைஞர்களில் சிலர் எத்துமல்பிட்டிய சந்தியில் காத்திருந்ததை மைத்ரி கண்டார். மோதல் காரணமாக அவர்கள் மைத்ரி மீதும் காட்டமாக இருந்தனர். அவர்களில் ஒருவன் தும்புத்தடியுடன் நின்று கொண்டிருந்தான். மைத்ரியை கண்ட அவன் ஓடி வந்து தாக்கத் தொடங்கினான். தும்புத்தடியால் தாக்கப்பட்ட மைத்ரி சைக்கிளுடன் கீழே விழுந்தார். அவரை அடித்தவன் அங்கிருந்து ஓடிவிட்டான். மைத்ரியின் பாடசாலை சீருடை புழுதியால் கறைபட்டிருந்தது. சிரமத்துடன் எழுந்து சட்டையில் பட்டிருந்த புழுதியை தட்டிவிட்ட மைத்ரி பாடசாலைக்குச் சென்றார். தன்னைத் தாக்கிய தோழர்களுடன் முன்னரைப் போலவே எதுவும் நடக்காததுபோல் தோழமையுடன் பழகினார். வழக்கம் போலவே அவர்களுடன் *வொலிபோல்* விளையாட்டிலும் ஈடுபட்டார்.

மைத்ரியை தும்புத்தடியால் தாக்கிய தோழர் இன்னும் நலமாகவே இருக்கிறார். மைத்ரி எவரையும் பழிவாங்காதவர். தனக்கு தும்புத்தடி பூசை வழங்கியவரின் மகனுக்கு அண்மையில் அவர் தொழில் ஒன்றையும் பெற்றுக்கொடுத்தார்.

இவ்வாறு சிறுபராயத்திலிருந்தே மைத்ரி தனது மனிதாபிமான குணத்தின் மூலம் நல்லெண்ணத்தை விதைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# முதல் மேடைப்பேச்சு

அது 1979 ஆம் ஆண்டு, பட்டினசபைத் தேர்தல் சூடுபிடித்திருந்த காலம். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க தேர்தல் வேலைகளுக்காக கட்சியின் நான்கு சிரேஷ்ட உறுப்பினர்களை பொலன்னறுவைக்கு அனுப்பியிருந்தார். அனுராதபுரத்திலிருந்து கே.பி. ரத்நாயக்க, அம்பாறையிலிருந்து சோமரத்ன, தம்புள்ளையிலிருந்து டி.பி. தென்னகோன், கொத்மலையிலிருந்து ஆனந்த தஹநாயக்க ஆகியோரே அவ்வாறு அனுப்பப்பட்டார்கள்.

பொலன்னறுவை பட்டினசபை அப்போது ஏழு வட்டாரங்களைக் கொண்டிருந்தது. அவற்றிலிருந்து ஏழு பேர் பட்டினசபைக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும் தேர்தல் கூட்டமொன்று கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய நான்கு சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களையும் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக அன்று பொலன்னறுவை பாராளுமன்ற



உறுப்பினராக இருந்த லீலாரத்ன விஜேசிங்க, சில கட்சி ஆதரவாளர்களை நியமித்திருந்தார். கடந்த அரசில் அமைச்சராக இருந்த ஜனக பண்டார தென்னகோனின் தந்தையான டி.பி. தென்னகோன் அவர்களை கூட்டத்திற்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு மைத்ரிபால சிறிசேன என்ற இளைஞரிடம் வழங்கப்பட்டது.

எப்போதும் வெண்ணிற தேசிய உடையில் வலம்வரும் டி.பி. தென்னகோன் வில்லீஸ் ரக பழைய ஜீப்பில் பொலன்னறுவைக்கு வருகை தந்திருந்தார். வழி காட்டுவதற்காக அந்த ஜீப்பின் பின்னால் மைத்ரிபாலவையும் ஏற்றிக் கொண்டனர்.

பொலன்னறுவை நகரத்தில் சென்று கொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக ஜீப் நின்றுவிட்டது. இறங்கித் தள்ளினால் ஜீப் ஸ்டார்ட் ஆகும் என சாரதி கூற, ஜீப்பில் இருந்த அனைவரும் கீழே இறங்கித் தள்ளினார்கள். முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த டி.பி. தென்னக்கோனும் கீழே இறங்கினார். கட்டியிருந்த வேட்டியை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக்கொண்டு மறுகையால் ஜீப்பைத் தள்ளினார். தள்ளியவாறே "இப்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் இப்படித்தான் தள்ள வேண்டியுள்ளது. பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடமே உள்ளதால் கட்சியைத் தள்ளிச் சென்றாவது சரி செய்ய வேண்டும்". என தென்னகோன் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

இந்தத் தேர்தலிலேயே மைத்ரிபால சிறிசேனவிற்கு அரசியல் மேடையொன்றில் முதன் முறையாகப் பேசும் வாய்ப்பு கிடைத்தது. பாடசாலை மேடைகளில் பேசியிருந்த போதிலும் அரசியல் மேடையில் பேசுமளவிற்கு அனுபவம் இருக்கவில்லை. ஆயினும் அந்த வாய்ப்பைக் கைவிடவில்லை.

அப்போது பொலன்னறுவை பட்டினசபை உறுப்பினராக இருந்த சந்திரா டி சில்வா, மேடையில் பேச மைத்ரிக்கு சொல்லிக் கொடுத்தார். மைத்ரி பேசும்போது அவருக்கு பின்னால் இருந்த நாற்காலியில் அமர்ந்து, பேசவேண்டிய வார்த்தைகளை மெதுவாக கூறிக்கொண்டிருந்தார். அந்த வார்த்தைகளை செவிமடுத்தவாறு சற்று சத்தமாகப் பேசிய மைத்ரி நிலைமையை சமாளித்தார்.

1947 இல் பொலன்னறுவையில் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பீ.எல்.பௌத்தசார, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தராக இருந்த போதிலும் கட்சியில் ஏற்பட்டிருந்த பிரச்சினை காரணமாக பட்டினசபை தேர்தலுக்கு கட்சியின் சார்பில் போட்டியிடும் வாய்ப்பு அவருக்கு கிடைக்கவில்லை. அதனால்

அவர் சுயேட்சையாக களமிறங்கி, தேர்தலில் வெற்றிபெற்றார். மூன்று இடங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், மூன்று இடங்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் கிடைத்ததனால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பட்டினசபை உறுப்பினர்கள் மூவரும் பௌத்தசாரவை தம்மோடு இணைத்துக்கொண்டு அவரை பட்டினசபைத் தலைவர் ஆக்கினார்கள்.



# செய்யாத தவறுக்கு கிடைத்த தண்டனை

1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி ஜேவிபியினர் பொலன்னறுவை பொலிஸ் நிலையத்தை தாக்கியதனால் பிரதேசத்தில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக கொழும்பில் தங்கியிருந்த பொலன்னறுவை பாராளுமன்ற உறுப்பினர் லீலாரத்ன வீஜேசிங்க "மாவட்டத்தின் அரச அதிபரைச் சந்தித்து ஏற்பட்டுள்ள கலவர நிலையை தணிப்பதற்கு ஏதாவது செய்யுங்கள்" என மைத்ரியிடமும் ஏனைய சில கிராம சபை உறுப்பினர்களிடமும்

கூறினார். அதற்கேற்ப மைத்ரி கிராம சபை உறுப்பினர்களுடன் சேர்ந்து அரச அதிபரைச் சந்திப்பதற்காக பொலன்னறுவைக் கச்சேரிக்குச் சென்றார். ஆயினும் அரச அதிபர் அங்கிருக்கவில்லை.

குழப்ப நிலை காரணமாக அரச அதிபர் தற்போது பொலன்னறுவை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் இருக்கும் இடத்திலிருந்தே தனது கடமைகளைச் செய்து வந்தார். கடற்படையினரும், பொலிஸாரும் பிரதேசத்தின் பாதுகாப்பு நிமித்தமாக அங்கு கூடாரங்களை அமைத்திருந்தனர். அரச அதிபரைச் சந்திக்க வந்த காரணத்தை விபரமாக அங்கு வாயிலில் பாதுகாப்பு கடமையிலிருக்கும் உத்தியோகத்தர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இல்லையென்றால் அரச அதிபரை சந்திப்பதற்கு அனுமதி கிடைக்காது "வந்த காரணத்தையும், பெயர்களையும் எழுதித் தாருங்கள் பார்ப்போம்" என்று பாதுகாப்புக்காக இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மைத்ரியிடம் கூறினார். மைத்ரி அவருடன் வந்த அனைவரினதும் பெயர்களை எழுதி பொலிஸ் உத்தியோகத்தரிடம் கொடுத்தார்.

அச்சமயம் மைத்ரி பொலன்னறுவை றோயல் கல்லூரியின் மாணவர் சங்கத் தலைவராக இருந்தார். றோயல் கல்லூரியின் "சேகுவராவினர்" எனக் குறிப்பிட்டு மாணவர்கள் சிலரின் பெயர்ப் பட்டியலை பாடசாலை அதிபர் பொலிஸாருக்கு ஏற்கனவே அனுப்பி வைத்திருந்தார். அதில் மைத்ரியின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒரு சில நிமிடங்களில் அங்கு வந்த பொலிஸார் மைத்ரியையும் பிரதேச சபை உறுப்பினர்கள் மூவரையும் தாக்கத் தொடங்கினர். மைத்ரிக்கு நினைவு திரும்பும் போது அவரது ஆடைகள் இரத்தத்தில் தோய்ந்திருந்தன. "நீ தானே றோயல் கல்லூரியின் சேகுவராக்காரர்களின் தலைவன்?" என பொலிஸ் அதிகாரியொருவர் மைத்ரிபாலவிடம் வினவினார். "நான் சேகுவராக்காரன் இல்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அமைப்பின் செயலாளர். நாங்கள் கம்யுனிஸ்ட் கட்சியின் மாணவர் அமைப்பினையே பாடசாலையில் நடத்தினோம். அது சேகுவராப் பிரிவு அல்ல" என மைத்ரி பதிலளித்தார். அவர் என்னதான் கூறிய போதிலும் பொலிஸார் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் இருந்தார். அவரே மைத்ரியை விசாரணை செய்தார். மைத்ரி சேகுவரா அணியைச் சேர்ந்தவர் அல்ல என்பதை அவர் அறிந்து கொண்டார். ஆயினும் மைத்ரியிடம் கடதாசியொன்றினைக் கொடுத்து "நீ பாடசாலையில் என்ன படிக்கின்றாய்? எனக் கேட்டார். "நான் விஞ்ஞானப் பிரிவில்

படிக்கிறேன்'' என்று மைத்ரி பதிலளித்தார். ''அப்படியாயின் உனக்கு நன்றாக வரைய முடியுமே? உனக்கு முன்னால் உள்ள சந்தியின் படத்தை கீறு'' என அந்த உப பொலிஸ் பரிசோதகர் உத்தரவிட்டார்.

மைத்ரியும் வெள்ளைக் கடதாசியில் தர்மபால சந்தியின் வரைபடத்தினை வரைந்தார். ''ஆ இப்போது அதில் கச்சேரி இருக்கும் இடத்தினை அடையாளமிடு'' என பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டார். மைத்ரி கச்சேரி இருக்கும் இடத்தினை தான் வரைந்த வரைபடத்தில் குறித்தார். ''கட்டம் ஒன்றினையிட்டு இராணுவமுகாம் இருக்கும் இடத்தினையும் அடையாளமிடு'' என பொலிஸ் அதிகாரி அச்சுறுத்தும் தொனியில் கூறினார். மைத்ரி அதனையும் அடையாளமிட்டார். தான் செய்வது ஆரோக்கியமான விடயமல்ல என்பது அதனை வரையும்போதே மைத்ரிக்கு புரியத் தொடங்கியிருந்தது. இறுதியாக பொலிஸ் அதிகாரி அந்தக் கடதாசியையும் தன்னோடு எடுத்துச் சென்றார்.

மைத்ரியும் பிரதேச சபை உறுப்பினர்கள் மூவரும் வாங்கொன்றில் அமர்ந்திருந்தனர். சிறிது நேரத்தில் பொலன்னறுவை உதவி பொலிஸ் அத்தியட்சகராகவிருந்த செனவிரத்ன என்பவர் அந்த இடத்திற்கு வந்தார். ''ஏன் இவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்?'' என கேட்டார். அதற்கு ''இவர்கள் உளவு பார்ப்பதற்காக வந்துள்ளார்கள் சேர். இவனிடமிருந்து வரைபடமொன்றும் கிடைத்துள்ளது'' எனக் கூறிக்கொண்டே பொலிஸ் அதிகாரி தான் மைத்ரியைக் கொண்டு வரைந்த வரைபடத்தினை பொலிஸ் அத்தியட்சகரிடம் கொடுத்தார். ''ஆ.. அப்படியாயின் இவர்களை சுட்டுக்கொன்று விடுங்கள்'' என்று உதவி பொலிஸ் அத்தியட்சகர் கூறினார்.

ஆங்காங்கே இடம் பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அக்காலப்பகுதியில் சாதாரண நிகழ்வாகவே இருந்தன. எனவே தங்களது தலைவிதியும் அவ்வாறே அமையப் போகிறது என்று எண்ணினார் மைத்ரி. சிறிது நேரத்தில் மைத்ரியையும், கிராம சபை உறுப்பினர்கள் மூவரையும் டிரக்கில் ஏற்றினர். டிரக்கில் எறுவதற்கு கூட அவர்களுக்கு வலு இருக்க வில்லை. அந்த அளவிற்கு பொலிஸாரினால் அவர்கள் தாக்கப்பட்டிருந்தனர்.

டிரக்கில் ஏற்றப்பட்டவர்களைச் சுட்டுக்கொலை செய்வதற்காக பொலன்னறுவை நகரின் 28ஆம் கட்டைக்கு அருகில் இருந்த மயானத்துக்கு கொண்டு சென்றனர். அக்காலத்தில் அந்த இடத்தில் இவ்வாறான கொலைகள் அதிகமாக இடம்பெற்றன. ''இப்போது உங்கள் கதை முடியப் போகிறது, கொலை செய்வதற்காகவே



உங்களைக் கூட்டி வந்தோம். இறங்கி முன்னால் நடவுங்கள்.'' என்று துப்பாக்கியுடனிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கட்டளை இட்டனர். சுடப் போகிறார்கள் என்ற பயத்தினால் அவர்களது இதயங்கள் "திக் திக்" என வேகமாக அடித்தன. "முட்டுக்காலில் அமருங்கள்'' என்று மீண்டும் ஒரு கட்டளை இடப்பட்டது. நால்வரும் நிலத்தில் முழங்காலிட்டனர். சிறிது நேரத்தில் "இப்போது எழுந்திருங்கள்'' என கட்டளை இடப்பட்டது. அதற்கேற்ப மைத்ரியும் கிராம சபை உறுப்பினர்கள் மூவரும் எழுந்தனர். மீண்டும் அவர்களை டிரக்கில் ஏற்றி மாவட்ட வைத்திய அதிகாரியிடம் அழைத்துச் சென்றனர். வைத்தியர் அவர்களிடம் "என்ன வருத்தம்'' எனக் கேட்டார் "எனக்கு ஒரு வருத்தமும் இல்லை'' என மைத்ரி கூறினார். அவர் அவ்வாறு கூறியபோதிலும் கடுமையான வலியைத் தாங்கிக்கொண்டே இருந்தார். ஆயினும் வலிக்கிறது எனக் கூறினால் கொன்று விடுவார்களோ என்ற பயத்தினாலேயே அவர் அவ்வாறு கூறினார்.

வைத்திய அறிக்கை கிடைத்த பின்னர் மீண்டும் அவர்களை டிரக் வண்டியில் ஏற்றிக்கொண்ட பொலிஸார் நீதவானிடம் சென்றனர். நீதவான் அவர்களை சிறையிலடைக்க உத்தரவிட்டார். அது 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதியாகும். இப் பின்னணியிலேயே

1971 ஏப்ரல் கலவரத்தின் போது மக்கள் விடுதலை முன்னணியுடன் எந்த தொடர்புமற்ற றோயல் கல்லூரியின் மூன்று ஆசிரியர்கள் பொலிஸாரினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். ஆயினும் அவர்கள் மூவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்களாகவே இருந்தார்கள்.

முதல் 10 நாட்கள் பொலன்னறுவை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மைத்ரியும் கிராம சபை உறுப்பினர்களும் 1971 ஏப்ரல் 20 ஆம் திகதி மட்டக்களப்பு சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பொலன்னறுவையைச் சேர்ந்த கைதிகள் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படுவதே வழக்கமாக இருந்தபோதிலும், அந்த நாட்களில் பொலன்னறுவை-அநுராதபுரம் நகரங்களுக்கிடையிலான வீதியில் காணப்பட்ட பதற்றநிலை மற்றும் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த கலவரங்களாலேயே இவர்கள் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மட்டக்களப்பு சிறைச்சாலையின் இருட்டறையில் அவர்கள் சிறை வைக்கப்பட்டனர். அந்த அறைக் கதவின் அடிப்பகுதியில் இருந்த சிறு துவாரத்தினூடாகவே அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. மலசல கூடத்துக்கு செல்வதற்காக ஒரு நாளில் ஒரு தடவை மாத்திரம் அவர்கள் வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர். மற்றைய நேரங்களில் அவர்கள் இருட்டறையிலேயே அடைத்து வைக்கப்பட்டனர்.

மைத்ரி உள்ளிட்ட நால்வரும் இவ்வாறு மூன்று மாத காலம் இருட்டறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஏனைய அறைகளில் மக்கள் விடுதலை முன்னணியுடன் தொடர்புடைய அம்பாறை மற்றும் மட்டக்களப்பு பிரதேச இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். மைத்ரி உள்ளிட்ட குழுவினருக்கு எச்சந்தர்ப்பத்திலும் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லை. அதேபோல் மக்கள் விடுதலை முன்னணியுடன் தொடர்புடைய கைதிகளுக்கும் மைத்ரி உள்ளிட்ட குழுவினருடன் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

மூன்று மாதங்கள் கடந்த நிலையில் மைத்ரி உள்ளிட்ட குழுவினர் இருட்டறையில் இருந்து வேறு அறைக்கு மாற்றப்பட்டனர். சிறைக் கைதிகள் தனிமை மற்றும் விரக்தியை போக்கிக் கொள்வதற்காக இரவு நேரத்தில் பாடல்களை பாடினார்கள். ஒரு அறையில் கைதிகள் பாடி முடிக்கும்போது அடுத்த அறையில் இருக்கும் கைதிகள் மற்றுமொரு பாடலைப் பாடுவார்கள். அப்பாடல் முடியும்போது மீண்டும் அதற்கு அடுத்த அறையில் உள்ள கைதிகள்

என மாறிமாறி பாடிக்கொண்டிருப்பார்கள். இவ்வாறு மைத்ரியின் வாய்ப்பு வரும்போது அவர் "அத்தனகல்லே சந்தய தவசே..." (அத்தனகல்லை தேர்தல் நாளில்) எனத் தொடங்கும் பாடலையே பாடுவார்.

1956 ஆம் ஆண்டு தேர்தல் தினத்தன்று அத்தனகல்ல தேர்தல் தொகுதியில் மக்களுக்கு கிடைத்த ஆட்சி மாற்றம் பற்றியே இந்தப் பாடலில் கூறப்படுகிறது. மைத்ரி இப்பாடலைப் பாடத் தொடங்கியதும் ஏனைய அறைகளில் இருக்கும் சிறைக்கைதிகள் கூக்குரலிட ஆரம்பிப்பார்கள். ஆனால் மைத்ரிபால பாடுவதை நிறுத்துவதில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருக்கும்போதே எதுவித குற்றமுமின்றி மைத்ரி சிறை வைக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்குக் கட்சியின் மீது வெறுப்பு ஏற்பட்டிருக்கவில்லை. கூக்குரலுக்கு மத்தியிலும் மைத்ரி "அத்தனகல்லே சந்தய தவசே...." என்ற பாடலை தொடர்ந்து பாடுவார். கட்சியின் மீதான பற்று காரணமாகவே அவர் இந்தப் பாடலைப் பாடுவார். அது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் தொடர்புடைய பாடல் என்பதாலேயே சிறைச்சாலையிலிருந்த அனைத்து கைதிகளும் கூக்குரல் இட்டனர். எவ்வாறாயினும் மைத்ரியும் பாடலை இடையில் நிறுத்தாது இறுதிவரையில் தொடர்ந்து பாடி முடிப்பார்.

இவ்வாறு காலம் கடந்து சென்ற போது புத்தகங்களை வாசிக்கக்கூடிய வாய்ப்பு மைத்ரிபாலவுக்கு கிடைத்தது. இதனால் பெருமளவு புத்தகங்களை அவரால் வாசிக்க முடிந்தது. 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே மைத்ரி க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றவிருந்தார். சிறையில் இருந்தேனும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட வேண்டுமென்று அவர் விரும்பினார். எனவே சிறையில் இருந்தவாறே புத்தகங்களை வரவழைத்து படிக்கத் தொடங்கினார். அதையடுத்து 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்கு சிறையில் இருந்தவாறே தயாரானார்.

அம்பாறை உஹண மகா வித்தியாலயத்திலேயே பரீட்சை இடம்பெற்றது. மைத்ரிக்கும், சிறைக்கைதிகளாக இருந்த இன்னும் சில மாணவர்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பு கிடைத்தது. மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து சிறைச்சாலை பேரூந்தில் உஹண வித்தியாலயத்திற்குச் சென்று பரீட்சை எழுதிய இவர்கள் மாலையில் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்டனர். கைகளில் விலங்கிடப்பட்டு தீவிர பாதுகாப்பின் மத்தியிலேயே இவர்கள் பரீட்சை நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.




சில சந்தர்ப்பங்களில் விலங்கிடப்பட்ட இடங்களில் கைகள் வெட்டுப்பட்டு பரீட்சை விடைத்தாள்களில் இரத்தம் படிந்த சம்பவங்களும் இருந்தன. காரணமேயின்றி சிறைப்பட்டு இருப்பதை நினைக்கும்போது மைத்ரியின் கண்களில் இருந்து விழுந்த கண்ணீர்த் துளிகளினாலும் விடைத்தாள்கள் நனைந்தன.

மைத்ரியை சிறையிலிருந்து விடுவிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் லீலாரத்ன விஜேசிங்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அவை எதுவும் பயனளிக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணிக்கு சார்பான கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக வேறு முகாம்களுக்கு அனுப்பப்பட்ட போதிலும் மைத்ரி உள்ளிட்ட குழுவினர் மக்கள் விடுதலை முன்னணியுடன் தொடர்புடையவர்கள் அல்ல என்பதனால் அவர்கள் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்படாமல் தொடர்ந்தும் சிறையிலேயே வைக்கப்பட்டனர். ஒரு வருடம் மூன்று மாதங்கள் நீடித்த மைத்ரியின் சிறை வாழ்க்கை 1972 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆம் திகதி நிறைவடைந்தது. “நீ விடுதலை செய்யப்பட்டுள்ளாய், உனது வீட்டுக்கு அறிவிக்கப்பட்டு வீட்டில் இருந்து உன்னை கூட்டிச்செல்ல வந்துள்ளனர்.” என சிறை அதிகாரியொருவர் மைத்ரியிடம் கூறினார். இதனைக் கேட்ட மைத்ரியின் மனம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது. அந்த செய்தி கிடைத்தவுடனேயே அவர் வெளியில் வந்தார். அவருடைய தந்தை அவரை அழைத்துச் செல்வதற்காக

வந்திருந்தார். மைத்ரி தனது தந்தையோடு மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்குச் சென்று அங்கிருந்து புகையிரதத்தில் ஏறி பொலன்னறுவை வீட்டுக்குச் சென்றார்.

அவர் மக்கள் விடுதலை முன்னணியின் தீவிர செயற்பாட்டாளர்களில் ஒருவர் என்ற எண்ணம் பிரதேசவாசிகளிடையே தீவிரமாகக் காணப்பட்டமையினால் சிறையில் இருந்து விடுதலையாகி வந்த தினங்களில் மைத்ரி வெளியே செல்லும் மனநிலையில் இருக்கவில்லை. அக்காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களை மக்கள் மிகுந்த வெறுப்புடனேயே நோக்கினர். என்னதான் குற்றமற்றவராக இருந்தபோதிலும் சமூகத்தில் மக்களிடம் காணப்பட்ட எண்ணத்தை மைத்ரியால் இலகுவாக மாற்ற முடியவில்லை. எனவே அவர் தனது வீட்டிலேயே முடங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவ்வாறே சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் பாராளுமன்ற உறுப்பினர் லீலாரத்ன விஜேசிங்க மைத்ரியைத் தேடி வீட்டுக்கு வந்து, "மைத்ரி, நாம் மீண்டும் முன்புபோல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேலைகளைச் செய்ய வேண்டும்'' என கூறினார். "என்னால் எப்படி வேலை செய்ய முடியும்? நான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவன். ஆனாலும் மற்றவர்கள் என்னை சேகுவராக்காரன் என்றே நினைக்கிறார்கள்'' என்று பதிலளித்தார் மைத்ரி. "அப்படிக் கூறவேண்டாம். நாளை விஜேபாஹுபுர தபால் நிலைய திறப்பு விழா இருக்கின்றது. அதற்கு அமைச்சர் தேசப்பிரிய சேனாநாயக்க வருகின்றார் நீயும் வரவேண்டும்'' என விஜேசிங்க கூறினார். தபால் நிலையத் திறப்பு வைபவத்தின் பிரதம விருந்தினராக அமைச்சர் தேசப்பிரிய சேனாநாயக்க வந்திருந்தார். மைத்ரி "நீயும் உரை நிகழ்த்து'' என்று விஜேசிங்க கூறினார். "உரை நிகழ்த்துவதாயின் சேகுவராக்காரன் எனக் கூறி என்னைக் கைதுசெய்து துன்புறுத்தி ஒன்றரை வருடகாலமாக சிறையில் வைத்ததைப் பற்றி அரசாங்கத்தை குறை தான் கூற முடியும்'' என்றார் மைத்ரி. "பரவாயில்லை என்னவாயினும் சொல்'' என விஜேசிங்க கூறினார். மைத்ரியின் வாய்ப்பு வந்தது. அவரது உரையை பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிங்க மிகவும் அவதானமாக செவிமடுக்கத் தொடங்கினார்.

"நாங்கள் பாடசாலை செல்லும்போதே சரியான உணவு கூட இன்றி பிஸ்கட்டுக்களைச் சாப்பிட்டுக் கொண்டு இந்த அரசாங்கத்தை உருவாக்கினோம். ஆனால் இறுதியில் எலும்புகளை முறித்துக்கொண்டு, வடுக்களைத் தாங்கிக்கொண்டு ஒன்றரை

வருடங்கள் சிறைக்கம்பிகளை எண்ணிக்கொண்டிருக்க வேண்டிய சூழ்நிலையே எமக்கு ஏற்பட்டது. ஆனால் நான் பண்டாரநாயக்க அம்மையாரையோ அல்லது வேறு யாரையுமோ குறை கூற மாட்டேன். நான் அன்றும் இன்றும் என்றுமே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவன். எனக்கு இந்த அநியாயத்தை பொலிஸாரே செய்தனர். பொலன்னறுவை றோயல் கல்லூரி அதிபரினால் கொடுக்கப்பட்டிருந்த தவறான அறிக்கையினைப் பற்றி விசாரணை நடத்தாமலேயே எமக்கு இந்த நிலையை ஏற்படுத்தினார்கள்." என்று மைத்ரி பொலிஸார் மீது குற்றஞ்சாட்டி உணர்வுபூர்வமான உரையொன்றினை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து அப்போதைய பொலன்னறுவை பொலிஸ் அத்தியட்சகர் உரை நிகழ்த்தத் தொடங்கினார். பின்னாளில் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றிய லக்கி கொடித்துவக்கு அவரே. "கிளர்ச்சி காரணமாக சிறைப்படுத்தப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் இப்போது உரை நிகழ்த்தினார். அவர் பொலிஸார் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். நாங்கள் அதனை ஏற்றுக் கொள்கிறோம். நாட்டில் சிவில் யுத்தமொன்று இடம்பெற்றால் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற வாய்ப்புண்டு. அத்துடன் தீவிரவாதத்திற்கு எந்தவித தொடர்பும் அற்ற நிரபராதியான இளைஞர்கள் கைது செய்யப்பட்டமை மட்டுமல்ல சிலர் தமது உயிரையும் இழந்திருக்கிறார்கள். நாங்கள் அதனை ஏற்றுக்கொள்கிறோம். அவ்வாறான கிளர்ச்சிகள் ஏற்படும்போதே இவ்வாறான சம்பவங்களும் ஏற்படுகின்றன. எனவே நாம் நடந்ததை மறப்போம். கோபதாபங்கள், வெறுப்புடன் எம்மை பார்க்காதீர்கள். நாம் ஒற்றுமையாகச் செயற்படுவோம் என நான் அந்த இளைஞனிடம் கேட்டுக்கொள்கிறேன்." என கொடித்துவக்கு தனது உரையை நிறைவுசெய்தார்.



# நேர்மை தவறாமை

மைத்ரிபால சிறையிலிருந்து விடுதலையாகி வந்து சில நாட்கள் கடந்தன. அவர் சிறையிலிருந்த காலப்பகுதியில் பொலன்னறுவை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இளைஞர் அமைப்பின் கூட்டங்கள் நடைபெற்றதா? அதன் செயற்பாடுகள் எந்த நிலையில் இருக்கின்றன? போன்ற விடயங்கள் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை. ஆயினும் இளைஞர் அமைப்பை மீண்டும்

ஒன்றுகூட்டுவதன் தேவையை அவர் உணர்ந்தார். அதற்கமைய கூட்டப்பட்ட இளைஞர் அமைப்புக் கூட்டம் வழமைபோல் பாராளுமன்ற உறுப்பினர் லீலாரத்ன விஜேசிங்கவின் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் இளைஞர் செயற்பாட்டாளர்கள் சுமார் 150 பேர் அதில் கலந்து கொண்டனர். "நான் ஒரு சேகுவராக்காரன் என முத்திரை குத்தப்பட்டுள்ளேன். அதனால் கடந்த காலத்தை சிறையில் கழித்துவிட்டே வந்துள்ளேன். எனவே நான் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்கிறேன். வேறு ஒரு செயலாளரை நியமித்துக் கொள்ளுங்கள்" என மைத்ரிபால அக்கூட்டத்தில் கூறினார். கூட்டத்தில் கலந்து கொண்ட எவரும் அதற்கு உடன்படவில்லை. "மைத்ரி சேகுவராக்காரனாக இருந்ததால் அந்த அநீதி நடக்கவில்லை. பொலிஸாரும் அதிபருமே இந்த அநீதியைச் செய்தனர். எனவே நீங்கள் விலக வேண்டியதில்லை. நீங்களே இளைஞர் அமைப்பின் செயலாளராக தொடர்ந்தும் இருக்க வேண்டும்" என இளைஞர்கள் ஒரே குரலில் கூறினார்கள். சாதாரணமாக இன்று ஒரு அரசியல் கட்சியில் இணைந்திருக்கும் ஒரு இளைஞனுக்கு இத்தகையதொரு நிலை ஏற்பட்டிருக்குமானால் அவன் தொடர்ந்தும் அக்கட்சியில் இருந்திருக்கமாட்டான். வேறு ஒரு கட்சிக்குச் சென்றிருப்பான். அல்லது அரசியலில் இருந்து ஒதுங்கியிருப்பான். ஆயினும் இவ்வளவு அநீதிகள் ஏற்பட்டபோதிலும் மைத்ரி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகவில்லை. எல்லா இன்னல்களையும் தாங்கிக்கொண்டு கட்சியில் நிலைத்திருந்ததுடன், பெரும்பாலானவர்களது கோரிக்கையின்படி இளைஞர் அமைப்பின் செயலாளர் பொறுப்பைத் தொடர்ந்தும் வகித்து வந்தார்.

1973 ஆம் ஆண்டின் மே தினமும் மைத்ரிக்கு மறக்க முடியாத ஒரு தினமாகும். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் கொழும்பில் நடத்திய மே தின கூட்டத்தில் மைத்ரி உள்ளிட்ட பொலன்னறுவை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் பங்கு பற்றினர். அவர்கள் கொழும்புக்கு புகையிரதத்தில் வந்தனர். ஐக்கிய முன்னணியின் மே தினக்கூட்டம் பொரளை கெம்பல் மைதானத்தில் ஆரம்பமானது. பொலன்னறுவையிலிருந்து வந்த மைத்ரி உள்ளிட்ட தரப்பினர் ஊர்வலம் செல்வதற்கு முன்னர் அவர்களின் கைகளில் இருந்த பணம் மற்றும் பொருட்களை பாதுகாப்பிற்காக ஒருவரிடம் ஒப்படைத்தனர். ஊர்வலம் செல்கின்றபோது பணம் தொலைந்துவிடக்கூடும் என்ற சந்தேகத்திலேயே அவர்கள் அந்த நபரிடம் பணத்தைக் கொடுத்தனர். ஊர்வலம் முடிவடையும்போது கோட்டை அரச மரச் சந்தியில் வந்து நில்லுங்கள், நாங்களும் அந்த இடத்திற்கு வருகிறோம்

எனக் கூறினர். மே தின ஊர்வலத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்ட காரணத்தினால் ஊர்வலம் காலி முகத்திடலுக்கு வந்து சேர பல மணி நேரம் எடுத்தது. கூட்ட நடவடிக்கைகள் முடிவடையும்போது இரவு 9 மணியையும் தாண்டியிருந்தது.

ஊர்வலம் முடிவடைந்து பார்க்கின்றபோது மைத்ரியோடு வந்த எவரையும் காணவில்லை. காலி முகத்திடலில் இருந்து நடந்து கோட்டை அரசமர சந்தியை வந்தடைந்தார் மைத்ரி. என்றாலும் பொலன்னறுவையிலிருந்து வந்த எவரும் அரசமரச் சந்தியிலும் இருக்கவில்லை. அவர்களது பணம் மற்றும் பொருட்களை பாதுகாப்பிற்காக வழங்கிய நபரையும் காணவில்லை. அந்த இரவில் மைத்ரிக்குத் தெரிந்த எவரும் கொழும்பில் இருக்கவுமில்லை. அவர் என்ன செய்வதென்று சிந்தித்தார். மிகக் கடுமையான பசியும் அவரை வாட்டியது. ஊர்வலத்தில் செல்லும்போது ஏதேனும் அவசரத்திற்கு குடிப்பதற்குத் தேவைப்படும் என எண்ணி மைத்ரி தனது சட்டைப் பையில் 10 ரூபாவை வைத்திருந்தார். அந்த 10 ரூபாவை எடுத்துக்கொண்டு புறக்கோட்டை ஐந்தாம் குறுக்குத் தெருவில் இருந்த தேநீர்க் கடைக்குச் சென்று, கால் இறாத்தல் பாணும் பருப்புக் கறியும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, பொலன்னறுவை செல்வதற்காக புறக்கோட்டை பேரூந்து நிலையத்திற்கு சென்றார். என்றாலும் அந்த நேரத்தில் பொலன்னறுவைக்குச் செல்வதற்கான பேரூந்து இருக்கவில்லை. திருகோணமலைக்குச் செல்லும் பேரூந்து மாத்திரமே இருந்தது. ஹபரணையூடாகவே திருகோணமலை பேரூந்து செல்லும்.

திருகோணமலையை நோக்கிச் செல்லும் பேரூந்தில் ஏறிய மைத்ரி ஹபரணைக்கான ஒரு டிக்கட்டை வாங்கிக் கொண்டார். ஹபரணைக்கு டிக்கட் வாங்கியதும் அவரிடம் 50 சதம் மட்டுமே மிகுதியாக இருந்தது. பயணக் களைப்பில் இருந்த மைத்ரி பேரூந்தில் நன்றாக உறங்கிவிட்டார். ஹபரணையைச் சென்றடையும்போது அதிகாலை 3 மணியாகிவிட்டது. "ஹபரணையில் இறங்க வேண்டியவர்கள் இறங்குங்கள்" என்ற நடத்துனரின் சத்தம் கேட்டு எழுந்த மைத்ரி அவசர அவசரமாக பேரூந்திலிருந்து இறங்கிக் கொண்டார். ஆயினும் ஹபரணையில் இருந்து பொலன்னறுவைக்குச் செல்வதற்கு அந்த நேரத்தில் பேரூந்து இருக்கவில்லை. அந்த சந்தியில் இருந்த ஒரு கடையின் முன் இருந்த பலகை இருக்கையில் தான் அணிந்திருந்த சட்டையுடன் நன்றாக உறங்கிவிட்டார். அதிகாலையில்று கடைக்கு வந்த கடை

முதலாளி "எழும்பு, எழும்பு கடையைத் திறக்க வேண்டும்" என சத்தமிடுவதைக் கேட்டே மைத்ரி எழுந்தார்.

அவர் அணிந்திருந்த ஆடை தூசுபடிந்து அழுக்காகியிருந்தது. அன்று ஹபரணையில் இருந்து பொலன்னறுவைக்கு பஸ் கட்டணம் 1 ரூபா 50 சதம். மைத்ரியிடம் இருந்ததோ 50 சதம் மட்டுமே. அவர் அச்சந்தியில் இருந்த ஒரு தேநீர் கடைக்குச் சென்று "முதலாளி நான் கொழும்பில் இருந்து வருகிறேன். பொலன்னறுவைக்குச் செல்ல வேண்டும். பேரூந்திற்கு ஒரு ரூபா குறைவாக உள்ளது. முடியுமானால் எனக்கு ஒரு ரூபாய் தாருங்கள்" என முதலாளியிடம் கேட்டார். "அடே நீ காலையிலேயே கரைச்சல் தருவதற்கு வந்துவிட்டாயா? நான் கடையைத் திறந்தது மட்டும்தான். உன்னைப்போன்ற எத்தனைபேர் தினமும் இப்படி வருகின்றார்கள். போ போ" என கத்தி விரட்டினார். என்ன செய்வதென யோசித்த மைத்ரி, மீண்டும் அந்த முதலாளியிடம் சென்று "முதலாளி எனக்கு அந்த ஒரு ரூபாவை நீங்கள் இனாமாகத் தர வேண்டாம். ஏதேனும் ஒரு வேலையை வாங்கிக்கொண்டு அதற்கு கூலியாக ஒரு ரூபாயைத் தாருங்கள்" என மிகவும் உருக்கமாகக் கேட்டார். சற்று நேரம் அவரைப் பார்த்து சிந்தித்த முதலாளி "இதோ இவனைக் கூட்டிச் சென்று தண்ணீர் கொண்டு வரச் சொல்" என அங்கிருந்த ஒரு ஊழியரிடம் மைத்ரியைக் காட்டிக் கூறினார். மைத்ரிக்கு வழங்கப்பட்ட வேலை நான்கு கலன்கள் மற்றும் இரண்டு பீப்பாய்களுக்கு கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து நிரப்புவதாகும். அவர் அதனை நிறைக்கத் தொடங்கினார். ஆயினும் கலன்களை தூக்குவதற்கு பெரிதும் சிரமப்பட்டார். இரண்டு பீப்பாய்களில் இருந்தும் தண்ணீரை கொஞ்சம் குறைத்த அவர் மிகுந்த கஷ்டத்தோடு அதனை தோளில் வைத்து தூக்கி வந்தார். இவ்வாறு சிரமப்பட்ட மைத்ரியை பார்த்து முதலாளி "நீ இன்னும் சாப்பிடவும் இல்லையே" என கேட்டுவிட்டு "இந்தா இவனுக்கு கால் இறாத்தல் பாணைக் கொடு" என வேலைக்காரச் சிறுவனிடம் கூறினார். முன்னைய நாள் இரவு பருப்புடன் கால் இறாத்தல் பாண் சாப்பிட்டதன் பின்னர் மைத்ரிக்கு சாப்பிடுவதற்கு எதுவும் கிடைக்கவில்லை. அங்கும் அவருக்கு கால் இறாத்தல் பாணும் பருப்புமே கிடைத்தது. என்றாலும் அந்த நேரத்திற்கு அது அவருக்கு பெரிதாகவே இருந்தது. மைத்ரி அந்த கால் இறாத்தல் பாணைச் சாப்பிட்டுவிட்டு அங்கிருந்த சில பீங்கான்களையும் கழுவிச் சுத்தம் செய்தார்.

முன்னைய தினம் ஊர்வலத்திற்கு மைத்ரியுடன் பொலன்னறுவையில் இருந்து சென்ற ஒருவர் அந்த கடைப் பக்கம் வருவதை எதேச்சையாகக் கண்டார் மைத்ரி. அது வீரசிங்க அங்கிள். வீரசிங்க அங்கிளைக் கண்ட மைத்ரிக்கு மிகுந்த சந்தோசமாக இருந்தது. "ஆ அங்கிள், நான் ஊருக்கு போக முடியாமலேயே இங்கிருந்தேன்" என கடையில் வேலை செய்ததை மறைக்கும் வகையில் அவரிடம் கூறினார். "அப்படியானால் வாரும் போவோம்" என்று சொல்ல, இருவரும் வீதிக்குச் சென்றனர். பொலன்னறுவைக்குச் செல்வதற்கு வீரசிங்க அங்கிளிடம் இருந்தது ஒரு ரூபா மட்டுமே. மைத்ரியிடம் இருந்தது 50 சதம் மட்டுமே. ஒருவருக்கு பொலன்னறுவைக்குச் செல்வதற்கு 1.50 சதம் தேவைப்பட்டது. மைத்ரியிடம் பணம் இருக்குமென்று வீரசிங்க நினைத்தார். வீரசிங்க அங்கிளிடம் பணம் இருக்குமென்று நினைத்தே மைத்ரி தான் வேலைசெய்த கடையில் கிடைக்கவிருந்த ஒரு ரூபாவையும் வாங்கவில்லை. இருவரும் ஒருவரையொருவர் நம்பி வீதிக்கு வந்தனர். மீண்டும் கடைக்குச் சென்று முதலாளியிடமும் பணம் கேட்க முடியாது. என்ன செய்வதென்று சிந்தித்துக் கொண்டிருந்தபோது "சற்று தூரத்தில் கெக்கிராவை பகுதியில் எமது உறவினர்கள் இருக்கிறார்கள் நாம் அங்கு செல்வோம்" என வீரசிங்க அங்கிள் கூறினார். ஹபரணைச் சந்தியில் இருந்து அந்த இடத்திற்கு ஒருவருக்கான பஸ் கட்டணம் 50 சதம். இருவரும் அந்த வீட்டுக்குச் சென்றார்கள். வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த குளத்திற்குச் சென்று ஆடைகளைக் கழுவி வெய்யிலில் காயவைத்துவிட்டு ஆடைகள் காயும்வரை குளத்தில் இறங்கியிருந்த இருவரும் சற்று நேரத்தில் ஆடைகளை அணிந்து கொண்டு வீட்டிற்குச் சென்றார்கள். அவ்வீட்டில் காலைச் சாப்பாடு சாப்பிடுகின்றபோது அவர்கள் மற்றுமொரு சிக்கலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. வீரசிங்க அங்கிளின் உறவினர் ஒருவர் பழைய சம்பவமொன்றை ஞாபகப்படுத்தி வீரசிங்க அங்கிளுக்கு குறை கூறத் தொடங்கினார். நிலைமை மோசமாகவே இன்னும் அங்கு தங்கியிருந்தால் இருவருக்கும் அடிவாங்க வேண்டியிருக்கும் என உணர்ந்த மைத்ரியும் வீரசிங்க அங்கிளும் அந்த வீட்டில் இருந்த யாரிடமும் பணத்தைக் கேட்காது பொலன்னறுவை செல்வதற்காக வெளியேறி வந்தனர்.

  

# தோல்வி ஏற்படுத்திய சிக்கல்

1977 பொதுத் தேர்தல் வரை மைத்ரிபால சிறிசேன கிராம சேவகராகவே பணிபுரிந்து வந்தார். அரச உத்தியோகத்தருக்கு அரசியல் செய்வது தடை செய்யப்பட்டிருந்த போதிலும் மைத்ரிபால சிறிசேன அதனைப் பெரிதாக பொருட்படுத்தவில்லை. மாறாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிப் பாதையில் இட்டுச்செல்லும் முயற்சியிலேயே மைத்ரி கவனம் செலுத்தினார். அதற்காக தொழிலை இழக்க நேரிட்டாலும் பரவாயில்லை என்ற எண்ணமே அவருக்கு இருந்தது. அந்தப் பொதுத்தேர்தலில் பொலன்னறுவைத் தொகுதிக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் லீலானந்த விஜேசிங்க போட்டியிட்டார். அரசியலில் ஈடுபடும் சுதந்திரம் மைத்ரிக்கு கிடைக்காத போதிலும் பொதுத் தேர்தலில், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பங்குபற்றுதலுடன் பொலன்னறுவை சந்தை வளவில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் அவர் மேடையேறிப் பேசினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி 1977 தேர்தலில் படுதோல்வியடைந்ததுடன், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 6 இல் 5 அதிகாரம் கிடைத்தது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு மொத்தமாக எட்டு இடங்கள் மட்டுமே

கிடைத்தன. எதிர்க்கட்சித் தரப்பில் அதிக இடங்கள் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு கிடைத்தது. அதன்படி அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க் கட்சித் தலைவரானார்.

பொதுத் தேர்தல் முடிவுற்று சில நாட்கள் சென்றும் மைத்ரி வீட்டைவிட்டு வெளியே வருவதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை. தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மைத்ரிக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுத்து வந்தனர். தேர்தல் கடமைகளுக்காக கிராம சேவகர்களுக்கு வழங்கப்படும் மேலதிகக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்காக மைத்ரி ஒரு நாள் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் கணக்குப் பிரிவுக்குச் சென்றார்.

கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்களைத் தயார்செய்த மைத்ரி அவற்றைக் கணக்காளரிடம் கையளித்தார். "இவற்றைக் கணக்கு எழுதுநரிடம் உறுதிப்படுத்திக்கொண்டு வாருங்கள்" என பிரதம கணக்காளர் கூறினார். மைத்ரி கணக்கு எழுதுநரிடம் சென்று அவற்றைக் கையளித்தார்.

அப்போது கணக்கு எழுதுநராக இருந்தவர் தர்மதாச என்பவராவார். மைத்ரி ஆவணங்களைக் கையளித்ததும் எவரும் எதிர்பார்க்காத வகையில் தர்மதாச மைத்ரி மீது சீறிப்பாய்ந்தார். "என்னை ஒரு பியோன் என்று நினைத்துக் கொண்டீரா" என்று தர்மதாச உரத்த குரலில் கத்தினார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புபட்ட தேசிய தொழிலாளர் சங்கத்தின் முக்கியஸ்தரான காமினி என்பவரும் அப்போது அங்கிருந்தார். "நீ வெட்கமில்லாமல் இங்கேயும் வந்துவிட்டாயா?" என காமினியும் கூச்சலிட்டார். "நான் இங்கு வந்தது எனது கடமைக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளவே தவிர வேறு எதற்கும் அல்ல" என்று மைத்ரி பதில் அளித்தார்.

பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற எச்.ஜி.பி.நெல்சனின் புகைப்படம் அந்த அலுவலக சுவரில் மாட்டப்பட்டிருந்தது. அந்தப் புகைப்படத்தைக் காட்டிய கணக்கு எழுதுநர் "அந்தப் படத்தை வணங்கு" என கூறினார். மைத்ரி எதுவும் பேசவில்லை. மைத்ரியை அடிப்பதற்கு கையை நீட்டியவாறு எழுதுநர் முன்னே வந்தார். பதிலுக்கு எதுவும் பேசினால் நிலைமை மோசமாகும் என்ற எண்ணத்தில் பின் நகர்ந்த மைத்ரி, அங்கிருந்து வெளியேறி தனது சைக்கிளில் வீட்டுக்கு திரும்பினார்.

இதனால் அவரை எப்படியாவது அடித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த எழுதுநருக்கு சப்பென்று போய்விட்டது. அனுமதியின்றி அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டார் என்று மைத்ரிக்கு எதிராக தேர்தலின் பின்னர் பல முறைப்பாடுகள் அரசாங்க அதிபர் அமரதாச குணவர்த்தனவுக்கு கிடைக்கப் பெற்றிருந்தன.

முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்வதற்காக மைத்ரியை தனது அறைக்கு வரவழைத்த அரசாங்க அதிபர் ''கவனமாக வேலையை செய்யுங்கள்'' என்று தெரிவித்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதையும் தவிர்த்துக் கொண்டார்.

# அரச சேவைக்கு முற்றுப்புள்ளி

1977ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தோல்வியடைந்ததன் பின்னர் மைத்ரியால் அரசசேவையில் தொடர்ந்தும் நிலைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன் அவர் வீட்டில் இருக்கக்கூடிய சூழ்நிலையும் இருக்கவில்லை. ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களால் தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தது. காலையில் அலுவலகத்துக்கு செல்லும் போது "ஜீ.எஸ் வீட்டுக்குப் போ" எனும் வாசகம் எழுதப்பட்ட சுவரொட்டி அவரது விளம்பரப் பலகையில் தினமும் ஒட்டப்பட்டிருந்தது. அதனைக் கிழித்தெறிந்து விட்டே அலுவலகத்தினுள் செல்ல வேண்டியிருந்தது. மறுநாள் காலையிலும் மீண்டுமொரு புதிய சுவரொட்டி ஒட்டப்பட்டிருக்கும். அதனை கிழித்தெறிந்துவிட்டே அலுவலகத்திற்கு செல்ல வேண்டும். ஆயினும் இதனை தொடர்ந்தும் பொறுக்க முடியாதிருந்தது. இதனிடையே மைத்ரிக்கு கொலை மிரட்டல்களும் வரத் தொடங்கின. எனவே அரச சேவையிலிருந்து விலகி முழுமையாக அரசியலில் ஈடுபடுவதென மைத்ரி தீர்மானித்தார்.

மைத்ரி தனது இராஜினாமா கடிதத்தைக் கையளிப்பதற்காக பொலன்னறுவை அரசாங்க அதிபரிடம் சென்றார். பிற்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சேவையாற்றிய ஒஸ்டின் பெர்னாண்டோவே அப்போது பொலன்னறுவை மாவட்ட அரசாங்க அதிபராக சேவையாற்றிக் கொண்டிருந்தார். ஒஸ்டின் பெர்னாண்டோவிடம் சென்ற மைத்ரி இராஜினாமா கடிதத்தைக் கையளித்தார். கடிதத்தைப் பார்த்த அரசாங்க அதிபர் "ஏன் இந்த வேலையை விட்டு விலகுகிறீர்?" எனக் கேட்டார். "சேர் இப்போதுள்ள

நிலைமையில் என்னால் வேலை செய்ய முடியாதுள்ளதுடன் மிகுந்த இடையூறுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டமையினால் நான் உயிருடனிருப்பதே பெரிய விடயமெனத் தோன்றுகிறது. ஆகவேதான் நான் வேலையிலிருந்து விலகுகிறேன்'' என உணர்வுபூர்வமாகக் கூறினார்.

ஆயினும் ஒஸ்டின் பெர்னாண்டோ, அவரது இராஜினாமாவை ஏற்றுக் கொள்ளாது நிராகரித்தார். "நீ இராஜினாமா செய்ய வேண்டாம், பாராளுமன்றத்தில் ஐ.தே. கட்சிக்கு 5/6 பெரும்பான்மை பலம் இருக்கிறது. உனக்குப் புரியவில்லையா? உங்களது அரசாங்கம் எப்போது ஆட்சிக்கு வருமோ தெரியாது. அண்மையில் தேர்தலொன்று நடப்பதற்கான வாய்ப்பும் இல்லை, அதனால் வேலையை விட்டுவிட வேண்டாம். வேலையில்லாமல் உன்னால் எப்படி வாழ முடியும்? அதனால் இதைப்பற்றி இன்னும் நன்றாக யோசித்துப்பார். கடிதத்தை வாங்கிக் கொண்டாலும் இதனை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. நன்றாக யோசித்துப் பார்த்துவிட்டு என்னிடம் இதைப்பற்றிக் கதைக்க பிறகு வாரும்.'' என ஒஸ்டின் பெர்னாண்டோ மைத்ரியிடம் கூறினார்.

இவ்வாறு மைத்ரி அரச அதிபருடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது அப்போதைய திருகோணமலை மாவட்ட அமைச்சராக இருந்த பொலன்னறுவை பாராளுமன்ற உறுப்பினர் எச்.ஜீ.பீ நெல்சன் அவ்விடத்திற்கு வந்தார். அச்சமயம் மைத்ரி அரச அதிபருக்கு முன்னாலிருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அதற்கு அடுத்ததாகவிருந்த ஆசனத்தில் அமைச்சர் நெல்சன் அமர்ந்தார். மைத்ரி அதனைக் கவனிக்காதது போல் "அப்படியாயின் சேர் நான் நாளைக்கு வருகிறேன்'' எனக் கூறிக்கொண்டு அங்கிருந்து வெளியே சென்றார்.

அடுத்த நாளே மீண்டும் அரச அதிபரை சந்திக்கச் சென்ற மைத்ரி, "சேர் நான் எனது முடிவினை மாற்றிக் கொள்வதாக இல்லை. அதனால் அரச சேவையிலிருந்து விலகுவதோடு அரசியலில் ஈடுபடவே விரும்புகின்றேன். யாருக்கும் தலை சாய்த்து கீழ்ப்படிந்து என்னால் கஷ்டப்பட முடியாது. எமது அரசாங்கம் எப்போது ஆட்சிக்கு வந்தாலும் பரவாயில்லை. ஆனால் ஐ.தே. கட்சி அரசாங்கத்தின் கீழ் என்னால் வேலை செய்ய முடியாது. அதனாலேயே நான் வேலையைவிட்டு விலகுகிறேன். தயவுசெய்து நீங்கள் என்னுடைய இராஜினாமா கடிதத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்'' எனக் கூறினார். ஆயினும் அரச அதிபர் அதனை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை.

எவ்வாறாயினும் மைத்ரியின் தொடர் வற்புறுத்தலினால் அரச அதிபர் இராஜினாமா கடிதத்தை ஏற்றுக்கொண்டார்.

மைத்ரி கிராம அலுவலர் பதவியிலிருந்து விலகிய போதிலும் அவருக்கு வேறு தொழிலும் இருக்கவில்லை. ஒரு நாள் மாலை நேரம் பொலன்னறுவை நகரத்தில் இருந்த கடையொன்றில் மைத்ரி அமர்ந்திருக்கும் போது ஒஸ்டின் பெர்னாண்டோவும் தற்செயலாக அவ்விடத்திற்கு வந்தார். அவரைக் கண்ட மைத்ரி "சேர் எப்படி சுகம்?" எனக் கேட்டார். அதற்கு "ஐயோ மைத்ரி உன்னால் நான் அன்று நன்றாக திட்டு வாங்கினேன்" என ஒஸ்டின் கூறினார். "யாரிடம் சேர் நீங்கள் திட்டு வாங்கினீர்கள்?" என மைத்ரி கேட்டார் "அன்று நீ இராஜினாமா கடிதத்தை என்னிடம் தருவதற்காக வந்திருந்தபோது அமைச்சர் நெல்சன் அங்கு வந்தாரே உனக்கு ஞாபகமிருக்கிறதா? அவர் வந்த போது நீ கதிரையிலிருந்து எழுந்திருக்கவில்லையே. அதனால் நீ சென்ற பின்னர் என்னை அவர் குறை கூறினார். "எதற்காக அவனைக் கூட்டி வந்து இங்கே உட்கார வைத்திருந்தீர்? குறைந்தபட்சம் நான் வரும்போது கதிரையிலிருந்து எழுந்து எனக்கு மரியாதை கொடுக்க தெரிந்து கொள்ள வேண்டாமா? இன்னும் அவன் எங்களை மதிப்பதே இல்லை. நான் ஒரு அமைச்சர், அங்கு வந்த போது கதிரையில் இருந்து எழுந்து எனக்கு மரியாதை கொடுக்க அவன் தெரிந்து கொள்ளவேண்டும். அவனுக்கு இருக்கும் தலைக்கனத்தால்தான் எனக்கு மரியாதை கொடுக்கவில்லை என என்னை குறை கூறினார்." என அரச அதிபர் நடந்ததை விபரித்தார். "என்னால் நீங்கள் திட்டு வாங்க நேர்ந்ததற்கு நீங்கள் என்ன செய்வீர்கள் சேர்? கவலைப்பட வேண்டாம்" என மைத்ரி அவருக்கு ஆறுதல் கூறினார்.

# அரசியலுக்காக தொழிலை கைவிடுதல்

1978ஆம் ஆண்டில் அரச சேவையிலிருந்து விலகியதன் பின்னர் மீண்டும் தொழிலொன்றைப் பெறுவதற்காக மைத்ரிபால சிறிசேன பல முயற்சிகள் எடுத்தபோதிலும் தொழிலேதும் கிடைக்கவில்லை. எனவே செய்திப் பத்திரிகைகளில் வெளிவரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பது அவரது நாளாந்த கடமைகளில் ஒன்றாகியது. அதன்போதே எப்பாவல கூட்டுறவு சங்கத்தின் வழங்கல் அலுவலர் பதவிக்கு விண்ணப்பித்தார். ஒருவாறு எப்பாவெல கூட்டுறவு சங்கத்தின் வழங்கல் அலுவலர் நியமனத்தையும் பெற்றார். அங்கு தகுதியான ஒருவர் இல்லாமையினால் கூட்டுறவு கல்வி அலுவலர் பணியையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. மைத்ரி எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் தனது அரசியல் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டேயிருந்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான "தினகர" பத்திரிகையை வாசிப்பது அவரது நாளாந்த பழக்கங்களில் ஒன்றாக இருந்தது. அலுவலகத்தில் பத்திரிகையை வாசித்த பின்னர் அதனை தனது மேசையில் ஒளித்து வைப்பது வழக்கம். ஒருநாள் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மைத்ரியிடம் வந்தார்.

வந்தவர் மைத்ரியிடம் "சிறிசேன இங்கே வேலை செய்வதற்காகவா வந்தீர்?" எனக் கேட்டார். அதனைக் கேட்டுத் திடுக்கிட்ட மைத்ரி, "நீங்கள் ஏன் அப்படி கேட்கிறீர்கள்?" என எதிர்க்கேள்வி கேட்டார். உடனே அவர் மேசை மீதிருந்த "தினகர" பத்திரிகையினைச் சுட்டிக்காட்டி "இது எங்கிருந்து வந்தது?" எனக் கேட்டார் தலைவர். மைத்ரியும் "நான் தினகர பத்திரிகையினை

தினமும் வாசிப்பேன். எனது மேசையிலேயே அது இருந்தது'' என பதில் அளித்தார். "இது சுதந்திரக் கட்சியினர் வாசிக்கும் பத்திரிகை. இங்கே அரசியல் செய்ய முடியாது சிறிசேன, அரசியல் செய்வதென்றால் இங்கிருந்து சென்றுவிட வேண்டும்." என கடுகடுப்பாக கூறினார்.

அரசியல் ரீதியில் வெறுப்படைந்து பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வேலையிலிருந்து நீக்கி விடுவார்களோ என அச்சமுற்ற மைத்ரி தனது அரசியல் கொள்கையினை விட்டுக்கொடுக்க முடியாதென உறுதியாக எண்ணியமையினால் தனது வேலையைத் துறக்க முடிவெடுத்து ஒரு வார காலத்தில் அந்த வேலையை உதறித்தள்ளினார்.

# காதல் கதை

1975ஆம் ஆண்டில் வாலிபனாக இருந்த மைத்ரி பொலன்னறுவை பழுகஸ்தமன பல்நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் வழங்கல் உத்தியோகத்தராக இருந்தார். கொழும்புச் சந்தையிலிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்து கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்குவதே அவரது கடமையாக இருந்தது. ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவியது. இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சதொச களஞ்சியங்களிலேயே அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. வாரத்திற்கு இரண்டு, மூன்று தடவைகள் குருணாகல் சதொச களஞ்சியசாலைக்குச் சென்று அத்தியாவசிய பொருட்களைக் கொண்டுவந்து அவற்றினை கூட்டுறவுச் சங்கத்திற்கும் தனியார் நிறுவனங்களுக்கும் வழங்குவதை மைத்ரி வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒருநாள் இவ்வாறு குருணாகலில் இருந்து பொருட்களை கொள்வனவு செய்து, வாகனத்தில் பொலன்னறுவை நோக்கி கொண்டு செல்லும்போது வெஹெர பிரதேசத்திலிருந்த மர விற்பனைப் பட்டறை ஒன்றிற்கு சென்றார். பொலன்னறுவை பிரதேசத்தில் இல்லாத தென்னை, பலா மரப் பலகைகளைக் கொள்வனவு செய்யும் நோக்குடன் அங்கு சென்ற மைத்ரி அங்குமிங்கும் அலைந்தவாறு பலகைகளைத் தெரிவுசெய்து கொண்டிருந்தார். அவர் இருந்த இடத்திற்கு சற்று தொலைவில் மர ஆலையில் வெட்டப்படும் மரங்களிலிருந்து அகற்றப்படும் சிறு துண்டுகளை விறகுக்காக தமது வீடுகளுக்கு கொண்டு செல்வதற்காக சில



யுவதிகளும் வந்திருந்தார்கள். அவர்களிடையே இருந்த அழகிய யுவதி மைத்ரியின் மனதைக் கவர்ந்தாள். அந்த அழகியை மீண்டும் பார்க்கவும், அவளைப் பற்றி விசாரிக்கவும் மைத்ரியின் மனம் அவரை வற்புறுத்தியது. அவர் பலகைகளைப் பார்ப்பதற்கு பதிலாக அந்த யுவதியையே இரகசியமாக பார்த்துக் கொண்டிருந்தார். அவர்கள் விறகுகளை கட்டுகளாகக் கட்டிக்கொண்டு செல்வதற்குத் தயாரான போது மைத்ரி அந்த யுவதியிடம் "கொண்டு செல்வதற்கு சிரமமாக உள்ளதா? சுமை அதிகமா?" எனக் கேட்டார். அதற்கு அந்த யுவதியிடமிருந்து புன்னகை மாத்திரமே பதிலாகக் கிடைத்தது.

மைத்ரி உதவியாளர் ஒருவருடனேயே அங்கு சென்றிருந்தார். எனவே அவர் அந்த உதவியாளரிடம் "அந்த யுவதி எங்கே செல்கிறாள் என்று செல்லும் வழியைப் பார்த்துக்கொள்" எனக் கூறினார். அதன் பின்னர் அவர் தனக்குத் தேவையான மரப் பலகைகளைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினார். திரும்பிச் செல்லத் தயாரான போது உதவியாளரிடம் "உன்னிடம் கூறிய வேலையைச் செய்தாயா?" எனக் கேட்டார். அதற்கு "ஆமாம் நான் வீட்டைப் பார்த்துக் கொண்டேன்" என பதிலளித்தார் உதவியாளர்.

அதன் பின்னர் குருணாகலுக்கும், கொழும்புக்கும் செல்லும்போதும், திரும்பிவரும் போதும் அந்த யுவதியின் வீட்டருகில் சிறிது நேரம் காத்திருந்து வருவதை மைத்ரி வழக்கமாக்கிக் கொண்டார். சிலவேளைகளில் அவ்விடத்தில் வாகனம் பழுதடையும் சந்தர்ப்பங்களும் இருக்கவே செய்தன. அதனிடையே மைத்ரி அந்த யுவதியைச் சந்திக்கும் வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொண்டார். ஆயினும் யாரேனும் கண்டுவிடுவார்களோ என்ற பயத்தினால் அந்த யுவதி மைத்ரியுடன் கதைக்கத் தயங்கினாள். இவ்வாறு சில நாட்கள் செல்கையில் அவர்கள் இருவருக்கிடையிலும் காதல் மலரத் தொடங்கியது. காலம் உருண்டோடியது. ஒருவரையொருவர் சந்திக்காமலிருக்க முடியாத அளவிற்கு இருவரும் உள்ளத்தால் இணைந்திருந்தனர்.

இவ்வாறு மைத்ரி, ஜயந்தி காதல் ஏழு ஆண்டுகளைக் கடந்திருந்த போதிலும் அவளது தந்தையிடமிருந்து அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள மைத்ரியால் முடியாதிருந்தது. அவளது தந்தை மகளின் காதலை சிறிதளவும் விரும்பவில்லை. எனினும் மைத்ரி அவளைப் பார்ப்பதற்காக அவளது வீட்டிற்கும் சென்றுவர ஆரம்பித்தார். ஆயினும் எதிர்பாராத விதத்தில் ஒரு

நாள் ஜயந்தியின் பெற்றோர் ஜயந்தியை அவர்களது உறவினர் வீட்டுக்கு அனுப்பி வைத்திருந்தனர். ஜயந்தியை மைத்ரியிடமிருந்து பிரிக்க வேண்டுமென்பதே அவர்களது நோக்கமாக இருந்தது. ஆயினும் தம்முடன் அதிகம் பேசாத ஜயந்தியின் தாயையும் தம்மை விரும்பாத அவளது தந்தையையும் எவ்வாறு சமாளிப்பதென யோசித்து பெரிதும் வருந்தினார் மைத்ரி.

வீட்டில் நிம்மதியாக இருக்கவோ, வேலைகளில் ஈடுபடவோ மைத்ரிக்கு முடியவில்லை. ஜயந்தி எப்படி இருக்கிறாளோ? என்ன நடந்ததோ என்பதைப் பற்றியே அவர் இரவும் பகலும் சிந்தித்தபடி இருந்தார். இவ்வாறிருக்கையில் சில நாட்களுக்குப் பின்னர் தபாலில் கடிதமொன்று வந்து கிடைத்தது. அவளைப் பற்றிய ஏதேனும் தகவல் கிடைக்குமா என்ற பெரும் எதிர்பார்ப்புடனேயே அவர் அக் கடிதத்தைக் கையில் எடுத்தார். அவர் எண்ணியது சரியாகவே இருந்தது. கடிதம் ஜயந்தியிடமிருந்தே வந்திருந்தது. அவர்கள் இருவருக்கிடையிலுமுள்ள தொடர்பினை நிறுத்துவதற்காக அவளது குடும்பத்தினர் அவளை பலாங்கொடை பிரதேசத்திலுள்ள அவர்களுடைய உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கவைத்துள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் அவ் வீட்டிற்கு வரும் வழியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே மைத்ரியும் அடுத்த நாளே கொழும்பிற்கு சென்று அங்கிருந்து ஜயந்தியைத் தேடி, பதுளை செல்லும் பஸ்ஸொன்றில் ஏறி பலாங்கொடை நோக்கிப் புறப்பட்டார். அவர் வருவாரென ஜயந்தியும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவரைக் கண்டதும் அவளது உள்ளம் மகிழ்ச்சியில் பூரித்தது.

கடந்த சில நாட்களில் நடந்த எல்லாவற்றையும் அவள் மைத்ரிக்கு கூறத் தொடங்கினாள். சுமார் ஒரு மணித்தியால உரையாடலின் பின்னர் மைத்ரி மீண்டும் பொலன்னறுவையை நோக்கி புறப்பட்டுச் சென்றார்.

மைத்ரி - ஜயந்தி காதலுக்கு அவரது தந்தையின் அனுமதி கிடைக்கவில்லை. ஆயினும் அவை எதனையும் கருத்திற் கொள்ளாத மைத்ரி தனது திருமணத்தை விரைவில் நடத்துவதற்குத் தீர்மானித்தார். இதனை அவர் பலாங்கொடையில் இருந்த ஜயந்திக்கு கடிதம் மூலம் தெரிவித்தார். குறிப்பிட்ட தினத்தில் தான் வருவதாகவும் தன்னுடன் வருவதற்குத் தயாராக இருக்கும்படியும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கேற்ப தான் ஏற்கனவே அறிவித்திருந்தவாறு குறிப்பிட்ட தினத்தன்று மைத்ரி

பலாங்கொடை வீட்டுக்கு சென்றார். அதன்போது ஜயந்தியும் அவருடன் செல்வதற்குத் தேவையான ஆடைகள் முதலியவற்றை வீட்டாருக்குத் தெரியாமல் தயார்செய்து வைத்திருந்தார். வீட்டாரும் இவற்றை அறியாமலேயே இருந்தனர்.

ஜயந்தியின் பலாங்கொடை மாமியைக் கண்ட மைத்ரி, தமது திருமணத்திற்கு தற்போது எந்த எதிர்ப்பும் இல்லையெனவும் தன்னுடன் மகளை அனுப்பி வைக்குமாறு ஜயந்தியின் அம்மா கூறியதாகவும், அவளது மாமியிடம் கூறினார். மைத்ரி தாம் கூறுவதைப்பற்றி சிறிதளவேனும் சந்தேகம் ஏற்படாத வகையில் காரண காரியங்களை முன்வைத்து உறுதிப்படுத்திக் கூறினார்.

மைத்ரியின் கதையைக் கேட்ட மாமி "நீங்கள் மோசமானவர் இல்லையென்பதை முதல் தடவையாக இங்கு வந்தபோதே நாங்கள் புரிந்து கொண்டோம். எனது அண்ணன் எதனால் இதனை எதிர்க்கிறார் எனத் தெரியல்லை. சரி சரி, இப்பொழுது சம்மதம்தானே, கூட்டிச் செல்லுங்கோ" என கூறினார். அவர்கள் இருவருக்கும் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. மாமியை வணங்கி அவரது ஆசீர்வாதத்தைப் பெற்ற இருவரும் உடை பையையும் எடுத்துக்கொண்டு கொழும்பு நோக்கிச் சென்றார்கள். பலாங்கொடையில் இருந்து கொழும்பு வரும் பஸ்ஸில் ஏறிய இருவரும் கொழும்புக்கு வரும்போது இரவாகி இருந்தது. அங்கிருந்து குருணாகலையில் இருந்த ஜயந்தியின் வீட்டிற்கு கூட்டிச் செல்வதற்குப் பதிலாக கம்பஹாவில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு ஜயந்தியை கூட்டிச் சென்றார் மைத்ரி. என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியாத ஜயந்தி "இப்போது நாங்கள் என்ன செய்வது" என மைத்ரியிடம் கேட்டாள்.

"நாம் நாளை காலை கச்சேரிக்கு சென்று திருமணம் செய்யப் போகிறோம்" என மைத்ரி கூறினார். அவ்வாறே அடுத்த நாள் காலையிலேயே மைத்ரி, ஜயந்தியுடன் கம்பஹா கச்சேரிக்கு சென்றார். திருமணத்திற்கு சாட்சியாக கையொப்பம் இடுவதற்கு அவரது இரு நண்பர்களும் அங்கே வந்திருந்தனர். அதற்கேற்ப இருவரினதும் திருமணம் கம்பஹா கச்சேரியில் கையெழுத்தாகியது. இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸிலேயே தம்பதியினர் பயணம் செய்தனர்.

பதிவுத் திருமணத்தின் பின்னர் இருவரும் மைத்ரியின் சகோதரியின் வீட்டிற்கே சென்றனர். இவ்வாறு சில நாட்கள்

செல்கையில் மைத்ரியின் தந்தை "சரி திருமணம் நடந்து முடிந்து விட்டதுதானே மருமகளை வீட்டிற்கு கூட்டி வா" என மைத்ரியிடம் கூறினார். ஆயினும் மனைவியை விழா எடுத்து வீட்டிற்கு அழைத்து செல்ல மைத்ரியிடம் பணம் இருக்கவில்லை. மைத்ரியின் தந்தையே ஆயிரத்து ஐநூறு ரூபாவை வரவேற்புபசார செலவுக்காக கொடுத்தார். அந்த நாட்களில் மைத்ரிக்கு தொழிலோ அல்லது வேறு வருமான வழிகளோ இருக்கவில்லை.

கம்பஹா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான லயனல் குணவர்தன என்பவர் மைத்ரியின் நண்பராவார். மைத்ரி "டெனி அண்ணன்" என்றே அவரை அழைப்பார். டெனி அண்ணனைத் தேடிச்சென்ற மைத்ரி, "டெனி அண்ணா நான் திருமணம் செய்து விட்டேன். ஆனால் அவளை பொலன்னறுவைக்கு அழைத்து செல்வதற்கு வாகனம் இல்லை" எனக் கூறினார். டெனி அண்ணாவிடம் கார் விற்பனை நிலையம் ஒன்று இருந்தது. "சரி என்னுடைய கார் ஒன்றை கொண்டு போ" என டெனி அண்ணன் கூறினார். அதற்கேற்ப மைத்ரியும் ஜயந்தியை அழைத்துக்கொண்டு டெனி அண்ணனின் காரில் பொலன்னறுவைக்கு சென்றார். டெனி அண்ணனின் மகனே காரை ஓட்டிச் சென்றார்.

மைத்ரி மணமகளை அழைத்துக்கொண்டு லக்ஸ உயன வீட்டுக்கு வருகின்ற செய்தி அவருடைய நண்பர்கள் சிலருக்கு தெரியவந்தது. எனவே அவர்கள் மைத்ரி பொலன்னறுவை நகரை வந்தடையும்போது ஏழெட்டு கார்களுடன் அங்கு வந்தனர். புது மணத் தம்பதிகளை அன்புடன் வரவேற்று அங்கிருந்து பொலன்னறுவை லக்ஸ உயன வீட்டிற்கு வாகன ஊர்வலத்தில் அழைத்துச் சென்றனர்.

திருமணத்திற்காக பெரிய அளவிலான வைபவம் எதனையும் நடத்தி நண்பர்களுக்கு விருந்தளிப்பதற்குப் போதியளவு பண வசதி இருக்காததால் வீட்டிற்கு வந்த நண்பர்களுக்கு சிற்றுண்டிகளுடன் தேநீர் விருந்துபசாரத்துடனான சிறிய அளவிலான வரவேற்பையே மைத்ரி குடும்பத்தினரால் வழங்க முடிந்தது.



# மைத்ரியின் நிழல்

ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்று கூறப்படுவதுண்டு. வெற்றிகரமான மனிதர்களுக்கும் நற்குணமுடைய மனிதர்களுக்கும் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள் என்பது எமது சமூகத்தில் உள்ள ஒரு பிரபல்யமான கூற்றாகும். மைத்ரிபால சிறிசேன என்ற மனிதனின் வெற்றியின் இரகசியமாக பல விடயங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றில் மிக முக்கியமான காரணம் அவரது அன்பான மனைவி ஜயந்தி புஸ்பகுமாரி அம்மையார் என்பது அவரை நன்கறிந்தவர்களுக்கு புதிய விடயமல்ல.

பெரும்பாலான அமைச்சர்களின் மனைவிமார் தமது கணவர்மாரின் அமைச்சுக்களை தமது கட்டுப்பாட்டினுள் வைத்துக்

கொள்ள முயற்சிப்பார்கள். கட்சி வேறுபாடுகளின்றி அதனை பொதுவாகவே அவதானிக்கலாம். அவர்கள் அமைச்சுக்களின் செயலாளர்களையும் அதிகாரிகளையும் தொடர்புகொண்டு விலைமனுக்களையும், ஒப்பந்தங்களையும் பற்றிக் கேட்டறிவார்கள், வேலை வாய்ப்புக்கள் மற்றும் வாகனங்களைப் பற்றி கேட்பார்கள். அதிகாரிகளுக்கு கட்டளையிடுவார்கள். ஆனால் மைத்ரிபால சிறிசேன அவர்களின் மனைவி ஜயந்தி, அமைச்சரின் மனைவியாக இருந்தபோதும் அமைச்சரின் அதிகாரங்களை எப்பொழுதுமே தனது கையில் எடுக்காதவர். ஏனெனில் அவருக்கு இவை எவற்றிலும் ஈடுபாடு இருக்கவில்லை.

தொடர்ச்சியாக 21 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய மைத்ரி, சிறிது காலம் பிரதியமைச்சராகவும், நீண்ட காலம் அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். ஆயினும் அவரது மனைவி ஜயந்தி ஒருபோதும் அமைச்சுக் கட்டிடத்திற்குக் கூட சென்றதில்லை. வைபவங்களில் பங்குபற்றுவதுகூட மிகக்குறைவு. மைத்ரி அமைச்சராக பணியாற்றிய 21 வருடங்களில் அவ்வாறு அவர் வைபவங்களில் பங்குபற்றிய தடவைகள் மிகமிகக் குறைவாகவே இருக்கும். மைத்ரி, ஜயந்தி தம்பதியினருக்கு தர்ஷனி சதுரிகா மற்றும் தரணி சாரிகா ஆகிய இரு மகள்மாரும் தஹம் தாரக எனும் மகனும் உள்ளனர்.

தனது வீட்டுப் பணிகளின் போது வேலையாட்களையோ அல்லது வேறு யாரேனும் பணியாட்களையோ இணைத்துக் கொள்ளாமை ஜயந்தியின் சிறப்பம்சமாகும். அத்துடன் அவர் தனது கணவரினதும் பிள்ளைகளினதும் தேவைகளை குறைவின்றி நிறைவேற்றி வைக்கும் பெண்மணியாவார். சாதாரண மக்களின் கஷ்டங்களையும் கண்ணீரையும் நன்குணர்ந்த ஜயந்தி, சாதாரண மக்களிடமும், அதிகாரிகளுடனும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரத்தை வெளிப்படுத்தாமை அவருடைய விசேட குணமாகும். இதனால் அவர் மற்றைய அரசியல்வாதிகளின் மனைவிமாருக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.



# கவிழ்ந்து கிடந்த கட்சி

கலாவெவ தொகுதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.பீ.ரத்னமலல அவர்களது திடீர் மறைவினால் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டி ஏற்பட்டது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இளைஞர் அமைப்பின் தேசிய அமைப்பாளரான அநுர பண்டாரநாயக்கவை வேட்பாளராக நிறுத்த கட்சியால் முன்மொழியப்பட்டது. எனினும் யசபால ஹேரத், ரத்னமலலவின் மகன் ஆகியோரும் அத்தேர்தலில் போட்டியிட விரும்பினார்கள்.

இறுதியாக ரத்னமலல அவர்களின் மகனை இடைத்தேர்தல் வேட்பாளராக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக ஏ.எம்.எஸ். அதிகாரியும் சுயேச்சையாக யசபால ஹேரத்தும் போட்டியிட்டனர்.

தேர்தல் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. வேட்பாளர்களும் கட்சித் தலைவர்களும் பிரசாரங்களில் முன்னின்று செயற்பட்டனர். செயற்திறன் மிக்க இளைஞனான மைத்ரிக்கும் இதில் அதிக

பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. இதன்போது அவரது வாழ்வில் என்றுமே மறக்கமுடியாத சம்பவமொன்று இடம்பெற்றது.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக பொலன்னறுவையிலிருந்து இளைஞர் குழுவொன்றுடன் மைத்ரி கலாவெவ நோக்கி லொறியொன்றில் சென்று கொண்டிருந்தார். கலாவெவ குளக்கட்டில் சென்று கொண்டிருந்த அந்த லொறி மூன்று தரம் சுழன்று புரண்டு தலை கீழாக விழுந்தது. அதிஷ்டவசமாக வாகனம் அணைக்கட்டுப் பக்கமல்லாமல் மறு பக்கமே விழுந்தது. பொலன்னறுவையில் இருந்து சென்ற இளைஞர்கள் சிலருக்கு கை கால்களில் பலத்த அடிபட்டிருந்ததுடன், சிலருக்குத் தலையிலும் அடிபட்டிருந்தது. மைத்ரி, அவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார். காயப்பட்டவர்களை வைத்தியசாலையில் சேர்த்துவிட்டு மைத்ரியும் சில இளைஞர்களும் விபத்து நடந்த இடத்துக்கு வந்து புரண்டு கிடந்த லொறியை பார்த்துக் கொண்டிருந்தனர். மைத்ரி நீல நிறத் தொப்பியொன்றை அணிந்திருந்தார். அவ்வேளையில் அணைக்கட்டின் வழியே வாகனத் தொடரணியொன்று வந்தது. அதில் முதலாவதாக மரம் வெட்டும் இயந்திரம் போன்ற வாகனமும் வந்தது. அக்காலத்தில் கட்சித் தலைவர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக செல்லும் போது பாதையில் இடையூறாக போடப்படும் மரங்களை வெட்டி அகற்றுவதற்காகவே இவ்வாறான இயந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டன. வாகனத் தொடரணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜே.ஆர். ஜயவர்தன வந்துகொண்டிருந்தார். மைத்ரி உள்ளிட்டோரின் லொறி கவிழ்ந்து கிடப்பதனை அவதானித்த அவர் நீல நிற தொப்பியுடன் நின்றுகொண்டிருந்த மைத்ரியை நோக்கி "என்ன லொறி கவிழ்ந்து விட்டதா?" எனக் கேட்டார். அவரை இனங்கண்டு கொண்ட மைத்ரி "ஆமாம் கவிழ்ந்து விட்டது" என பதிலளித்தார். "உங்களது ஆட்சியும் இவ்வாறுதான் கவிழப் போகிறது" எனக் கூறியவாறே ஜே.ஆர். அவ்விடத்தை விட்டு அகன்று சென்றார்.

1974 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இடைத்தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் தோல்வியடைந்தார். ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஏ.எம்.எஸ். அதிகாரி வெற்றிபெற்று கலாவெவ தொகுதி பாராளுமன்ற உறுப்பினரானார். இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கும் சாதகமாக

அமையவில்லை. அன்று லொறி கவிழ்ந்த சந்தர்ப்பத்தில் ஜே.ஆர். ஜயவர்தன கூறியது போல் 1977 ஆம் ஆண்டில் ஆட்சியும் கவிழ்ந்தது.



# துப்பாக்கிச் சூடு

1985ஆம் ஆண்டு சமல் ராஜபக்ஷ முல்கிரிகல இடைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தெரிவு செய்யப்பட்டார். அம்பாந்தோட்டை கச்சேரிக்கு ஊர்வலமாகச் சென்று வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. சமல் ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு மகிந்த ராஜபக்ஷவே பொறுப்பாக இருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொகுதி அமைப்பாளர்களுக்கு வாக்குச் சாவடிகள் வேறு வேறாக பொறுப்பளிக்கப்பட்டிருந்தன. பொலன்னறுவை தொகுதி அமைப்பாளரான மைத்ரிபால சிறிசேனவிற்கு முல்கிரிகல தேர்தல் தொகுதியின் மித்தெனிய பிரதேசத்தில் உள்ள குடகொட வாக்குச்சாவடி பொறுப்பளிக்கப்பட்டிருந்தது.

மைத்ரி நேர காலத்தோடு அப்பிரதேசத்திற்குச் சென்று தேர்தல் பணிகளைப் பொறுப்பேற்றார். அவர் ஓய்வுபெற்ற அதிபர் ஒருவரின் வீட்டில் தங்கி அப்பிரதேசத்தின் சில இளைஞர்களையும் சேர்த்துக்கொண்டு தேர்தல் பிரசார நடவடிக்கைகளை சுமார் ஒரு மாத காலமாக முன்னெடுத்து வந்தார். தேர்தல் பிரசாரத்தின்

போது பிரதான இரு தரப்பினருக்கும் இடையே அவ்வப்போது முறுகல் ஏற்பட்ட நிலையில், தேர்தல் நெருங்க ஆங்காங்கே கைகலப்புகளும் இடம்பெற்றன.

தேர்தல் தினத்தன்று காலை குடகொட வாக்குச் சாவடிக்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் பிரதான வீதிக்கருகில் மைத்ரியும் சில இளைஞர்களும் கூடியிருந்தனர். நீல நிறத் தொப்பி அணிந்திருந்த இவர்களை நோக்கி ஒரு பென்ஸ் கார் மிக வேகமாக வந்து நின்றது. அக் காரிலிருந்து இறங்கிய அமைச்சர் ஒருவர் மைத்ரியிடம் சென்று "எப்படி நிலைமை?" என்று கேட்டார். "மிகவும் நல்லதாகவே இருக்கின்றது. நாம் எமது பணிகளைச் செய்துகொண்டு போகிறோம்" என்று பதிலளித்தார் மைத்ரி. சற்றுநேரம் மைத்ரியுடன் பேசிவிட்டு அந்த அமைச்சர் விடைபெற்றார்.

சுமார் அரை மணிநேரத்தில் ஒரு வாகனத் தொடரணி அவ்விடத்திற்கு வந்தது. அதனுடன் சில பொலிஸ் ஜீப் வண்டிகளும் வந்தன. அவ்வாகனங்களில் வந்தவர்களில் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் இருந்தனர். அமைச்சர்களும் இருந்தனர். அவர்களிடம் விதவிதமான ஆயுதங்களும் இருந்தன. ஒரு அமைச்சர் ஒரு இரும்புக் கம்பியுடன் வாகனத்திலிருந்து இறங்கினார். ஒரு பிரதி அமைச்சர் தனது கைத்துப்பாக்கியுடன் இறங்கினார். வாகனத்திலிருந்து இறங்கியவர்கள் நீல நிறத் தொப்பி அணிந்திருந்த இளைஞர்களை கண்டபடி தாக்கத் தொடங்கினர். இளைஞர்கள் செய்வதறியாது நாலா பக்கமும் ஓடினார்கள்.

"இந்த பிரசாரப் பணியை வழிநடத்துபவன் நீதானே?" எனக் கேட்டவாறு ஒருவர் மைத்ரியிடம் வந்தார். "ஆம் நான் தான்" என்று மைத்ரி பதில் அளித்தார். ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று மைத்ரிக்கு தெரிந்தது. அந்த நேரத்தில் ஓடித் தப்புவதை தவிர வேறு வழி இருக்கவில்லை. மைத்ரி ஓடவே அவரை பின்னால் துரத்திச் சென்ற அமைச்சர் தனது கைத்துப்பாக்கியால் சுட்டார். மைத்ரி அதிலிருந்து தப்புவதற்காக அங்கிருந்த மரத்தைச் சுற்றி ஓடினார். கடைசியில் அமைச்சர் களைத்துப் போய்விட்டார். "உனது நேரம் நல்லாயிருக்கு, துப்பாக்கியில் ரவைகளும் முடிந்துவிட்டன" என கூறிவிட்டு அவர் திரும்பிச் சென்றார். அந்த துப்பாக்கிச் சூட்டில் மத்துகமையை சேர்ந்த ஒரு இளைஞர் காயமடைந்தார்.

அடுத்த நாள் தேர்தல் பெறுபேறுகள் வெளிவந்தபோது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் சமல் ராஜபக்ஷ

தோல்வியடைந்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆனந்த குலரத்ன வெற்றியடைந்திருந்தார். தேர்தல் முடிவுகள் வெளிவந்ததையடுத்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வீதியில் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. சுதந்திரக் கட்சி தொகுதி அமைப்பாளர்களுக்கு மிகுந்த கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அதனால் மைத்ரி குடகொடவில் அதிபர் வீட்டிலேயே தொடர்ந்தும் தங்கியிருந்தார். பொலன்னறுவை செல்வதற்கு அதிபரின் வீட்டிலிருந்து வெளியே வர முடியவில்லை. அந்தளவுக்கு நிலைமை மோசமாக இருந்தது.

கடைசியில் மைத்ரியை அவருடன் வேலை செய்த இளைஞர்கள் ஒரு காட்டு வழியாக சுமார் 12 கிலோ மீற்றர் தூரத்திலிருந்த எம்பிலிப்பிட்டிய பேரூந்து நிலையத்திற்கு அழைத்து வந்து மைத்ரியை கொழும்பு பேரூந்தில் எற்றிவிட்டு பேரூந்து போகும்வரை காத்திருந்தார்கள்.

அந்த சம்பவத்தின் பின்னர் மைத்ரியை துப்பாக்கியுடன் துரத்திய அமைச்சர் 89ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலேயே மைத்ரியை மீண்டும் சந்தித்தார். அப்போது மைத்ரியும் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்தார். அவர் பாராளுமன்றத்திற்கு வருகை தந்து சுமார் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் பாராளுமன்ற சிற்றுண்டிச் சாலையில் பகல் உணவு உட்கொண்டிருந்தபோது அமைச்சரும் உணவுடன் மைத்ரி இருந்த மேசைக்கருகில் வந்து அமர்ந்தார். அவர் மைத்ரியை பார்த்து "நீங்கள் புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்தானே" என்று கேட்டார். "ஆம்"; என்று மைத்ரி பதில் அளித்தார். "என்னை உங்களுக்கு தெரியாமல் இருக்கும். புதியவர்தானே. நீங்கள் பொலன்னறுவையா?" என்று கேட்டார். "ஆம் நான் பொலன்னறுவை தான். என்றாலும் எனக்கு உங்களை நன்றாகத் தெரியும்" என்று மைத்ரி கூறினார். "ஆம் நான் ஒரு அமைச்சர் என்ற வகையில் என்னைத் தெரிந்திருக்கும்" என்று அமைச்சர் கூற, மைத்ரி "அதுவல்ல அதனைப் பார்க்கிலும் வேறொரு விடயம் உள்ளது முல்கிரிகல இடைத் தேர்தல் உங்களுக்கு நினைவிருக்கிறதா?" என மைத்ரி கேட்டார். ஆமாம் எனக்கு நினைவு இருக்கிறது என்றார் அமைச்சர். "குடகொட வாக்குச் சாவடியில் இடம்பெற்ற சம்பவம் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நீங்கள் கைத்துப்பாக்கியுடன் ஒருவரை விரட்டிச் சென்றது நினைவு இருக்கிறதா?" என மைத்ரி கேட்டபோது, அமைச்சர் உணவருந்துவதை நிறுத்திவிட்டு "உங்களுக்கு எப்படி

அது தெரியும்?'' என்று கேட்டார். ''அமைச்சர் அவர்களே, நீங்கள் துப்பாக்கியுடன் விரட்டிச் சென்றது என்னைத்தான்'' என கூறினார் மைத்ரி. ''அது தேர்தல் கால சம்பவம் தானே, அவற்றை கணக்கில் எடுக்க வேண்டாம். மறந்து விடுங்கள். நானும் உங்களுக்கு உதவி செய்கிறேன்'' என்று அமைச்சர் கூறினார். அன்று முதல் அந்த அமைச்சர் மரணிக்கும் வரை மைத்ரியுடன் மிக நெருங்கிய நண்பராக இருந்தார். அவர்தான் காலம் சென்ற முன்னாள் அமைச்சர் காமினி அத்துகோரள ஆவர்.



# சாக்கடையில் தள்ளிய குண்டர்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜா-எல தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான ஜே.பீ.பீரிஸ் மறைந்த பின்னர் 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இடைத்தேர்தல் ஒன்றினை நடத்த தீர்மானிக்கப்பட்டது. ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளராக ஜோசப் மைக்கல் பெரேராவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராக பீட்டர் மெண்டிஸும் போட்டியிட்டனர். அத்தேர்தலிலேயே ஜோசப் மைக்கல் பெரேரா முதற்தடவையாக பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்.

இந்த இடைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அமைப்பின் செயற்பாட்டாளரான மைத்ரிபால சிறிசேனவும் ஜா-ஏல பிரதேசத்திற்கு வந்திருந்தார். பீட்டர் மெண்டிஸின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று வனவாசல

புகையிரத நிலையத்திற்கருகில் இடம்பெற்றது. அதில் அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய முன்னணியின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க உள்ளிட்ட அரசின் மூத்த உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். அக்கூட்டத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்க்கக்கூடிய சிறப்பான உரையொன்றை மைத்ரி ஆற்றினார்.

கூட்டம் முடிவடையும் போது இரவாகியிருந்தது. மைத்ரி தனது கம்பஹா வீட்டிற்கு செல்வதற்காக வனவாசல புகையிரத நிலையத்தை நோக்கி வந்தார். எனினும் தன்னை சிலர் பின் தொடர்வதை அவர் உணரவில்லை. புகையிரதம் வரும் வரையில் காத்திருந்த போது அவருக்கு பின்னால் வந்த மூன்று குண்டர்கள் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு மைத்ரியை நெருங்கி "புகையிரதம் வரும் வரையிலா இருக்கிறாய்?" என ஒருவன் கேட்டான். "ஆம்" என மைத்ரி பதிலளித்தார். "நீ கூட்டத்தில பேசினாய்தானே?" என இன்னொருவன் வினவினான். சூழ்நிலை சாதகமாக இல்லை என்பதை உணர்ந்து கொண்டாலும் தனியாக அவர்கள் மூவரையும் எதிர்த்து எதுவும் செய்ய முடியாது என்பதனால் மைத்ரி "ஆம்" என எதனையும் மறைக்காது பதிலளித்தார். உடனே அவர்கள் யாரும் அறியாதவாறு இருட்டிலேயே மைத்ரியைத் தூக்கிச்சென்று புகையிரத நிலையத்திற்கு பின்னாலிருந்த கழிவு நீரோடையில் போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். மைத்ரி அணிந்திருந்த வெண்ணிற காற்சட்டையும் சேட்டும் கறுப்பு நிறமாகி துர்நாற்றமும் பொறுக்க முடியாதிருந்தது. மிகுந்த சிரமப்பட்டு சாக்கடையிலிருந்து வெளியே வந்த மைத்ரி என்ன செய்வதென யோசித்தார். வேறு வழியின்றி அந்த உடையுடனே வீட்டிற்கு செல்வதென முடிவெடுத்து மீண்டும் புகையிரத நிலையத்திற்கு வந்து கம்பஹா செல்லும் புகையிரதத்தில் ஏறினார். உடனே அதிலிருந்த பயணிகள் மைத்ரியை பார்த்து "பைத்தியம், பைத்தியம்" எனக் கூச்சலிட்டனர். இதைக்கேட்டு கோபமடைந்த மைத்ரி "நான் ஒன்றும் பைத்தியக்காரன் அல்ல. சாக்கடையில் விழுந்து சேறாகிவிட்டது அவ்வளவுதான்" எனக் கத்தினார். ஆனால் பயணிகள் அதனை ஏற்க மறுத்தனர். துர்நாற்றத்தையும் அவர்களால் பொறுக்க முடியவில்லை. எனவே பயணிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் புகையிரதத்தின் மிதி பலகையிலேயே பயணம் செய்து யாகொட புகையிரத நிலையத்தில் இறங்கி வீட்டிற்கு சென்றார்.

# பொலிஸ் வாகனத்தில் தலையை வைத்தமை

சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் 1991 இல் பொலன்னறுவையில் இடம்பெற்ற அரசியல் ஊர்வலமொன்றில் பங்குபற்றவிருந்தார். அதன் ஒருங்கிணைப்புப் பணி முழுவதும் அத் தொகுதியின் பிரதம அமைப்பாளரும், அப்போதைய பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மைத்ரியிடம் கையளிக்கப்பட்டிருந்தது. ஊர்வலத்திற்கு முதல்நாள், அப்பிரதேச ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுடன் இணைந்த மைத்ரி, பொலன்னறுவை நகரம் முழுவதையும் அலங்கரித்தார். அலங்கார செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் பின்னிரவு 2.00 மணி அளவில் வீட்டுக்குச் சென்று நித்திரையில் ஆழ்ந்திருந்தபோது அவருக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. "சேர் பொலிஸார் வந்து வீதி அலங்காரங்கள் எல்லாவற்றையும் உடைத்து தீ வைக்கின்றார்கள்" என தொலைபேசியில் அழைத்தவர் மைத்ரியிடம் கூறினார்.

அவ்வேளையில் மைத்ரியுடன் அங்கே செல்வதற்கு எவருமே இருக்கவில்லை. பாதுகாவலரோ அல்லது ஆகக்குறைந்த பட்சம் அவரது சாரதி கூட இருக்கவில்லை. எனினும் அவர் உடனடியாக அங்கே செல்ல வேண்டியிருந்தது. எனவே அவர் தனது மோட்டார் வண்டியை தானே செலுத்திக்கொண்டு வைத்தியசாலைச் சந்திக்குச் சென்றார். பொலிஸ் வாகனமொன்று அங்கு காணப்பட்டது. பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் வீதி அலங்காரங்களை உடைத்து ஆங்காங்கே போட்டு தீ வைத்துக் கொண்டிருந்தனர். அதனைக் கண்ணுற்ற மைத்ரிக்கு கோபம் தலைக்கேறியது. அவர் தனது வாகனத்திலிருந்து இறங்கி அங்கிருந்த பிரதம பொலிஸ்

அதிகாரியிடம் "என்ன இது? ஏன் இந்த அலங்காரங்களை உடைத்து தீ வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நாம் இதனை நாளை இடம்பெறவுள்ள ஊர்வலத்திற்காக அல்லவா செய்துள்ளோம். இவை அனைத்தும் சட்ட ரீதியாகவே செய்யப்பட்டுள்ளன." என்று சற்றுக் கடுமையான தொனியில் கேட்டார். "எம்மால் எதுவும் செய்ய இயலாது. இது எமக்கு மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவு." என பொலிஸ் அதிகாரி கூறினார். "அப்படியாயின் உத்தரவினை நிறுத்த என்னால் செய்யக்கூடியது இதுதான்" எனக்கூறிக்கொண்டு மைத்ரி நிலத்தில் சாய்ந்து அங்கிருந்த பொலிஸ் டிரக் வண்டியின் முன்புற சில்லில் கழுத்தினை வைத்தார். "நீங்கள் எமது கொடிகளுக்குத் தீ வைப்பீர்களாயின் நான் எழுந்திருக்கவே மாட்டேன். நீங்கள் எனது கழுத்தின் மீதே டிரக் வண்டியை ஓட்டிச் செல்லுங்கள்" என அங்கிருந்த பொலிசாரைப் பார்த்து கடுமையாகக் கூறினார்.

மைத்ரியின் சத்தத்தைக் கேட்டு அக்கம் பக்கத்தவர்கள் சிலரும் அவ்விடத்திற்கு ஓடிவந்தனர். அதையடுத்து அவ்விடத்தில் பெரும் கலவரம் ஏற்பட்டது. பொலிசாருக்கு என்ன செய்வதென தீர்மானித்துக்கொள்ள முடியவில்லை. "நீங்கள் எழும்புங்கள்" என பொலிஸ் அதிகாரியொருவர் மைத்ரியிடம் கூறினார். ஆயினும் மைத்ரி அதற்கு இணங்கவில்லை. பொலிஸ் உத்தியோகத்தர் மீண்டும் அவ்வாறு கூறக் கூற மைத்ரி மென்மேலும் தனது கழுத்தை வாகனத்தின் சில்லுக்கருகில் வைத்துக்கொண்டு "நான் எழும்ப மாட்டேன் நீங்கள் எனது கழுத்தின் மேலாகச் செல்லுங்கள்" எனக் கூறினார். இதனால் பொலிஸாருக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. அவர்களது வாகனத்தை செலுத்தவும் முடியவில்லை. பின்னர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாகனத்தை பின்நோக்கித் தள்ளி ஓரமாக்கினார்கள். மைத்ரியும் அவ்விடத்திலிருந்து எழும்பினார். அதன் பின்னரே டிரக் வாகனம் திரும்பிச் சென்றது.

அங்கே குழுமியிருந்த மக்களுடன் கதைத்துவிட்டு, அவரும் சற்று நேரத்தில் நகரத்தை நோக்கிச் சென்றார். அப்போதும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நகரத்தில் செய்யப்பட்டிருந்த அலங்காரங்களை உடைத்து ஆங்காங்கே தீ வைத்துக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. மைத்ரி அங்கும் சென்று அவர்களைத் திட்டினார். "நீங்கள் இங்கும் வந்து கொடிகளை வெட்டுகின்றீர்களா" எனக் கூறிக்கொண்டு அங்கும் மைத்ரி நிலத்திலே படுத்துக்கொண்டார். பொலன்னறுவையின் முன்னாள் பிரதி அமைச்சர் எச்.ஜீ.பி. நெல்சன் அவர்களுக்குச்

சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையமொன்று அவ்விடத்தில் இருந்தது. அதன் முன்னாலேயே பிரதான வீதியில் அவர் நிலத்தில் படுத்திருந்தார். அவரை அங்கிருந்து அகற்றுவதற்கு பொலிஸார் எவ்வளவோ முயற்சி செய்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

சிறிது நேரத்தின் பின்னர் அப்பிரதேசத்திற்கு பொறுப்பான உதவி பொலிஸ் அதிகாரியும் அவ்விடத்திற்கு வந்தார். அவரும் வந்து மைத்ரியை எழுந்திருக்கும்படி கூறியும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. "நான் எழும்ப மாட்டேன். உங்களுக்கு வேண்டுமானால் என்னைத் தூக்கிச்சென்று வழக்குப் போடுங்கள். நீங்கள் செய்யும் இந்த அநீதியான செயல்களுக்கு எதிராக என்னால் வேறெதும் செய்யமுடியாது. நான் இங்கிருந்து எழப் போவதில்லை" எனக் கூறிக்கொண்டு அவர் வீதியிலேயே படுத்துக்கிடந்தார்.

இதனால் வீதியின் இருமருங்கிலும் வாகனங்கள் வரிசையாக நின்றன. பொலிஸாரினால் மைத்ரியை அகற்ற முடியாது போனமையினால் பாதையின் ஓரமாக வாகனங்கள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தனர். மைத்ரியும் விடியும் வரையிலும் வீதியிலேயே படுத்திருந்தார். இந்த செய்தியைக் கேட்டு அதிகளவிலான மக்கள் அவ்விடத்தில் கூடினர். இதனிடையே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் பலரும் மைத்ரியை தேடி அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தனர். அவரது தொடர்ச்சியான இந்த எதிர்ப்பினால் பொலிஸார் கொடிகளை எரிப்பதை கைவிட்டனர். பொழுது விடிந்ததன் பின்னர் மைத்ரி தனது வீட்டிற்குத் திரும்பிச் சென்றார்.

# வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட பேச்சாளர்

1982 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது ஜனாதிபதி தேர்தலே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொலன்னறுவை தொகுதி அமைப்பாளராக மைத்ரிபால சிறிசேன தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்ட முதலாவது தேர்தலாகும். அதன்போது ஜே.ஆர். ஜயவர்தன ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமை தடை செய்யப்பட்டிருந்தமையினால் ஹெக்டர் கொப்பேகடுவ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டார்.

கட்சியின் அகில இலங்கை இளைஞர் அமைப்பின் தலைவர் என்ற வகையிலும் பொலன்னறுவை தொகுதி அமைப்பாளர் என்ற வகையிலும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் மைத்ரி முக்கிய பங்கினை வகித்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு இந்த ஜனாதிபதி தேர்தலின் போது பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு, அரசியல் மேடையும் அவருக்கு மறுக்கப்பட்டிருந்தது. இந்த சூழ்நிலையில் கட்சியின் சில முக்கிய உறுப்பினர்களாக இருந்த மைத்ரிபால சேனாநாயக்க, பி.பீ.ஜீ. களுகல்ல, மொன்டி கொபல்லவ மற்றும் எஸ்.டீ. பண்டாரநாயக்க ஆகியோர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொண்டனர்.

ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்தே ஜே.ஆர். ஜயவர்தன சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பிரஜாவுரிமையை தடைசெய்தார்.

ஐந்து வருடங்களின் பின்னர் வரும் தேர்தலில் பண்டாரநாயக்க போட்டியிட்டால் அம்மையாரே தேர்தலில் வெற்றி பெறுவார் என்பதை ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதி நன்கு உணர்ந்திருந்தார். இதனால் அவரை அரசியல் மேடையிலிருந்து ஒதுக்கிவைப்பதற்கான முயற்சிகளை ஜே.ஆர் மேற்கொண்டார். இதனால் ஜயவர்தனவே ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று மீண்டுமொரு தடவை ஜனாதிபதியாக பதவியேற்றார்.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் இன்னுமொரு புதிய அனுபவத்தை இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கினார்கள். அதுவே 1983ஆம் ஆண்டில் இடம்பெற்ற சர்வஜன வாக்கெடுப்பு ஆகும். சிக்கலானதொரு சூழ்நிலையிலேயே சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெற்றது. மைத்ரி உள்ளிட்டோருக்கு மட்டுமன்றி, நாட்டின் ஒட்டுமொத்த வாக்காளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் அது ஒரு புதிய அனுபவமாக அமைந்தது. "விளக்கிற்கும் குடத்திற்கும் இடையிலான விளையாட்டு" என்றே அதனை பெரும்பாலானவர்கள் குறிப்பிட்டனர். சர்வஜன வாக்கெடுப்பின் முடிவினால் பாராளுமன்றத்தின் காலத்தினை மேலும் ஆறு வருடங்களினால் அதாவது 1989ஆம் ஆண்டு வரை நீடித்துக்கொள்ளும் வாய்ப்பு ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்தது.

சர்வஜன வாக்கெடுப்பில் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடையும் தொகுதிகளில் இடைத்தேர்தல் நடாத்துவதாக ஜயவர்தன தேர்தலுக்கு முன்னரே அறிவித்திருந்தார். அதற்கேற்ப ஐக்கிய தேசிய கட்சி சர்வஜன வாக்கெடுப்பில் தோல்வியடைந்த 18 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடாத்த தீர்மானிக்கப்பட்டது. இதன்போது ஹக்மீமன மற்றும் ஹபராதுவ தொகுதிகளின் தேர்தல் செயற்பாடுகள் மைத்ரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தர்மசிறி சேனாநாயக்கவுடன் இணைந்து அவர் தேர்தல் நடவடிக்கைளில் ஈடுபட்டார்.

ஒருநாள் தர்மசிறி சேனாநாயக்கவுடன் இணைந்து மர்வினின் தேர்தல் நடவடிக்கையில் உதவுவதற்காக திஸ்ஸமஹாராமவுக்கு மைத்ரி சென்றார். திஸ்ஸமஹாராம நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் மைத்ரியும் சிறந்த உரையொன்றை நிகழ்த்தினார். அவரது உரை முடிவடைந்தவுடன் மர்வின் மைத்ரியின் கைகளைப் பற்றிக்கொண்டு "உங்களை செல்ல விடமுடியாது. நீங்கள் என்னுடன் கூட்டங்களில் உரை நிகழ்த்த வரவேண்டும்" எனக்

கூறி மைத்ரியை அவரது வாகனத்தில் ஏற்றிக்கொண்டார். அவ்வேளையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மிகவும் வலுவிழந்துக் காணப்பட்டது. அதனால் பேச்சாளர்களை ஏற்பாடுசெய்வதும் சிரமமாகவிருந்தது. எனவே இந்த இடைவெளியை பூரணப்படுத்தவே மர்வின் மைத்ரியை கூட்டிச் சென்றார். "இப்போது எனக்கு தொகுதியில் வேலைகள் செய்யவும் ஆளில்லை. பேச்சாளர்களும் இல்லை. அதனால் மைத்ரி உன்னை நான் போகவிடமாட்டேன். நீ இப்போது எனது வீட்டிற்கு வரவேண்டும்" எனக் கூறிக்கொண்டு மர்வின் மைத்ரியை தனது வீட்டிற்கு கூட்டிச் சென்றார்.

தனது வீட்டின் ஒரு அறையில் மைத்ரியை தங்கவைத்த அவர் காலையில் மைத்ரியை வெளியே அழைத்து வருவார், இரவில் தேர்தல் பிரசாரங்கள் நிறைவடைந்ததும் மீண்டும் அவரை அந்த அறையில் இட்டு கதவை பூட்டி விடுவார். இவ்வாறு நான்கு தினங்கள் மர்வினின் வீட்டுச் சிறையில் இருந்த மைத்ரி மறுநாள் தேர்தல் கூட்டத்தின் போது யாருக்கும் தெரியாமல் அங்கிருந்து திஸ்ஸமஹறாமவுக்கு தப்பிச்சென்றார்.

திஸ்ஸமஹறாமவிலிருந்து மாத்தறைக்கு வந்த மைத்ரி அதன்பின்னர் தனக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ஹபராதுவ பிரதேசத்திற்கு சென்றார். ஒசி அபேகுணசேகர ஹபராதுவ தொகுதியிலும் விஜய குமாரதுங்க மஹர தொகுதியிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்டனர். ஒரு மாதத்திற்கும் மேற்பட்ட காலம் மைத்ரி ஹபராதுவயில் தங்கியிருந்து வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்து, ஒசி அபேகுணசேகரவிற்கு ஆதரவு தேடினார்.

இடைத்தேர்தலின் இறுதி வாரத்தை மைத்ரி மஹர தொகுதியிலேயே கழித்தார். விஜயகுமாரதுங்கவின் தேர்தல் பிரசாரத்திற்கு ஆதரவாக வீடுவீடாக சென்று பிரசாரத்தில் ஈடுபட்டார். மைத்ரியுடன் இன்னும் சிலர் தங்கியிருந்த கடவத்தை தேர்தல் அலுவலகத்தை தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் சுற்றிவளைத்த சில குண்டர்கள் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தியிருந்தமையால் அவர்கள் செய்வதறியாது திகைத்தனர். வேறு வழியின்றி அலுவலகத்தை சுற்றியிருந்த கம்பி வேலியின் மேலாக பாய்ந்து சென்று மைத்ரியும் நண்பர்களும் உயிர் தப்பினார்கள்.



# பெரும்புள்ளிகள் மத்தியில் ஒரு சிறுபுள்ளி

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொலன்னறுவை தொகுதியின் பிரதம அமைப்பாளராக சிறிமாவோ பண்டாரநாயக்கவின் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் மைத்ரி நியமிக்கப்பட்டார். இப்பதவியில் நியமிக்கப்பட்டமை மைத்ரிக்கு புது அனுபவத்தை வழங்கியதுடன் அது அவரது வாழ்க்கையின் ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது. ஏனெனில் தொகுதி அமைப்பாளர் அத்தொகுதியில் உள்ள கட்சி ஆதரவாளர்களைச் சந்திப்பதற்காக வீடுவீடாக செல்ல வேண்டும்.

மைத்ரி இவ்வாறு அமைப்பாளராக நியமிக்கப்பட்டபோது அவரிடம் ஒரு சொந்த வாகனம் கூட இருக்கவில்லை. அதனால் அவர் காலையிலிருந்து மாலை வரை கால் கடுக்க வீடு வீடாகச்

சென்று ஆதரவாளர்களைச் சந்தித்து வந்தார். அவர் இவ்வாறு சென்ற சந்தர்ப்பங்களில் பல கசப்பான அனுபவங்களைச் சந்திக்க நேர்ந்தது. சிலர் அவரை தங்களது வீட்டிலிருந்து விரட்டிய சந்தர்ப்பங்களும் இருந்தது. "நெல்சன் மாதிரி செல்வாக்குள்ள பணக்கார அரசியல்வாதியை தோற்கடிக்க உன்னால் முடியுமா? உனக்கென ஒரு சைக்கிள் கூட உன்னிடம் இல்லை. அப்படியான உன்னால் நெல்சன் போன்ற ஒருவரை தோற்கடிக்க முடியுமா? நீ எப்படி ஒரு அமைப்பாளராக இருக்க முடியும்? இப்படியொரு அமைப்பாளர் எங்களுக்கு வேண்டாம். எங்கள் வீடுகளுக்கும் வர வேண்டாம்." என்றும் "உனது வீட்டிற்கு சென்றால் உட்கார ஒரு கதிரை கூட ஒழுங்காக இல்லை. உனக்கெல்லாம் அரசியல் செய்ய முடியுமா?" என்றும் மைத்ரியை கேலி பேசினர்.

இப்படியாக மைத்ரியை பரிகசித்தவர்கள் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களோ அல்லது வேறு யாருமோ அல்ல. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களே இவ்வாறு நடந்து கொண்டனர். ஆனால் மைத்ரி அவர்கள் கூறியவற்றை வெறுமனே கேட்டுக் கொண்டிருந்தாரே தவிர அவற்றை மறுக்கவோ அல்லது அதனை எதிர்த்து ஏதேனும் கூறவோ இல்லை. அவர்கள் கூறிய அனைத்தையும் கேட்ட பின்னர் "பரவாயில்லை எது எப்படியிருந்தாலும் நீங்கள் எனக்கு உதவி செய்யுங்கள்" என மட்டுமே அவர்களிடம் மைத்ரி கூறினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளர் பதவியை எதிர்பார்த்திருந்த பிரபல அரசியல்வாதிகளும் அப்போது கட்சியில் இருந்தனர். மைத்ரி கட்சியின் பிரதம அமைப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் அவர்கள் அவருக்கு எதிராகவே செயற்பட்டனர். அவர்களில் சிலர் மைத்ரியின் நண்பர்கள். சிலர் அவரை விட மூத்த அரசியல்வாதிகள். சிலர் வியாபாரத்தில் பிரபலமானவர்கள் சிலர் வழக்கறிஞர்கள். எவ்வாறாயினும் அவர்கள் எவருக்கும் கிடைக்காத அமைப்பாளர் பதவி மைத்ரிக்கு கிடைத்தது. அதனாலேயே அவர்கள் மைத்ரிக்கு எதிராக குரல் கொடுக்கத் தொடங்கினார்கள்.

பணவசதி படைத்தோரிடமிருந்து பல்வேறு எதிர்ப்புக்கள் வந்தபோதிலும் சாதாரண கிராமத்து மக்கள் மைத்ரியுடன் இணைந்து செயற்பட்டனர். கட்சியிலிருந்த பெரும்புள்ளிகள் அவருக்கு எதிராக செயற்பட்டாலும் அப்பாவி ஏழை மக்களின்

ஆதரவு அவருக்கு மகத்தான சக்தியை அளித்தது. மைத்ரியும் ஒரு சாதாரண குடிமகனாக இருந்ததால் அவர்களது ஆதரவு குறைவின்றிக் கிடைத்தது. அதுவே அவரது அரசியல் வாழ்க்கையின் தொடர்ச்சியான முன்னேற்றத்துக்கு முக்கியமான காரணியாகவும் அமைந்தது. பிரபல அரசியல்வாதிகள் சிலர் தமக்கு அமைப்பாளர் பதவி கிடைக்காததற்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சியை விட்டு விலகியதுடன் மைத்ரிக்கு எதிராக சூழ்ச்சி செய்யவும் முற்பட்டனர். எனினும் அவற்றை கருத்திற் கொள்ளாதிருக்க மைத்ரி பழகிக்கொண்டார்.





# தாய்க்கும் மகனுக்கும் இடையில் சிக்கிய மைத்ரி

1985 செப்டெம்பர் 12 ஆம் திகதி நடைபெற்ற முல்கிரிகல இடைத் தேர்தல், இந்த நாட்டின் தேர்தல் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாக பதியப்பட்டுள்ளது. 1983ஆம் ஆண்டு நடைபெற்ற முல்கிரிகல இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான குலரத்னவுக்கு எதிராக அவருடன் போட்டியிட்ட எதிர்த்தரப்பு வேட்பாளரான நிருபமா ராஜபக்ஷ ஒரு தேர்தல் வழக்கை தொடர்ந்தார். இவ்வழக்கில் ஆனந்த குலரத்ன தோல்வியடைந்தார். இதன் காரணமாகவே 1985ஆம் ஆண்டு இவ் இடைத்தேர்தல் நடைபெற்றது.

முல்கிரிகல தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஆனந்த குலரத்ன இத்தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக போட்டியிட்டார். இத்தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரை தெரிவுசெய்வது கடினமாக

இருந்தது. இது தொடர்பில் கட்சியில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. எனவே வேட்பு மனுத் தாக்கல் செய்யும் தினத்திற்கு சில நாட்கள் முன் வரை வேட்பாளர் தொடர்பான இறுதி முடிவு எட்டப்படவில்லை. அப்போது கட்சியின் தலைவியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க இந்த இடைக்காலத் தேர்தலுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக சமல் ராஜபக்ஷவை நியமித்தார். எனினும் அப்போது எதிர்க்கட்சி தலைவராக இருந்த அநுர பண்டாரநாயக்க கடுமையான எதிர்ப்பை வெளியிட்டார். அவர் நிருபமா ராஜபக்ஷவே நியமிக்கப்பட வேண்டுமென கூறினார். எனவே யாரைத் தெரிவு செய்வது என்பது சிக்கலான விடயமாக இருந்தது.

வேட்புமனு தாக்கல் செய்வதற்கு 48 மணித்தியாலங்களே இருந்த நிலையிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் யார் என்ற முடிவை எட்ட முடியாதிருந்தது. கட்சி உறுப்பினர்களுக்கு இது பெரும் குழப்பமாக அமைந்தது. இறுதியில் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் கட்சியின் மத்திய செயற்குழுவை அவசரமாகக் கூட்டி இது பற்றிய முடிவை எடுப்பதென கட்சி தீர்மானித்தது. அதன்படி ரொஸ்மிட் பிளேசில் அமைந்திருந்த பண்டாரநாயக்க அம்மையாரின் வீட்டில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இரவு 7.00 மணிக்கு கூடியது. எதிர்க் கட்சித் தலைவர் அநுர பண்டாரநாயக்காவும் அதில் பங்குபற்றினார். மைத்ரிபால சிறிசேனவும் கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவர் என்ற வகையில் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டார். சமல் ராஜபக்ஷ கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே சிறிமாவோ அம்மையார் இருந்தார். இதனைக் கடுமையாக எதிர்த்த அநுர பண்டாரநாயக்க, நிருபமாவே நியமிக்கப்பட வேண்டும் என விடாப்பிடியாக இருந்தார். கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாதிருந்தனர். கலந்துரையாடல், சிற்றுண்டி, கலந்துரையாடல், உணவு என பல மணி நேரம் கடந்த போதிலும் ஒரு தீர்வு எட்டப்படவில்லை. முந்தைய தினம் இரவு 7.00 மணிக்கு ஆரம்பித்த கூட்டம் அடுத்த நாள் அதிகாலை இரண்டு மணியாகியும் முடிவடையவில்லை.

நாம் ஐந்து ஆறு மணித்தியாலங்கள் பேசியது போதும். இறுதித் தீர்மானத்தை எடுக்கவேண்டும். ஏகோபித்த கருத்துக்கு வரமுடியாவிட்டால் இதனை வாக்கெடுப்புக்கு விடவேண்டுமென

அம்மையார் தெரிவித்தார். அதனை செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டனர்.

மைத்ரி அப்போது எதிர்க்கட்சித் தலைவர் அநுர பண்டாரநாயக்கவின் பிரத்தியேக ஆளணியிலேயே கடமையாற்றி வந்தார். அவர் அநுரவிடம் வேலை செய்தபோதும் கட்சித் தலைவி என்ற வகையில் அம்மையாரின் கருத்துடனேயே தொடர்ந்தும் இருந்தார். முல்கிரிகல இடைத்தேர்தலுக்கான வேட்பாளரை தெரிவுசெய்யும் வாக்கெடுப்பு ஆரம்பமானது. வாக்கெடுப்பில் அம்மையாரின் தெரிவான சமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவாக மைத்ரியும் கை உயர்த்தினார். இறுதியில் சமல் ராஜபக்ஷவே தெரிவானார். இத் தீர்மானத்துடன் மத்திய செயற்குழு கூட்டம் முடிவடைந்தது.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் மைத்ரி எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு வேலைக்கு சென்றார். இப்போது எதிர்க் கட்சித் தலைவருடைய அலுவலகம் இருக்கும் இடத்திலேயே அப்போதும் இருந்தது. மைத்ரி வேலைக்கு வந்து வழக்கம் போல் தனது ஆசனத்தில் அமர்ந்திருந்தார். சற்று நேரத்தில் அங்கு வந்த அநுர பண்டாரநாயக்கவின் பிரத்தியேக செயலாளர் குணதாச, "இதோ இதனை உங்களிடம் கொடுக்குமாறு தலைவர் கூறினார்" எனக் கூறி மைத்ரியின் மேசையில் ஒரு கடிதத்தை வைத்துவிட்டு சென்றார். மைத்ரி கடிதத்தைத் பிரித்துப் பார்த்துவிட்டு கடிதத்தை மடித்து தனது சட்டைப்பையில் வைத்துக் கொண்டார். ஆயினும் அது பற்றி எதையும் கேட்க அநுரவிடம் செல்லவில்லை. அதனை எடுத்துக்கொண்டு சென்ற மைத்ரி சிறிமாவோ அம்மையாரிடம் கொடுத்தார். அதனை வாசித்த அம்மையாருக்கு கடும் கோபம் ஏற்பட்டது. "மைத்ரி, உங்களை அநுர பதவி நீக்கினால் பரவாயில்லை நீங்கள் என்னிடம் வாருங்கள். நீங்கள் கட்சித் தலைமையகத்தில் உள்ள நூலகத்திற்கு பொறுப்பாக இருங்கள்" என்று அம்மையார் கட்சித் தலைமையக நூலகத்தின் பொறுப்பாளராக மைத்ரியை நியமித்தார்.

# தந்தையின் மறைவு

நாட்டில் நிலவிய அச்சமான சூழ்நிலையின் பின்னணியிலேயே 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தலில் ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பிலும் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பிலும் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்டனர். ஒசி அபேகுணசேகர ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கினார்.

இந்த அச்ச சூழ்நிலையில் தேர்தல் பிரசாரப் பணிகளை சுதந்திரமாக முன்னெடுக்கக்கூடிய நிலை இல்லாததால் பிரேமதாச மற்றும் பண்டாரநாயக்க அம்மையார் ஆகிய இருவரில் வெற்றி பெறுவது யார் என்ற சந்தேகம் நிலவியது. ஒரு சில ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் கூட பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கவில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அப்போது பலவீனமான நிலையில் இருந்தபோதிலும் பண்டாரநாயக்க அம்மையாரின் பிரஜாவுரிமை நீக்கப்பட்டிருந்த காலப்பகுதி முடிவடைந்த பின்னர் அவர் பங்குபற்றும் முதலாவது தேர்தல் என்பதனால் நிலைமை அவருக்குச் சாதகமாகவே காணப்பட்டது.

பொலன்னறுவைத் தொகுதி அமைப்பாளர் என்ற வகையில் மாவட்ட தேர்தல் நடவடிக்கைகளுக்கான பொறுப்பு மைத்ரியிடம் வழங்கப்பட்டது. எனவே அவர் இரவு பகல் பாராது தேர்தல் பணிகளில் ஈடுபட்டார்.

தேர்தல் நெருங்க நெருங்க தேர்தல் களம் சூடுபிடித்தது. தேர்தலுக்கு முந்திய தினம் வாக்குச் சாவடி பிரதிநிதிகளை நியமிக்கும் படிவத்தில் கைச்சாத்திடுவதற்கு மைத்ரி பொலன்னறுவை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்துக்கு சென்றிருந்த போது மைத்ரியை தேடிவந்த நண்பரொருவர் "மைத்ரி அண்ணா, உங்களது தந்தை இறந்துவிட்டார்" என்று கூறினார். தனது தந்தை நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் இந்த நேரத்தில் இவ்வாறு ஏற்படுமென அவர் எண்ணியிருக்கவில்லை. செய்து கொண்டிருந்த பணிகளை அப்படியே வைத்துவிட்டு மைத்ரி வீட்டுக்கு விரைந்தார்.

மைத்ரியின் தந்தை இறந்த செய்தியை அறிந்து மைத்ரியின் வீட்டுக்கு வந்த பொலன்னறுவை பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் மரணச் சடங்குகளை மிகச் சிறப்பாக செய்வது குறித்து கலந்தாலோசித்தார்கள். பண்டாரநாயக்க அம்மையார் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் பொலன்னறுவை அமைப்பாளர் என்ற வகையில் மைத்ரியுடன் பணியாற்ற வேண்டியிருக்கும் என அவர்கள் நினைத்திருக்கலாம்.

தந்தை மரணித்த போதும் மைத்ரியால் தமது பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள முடியவில்லை. தந்தையின் பூதவுடல் வீட்டில் இருந்த நிலையிலும் அவர் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். தேர்தல் தினத்தன்று தனது காரில் வெள்ளை நிற கொடியொன்றை கட்டிக்கொண்டு வாக்குச்சாவடிகளுக்குச் சென்று உறுப்பினர்களை உற்சாகப்படுத்தி, கட்சிக்கான தனது கடமையை நிறைவேற்றி வந்தார். அச்சமயம் மக்கள் விடுதலை முன்னணியினரும் பல்வேறு அழுத்தங்களைக் கொடுத்து வந்தனர். மைத்ரி காரில் வெள்ளைக் கொடியைக் கட்டிக்கொண்டு செல்வதைக் கண்ட சிலர் அவர் மக்கள் விடுதலை முன்னணியின் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவே வெள்ளைக் கொடி கட்டியிருப்பதாக கூறினார்கள். அடுத்த நாள் காலை வெளியிடப்பட்ட தேர்தல் பெறுபேறுகளின்படி சிறிமாவோ அம்மையாருக்கு சாதகமான நிலைமை இல்லையென்பதை மைத்ரி விளங்கிக் கொண்டார். இறுதியில் ரணசிங்க பிரேமதாசவே தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார்.

முந்திய தினம் மைத்ரியின் தந்தையின் இறுதி நிகழ்வுகளை மிகச் சிறப்பாக நடத்துவதற்கு யோசனை சொன்ன பொலன்னறுவை பொலிஸ் அதிகாரிகள் எவரையும் அங்கு காணக் கிடைக்கவில்லை.

குறைந்தது அன்றைய தினம் அவர்கள் எவரும் மரணவீட்டுக்கு கூட வரவில்லை.

மரங்களை வெட்டி வீதி தடைகளை ஏற்படுத்திய மக்கள் விடுதலை முன்னணியினர் அப்போது நாட்டில் குழப்பமான நிலையைத் தோற்றுவித்திருந்தனர். எனவே வெளியிலிருந்து எவரும் மரணவீட்டுக்கு வரக்கூடிய நிலை இருக்கவில்லை. மரணவீட்டின் அனைத்து நடவடிக்கைகளையும் குடும்ப உறுப்பினர்களே செய்து முடித்தனர். மைத்ரி இவற்றைக் கண்டு மனம் தளராமல் தன்னால் முடிந்தளவு தனது தந்தையின் இறுதிக் கிரியைகளை சிறப்பாக செய்து முடித்தார்.

# பாராளுமன்ற பிரவேசம்

1977ஆம் ஆண்டில் இடம் பெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் 1983ஆம் ஆண்டில் பொதுத்தேர்தலொன்று நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்ற ஆட்சிக் காலத்தை மேலும் ஆறு வருட காலத்துக்கு நீடித்ததனால் 83 இல் பொதுத்தேர்தல் நடத்தப்படவில்லை.

1989ஆம் ஆண்டிலேயே மீண்டும் பொதுத் தேர்தலொன்று நடைபெற்றது. 1977ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்பினூடாக அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசார தேர்தல் முறைப்படி நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தல் என்ற வகையில் இத்தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. 12 வருடங்களாக போட்டியிடுவதற்கு வாய்ப்பின்றி இருந்த கட்சிகளுக்கும் அதன் வேட்பாளர்களுக்கும் 1989ஆம் ஆண்டிலேயே தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

அப்பொதுத் தேர்தல் வரை மைத்ரிபால சிறிசேன பொலன்னறுவை தொகுதியில் 10 வருடங்களிற்கும் மேற்பட்ட காலமாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளராக செயற்பட்டிருந்தார். இதனால் ஜனாதிபதி தேர்தல், மக்கள் கருத்துக் கணிப்பு மற்றும் இடைத் தேர்தல் என்பவற்றின் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தேர்தல் நடைமுறை பற்றிய சிறந்த அனுபவத்தை பெற்றிருந்தார். 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் 1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கோரப்பட்டன. அக்காலகட்டத்தில் நாட்டிலிருந்த குழப்பநிலை காரணமாக பொதுத்

தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வருவதானது தானே தனது மரணச் சான்றிதழை எழுதிக்கொள்வதைப் போன்ற நிலைமையே காணப்பட்டது.

இதனால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சில தொகுதி அமைப்பாளர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர். மாத்தளை தொகுதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரான வேகொடபொல அவரது வீட்டில் வைத்தே சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அந்தளவிற்கு மக்கள் விடுதலை முன்னணியின் அச்சுறுத்தல்களும் அரச ஆதரவுடன் இடம் பெற்ற பயங்கரவாதமும் தீவிரமடைந்திருந்தது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் நீண்டகாலமாக செயற்பட்டு வந்த மாத்தறையைச் சேர்ந்த ஆரிய புலேகொட மக்கள் விடுதலை முன்னணியின் அச்சுறுத்தல் காரணமாக தேர்தலில் போட்டியிடாது விலகிக்கொண்டார். இந்த நிலையில் 1989 ஆம் ஆண்டின் பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர்களை நியமிப்பதில் அரசியல் கட்சிகளுக்கு பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

வேட்பாளர்கள் தமக்கு நெருக்கமான சிலருடன் சென்று வேட்புமனுக்களை சமர்ப்பித்தனர். மைத்ரியும் தனது வேட்புமனுவை சமர்ப்பிப்பதற்கு தனக்கு நெருக்கமான சிலருடன் பொலன்னறுவைக் கச்சேரிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றார். இன்றுபோல ஊர்வலமாக சென்று வேட்புமனுக்களை சமர்ப்பிக்கக்கூடிய சூழ்நிலை அக்காலத்தில் இருக்கவில்லை. அவ்வாறு ஊர்வலமாக யாரும் செல்வார்களாயின் அவர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காக வேண்டிய நிலை ஏற்படலாம் என்ற அச்சமும் நிலவியதால் பொலன்னறுவை கச்சேரியும் அதன் சூழலும் கடுமையான பொலிஸ் பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அனைத்து வேட்பாளர்களின் பாதுகாப்பிற்கும் அரசினால் பாதுகாப்பு படையினர் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். அதற்கேற்ப மைத்ரிக்கும் 10 தேசிய தொண்டர் படையின் வீரர்கள், பத்து துப்பாக்கிகளுடன் வழங்கப்பட்டிருந்தனர்.

மைத்ரியின் தந்தை காலஞ்சென்று மூன்றாம் மாதத்திற்கான தானம் வழங்கும் நிகழ்வும் அக்காலத்திலேயே இடம் பெற்றது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக அப்பிரதேச இளைஞர்கள் சிலர் மைத்ரியின் பொலன்னறுவை லக்ஸ உயன வீட்டுக்கு வந்திருந்தனர்.

அதில் ஒரு இளைஞன் மைத்ரியின் வீட்டில் துப்பாக்கியொன்று இருப்பதைக் கண்டான். தான நிகழ்விற்கு அடுத்தநாள் காலை மக்கள் விடுதலை முன்னணியினர் மைத்ரியின் வீட்டை சுற்றிவளைத்தனர். அவ்வேளையில் மைத்ரி தேர்தல் வேலைக்காக வெளியே சென்றிருந்தார். அவர்கள் மைத்ரியின் தாயாரின் நெஞ்சில் துப்பாக்கியைக் குறிவைத்து பயமுறுத்தி ''வீட்டினுள் துப்பாக்கியொன்று உள்ளது அதனை எம்மிடம் கொடுக்க வேண்டும்'' எனக் கூறினர். ''அப்படியாயின் உள்ளே சென்று எடுத்துக் கொள்ளுங்கள்'' என மைத்ரியின் தாயார் கூறினார். அதற்கேற்ப வந்தவர்கள் வீட்டினுள் சென்று துப்பாக்கியை எடுத்துச் சென்றனர்.

வேட்புமனு தாக்கல்செய்த போதிலும் தேர்தல் பிரசார நடவடிக்கையில் யாராலும் ஈடுபடக்கூடிய நிலை இருக்கவில்லை. குறைந்த பட்சம் விளம்பர சுவரொட்டிகளைக்கூட அவர்களால் ஒட்டமுடியவில்லை. எப்போது மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த வன்முறையாளர்களின் துப்பாக்கிச்சூடு நிகழ்த்தப்படும் எனக் கூற முடிந்திருந்தது. தேசிய தொண்டர் படைப் பாதுகாப்புடன் வேட்பாளர்கள் நான்கைந்து வாகனங்களில் ஆங்காங்கே சென்று வாக்காளர்களுடன் உரையாடுவார்கள். கூட்டங்கள் நடத்துவதற்கான சூழ்நிலை காணப்படவில்லை. வேட்பாளர்கள் திடீரென ஏதேனுமொரு இடத்திற்கு சென்று சுமார் 15 நிமிடங்கள் அங்குள்ள மக்களுடன் உரையாடுவர். பின்னர் வேறு இடத்திற்கு செல்வர். இவ்வாறே வேட்பாளர்கள் தமது பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் காணப்பட்டது. ஏனெனில் 1989ஆம் ஆண்டு தேர்தல் வேட்பாளரொருவரான மின்னேரிய பிரதேசத்தை சேர்ந்த ஜயசேன மக்கள் விடுதலை முன்னணியினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இதனால் விளம்பரங்கள் மற்றும் கூட்டங்கள் இல்லாமலேயே வேட்பாளர்கள் தமது பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அது மட்டுமன்றி வேட்பாளர்கள் இரவு நேரங்களில் தமது வீடுகளில் தங்கியிருப்பது ஆபத்து மிகுந்ததாகவே காணப்பட்டது. ஒரு இரவினை ஒரு இடத்தில் கழித்துவிட்டு அடுத்தநாள் வேறொரு இடத்துக்கு செல்ல வேண்டியிருந்தது. இவ்வாறே மைத்ரியும் தேர்தல் காலம் முழுவதும் தனது வீட்டில் அல்லாத வெளியிடங்களிலேயே தங்கினார். இதற்கிடையில் ஐக்கிய தேசிய கட்சியும் தனது அரச அதிகாரத்தினை உபயோகித்து அன்றிருந்த பயங்கரவாதத்தின் பெயரால் பயன்பெற்றது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைவர்களுக்கும் வெவ்வேறு மாவட்டங்களுக்கு சென்று தமது கட்சி வேட்பாளர்களின்

வெற்றிக்காக பிரசாரம் செய்யும் நிலை இருக்கவில்லை. இதனாலும் ஜக்கிய தேசிய கட்சி வேட்பாளர்களே நன்மையடைந்தனர். தேர்தல் தினத்தன்று பொலன்னறுவை தொகுதியில் 04 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தத் தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்காக வருகை தந்திருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் மீது மக்கள் விடுதலை முன்னணியின் வன்முறையாளர்கள் நடத்திய தாக்குதலினால் ஹிங்குறாக்கொட நகரில் பாரிய கலவரம் ஒன்று இடம்பெற்றது. இதனால் பலர் படுகாயமடைந்தனர்.

இப்பின்னணியிலேயே பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி தேர்தல் இடம்பெற்றது. வாக்களிப்பதை மக்கள் விடுதலை முன்னணியினர் தடை செய்திருந்ததனர் இதனால் மக்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு செல்ல அஞ்சினார்கள். வாக்கெடுப்பு நிலையங்கள் வெறிச்சோடிக் கிடந்தன. மெதிரிகிரிய மற்றும் பொலன்னறுவை தொகுதிகளில் ஒரு வாக்குகூட அளிக்கப்படாத 40 இற்கும் மேற்பட்ட வாக்குப்பெட்டிகள் காணப்பட்டன. தேர்தலின் பின்னர் வாக்குப் பெட்டிகளை வாக்கெண்ணும் நிலையத்திற்கு கொண்டு செல்கையிலும் மக்கள் விடுதலை முன்னணியினர் தாக்குதல் நடத்தினார்கள்.

தேர்தல் தினத்தன்று மாலை ஆரம்பமாகிய வாக்கு எண்ணும் பணிகளை பொலன்னறுவை கச்சேரிக்கு சென்று மைத்ரியும் பொறுமையின்றி அவதானித்துக் கொண்டிருந்தார். அடுத்த நாள் விடியற் காலையில் தேர்தல் முடிவுகள் வெளியாகின. நாட்டின் அனைத்து தொகுதிகளிலும் ஜக்கிய தேசிய கட்சியே பெரும்பான்மையாக வெற்றி பெற்றிருந்தது.

மறுநாள் காலையில் இறுதி முடிவுகள் வெளியாகிய போது பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 ஆக இருந்தது. அம்முடிவுகளுக்கேற்ப 4 உறுப்பினர்கள் ஜக்கிய தேசிய கட்சியிலிருந்து தெரிவாகியிருந்தனர். கை சின்னத்தில் போட்டியிட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து மைத்ரிபால சிறிசேன மட்டுமே தெரிவாகியிருந்தார். இறுதி தேர்தல் முடிவுகளுக்கேற்ப மைத்ரிக்கு 13,702 விருப்பு வாக்குகள் கிடைத்திருந்தன. முதல் தடவையாக தான் தெரிவாகியமை குறித்து மைத்ரி மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். எனினும் ஊர்வலமாக சென்று சத்தமிட்டு தனது வெற்றியை கொண்டாட முடியாத சூழ்நிலையில் தனது வெற்றியை அறிந்த பின்னர் பொலிஸ் பாதுகாப்புடன் மைத்ரி அவரது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அழைத்து செல்லப்பட்டார். அவ்வேளையில் மைத்ரியின் வீட்டில் அவரது வீட்டினரைத் தவிர வேறெவரும் இருக்கவில்லை.

# பொலிஸ் சுற்றிவளைப்பு

பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவான பின்னரும் கூட பொலன்னறுவைக்கு சென்று சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் மைத்ரிக்கு இருக்கவில்லை. தேர்தலுக்குப் பின்னரும் மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாட்டாளர்களினால் தொடர்ந்தும் அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தது. பாராளுமன்ற உறுப்பினரான பின்னர் அந்த அச்சுறுத்தல்கள் அதிகரித்ததே தவிர குறையவில்லை. எனவே இந்த நிலையில் பொலன்னறுவை லக்ச உயன வீட்டில் வசிப்பது ஆபத்தாக இருந்ததனால் கம்பஹா பிரதேசத்தில் வீடொன்றினை வாடகைக்கு பெற்று தற்காலிகமாக் குடியேறினார்.

அக்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொழும்பில் வழங்கப்படும் இல்லத்திலும் மைத்ரிக்கு அறையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. வேட்பாளராக இருந்தபோது மைத்ரிக்கு வழங்கப்பட்டிருந்த தேசிய தொண்டர் படை பாதுகாவலர்கள் தொடர்ந்தும் அவரது பாதுகாப்பிற்காக அமர்த்தப்பட்டிருந்தனர். அதற்கு மேலதிகமாக மேலும் சில பொலிஸாரும் இருந்தனர். உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தாலும் மைத்ரி தனது அறைக்குள் முடங்கியிருக்க விரும்பவில்லை. சுதந்திரமாக வெளியே சென்று உலாவ வேண்டும் என நினைத்த அவர், ஒருநாள் தனது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் காலிமுகத்திடலுக்கு சென்றார். காலிமுகத்திடலில் தரையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த போது அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரியொருவர் அவர்கள் அமர்ந்திருந்த இடத்தை கடந்தவாறு பல தடவைகள் அங்குமிங்குமாக சென்றார். மைத்ரியின் பாதுகாவலர்களிடம்

அரசினால் வழங்கப்பட்ட துப்பாக்கிகள் இருந்தன. சொற்ப நேரத்தில் திடீரென சில ஜீப்வண்டிகளில் அவ்விடத்திற்கு வந்த பொலிசார் அவர்களை சுற்றி வளைத்தனர். பொலிசார் தமது துப்பாக்கிகளை உயர்த்தியவாறு "ஒருவரும் எழுந்திருக்கக் கூடாது. எழுந்தால் சுட்டு விடுவோம். கைகளை உயர்த்துங்கள்." எனக் கூறினர். மைத்ரியும் ஏனையோரும் செய்வதறியாது கைகளை உயர்த்தினர். பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கியினால் அவர்களைக் குறிபார்த்த வண்ணம் அவர்கள் அருகில் வந்தனர். "நீங்கள் யார்? ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு இங்கு என்ன செய்கின்றீர்கள்?" என பொலிசார் கேட்டனர். மக்கள் விடுதலை முன்னணியினரின் பயங்கரவாதம் அவ்வேளையில் நாடு முழுவதும் பரவியிருந்தது. எனவே பொலிசார் இவர்களையும் மக்கள் விடுதலை முன்னணியினர் என்றே நினைத்து விட்டனர். "நான் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு ஓரிரு வாரங்களே ஆகின்றன. இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை. எனது பெயர் மைத்ரிபால சிறிசேன. இவர்கள் எனது பாதுகாவலர்கள்" என மைத்ரி கூறினார். மைத்ரிபால சிறிசேன எனும் பெயர் அப்போது அவ்வளவு பிரபலமுமில்லை, பொலிசாருக்கு அவர் கூறியது எதுவும் புரியவும் இல்லை. அதனைவிட அவர்கள் மைத்ரி கூறியதை நம்பவும் இல்லை. ஆகவே பொலிசார் உடனடியாக இவர்களிடமிருந்த ஆயுதங்கள் அனைத்தையும் பறித்துக் கொண்டதால் தொண்டர் படையினர் செய்வதறியாது தடுமாறினர். "உங்களது அடையாள அட்டைகளைத் தாருங்கள்" இவ்வாறு பொலிஸ் அதிகாரிகள் இவர்களது அடையாள அட்டைகளை பரிசோதித்துக் கொண்டிருக்கும் போது வேகமாக சென்று கொண்டிருந்த வெள்ளை நிற மோட்டார் வாகனம் ஒன்று இவர்கள் முன் வந்து நின்றது. மோட்டார் வாகனத்திலிருந்த கட்டைக் காற்சட்டையும் டீசேர்டும் அணிந்திருந்த ஒருவர் மைத்ரியின் அருகில் வந்தார். மைத்ரியின் முகத்தை உற்று நோக்கிய அவர் பொலிசாரைப் பார்த்து நோக்கி சத்தமிடத் தொடங்கினார். "இங்கிருந்து அனைவரும் கலைந்து செல்லுங்கள். இவர் எமது பாராளுமன்ற உறுப்பினர். எனக்குத் தெரிந்தவர். நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?" என அவர் பொலிசாரிடம் கேட்டார். உடனே பொலிசார் அவ்விடத்தை விட்டு அகன்று சென்றனர்.

அந்த பொலிஸ் அதிகாரியே அக்காலத்தில் காலி முகத்திடல் உள்ளிட்ட கொழும்பு கோட்டை பிரதேசத்திற்கு பொறுப்பாகவிருந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த ஜயசிங்க. அத்தோடு அவர் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் பாதுகாப்பு அதிகாரியாகவும் செயற்பட்டுள்ளார்.

பின்னர் அவர் மைத்ரியின் அருகில் சென்று அவரது கையைப் பிடித்துக்கொண்டு “இப்போது இவ்வாறான சம்பவங்கள் சகஜமாக இடம்பெறுகின்றன. நீங்கள் இதனை நினைத்து மனதைக் குழப்பிக்கொள்ள வேண்டாம். நிலமை இப்படி மாறியுள்ளது. என்ன செய்வது?”, எனக் கூறினார்

மைத்ரி கம்பஹாவில் தற்காலிக வாடகை வீட்டில் குடியிருந்த போதிலும் வாரத்திற்கொரு தடவையாவது பொலன்னறுவைக்கு சென்று வந்தார். அவ்வாறு செல்லும்போது ஒரு சில கிராமங்களுக்கு சென்று அங்குள்ளவர்களுடன் உரையாடிவிட்டுத் திரும்புவாரே தவிர எங்கும் தங்கியிருப்பதில்லை. அத்துடன் அவ்வாறு தங்கியிருக்கக் கூடிய சூழ்நிலையும் அப்போது இருக்கவில்லை.

பொலன்னறுவை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் இஸ்மாயில், மைத்ரியுடன் நெருங்கிய தொடர்புடையவர். அத்துடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரபல நன்கொடையாளரும் ஆவார். மைத்ரி பொலன்னறுவைக்கு செல்லும்போது தேவைக்கேற்ப இரவு பொழுதை அவரது வீட்டிலேயே கழிப்பார். ஒருநாள் மைத்ரி அங்கு சென்ற வேளையில் அவரது பாதுகாவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் சிலவற்றினை அங்கேயே வைத்துவிட்டு கொழும்புக்கு வந்து விட்டார். மைத்ரி கொழும்பு வந்து இரண்டு நாட்களின் பின்னர் இஸ்மாயிலிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. “மக்கள் விடுதலை முன்னணியினர் திடீரென எமது வீட்டினைச் சுற்றிவளைத்து வீட்டினுள் இருந்த துப்பாக்கிகளை எடுத்துச் சென்று விட்டனர்” என அவர் மைத்ரியிடம் கூறினார். மைத்ரியின் பாதுகாப்பிற்காக அரசினால் வழங்கப்பட்ட 07 துப்பாக்கிகள் அங்கே இருந்திருந்தன. அவை எல்லாவற்றையுமே ஜே.வி.பி. செயற்பாட்டாளர்கள் எடுத்துச் சென்று விட்டனர்.

கம்பஹாவில் வைத்தும் பொலிஸாரினால் ஒரு தடவை மைத்ரிக்கு அசௌகரியம் ஏற்பட்டது. கம்பஹா நீதிமன்றத்திற்கு அருகே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர் ஒருவருடைய தேநீர் கடையொன்று இருந்தது. மைத்ரி தனது பாதுகாவலர்கள் சகிதம் ஒருநாள் அங்கே அமர்ந்திருந்தபோது கம்பஹா மாவட்ட பொலிஸ் ஜீப் ஒன்று அங்கே வந்தது. ஜீப் வண்டியிலிருந்து அவசரமாக இறங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மைத்ரி உள்ளிட்டக் குழுவினரை சுற்றி வளைத்தனர். மைத்ரியின் பாதுகாப்புக்காக அரசினால் வழங்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி அவருடைய பாதுகாவலரிடம் இருந்தது. பொலிஸ் அதிகாரியொருவர் பாய்ந்து அதனை அவரிடமிருந்து பறித்துக்கொண்டார். “நீங்கள்

யார்? உங்களுக்கு இவை எவ்வாறு கிடைத்தன?'' என பொலிஸ் அதிகாரி ஒருவர் விசாரிக்கத் தொடங்கினார்.

''நான் பாராளுமன்ற உறுப்பினர். இவர் எனது பாதுகாப்பு உத்தியோகத்தர். இந்தக் கைத்துப்பாக்கி எனக்கு அரசினால் வழங்கப்பட்டது'' என மைத்ரி கூறினார்.

''அப்படியா அதை பொலிஸில் வைத்து பார்த்துக் கொள்ளலாம். அதனால் இவரை பொலிஸுக்கு அழைத்துச் செல்கிறேன்'' என பொலிஸ் அதிகாரி கூறினார்.

''இவரை பொலிஸுக்கு கொண்டு செல்வதானால் எனது பாதுகாப்பினை நீங்கள் தான் உறுதி செய்ய வேண்டும். எனது பாதுகாப்பு உத்தியோகத்தரை அழைத்துச் சென்று விட்டால் நான் இங்கே தனித்து விடுவேன்'' என்று மைத்ரி சற்று கடுமையாகக் கூறினார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மைத்ரியின் பாதுகாவலரை ஜீப்பில் ஏற்றிச் செல்ல ஆயத்தமாயினர்.

''நீங்கள் என்னைத் தனியாகவிட்டு செல்ல முடியாது. அதனால் எனது உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் நீங்கள் தான் பொறுப்புக் கூற வேண்டும்'' என்று மைத்ரி மீண்டும் கூறினார்.

''அப்படியானால் நீங்களும் ஜீப்பில் ஏறுங்கள். பொலிஸுக்கு செல்வோம்'' என பொலிஸ் அதிகாரி கூறினார்.

''ஜீப்பில் செல்வதென்றால் நான் முன்புற இருக்கையிலேயே அமருவேன். பின்புறத்தில் அமர மாட்டேன்'' என்று மைத்ரி கூறினார்.

பின்னர் மைத்ரி ஜீப் வண்டியின் முன்புற இருக்கையில் அமர்ந்தார். வாகனம் கம்பஹா பொலிஸில்போய் நின்றது. அப்போது கம்பஹா பொலிஸில் பிரதம பொலிஸ் பரிசோதகராக இருந்தவர் காமினி சில்வா ஆவார்.

மைத்ரி தமக்கு நடந்தவற்றை விபரித்தார். அந்த விபரங்களைக் கேட்டறிந்ததன் பின்னர் மைத்ரியின் பாதுகாப்பு உத்தியோகத்தரை அவரது கைத்துப்பாக்கியுடன் காமினி சில்வா விடுவித்தார்.

# கொல்ல வந்தவனை வாழ வைத்தல்

1988 - 1989 நாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் கெடுபிடிகள் நிறைந்திருந்த காலமாகும். மக்கள் விடுதலை முன்னணியின் கடும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே மைத்ரிபால சிறிசேன 1989 இல் பாராளுமன்ற பொதுத்தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். தேர்தல் வெற்றியின் பின்னரும் அந்த அச்சுறுத்தல்கள் குறையவில்லை.

இந்நிலையில் பெரும்பாலானோரின் வேண்டுகோளுக்கிணங்க மைத்ரி சிறிது காலம் பொலனறுவையை விட்டு தனது மனைவி பிள்ளைகளுடன் கம்பஹா நகருக்கு அண்மித்த வாடகை வீடொன்றில் தங்கியிருந்தார். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோஹண விஜேவீரவின் மரணத்தின் பின்னர் நாட்டில் நிலைமை அமைதியானதுடன் அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு ஏற்ப மக்கள் விடுதலை முன்னணி செயற்பாட்டாளர்கள் பலர் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர்.

நாட்டின் நிலைமை சீரடைந்ததைத் தொடர்ந்து மைத்ரியும் தனது மனைவி பிள்ளைகளுடன் பொலன்னறுவை வைத்தியசாலை சந்தியில் வாடகை வீடொன்றில் குடியேறினார்.

ஒரு நாள் மாலை இள வயதுப் பெண்ணொருவர் மைத்ரியின் வீட்டுக்கு வந்து, தனது கணவன் பொலன்னறுவை மாவட்ட மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் என்றும், அவர் அரசாங்கத்திடம் சரணடைய விரும்புவதாகவும், அதற்கு உதவுமாறும் மைத்ரியிடம் கேட்டுக்கொண்டார். பாராளுமன்ற உறுப்பினரான மைத்ரி

அரசாங்கத்தினாலும் மக்கள் விடுதலை முன்னணியினாலும் கொல்லப்பட்ட மற்றும் சித்திரவதைகளுக்குட்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அப்போது மனிதாபிமான ரீதியில் உதவிகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

அந்தவகையில் அந்தப் பெண்ணின் கோரிக்கையையும் மைத்ரி ஏற்றுக்கொண்டார். வேறொரு நாளில் கணவருடன் வீட்டுக்கு வருமாறு கூறிய மைத்ரி, குறிப்பிட்ட அந்த மக்கள் விடுதலை முன்னணியின் மாவட்ட தலைவரை சரணடையும் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பதற்காக கொழும்புக்கு அழைத்து வந்தார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தனது புதிய பெஜிரோ ஜீப் வண்டியிலேயே மைத்ரி அந்த நபரை அழைத்து வந்தார்.

மைத்ரி அவரை அழைத்துக்கொண்டு ஆணைக்குழுவிடம் சென்றபோது அவருக்குக் கிடைத்த பதில் திருப்தியானதாக இருக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களைப் பொறுப்பேற்பது ஒருவார காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக ஆணைக்குழு உறுப்பினர்கள் மைத்ரியிடம் தெரிவித்தனர். அதனையடுத்து என்ன செய்வதென மைத்ரி சிந்திக்கலானார். பின்னர் அந்த மக்கள் விடுதலை முன்னணியின் பிரதேச தலைவருடன் சிராவஸ்தி மாளிகைக்கு வந்த மைத்ரி, தனக்கு வழங்கப்பட்டிருந்த அறையில் ஒரு வார காலம் அவரைத் தங்க வைத்திருந்தார். ஒருவாரம் கடந்த பின்னர் அவரை ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்காக ஒருநாள் காலை மைத்ரி தயாராகிய போது, அந்த நபர் கூறிய வார்த்தை மைத்ரிக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

மைத்ரியைக் கொலை செய்யும் பொறுப்பை மக்கள் விடுதலை முன்னணி தன்னிடம் ஒப்படைத்திருந்ததாக கூறிய அந்த நபர், பொலன்னறுவையில் இருந்து தம்மை கொழும்புக்கு அழைத்து வரும் போது இருவருக்குமிடையே இடம்பெற்ற உரையாடலினால் ஏற்பட்ட அறிமுகத்தின் காரணமாக மைத்ரியைக் கொலை செய்யும் எண்ணத்தை தான் கைவிட்டதாக கூறினார்.

தம்மை கொலை செய்ய திட்டமிட்டிருந்த மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினரையே தமது வாகனத்தில் கொழும்புக்கு அழைத்து வந்து, சிராவஸ்தி மாளிகையில் தனது அறையில் ஒருவார காலமாக இரகசியமாக மறைத்து வைத்து உண்பதற்கு

உணவு கொடுத்து பாதுகாத்ததை அந்த நபரே கூறும்வரை மைத்ரி அறிந்திருக்கவில்லை. எனினும் அதனை அறிந்த பின்னரும் மைத்ரி அவர்மீது கோபப்படவில்லை. மைத்ரி அந்த நபரை ஆணைக்குழுவிடம் கையளித்தார்.

குறிப்பிட்ட அந்த மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் ஒன்றரை வருடகாலம் புனர்வாழ்வு முகாமில் தங்கவைக்கப்பட்டு ஒரு புது மனிதராக சமூக மயப்படுத்தப்பட்டார். அன்று மைத்ரியின் உதவியுடன் ஒரு புதிய மனிதராக சமூகத்தில் பிரவேசித்த அந்த மனிதர் தமது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் மெதிரிகிரிய பிரதேசத்தில் இன்றும் வாழ்ந்து வருகின்றார்.



# ஜனாதிபதி பிரேமதாச பற்றிய அனுபவம்

1989ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவான அனைத்து உறுப்பினர்களையும் கட்சி பேதமின்றி அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாச தனது அலுவலகத்திற்கு அழைத்து அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் 25 இலட்சம் ரூபாவை ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் வழங்கப்போவதாக கூறினார். அது அங்கு சமுகமளித்திருந்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினது பாராட்டுக்குரிய விடயமாகக் கருதப்பட்டது. அப்போது அநுராதபுர மாவட்டத்தின் புதிய உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த தேமிய ஹுருல்லே ஜனாதிபதி பிரேமதாசவிடம் வினாவொன்றினைத் தொடுத்தார். "ஹொரவ்பொத்தானை பிரதேசத்தில் புனரமைக்கப்பட்டுள்ள குளங்களை திறந்து வைப்பதற்கு விசேட வைபவமொன்றினை நடத்துவது அவசியம்தானா?" என்பதே அவரது வினாவாகும்.

பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து தெரிவாகிய புதிய உறுப்பினராகிய மைத்ரியும் அச்சமயம் அங்கிருந்தார். தேமிய ஹுருல்லே அவர்களை நன்கு அவதானித்த ஜனாதிபதி பிரேமதாச, "வேலை செய்யும் போது அதற்கேற்றவாறு பிரச்சாரமும் இருக்கவேண்டும். அதனால் அந்த நிகழ்வை பிரச்சாரப்படுத்துவது கட்டாயமாகும்" என்று கூறினார். "அத்துடன் நின்றுவிடாது பிரேமதாசவின் ஆட்சியின் கீழ் இந்த குளங்கள் புனரமைக்கப்பட்டது என்ற செய்தியை அனுராதபுர மாவட்டத்தின் ஒவ்வொரு மரங்களின் இலைகளிலும் குறிக்கப்படல் வேண்டும்" என்று கூறியதுடன், "அரசினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை சிறந்த முறையில் பகிரங்கப்படுத்த வேண்டும்" என்ற நீண்ட விளக்கமொன்றினையும் அதன்போது அவர் வழங்கினார்.

அம்பன் கங்கையிலிருந்து பாராக்கிரம சமுத்திரத்திற்கு வரும் நீர், வரலாற்று முக்கியத்துவமுடைய அங்கம்மெடில்ல ஆற்றில் கலக்கிறது. அந்த ஆற்றுக்கு அண்மித்ததாக மிகப் பழமையான நீர் தேங்கும் குழியொன்று உள்ளது. இங்கு அதிகளவிலான மாணிக்கக் கற்கள் காணப்படுவதாக அக்காலத்தில் கூறப்பட்டு வந்தது. எனவே நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் மின் உற்பத்தி இயந்திரங்களை உபயோகித்து பிரதேச அரசியல்வாதிகளின் செல்வாக்குடன் இரவு பகலாக இப்பகுதியில் சட்டவிரோதமான மாணிக்கக்கல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விடயத்தை கேள்வியுற்ற, பராக்கிரம சமுத்திர பிரதேசத்திற்கு பொறுப்பாகவிருந்த இளம் பொறியியலாளர் இச்சட்டவிரோத அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை உபகரணங்களுடன் கைது செய்தார். எனினும் அவரது இந்த நடவடிக்கையினால் பலனேதும் கிடைக்கவில்லை. மாறாக அரசியல்வாதிகளினால் பொறியியலாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனால் மன உளைச்சலுக்கும், அச்சத்திற்கும் உள்ளான பொறியியலாளர் நடந்த அனைத்தையும் புதிய பாராளுமன்ற உறுப்பினரான மைத்ரியிடம் கூறி அதற்கான தீர்வொன்றினைக் கோரி நின்றார். மைத்ரியும் அந்த பொறியியலாளரிடம் "நான் இதனைப் பற்றி விசாரிக்கிறேன் எனக்கு அவகாசம் தாருங்கள்" என கேட்டுக்கொண்டார். பின்னர் அவர் குறித்த சட்டவிரோத நடவடிக்கை இடம்பெறுவதாகக் கூறப்பட்ட அங்கம்மெடில்ல பிரதேசத்திற்கு சென்று அவதானித்த போது எந்தவொரு ஒளிவு மறைவுமின்றி அரசியல்வாதிகளின் செல்வாக்கோடு அகழ்வு நடவடிக்கைகள் பகிரங்கமாக இடம்பெறுவதை கண்டார். அந்த சட்டவிரோத செயலை நிறுத்துவதைப்பற்றி சிந்தித்த மைத்ரி, இறுதியாக ஜனாதிபதி பிரேமதாசவிடம் அதைப்பற்றி முறையிடத் தீர்மானித்தார்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச பதவிக்கு வருவதற்கு முன்னரும் வந்த பின்னரும் தினமும் அதிகாலை 4.00 மணிக்கு பொதுமக்களை சந்திப்பதனை வழக்கமாகக் கொண்டிருந்தார். எனவே ஜனாதிபதியிடம் முறையிடத் தீர்மானித்த மைத்ரி அடுத்தநாள் அதிகாலை 5.00 மணியளவில் ஜனாதிபதி பிரேமதாசவை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். "என்ன பிரச்சினை?" என்று ஜனாதிபதி நேரடியாகக் கேட்டார். பொலன்னறுவை பிரதேசத்தில் அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக்கை குறித்து விளக்கினார் மைத்ரி.

"இதனை அறிவித்ததற்கு நன்றி. எனக்கு சில மணித்தியாலங்கள் தாருங்கள் நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கின்றேன்" என்று ஜனாதிபதி பிரேமதாச, மைத்ரியிடம் தெரிவித்தார். அன்றைய தினம் பகல் 2.00 மணியளவில் ஜனாதிபதியினால் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட விசேட விசாரணைக் குழுவினரால் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டு பொலன்னறுவை பொலிஸ் மூலம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு இறுதியாக சிறையிலடைக்கப்பட்டனர். தமது முறைப்பாட்டிற்கேற்ப ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவினால் மேற்கொள்ளப்பட்ட அந்த பாராட்டுக்குரிய நடவடிக்கையினை உண்மையான நன்றி உணர்வுடன் மைத்ரி இன்றும் நினைவு கூருகின்றார்.

# பகிடியின் பாரதூரம்

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தெரிவாகிய தூரப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டில் நிலவிய பயங்கரவாத நிலைமை காரணமாக கொழும்பில் அமைந்துள்ள சிராவஸ்தி மாளிகையிலேயே தங்கியிருந்தனர். அங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு போதாமையினால் சில உறுப்பினர்களை ஹோட்டல்களில் தங்கவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. அந்தவகையில் 35 உறுப்பினர்கள் ஹோட்டல்களில் தங்கவைக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஹோட்டல்களுக்கு பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

தப்ரபேன் ஹோட்டலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் சிலரும் தங்கியிருந்தனர். தப்ரபேன் ஹோட்டல் அருகாமையில் பொலிஸ் தலைமையலுவலகமும் அமைந்திருந்தமையால் அதனைச் சுற்றிய பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கிருந்து பூரண பாதுகாப்புடன் பாராளுமன்ற கூட்டங்களுக்குச் சென்றுவந்தனர். பொலனறுவையிலிருந்து முதல் முறையாகத் தெரிவு செய்யப்பட்ட மைத்ரிபால சிறிசேனவும் ஜனக பண்டார தென்னகோனின் மூத்த சகோதரரும் அப்போதைய கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான யசரத்தன தென்னகோனும் தப்ரபேன் ஹோட்டலிலேயே தங்கியிருந்தனர். இருவரும் நல்ல நண்பர்கள். யசரத்ன தென்னகோன் கண்டி நகரசபைத் தேர்தலில்

போட்டியிடும்போது மைத்ரி அவரது வெற்றிக்காக வீடு வீடாகச்சென்று பிரசாரம் செய்தார். இதனால் மைத்ரிக்கும் யசரத்னவுக்குமிடையே நீண்டகால நட்பு இருந்து வந்தது.

ஒரு நாள் மாலை யசரத்ன தென்னகோன் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கு சென்ற மைத்ரி, தென்னகோனுக்கு ஏதேனும் ஒரு பகிடியைச் செய்ய வேண்டுமென எண்ணினார். வேட்டியணிந்து இடுப்புப் பட்டியைக் கட்டுவது தென்னக்கோனின் பழக்கமாகும். அவர் அணியும் அந்த வெள்ளி இடுப்புப்பட்டி அவரது தந்தையான ரி.பீ.தென்னகோனிடமிருந்தே அவருக்கு பரிசாக கிடைத்திருந்தது.

"எனது தந்தைதான் எனக்கு இந்த இடுப்புப் பட்டியைத் தந்தார். நான் இதனை எனது உயிரைப்போல் பாதுகாக்கிறேன். இது பெறுமதியான பரம்பரைச் சொத்து" என தென்னகோன் மைத்ரியிடம் கூறியிருந்தார்.

மேசையின் மீது அந்த இடுப்புப்பட்டி இருப்பதைக்கண்ட மைத்ரி அதை எடுத்து தனது காற்சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

அடுத்தநாள் காலை பாராளுமன்றத்திற்குச் செல்ல வேட்டியை அணிந்து கொண்டு இடுப்புப்பட்டியைத் தேடிய தென்னகோனுக்கு அது கிடைக்கவில்லை. அறையின் எல்லா இடங்களிலும் தேடியும் அது கிடைக்கவில்லை. தென்னகோன் முன்னைய நாள் தனது அறைக்கு வந்த உறுப்பினர்களின் அறைகளுக்குச் சென்று இடுப்புப் பட்டியைத் தேடிப்பார்த்தார். ஆனால் அது கிடைக்கவில்லை.

"எனது இடுப்புப் பட்டியைக் காணவில்லையே அது எனக்கு எனது தகப்பன் தந்தது. எனது அறைக்கு இவர்கள்தான் வந்தனர். நேற்று மாலை எனது இடுப்புப் பட்டியைக் கழற்றி மேசையின் மீதுதான் வைத்தேன். அதற்கு என்ன நடந்ததெனத் தெரியாது" என்று அவர் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சொல்லி அழுதார். அந்த உறுப்பினர்களும் இடுப்புப்பட்டியைத் தேடினர். எனினும் யாருக்குமே அது கிடைக்கவில்லை. இடுப்புப்பட்டியை தான் ஒளித்ததாக மற்றைய உறுப்பினர்களிடம் கூறிய மைத்ரி, அவர்களுடன் பாராளுமன்றத்திற்குச் சென்றார். எங்கு தேடியும் இடுப்புப் பட்டி கிடைக்காததால் தென்னகோன் தனது சாரதியின் இடுப்புப் பட்டியை கட்டிக்கொண்டு பாராளுமன்றத்திற்குச் சென்றார்.

அவர் தனது இடுப்புப் பட்டி காணாமல் போன செய்தியை பாராளுமன்றத்தில் சந்தித்த அனைத்து உறுப்பினர்களிடமும் கூறி அழுதார். இடைக்கிடையே தமது வீட்டுக்கு தொலைபேசியூடாக

அழைப்பு எடுத்து தனது மனைவியிடம் "எனது இடுப்புப்பட்டி காணாமல் போய்விட்டது. அது எனது தந்தை எனக்குத் தந்தது இப்போது அதனைத் தேடுவதற்கான வழி இல்லை. யார் களவெடுத்தார்கள் எனத்தெரியவில்லை" எனக் கூறினார்.

தென்னகோனின் இந்த நடவடிக்கை மைத்ரிக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் சுவாரசியமானதாக இருந்தது. தென்னகோன் தனது மனைவிக்கு கூறியவற்றை மைத்ரி இரகசியமாகக்கேட்டு ஏனையவர்களிடமும் அதுபற்றிக் கூறினார். அன்று மாலை ஹோட்டலுக்குச் சென்ற தென்னகோன் தனது இடுப்புப்பட்டி குறித்து ஹோட்டல் முகாமையாளரிடமும் கூறினார். அது மட்டுமன்றி அவர் பொலிஸிலும் முறைப்பாடு செய்தார். சற்று நேரத்தில் அங்கு வந்த பொலிஸார் அங்கு இருந்த ஊழியர்களிடம் வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொண்டனர். என்றாலும் இடுப்புப்பட்டி குறித்த எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. தென்னகோனும் உணவு, உறக்கம் எதுவுமின்றி இரவு பகலாக இடுப்புப் பட்டியைத் தேடிக்கொண்டிருந்தார்.

இடுப்புப்பட்டி குறித்து விசாரணை செய்வதற்காக ஹோட்டல் ஊழியர்களை பொலிசுக்குக் அழைத்துச் செல்லவுள்ளதாக அடுத்த நாள் பாராளுமன்றதிலிருந்த மைத்ரி உள்ளிட்ட சிலருக்குக் தகவல் கிடைத்தது. யசரத்ன தென்னகோனின் அறைக்குப் பொறுப்பாக இருந்த ஹோட்டல் ஊழியரை ஏற்கனவே பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருந்தனர். இதனைக் கேள்விப்பட்ட மைத்ரி உடனடியாக பொலிஸாரை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு "அந்த ஊழியர்களுக்கு பிரச்சினை கொடுக்க வேண்டாம் இடுப்புப் பட்டி எங்களிடம் உள்ளது. நாம் பகிடிக்காகவே அதனை எடுத்தோம்" என்று கூறினார்.

இரண்டாவது நாளும் தென்னகோன் தனது சாரதியின் இடுப்புப் பட்டியை அணிந்து கொண்டே பாராளுமன்றத்திற்கு சென்றார். இடுப்புப் பட்டியை ஒளித்து வைத்த விடயத்தை தென்னகோனிடம் கூற மைத்ரிக்கு பயமாக இருந்தது. கோபத்தில் எதுவும் செய்து விடுவாரோ என்று சந்தேகமாக இருந்தது, எனவே மைத்ரி இடுப்புப்பட்டியைக் கொண்டு சென்று தென்னகோனின் சாரதியிடம் கொடுத்து தென்னகோனிடம் கொடுக்குமாறு கூறினார். சாரதி தென்னக்கோனிடம் இடுப்புப்பட்டியை கொடுத்துவிட்டு "மைத்ரிபால சிறிசேன ஐயா இடுப்புப் பட்டியை எங்கோ கண்டெடுத்து கொண்டுவந்து தந்தார்" எனக்கூறினார்.

தனது இடுப்புப்பட்டி கிடைத்த பின்னர் சாரதியின் இடுப்புப் பட்டியை தென்னகோன் திருப்பிக் கொடுத்தார். பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டிருந்த ஹோட்டல் ஊழியர்களும் விடுவிக்கப்பட்டனர். என்றாலும் செய்த பகடியின் காரணமாக தென்னகோன் மூன்று நான்கு மாதங்கள் வரை மைத்ரியின் முகத்தைக்கூட பார்க்கவில்லை.



# மகாவலி அமைச்சர் பதவி

பாராளுமன்றத்திற்கு முதல் தடவையாகத் தெரிவாகும் உறுப்பினர்களுக்கு எதிர்க் கட்சியில் செயற்படக் கிடைப்பதன் மூலம் தமது அரசியல் பயணத்தை வலுவானதாக அமைத்துக் கொள்ளவும், அரசியல் வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை திறம்பட சமாளிப்பதற்கான அடித்தளத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உறுதுணையாக அமையும். 1989 ஆம் ஆண்டில் முதற் தடவையாக பாராளுமன்றத்துக்கு தெரிவானபோது எதிர்க் கட்சியில் செயற்படக்கூடிய அந்த வாய்ப்பு மைத்ரிக்கும் கிடைத்தது. மைத்ரி பாராளுமன்றத்திற்கு தெரிவானது அதுவே முதற் தடவையாக இருந்தபோதிலும் நீண்ட காலம் அரசியற் செயற்பாடுகளில் ஈடுபட்ட அனுபவத்தை கொண்டிருந்தார்.

1989 ஆம் ஆண்டில் முதற் தடவையாக தெரிவாகிய பாராளுமன்ற உறுப்பினர்களுள் பெரும்பாலானவர்களுக்கு 1994ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஐக்கிய முன்னணி சுதந்திர முன்னணி அரசின் அமைச்சரவையில் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்ட



போதிலும் மைத்ரிக்கு பிரதியமைச்சர் பதவியே கிடைத்தது. ஆயினும் அதனூடாக பொலன்னறுவை மாவட்ட விவசாய மக்களுக்கு சேவையாற்றக்கூடிய வாய்ப்பு கிடைத்தமையினால் மைத்ரி மன ஆறுதல் அடைந்தவராகவே காணப்பட்டார்.

நீர்ப்பாசன பிரதியமைச்சரான மைத்ரி, நீர்ப்பாசன, மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சரான அநுருத்த ரத்வத்தவின் கீழ் செயற்பட்டார். இதன்போது பல சந்தர்ப்பங்களில் நீர்ப்பாசன, மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சின் பதில் அமைச்சராகவும் செயற்பட்டார். இக் கால கட்டத்தில் அவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட அவரது அனுபவங்கள் பிற்காலத்தில் அவர் தனது பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு ஏதுவாக அமைந்தது.

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தலைமையின் கீழ் இடம்பெற்ற முதலாவது தேர்தலான 1997 ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தலில் பெற்ற அபார வெற்றியினைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு செய்தார். ஏனெனில் 1994 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அமைச்சரவையில் பல மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும், பல சிரேஷ்ட உறுப்பினர்களும் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படாததனால் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அவர் எண்ணினார். அதனால் 1970 ஆம் ஆண்டில் அமைச்சரான சீ.பி.டி சில்வாவற்கு பின்னர் 27 வருடங்களின் பின்னர் 1997 ஆம் ஆண்டில் பொலன்னறுவையைச்



சேர்ந்த மைத்ரிபால சிறிசேனவுக்கு மகாவலி அபிவிருத்தி அமைச்சுப் பதவி கிடைத்தது. அமைச்சரவைத் திருத்தம் தொடர்பான கலந்துரையாடலில் மைத்ரி பங்குபற்றாததனால் தனக்கு அமைச்சுப்பதவி கிடைக்கவிருப்பது தொடர்பில், சத்தியப்பிரமாணம் செய்வதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு செல்லும் வரை அவர் அறிந்திருக்கவில்லை. சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் மற்றும் அநுர பண்டாரநாயக்க ஆகியோருடன் மைத்ரி நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த போதிலும் சந்திரிக்கா பண்டாரநாயக்கவுடன் அவ்வளவு நெருங்கிய உறவினை அவர் கொண்டிருக்கவில்லை. அத்துடன் மங்கள சமரவீர, எஸ்.பீ. திசாநாயக்க போன்றவர்களுக்கு அன்று வழங்கப்பட்ட முக்கியத்துவம் மைத்ரிக்கு வழங்கப்படவில்லை. அதனால் அக்காலத்தில் அரசின் முக்கிய கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் மைத்ரிக்கு கிடைக்கவில்லை. 1994 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரவையில் மைத்ரிக்கு அமைச்சுப்பதவி கிடைக்காமைக்கான காரணம் இதுவாகவும் இருக்கலாம். எனினும் ஆட்சியமைக்கப்பட்டு இரண்டு, மூன்று வருடங்களுக்குள் மைத்ரியைப் பற்றி தெரிந்துகொண்ட சந்திரிக்கா பண்டாரநாயக்க முக்கிய அமைச்சுப் பொறுப்பொன்றை அவருக்கு வழங்கினார். இந்த நியமனமானது மைத்ரியினதும் பொலன்னறுவை மக்களினதும் வாழ்க்கையில் முக்கியமானதொரு மைல் கல்லாக அமைந்தது.

# மாறுவேடத்தில் சென்ற பயணம்

நீர்ப்பாசன பிரதியமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட மைத்ரி, அப்போதைய நீர்ப்பாசன, மின்வலு மற்றும் மின் சக்தி அமைச்சரும், பாதுகாப்பு பிரதியமைச்சருமாகவிருந்த ஜெனரல் அநுருத்த ரத்வத்தை அவர்களுடன் இணைந்தே செயற்பட வேண்டியிருந்தது. பாதுகாப்புப் பிரதியமைச்சராக இருந்த அநுருத்தவிற்கு நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக அதிகளவு பணிகள் இருந்தமையினால் நீர்ப்பாசனம் தொடர்பான சகல விடயங்களும் மைத்ரியின் பொறுப்புக்குள் வந்தன. நீர்ப்பாசன அமைச்சு தொடர்பான பணிகளுடன், தொழிற்சங்கங்களுடனும் மைத்ரி இணைந்து பணியாற்றினார்.

தேசிய நீர்ப்பாசன மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் இக்காலப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கலேவெல தேவஹுவ நீர்ப்பாசன திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில் அதிகளவில் முறைகேடுகளும், ஊழலும் இடம்பெறுவதாக கேள்வியுற்ற பிரதியமைச்சர் மைத்ரி அதனை அறிந்து கொள்வதற்காக பிறர் இணங்கான முடியாதவாறு சாதாரண ஆடை அணிந்து தலையில் தொப்பியொன்றையும் அணிந்துகொண்டு பழைய ஜீப் ஒன்றில் ஏறி தேவஹுவ பிரதேசத்தை நோக்கிச் சென்றார்.

தான் சென்ற வாகனத்தை தேவஹுவ வேலைத்தளத்தில் நிறுத்திய அவர் தன்னை யாரென அடையாளங்காட்டிக் கொள்ளாதவாறு அங்கிருந்த வேலையாள் ஒருவரிடம் "நான்

கொந்தராத்து வேலைகள் செய்கிறேன் இங்கு ஏதாவது வேலை இருக்கிறதா? கொந்தராத்து கிடைக்குமா? அதற்கு யாரை சந்திக்க வேண்டும்?" எனக் கேட்டார். "இங்கே எங்கட ஐயாதான் கொந்தராத்து தருவார். அவர் அங்கே இருக்கிறார்" என வேலையாள் ஓரிடத்தைக் குறிப்பிட்டுக் காட்டினார். அங்கிருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தரையே அவ்வாறு குறிப்பிட்டிருந்தார். அதற்கேற்ப மைத்ரியும் வேலையாள் குறிப்பிட்ட அந்த இடத்திற்கு சென்றார். அங்கு சிலர் வேலை செய்து கொண்டிருந்தனர். தொழில்நுட்ப உத்தியோகத்தரும் அங்கிருந்தார். "நான் ஒப்பந்த வேலைகள் எதுவும் இருக்கின்றதா என்று பார்க்க வந்தேன்" என்று மைத்ரி அவரிடம் கூறினார். "அப்படியா? எங்களிடம் வேலைகள் நிறைய உள்ளன." என தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதிலளித்தார். "எனக்கு இலகுவாக செய்ய மண் வேலைகள் தான் வேண்டும். நான் உங்களை விசேடமாகக் கவனிக்கிறன்" என்று மைத்ரி கூறும்போதே "சரி சரி வேலை இருக்கிறது" என தொழில்நுட்ப உத்தியோகத்தர் கூறினார். அதன் பின்னர் மைத்ரியும் ஒன்றும் அறியாதவரைப்போல் "சரி ஒப்பந்தங்களை எவ்வாறு பெற்றுக்கொள்வது? என தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் கேட்டார். "கமக்கார அமைப்பின் பெயரிலேயே எடுக்கலாம். ஆனால் நான் சொல்லும்படி வேலையை முடித்துத்தர வேண்டும்" என்று அவர் மைத்ரியிடம் கூறினார். உடனே மைத்ரியும் "சரி எனக்கு கமக்கார அமைப்பின் பெயரிலேயே ஒப்பந்தத்தை எடுத்துத் தாருங்கள்" எனக் கூறினார். "இந்த பிரதேச கமக்கார அமைப்புத் தலைவர் இங்கிருந்து சிறிது தொலைவில் இருக்கிறார். நாம் அவரையும் சந்தித்துப் பேசுவோம்" என தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆலோசனை கூறினார். "நான் உங்களை கவனிக்கிறேன் நாங்கள் வியாபாரிகள் தானே கவனிக்காமல் விடமாட்டோம்." என்று மைத்ரி கூற தொழில்நுட்ப உத்தியோகத்தரும் அதனை ஏற்றுக்கொண்டார்.

தனது ஜீப்பின் சாரதி இருக்கையில் மைத்ரி அமர்ந்துகொள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் முன்னாலிருந்த அடுத்த இருக்கையில் அமர்ந்து கொண்டார். அவரது வழிகாட்டலில் ஜீப்பை ஓட்டிச்சென்ற மைத்ரி கமக்கார அமைப்பு தலைவரின் வீட்டுக்கு சென்றார். அங்கிருந்த கமக்கார அமைப்பு தலைவரிடம் "இவர் புதிய ஒப்பந்தக்காரரர். இவருக்கு கமக்கார அமைப்பு பெயரில் இந்த ஒப்பந்தங்களை செய்து கொடுங்கள்" என்று தொழில்நுட்ப உத்தியோகத்தர் கூறினார். அவரும் அதனை ஏற்றுக்கொண்டார்.

"நாங்கள் கமக்கார அமைப்பின் பெயரில் ஒப்பந்தங்களை பெற்றாலும் எல்லா வேலைகளையும் இவர்தான் செய்கிறார். நாங்கள் அல்ல. என்றாலும் எமது பங்கு எமக்குக் கிடைத்தாக வேண்டும்." என தலைவர் கூறும்போதே "உங்களுடைய பங்கையும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பங்கையும் நான் கட்டாயமாக தந்துவிடுவேன்" என்று மைத்ரி கூறினார். "வேலை முடிந்த பின் பணம் கொடுக்கும் போது அதில் 5% எமக்கு வேண்டும். மிகுதி 10% இவருக்கு கொடுக்க வேண்டும்." என்று தலைவர் கூறினார். "இன்னும் நாங்கள் வேலையை தொடங்கவில்லையே. நான் நீங்கள் கூறியவாறே செய்கிறேன். நான் ஒருபோதும் பொய் சொல்லமாட்டேன்." என்று தொழில்நுட்ப உத்தியோகத்தரை ஓரக்கண்ணால் நோக்கியவாறே கூறினார் மைத்ரி.

"சரி நான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட நாளை வருகிறேன்." எனக் கூறிய மைத்ரி அங்கிருந்து கிளம்பிச் சென்றார். அவருடன் சென்றிருந்த சாரதியும், இரு பாதுகாவலர்களும் கலேவெல நகரில் இருந்தனர். அவர்களையும் ஏற்றிக்கொண்டு மைத்ரி கொழும்புக்கு வந்தார். பின்னர் மைத்ரி தனது அமைச்சின் விசாரணை அதிகாரிகளிடம் "நீங்கள் சென்று தேவஹுவ வேலைத் தளத்திலுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கழுத்தைப் பிடித்து இழுத்து வாருங்கள்." என்று அங்கு நடைபெறும் முறைகேடுகள் பற்றிய விபரங்களைக் கூறினார். அதற்கேற்ப மறுநாள் காலையில் தேவஹுவ திட்டத்தின் வேலைத்தளத்திற்குச் சென்ற விசாரணை அதிகாரிகள் அங்கிருந்த விவசாயிகளிடம் வாக்குமூலம் பெற்று, குறிப்பிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தரை கைது செய்து கொழும்புக்கு கூட்டி வந்தனர். முன்தினம் ஒப்பந்த வேலைகள் கேட்டு தமது வேலைத் தளத்திற்கு வந்தவர் நீர்ப்பாசன பிரதியமைச்சரே என்பதனை அவர் அப்போது கூட அறிந்திருக்கவில்லை. இறுதியாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் பணி நீக்கம் செய்யப்பட்டார்.



# மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் உதயம்

1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவடைந்து மூன்று மாத காலத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடிவானது. பொதுத்தேர்தலில் அமோக வெற்றியினைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதென்பது சிரமமானதொரு விடயமாக இருக்கவில்லை. எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக காமினி திசாநாயக்க களமிறங்கியதால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கும் காமினி திசாநாயக்காவிற்குமிடையே கடுமையான போட்டி உருவானது.

மேல் மாகாண முதலமைச்சராக இருந்து பொதுத்தேர்தலில் அதிகளவிலான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று பிரதமராக



பதவியேற்ற சந்திரிக்கா குமாரதுங்க மக்களின் மனங்கவர்ந்த தலைவியாகக் காணப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சி அப்போது பின்னடைவை கண்டிருந்த போதிலும் பெரும்பாலானோரின் வரவேற்பையும் ஆதரவையும் பெற்றிருந்த காமினி திசாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரானது அக்கட்சி ஆதரவாளர்களுக்கு புதியதோர் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

சந்திரிக்காவுக்கும் காமினிக்கும் இடையிலான தேர்தல் போட்டி நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கியது. எனினும் இதனிடையே காமினி உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர்கள் பாலத்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியாகிய சம்பவம் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் பின்னடைவைச் சந்திப்பதற்கு பிரதான காரணியாக அமைந்தது. காமினியின் திடீர் மறைவு ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரத்திலும் பின்னடைவை ஏற்படுத்தியது. அவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்த் தரப்பாக இருந்தபோதிலும் காமினியின் இழப்பானது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களையும், முழு நாட்டையும் பாரிய அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. சுதந்திரத்தின் பின்னர் தேர்தலொன்றின் போது இடம்பெற்ற மிகத்துயரமான சம்பவமாக இதனைக் குறிப்பிடலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதலுக்குள்ளாகி உயிர்நீத்த காமினி திசாநாயக்கவின் வெற்றிடத்திற்கு அவரது மனைவி ஸ்ரீமா திசாநாயக்க நியமிக்கப்பட்டார். ஐக்கிய தேசியக்



கட்சி பெயரிட்ட வேட்பாளரை தேர்தல்கள் ஆணையாளரும் ஏற்றுக்கொண்டார். இதன் மூலம் இரு பெண்களுக்கிடையிலான போட்டியாக தேர்தல் களம் அமைந்தது. எமது நாட்டின் அரசியல் வரலாற்றில் இரு பெண்கள் நாட்டின் தலைமைத்துவத்திற்காக போட்டியிட்ட முதலாவது சந்தர்ப்பமாகவும் அது அமைந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் புதிய தலைமைத்துவத்தினை அளித்த சந்திரிக்கா பண்டாரநாயக்க நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் விஜயம் செய்து





கட்சியின் ஆதரவாளர்களுக்கு உற்சாகமூட்டினார். இவ்வாறு அவர் பொலன்னறுவையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டபோது அப்பிரதேசத்தின் பாராளுமன்ற உறுப்பினராகிய மைத்ரி இந்நிகழ்வின் முன்னேற்பாடுகளில் முக்கிய பங்காற்றினார். பொலன்னறுவை தொல்பொருள் ஆய்வு நிலைய வளாகத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட சந்திரிக்கா பண்டாரநாயக்க மேடையில் தனக்கு அடுத்த ஆசனத்தில் அமர்ந்திருந்த மைத்ரியிடம் "ஜனாதிபதித் தேர்தலை நாம் வென்றவுடன் இப்பிரதேச மக்களுக்கு முதலாவதாக தீர்த்து வைக்கவேண்டிய பிரச்சினை என்ன மைத்ரி" எனக் கேட்டார்.

"மேடம், மொரகஹாகந்த நீர்த்தேக்கத் திட்டத்தினை ஆரம்பியுங்கள். நாங்களும் அதனை 30 வருட காலமாக பேசி வருகிறோம். அது ரஜரட்ட மக்களின் நீர் பிரச்சினையை தீர்க்கக்கூடிய பிரதான செயற்திட்டமாகும். அதனால் நாம் மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் பணிகளை முதலில் ஆரம்பிக்கவேண்டும்" என்று பதிலளித்தார் மைத்ரி.

அதன் பின்னர் மேடையில் உரையாற்றத் தொடங்கிய சந்திரிக்கா பண்டாரநாயக்க "நாங்கள் இந்த ஜனாதிபதி தேர்தலை வென்றவுடன் மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டத்தினை ஆரம்பிப்போம்" என கூடியிருந்த பெருந்திரளான மக்கள் கூட்டத்தின் தொடர்ச்சியான கரகோஷத்திற்கு மத்தியில் கூறினார்.



பொலன்னறுவை மக்கள் அந்த உரைக்கு மிகுந்த வரவேற்பை அளித்தனர். மைத்ரி இதனால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். அன்றைய தினம் சந்திரிக்கா உள்ளிட்ட குழுவினருக்கு மைத்ரியின் பொலன்னறுவை புதிய நகர வீட்டில் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போதும் சந்திரிக்கா "நாம் எப்படியாவது மொரகஹகந்த நீர்த்தேக்க திட்டத்தினை ஆரம்பிப்போம் மைத்ரி" எனக் கூறினார்.

நவம்பர் மாதம் 09ஆம் திகதி தேர்தல் இடம்பெற்றது. முழுமையான தேர்தல் முடிவுகளுக்கேற்ப 47 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கு கிடைத்தன. ஸ்ரீமா திசாநாயக்கவுக்கு 27 இலட்சம் வாக்குகளே கிடைத்திருந்தன. குறிப்பாக நோக்குமிடத்து சந்திரிக்கா தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஸ்ரீமா திசநாயக்கவைவிட சுமார் 20 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார். ஜனாதிபதி தேர்தலொன்றில் 61 வீதத்தை விட கூடுதலான வாக்குகளைப் பெற்று அவர் வெற்றி பெற்றதனால் இந்த வெற்றி வரலாற்று ரீதியான வெற்றியாக அமைந்தது.

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட நான்காவது ஜனாதிபதியாகவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது பெண் ஜனாதிபதியாகவும் சந்திரிக்கா பண்டாரநாயக்க பதவியேற்றார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த சில தினங்களுக்குப் பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்க, தமது மகளான ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க முன்னிலையில் பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவ்வரிய சந்தர்ப்பம் உலக அரசியல் வரலாற்றில் நீங்கா இடம் பிடித்தது. சிறிமாவோ பண்டாரநாயக்க 1960ஆம் ஆண்டில் முதலாவது பெண் பிரதமராக பதவியேற்றபோது மைத்ரிக்கு 09 வயது. 1994 ஆம் ஆண்டில் மைத்ரி பிரதியமைச்சராக பதவியேற்றபோது சிறிமாவோ பண்டாரநாயக்க மீண்டும் பிரதமராக பதவியேற்றார். அப்போது மைத்ரிக்கு 43 வயது.



# பாலம் பற்றிய கனவு

1979/80 காலப்பகுதியில் தொழிலேதும் இல்லாததால் வருமானமின்றி சிந்தனையில் ஆழ்ந்திருந்த மைத்ரிக்கு திடீரென ஒரு யோசனையொன்று தோன்றியது. அதனை அவர் தனது நெருங்கிய நண்பரான, திவயின பத்திரிகையின் பிராந்திய ஊடகவியலாளர் கருணாரத்ன கமகேவிடம் கூறினார்.

"கரூ, நாங்கள் மன்னம்பிட்டி மகாவலி கங்கை கரையில் மிளகாய் பயிரிடுவோமா?" என்று மைத்ரி கேட்டார். "ஆ அது நல்ல யோசனை" என்று கருணாரத்ன கமகேயும் அதனை ஆமோதித்தார். எனவே இருவரும் மகாவலி கங்கை கரையில் தேர்ந்தெடுத்த நிலப்பகுதியொன்றில் மிளகாய் பயிரிட முடிவெடுத்தனர்.

காணியை உழுவதற்குத் தேவையான எருதுகளை கருவின் தந்தையாரிடமிருந்து பெற்றுக் கொண்டனர். அடுத்த நாள் காலை எருதுகளை தங்கள் கிராமத்து இளைஞர்கள் சிலரிடம் கொடுத்து காணிக்கு அனுப்பிவிட்டு இருவரும் சைக்கிளில் மன்னம்பிட்டிக்கு புறப்பட்டனர். ஆயினும் தாங்கள் அனுப்பிவைத்தவர்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாத விபத்திற்கு முகம்கொடுக்க நேர்ந்திருந்தது. அப்போது வாகனப் போக்குவரத்துக்காக தற்போதுள்ள வசதியான மன்னம்பிட்டி பாலம் இருக்கவில்லை. புகையிரதப் பாதையும் வாகனப் போக்குவரத்துக்கான வீதியும் ஒரே பாலத்திலேயே அமைந்திருந்தன. எருதுகளை பாலத்தின் மீது கொண்டு செல்லும் போது எதிரே வந்த புகையிரதத்தில் மோதி அவை பரிதாபமாக இறந்திருந்தன. காணிக்கு செல்வதற்காக சைக்கிளில் சென்ற மைத்ரியும், நண்பன் கருவும் இறந்த எருதுகளின் உடல்களையே கண்டனர். அன்று ஏற்பட்ட அதிர்ச்சியினால் மிளகாய் பயிரிடும் யோசனையை அவர்கள் அத்தோடு கைவிட்டனர்.

புகையிரதத்திற்காக தனியான பாலமொன்று இருந்திருந்தால் இந்த துரதிஷ்டவசமான நிலை ஏற்பட்டிருக்காது என மைத்ரிக்கு தோன்றியது. அன்று ஏற்பட்ட அதிர்ச்சியினை அவரால் மறக்க முடியாதிருந்தது.

இந்த சம்பவம் நடந்து பல வருடங்களுக்குப் பின்னர் அதாவது 1989 இல் மைத்ரி முதல் தடவையாக பாராளுமன்றத்திற்கு



தெரிவு செய்யப்பட்டபோது, பாலம் பற்றிய கனவு அவருடைய மனதில் தோன்றியது. ஆயினும் அப்போது ஆட்சி அதிகாரம் இல்லாதமையினால் அவரால் எதுவும் செய்யமுடியவில்லை. எனினும் 1997ஆம் ஆண்டில் மகாவலி அமைச்சர் பதவி கிடைத்தபோது மன்னம்பிட்டிக்கென தனியான பாலமொன்றினை நிர்மாணிப்பதற்கான பணியினை ஆரம்பிக்க எண்ணிய மைத்ரி, மன்னம்பிட்டியில் புதிய பாலம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தினைத் தயாரிக்குமாறு தனது அமைச்சின் கீழ் செயற்பட்ட பொறியியலாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அத்திட்டத்தை தயாரிக்க இரண்டு வருடகாலம் எடுத்தது. 2000 ஆம் ஆண்டளவில் செயற்றிட்டமும் செலவு மதிப்பீடும் மைத்ரியின் கைகளுக்கு கிடைத்தன. மைத்ரி அவற்றை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா பண்டாரநாயக்கவிடம் கையளித்தவாறு "இந்த பாலம் மிகவும் அவசியமானது. எப்படியாவது செய்ய வேண்டும்" என்று கூறினார். சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் அதனை ஆமோதித்தார். எனினும் பாலத்தை அமைப்பதற்கான செலவு 800 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டது. அரசினால் அந்தளவு பாரிய நிதியினை செலவிட முடியாத நிலையிருந்தது. எனவே அதனை செயற்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதியுதவியை பெற்றுக் கொள்ளலாம் என எண்ணிய ஜனாதிபதி சந்திரிக்கா அதனை ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கிக்குச் சமர்ப்பித்தார். அதனை ஏற்றுக்கொண்ட ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கியின் பொறியியலாளர்கள் பாலம் கட்டப்படும் இடத்தினை ஆய்வு செய்ய 2002 ஆம் ஆண்டில் மன்னம்பிட்டிக்கு வந்தனர். நம் நாட்டின் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் திட்டத்திற்கமைய பாலம் கட்டுவதற்கான அங்கீகாரம் கிடைத்தது. அவ்வேளையில் மைத்ரி எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்ததால் மன்னம்பிட்டி பால நிர்மாண நடவடிக்கைகள் தாமதமாகியது.

எவ்வாறாயினும் 2004 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணனி ஆட்சிக்கு வந்த பின் மைத்ரி மீண்டும் மகாவலி அமைச்சரானார். கைவிடப்பட்ட நிலையில் இருந்த பாலத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் முன்னெடுப்பதற்காக மைத்ரி ஜப்பான் தூதுவரை சந்தித்து பாலத்தின் பணிகளைத் துரிதப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். அதற்கு ஜப்பான் தூதுவரிடமிருந்து சாதகமான பதில் கிடைத்தது.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மன்னம்பிட்டியவில் புதிய



பாலத்தினை நிர்மாணிக்கும் மைத்ரியின் கனவு 2007 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நிறைவேறியது. பிரதமராக பாலத்தின் நிர்மாணப்பணிகளை ஆரம்பித்து வைத்த மகிந்த ராஜபக்ஷ, இரு வருடங்களுக்குப் பின்னர் ஜனாதிபதியாக பாலத்தினை திறந்து வைத்தார்.



# பொலன்னறுவைப் பிள்ளைகள்

பொலன்னறுவை மாவட்ட பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் திறன் விருத்தி தொடர்பில் போதுமான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 27 வருடகால யுத்தம் பொலன்னறுவை மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களை பெரிதும் பாதித்திருந்தது.

வெலிகந்த, திம்புலாகல, லங்காபுர, மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவுகளே பயங்கரவாத நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களாகும். இதன்காரணமாக சில பாடசாலைகள் மூடப்பட்டன. ஆசிரியர்கள் கடமைக்குச் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. இந்த குறைபாடுகளுக்கு மத்தியிலும்



பொலன்னறுவை பாடசாலை பிள்ளைகள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தி வந்தனர். பரீட்சைப் பெறுபெறுகள் சிறப்பாக இருந்தபோதும் ஏனைய திறமைகளை வளர்க்கக்கூடிய வாய்ப்புக்கள் அப்பிள்ளைகளுக்கு கிடைக்கவில்லை.

பிள்ளைகள் முகங்கொடுத்த இப் பெரும் பிரச்சினைகளை விளங்கிக்கொண்ட மைத்ரிபால சிறிசேன பொலன்னறுவை பிள்ளைகளுக்காக 'புலதிசி தருவோ' என்ற ஒரு புதிய செயற்திட்டத்தை ஆரம்பித்தார். இதன் கீழ் பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் வகையிலான கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள், நுண்ணறிவு விருத்தி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நடத்தப்பட்ட வருடாந்த கண்காட்சி இலங்கையில் வேறு எந்த மாவட்டங்களிலும் இல்லாதவகையில் மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டது.

'புலதிசி தருவோ' நிகழ்ச்சித் திட்டம் மாவட்ட பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் மட்டுமன்றி கல்வித்துறை சார்ந்த அனைத்து தரப்பினரிடையேயும் பிரபலமான ஒரு திட்டமாக மாறியது.

'ரஜரட்ட நவோதய' அபிவிருத்தித் திட்டம் பொலன்னறுவை மாவட்ட மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு திட்டமாகும்.



1999 ஆம் ஆண்டு மைத்ரியினால் ஆரம்பிக்கப்பட்ட "ரஜரட்ட நவோதய" நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக இம்மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இது பொறியியலாளர்களினதும் திட்டமிடலாளர்களினதும் உதவி இன்றி மைத்ரியின் எண்ணத்தில் அவரே வடிவமைத்த ஒரு திட்டமென்பது குறிப்பிடத்தக்கது. மைத்ரியினால் எழுதப்பட்ட 200 பக்கங்களை கொண்ட இத்திட்டம் 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொலன்னறுவை மக்கள் சாட்சியாகவுள்ளனர். 2010 ஆம் ஆண்டு மகிந்த சிந்தனையில் இத்திட்டம் வட மத்திய மாகாண அபிவிருத்திக்கான "ரஜரட்ட நவோதய" திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதன் மூலம் அத்திட்டத்தின் வினைத்திறனைப் புரிந்துகொள்ளலாம். புலதிசி தருவோ மற்றும் ரஜரட்ட நவோதய நிகழ்ச்சித் திட்டங்கள் கடந்த தசாப்தத்தில் பொலன்னறுவையில் பல்வேறு துறைகளில் விரிவான அபிவிருத்திகளை ஏற்படுத்திய அதேவேளை அரசாங்கத்தின் பத்து வருட திட்டத்திலும் முக்கிய இடத்தை பெற்றது விசேட அம்சமாகும்.



# சுதந்திரக் கட்சியின் செயலாளர்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக சேவையாற்றிய தர்மசிறி சேனாநாயக்க திடீர் சுகயீனம் காரணமாக காலமானதைத் தொடர்ந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொது செயலாளர் பதவி வெற்றிடமாகியது. தர்மசிறி சேனாநாயக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் என்பதோடு அப்போது ஆட்சிப் பொறுப்பிலிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் சிரேஷ்ட அமைச்சருமாகவும்ள இருந்தார். பிரபல அரசியல்வாதியான அவர் 1970 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது தெதிகம தேர்தல் தொகுதியில் முன்னாள் பிரதமர் டட்லி சேனாநாயக்கவுடன் போட்டியிட்டார். கட்சி பேதமின்றி அனைவரிடமும் நற்பெயர் பெற்றிருந்த தர்மசிறி சேனாநாயக்கவின் திடீர் மரணம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு பெரும் இழப்பாக அமைந்தது.

2000 ஆம் ஆண்டில் தர்மசிறி சேனாாநாயக்கவின் மறைவுக்குப் பின்னர் கட்சி பொதுச் செயலாளர் பதவி குறித்து கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்களிடையே பல்வேறு கலந்துரையாடல்கள் மற்றும் வாதவிவாதங்கள் இடம்பெற்றன. கட்சிக்கும் நாட்டுக்கும் பெரும் சேவையாற்றிய தர்மசிறி சேனாநாயக்கவின் இறுதிக் கிரியைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களின் பங்கேற்புடன் கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் இடம்பெற்றது. தர்மசிறி சேனாநாயக்கவின் இறுதிக் கிரியையின்போது அப்போதைய கல்வி அமைச்சராக இருந்த காலஞ்சென்ற ரிச்சர்ட் பத்திரன மைத்ரிக்கு அருகிலேயே அமர்ந்திருந்ததுடன் அவரது கைகளைப் பற்றி கட்சியின் அடுத்த செயலாளர் பதவிக்கு பொருத்தமானவர் நீங்களே எனக் கூறினார். மைத்ரி அப்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப செயலாளராக இருந்தார்.

சுமார் ஒரு வார காலத்திற்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் தலைமையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு அலரி மாளிகையில் கூடியது. "தற்போது கட்சிக்கு செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டியுள்ளது." என்று கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பான கலந்துரையாடலில் ஒரு தரப்பினர் மைத்ரிபால சிறிசேன பொருத்தமானவர் என கூறினர். தர்மசிறி சேனாநாயக்கவின் இறுதிக் கிரியையின்போது கட்சியின் செயலாளர் பதவிக்குப் பொருத்தமானவர் மைத்ரி தான் என மைத்ரியிடமே கூறிய ரிச்சர்ட் பத்திரன, எஸ்.பீ. திசாநாயக்கவின் பெயரை பிரேரித்தார். அது பொதுச் செயலாளர் பதவிக்கான போட்டிக்கும் வழி வகுத்தது. குழப்பங்கள் ஏதுமின்றி இப் பிரச்சியை தீர்ப்பதற்காக ஜனாதிபதி மத்திய செயற்குழு உறுப்பினர்களுடன் நீண்ட கலந்துரையாடலை மேற்கொண்டார். கூட்டத்தை இடையில் நிறுத்திய ஜனாதிபதி இதற்கு சுமுகமான முறையில் தீர்வொன்றைக் காண்பதற்காக மைத்ரி, எஸ்.பீ ஆகியோருடன் தனியறையில் கலந்துரையாடினார். எஸ். பீ. அப்போது அரசியலில் பிரபலமானவராக இருந்தாலும், மைத்ரி கட்சியில் அவரை விட 20 வருடங்கள் பழமையானவராக இருந்தார். கட்சியில் சிரேஷ்ட தன்மையைக் கருத்திற்கொண்டு செயலாளர் பதவியினை தனக்கு தருமாறு மைத்ரி வேண்டுகோள் விடுத்தார். எவ்வாறாயினும் செயலாளர் பதவியை மைத்ரிக்கு வழங்க எஸ்.பீ. சம்மதம் தெரிவித்ததுடன் பிரச்சினை முடிவுக்கு வந்தது. ஆயினும் கட்சியின் செயலாளர் பதவி தொடர்பான தனது எண்ணத்தை மாற்றிக் கொள்வதற்கு 24 மணித்தியால கால அவகாசத்தை தருமாறும், மத்திய செயற்குழு மீண்டும் நாளை காலை ஒன்றுகூடி

தீர்மானம் எடுக்க வழியேற்படுத்துமாறும், தான் கட்சியின் செயலாளர் பதவிக்கு வரும் எண்ணத்தை கைவிட்டுள்ளதாக ஊடகங்களுக்கு அறிவிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுத்தருமாறும் ஜனாதிபதியிடம் எஸ்.பீ. திசாநாயக்க வேண்டுகோள் விடுத்தார். அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மீண்டும் மத்திய செயற்குழு கூட்டத்திற்கு வந்து கட்சியின் செயலாளர் தெரிவுக்கான கூட்டம் மறுநாள் காலை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

செயலாளர் பதவி தொடர்பான தனது எண்ணத்தைக் கைவிடுவதாகக் கூறிய எஸ்.பீ அதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாது மத்திய செயற்குழு உறுப்பினர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களைச் சந்தித்து தன்னை பொதுச் செயலாளராக நியமிப்பதற்கான வாக்கெடுப்பை நடத்துமாறு கோரினார். ஆனால் மைத்ரிபால தனது மனச்சாட்சிப்படி எவருடனும் இது பற்றிய கதைக்காமல் முதல்நாள் எடுத்த முடிவில் நம்பிக்கையுடன், மறுநாள் மத்திய செயற்குழு கூட்டத்தில் பங்கேற்றார். முதல்நாள் மாலையில் கொழும்பு, பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சிரேஷ்ட அமைச்சரொருவரின் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் மைத்ரியுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த முன்னாள் சபாநாயகர் கே.பீ. ரத்நாயக்க, ஸ்டேன்லி திலகரத்ன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உப செயலாளர்களில் ஒருவரான ஜோன் செனெவிரத்ன, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் மறுநாள் இடம்பெறும் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் கட்சியின் பொது செயலாளராக மைத்ரி நியமிக்கப்படுவது உறுதியென மைத்ரியிடம் கூறினர். அத்துடன் நாளை தமது தனிப்பட்ட தேவைகளுக்காக அவர்கள் கொழும்புக்கு வெளியே செல்வதனால் தம்மால் கூட்டத்தில் பங்குபற்ற முடியாது என்றும் தெரிவித்தனர்.

முன்தினம் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய கட்சியின் மத்திய செயற்குழு அடுத்தநாள் காலை அலரி மாளிகையில் கூடியது. கட்சிக்கு செயலாளர் ஒருவரை நியமிக்குமாறு கூட்டத்தின் ஆரம்பத்திலேயே ஜனாதிபதி கூறினார். மைத்ரி மற்றும் எஸ்.பீ ஆகியோரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. எஸ்.பீ. திஸாநாயக்க தான் முன்தினம் மேற்கொண்ட உறுதிமொழியை மீறி வாக்கெடுப்புக்கு தான் முன்வருவதாகக் கூறினார். மைத்ரி இதனை சிறிதளவும் எதிர்பார்க்கவில்லை. இருவரது பெயர்களும் பிரேரிக்கப்பட்டமையால் வாக்கெடுப்பை நடத்துவதென மத்திய செயற்குழு முடிவு செய்தது.

அனைவரும் தமது விருப்பை தெரிவிப்பதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அனைவரும் தமது வாக்குகளை ஜனாதிபதி இருந்த மேசையில் வைத்தனர். ஜனாதிபதி தனது வாக்கை பகிரங்கமாகவே எஸ்.பீ திசாநாயக்காவுக்கு அளித்தார். வாக்கெடுப்பின் முடிவுகள் ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டது. மைத்ரிக்கு 12 வாக்குகளும் எஸ்.பீ. திசாநாயக்கவுக்கு 16 வாக்குகளும் வழங்கப்பட்டிருந்தன. நான்கு வாக்குகளினால் வெற்றிபெற்று எஸ்.பீ செயலாளராக நியமிக்கப்பட்டார். இதன்போது வேகமான உரையொன்றினை நிகழ்த்திய அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன எஸ்.பீ. திசாநாயக்கவுக்கு வாழ்த்துக் கூறினார். வாக்கெடுப்பின் மூலம் ஜனநாயக ரீதியில் கட்சியின் செயலாளர் நியமிக்கப்பட்டதை குறித்து அனைவருக்கும் நன்றி தெரிவித்த மைத்ரி கூட்டத்தின் முடிவில் சரண வீதியில் அமைந்துள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்றார். அவ்வேளையில் அங்கு ஊடகவியலாளர்கள் நிறைந்திருந்ததுடன் அவர்கள் மைத்ரியிடம் பல வினாக்களை எழுப்பினர். அவற்றுக்கு விடையளிக்காத மைத்ரி அவர்களுக்கு நன்றி தெரிவித்து விட்டு இல்லத்தின் மேல்மாடிக்கு சென்றார். அவ்வாறு செல்லும்போதே தொலைபேசியின் மணி ஒலித்தது. அதனைக் கையிலெடுத்த மைத்ரிக்கு மிகவும் பரீட்சயமான குரலொன்று அதில் கேட்டது. அது வேறு யாருமல்ல அப்போது ரோஸ்மீட் இல்லத்தில் சுகயீனமுற்றிருந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் குரலே அது. மைத்ரி செயலாளராக தெரிவு செய்யப்படாமை குறித்து அவர் வினவினார். "மேடம் எனக்கு 12 வாக்குகளும் எஸ்.பீ க்கு 16 வாக்குகளும் கிடைத்தன. அதனால் எஸ்.பீ செயலாளராகி விட்டார்" என மைத்ரி கூறினார். அதன் பின்னர் பண்டாரநாயக்க அம்மையாரின் உணர்வுபூர்வமான பெருமூச்சின் சத்தம் மட்டுமே மைத்ரிக்கு கேட்டது. அத்துடன் தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்டது.

மைத்ரிக்கு அவ்வேளை மிகவும் உணர்வுபூர்வமானதாக இருந்தது. அவர் உடனடியாக ரோஸ்மீட் இல்லத்திற்கு சென்று பண்டாரநாயக்க அம்மையாரைச் சந்தித்தார். "நான் இதனை ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. கட்சி இத்துடன் வீணாகிவிடும்" என கண்ணீர்மல்க சிதறிய எதிர்பார்ப்புடன் கூறினார் பண்டாரநாயக்க அம்மையார்.

எஸ்.பீ கட்சியின் செயலாளராகி ஒரு வருடத்திற்குள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டு கட்சியின் செயலாளர்

பதவியையும், தான் வகித்த முக்கிய அமைச்சு பதவியையும் துறந்த அவர் எதிர்க்கட்சியுடன் இணைந்து கொண்டார். சில மாதங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. எஸ்.பீ ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து இரு வாரங்களின் பின்னர் கட்சியின் மத்திய செயற்குழுவை அவசரமாகக் கூட்டிய ஜனாதிபதி சந்திரிக்கா "கட்சிக்கு செயலாளர் ஒருவரைத் தெரிவு செய்யவேண்டியுள்ளது. இதற்காக நான் மைத்ரிபால சிறிசேனவை முன்மொழிகிறேன்" எனக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கூறினார். அதற்குப் போட்டியாக வேறு எவரது பெயரும் முன்வைக்கப்படவில்லை. எனவே மைத்ரிபால சிறிசேன கட்சியின் செயலாளராக ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# சில துன்பியல் அனுபவங்கள்

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹம்பாந்தோட்டை, பொலன்னறுவை, மொனராகலை, அம்பாறை, மட்டக்களப்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலிருந்து புகையிரத்திலோ, பேருந்திலோதான் பாராளுமன்றத்திற்கு வருகை தந்தனர். 1971 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் கலவரத்தைத் தொடர்ந்து, அரசியல்வாதிகளுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 1983 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்த காரணத்தாலும், அரசியல்வாதிகளை அவர்கள் மோசமாகப் படுகொலை செய்த காரணத்தினாலும் அரசியல்வாதிகளின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

மைத்ரிபால சிறிசேனவும் புலிகளின் தாக்குதல் பட்டியலில் முதலிடத்தில் இருந்த ஒருவர். ஐந்து தடவைகள் பயங்கரவாதத் தாக்குதல்களில் இருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியவர். மைத்ரியின் பாதுகாப்புக்காக அரசாங்கம் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தது. பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் அவரது பாதுகாப்புக்காக விசேட அதிரடிப்படை, அமைச்சரவைப் பாதுகாப்பு அதிகாரிகள், மகாவலி பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற பொலன்னறுவை கதுருவெல நகரில் சணச வங்கியைத் திறந்துவைக்கும் நிகழ்வில் மைத்ரி

பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அன்றைய தினம் கொழும்பிலிருந்து அந்த நிகழ்வுக்கு வருகை தந்து வங்கியைத் திறந்துவைத்து விட்டு அவர் பொலன்னறுவை மாவட்ட செயலகத்துக்கு சென்றார். அவர் பயணித்த வாகனத்தின் பின்னால் சென்ற பாதுகாப்பு வாகனம் சற்றுத்தூரம் சென்றதும் நிறுத்தப்பட்டுள்ளதாக மைத்ரியின் வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதி கூறினார். மைத்ரியின் வாகனத்தில் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த தலைமை பாதுகாப்பு அதிகாரி தனது வோக்கிடோக்கியின் மூலம் அவ்வாகனத்தின் பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வாகனம் ஏன் நிறுத்தப்பட்டுள்ளது என்று வினவினார். அதிலிருந்த விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தமது வாகனத்திலிருந்த அதிகாரி ஒருவரின் தலைக்கவசம் காற்றில் பறந்து விட்டதாகவும் அதனை எடுத்துக்கொண்டு வருவதாகவும் கூறினார்.

மைத்ரி பயணம் செய்த வாகனம் மற்றய வாகனத்துடன் பொலன்னறுவை நகரை நோக்கி பயணித்தது. மைத்ரியின் நண்பரான பிரதேச சபை உறுப்பினர் ரணசிங்கவின் வீடு பொலன்னறுவை நகரத்திற்கு அண்மையிலேயே இருந்தது. சுகவீனமுற்றிருந்த ரணசிங்கவை சுகம் விசாரிப்பதற்காக மைத்ரி அங்கு சென்றார். சற்று நேரத்தில் கிடைத்த தொலைபேசி அழைப்பினூடாக பாதையில் இடையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த வாகனம் பின்னர் வேகமாக வரும்போது பாதையிலிருந்து விலகி தலைகீழாக விழுந்து கிடப்பதாகத் தெரியவந்தது. வேகமாக வந்த வாகனத்திற்குக் குறுக்கே வந்த துவிச்சக்கர வண்டி காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருந்தது.

மைத்ரி உடனடியாக விபத்து நடந்த இடத்திற்கு சென்றபோது வாகனம் தலைகீழாக விழுந்திருப்பதைக் கண்டார். விபத்திற்குள்ளானவர்கள் உடனடியாக பொலன்னறுவை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மைத்ரி உடனடியாக கவலை தோய்ந்த முகத்துடன் வைத்தியசாலைக்கு விரைந்தார். அங்கு அவசர விபத்துச் சேவைப் பிரிவுக்குச் சென்ற அவர் ஒரு எதிர்பாராத கவலையான காட்சியைக் கண்டார். விபத்தின் காரணமாக உயிரிழந்த விசேட அதிரடிப்படைப் பிரிவு அதிகாரி ஒருவரது உடல் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்தது. காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்றுவந்தனர். படுகாயமடைந்திருந்த விசேட அதிரடிப்படையை சேர்ந்த சந்திரசிறி என்ற அதிகாரியும் மற்றுமொரு சிறுபிள்ளையும் மைத்ரியின் வேண்டுகோளுக்கேற்ப

உடனடியாக விமானத்தில் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டனர். வைத்தியர்கள் அவர்களது உயிரைப் பாதுகாக்க மிகக் கடுமையாக முயற்சித்தபோதும் சில நாட்களில் அவ்விருவரும் மரணமடைந்தனர்.

இது மைத்ரியின் வாழ்க்கையில் அவரை பெரிதும் பாதித்த சம்பவமாகும். இந்த விபத்தில் மரணமடைந்த இரு பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பிள்ளை தொடர்பில் அவர் இப்போதும் சில வேளைகளில் கண்ணீருடன் நினைவு கூருவதுண்டு.



# புலிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பிப் பிழைத்தல்

விடுதலைப் புலிகள் நாட்டுக்கும் மக்களுக்கும் எண்ணற்ற அழிவுகளையும் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச போன்ற அரச தலைவர்கள் முதல் அப்பாவிப் பொதுமக்கள் வரை ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்த எல்.ரி.ரி.ஈயினர் பெருமளவு சொத்துக்களையும் சேதப்படுத்தினர். தற்கொலைப்



புலிகளின் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் பரவியிருந்ததுடன் அது மக்களின் அன்றாட வாழ்க்கையை பெரிதும் பாதித்தது.

மைத்ரிபால சிறிசேன அவர்கள் புலிகளின் குண்டுத் தாக்குதல்களில் இருந்து உயிர் தப்பிய சந்தர்ப்பங்கள் ஒன்று இரண்டல்ல. ஈவிரக்கமற்ற புலிகள் அவரது உயிரைப் பறிப்பதற்கு பலமுறை முயற்சித்தபோதும் அவை வெற்றி பெறவில்லை. 2000 ஆம் ஆண்டு ஒரு நாள் திம்புலாகல சேருவில தமிழ் கிராமத்தில் மின்சார திட்டமொன்றைத் திறந்துவைக்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அமைச்சர் மைத்ரிபால சிறிசேன அழைக்கப்பட்டிருந்தார். வேலைப்பளு காரணமாக மைத்ரிக்கு உரிய நேரத்திற்கு நிகழ்வுக்குச் செல்ல முடியவில்லை. இரண்டு மணி நேரம் தாமதித்தே அவர் அங்கு சென்றார்.

அவரது பயணம் தாமதமானது மைத்ரிக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் அதிஷ்டமாகும். மைத்ரி வரும் வரையில் ஒரு பெண் தற்கொலைப் புலி உறுப்பினர் நிகழ்ச்சி நடந்த பகுதியில் அவரை எதிர்பார்த்திருந்தார். எனினும் புலனாய்வுத் தகவலொன்றின் அடிப்படையில் பொலிஸாரினால் அப் புலி உறுப்பினர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட புலி உறுப்பினருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 2002 ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் எல்.ரி.ரி.ஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி இருதரப்பிலும் சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்யும் நிபந்தனைக்கேற்ப அப் பெண் விடுதலை செய்யப்பட்டார். ஆகையால் அப் பெண் புலி உறுப்பினருக்கெதிராக வழக்கு விசாரணை இடம்பெறாதென நீதிமன்ற பதிவாளர் மைத்ரிக்கு கடிதம் மூலம் அறிவித்தார்.

2004 ஆம் ஆண்டு மைத்ரிக்கு இதேபோன்றதொரு இன்னொரு நிகழ்வுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அன்றைய தினம் பாராளுமன்றம் நடைபெறும் தினம் என்பதால் பாராளுமன்றம் வரையிலான வீதியின் இரு புறத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பாராளுமன்ற அமர்வுகள் நிறைவடைந்ததன் பின்னர் திரும்பி வரும் அமைச்சர்களை இலக்காகக் கொண்டு புலிப் பயங்கரவாதிகள் ராஜகிரியவிலுள்ள என்.எம்.பெரேராவின் சிலைக்கருகே ஒரு தாக்குதலை மேற்கொண்டனர். பாதுகாப்புப் படையினரும் பதில் தாக்குதலைத் தொடுத்து புலிகளின் தாக்குதலை முறியடிக்க முயற்சித்ததுடன், அப்பிரதேசம் ஒரு யுத்த பூமியாக மாறியது. பாதையில் சென்றுகொண்டிருந்த பொதுமக்களும் தங்களது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள சிதறி ஓடினர். அமைச்சர்களும் தங்களது உயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள மிகுந்த பிரயத்தனம் எடுத்தனர்.

பிரபல எழுத்தாளரும் ஊடகவியலாளருமான மலல்கொட பந்துதிலகவின் வீடும் அப்பகுதியிலேயே இருந்தது. மைத்ரியின் குடும்பத்திற்கும் பந்துதிலகவின் குடும்பத்திற்குமிடையே நீண்டகால நட்பு இருந்தது. இந்த தாக்குதல் இடம்பெற்றபோது மைத்ரியின் மனைவியும் மகனும் பந்துதிலக்கவின் வீட்டுக்குச் சென்றிருந்தனர். பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக மூன்று புலிப் பயங்கரவாதிகள் பாதுகாப்புக்காக ஒளிந்துகொள்ள பந்துதிலகவின் வீட்டில் நுழைந்தனர். வீட்டில் உள்ளவர்கள் என்ன செய்வதென்றே தெரியாது அறைகளுக்குள் சென்று கட்டில்களுக்குக் கீழே அவர்கள் ஒளிந்து கொண்டனர். சற்று நேரத்தில் மூன்று பயங்கரவாதிகளும் மைத்ரியின் மனைவியும் மகனும் வந்த வாகனத்தில் ஏறி தப்பிச் சென்றனர்.

சம்பவம் அறிந்த மைத்ரி மனைவியையும் மகனையும் தேடி பதற்றத்துடன் அங்கு விரைந்தார். மனைவியும் மகனும் பாதுகாப்பாக இருப்பதை கண்டு அவர் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். மைத்ரியின் வாகனம் அடுத்த நாள் பியகம மல்வானைப் பிரதேசத்தில் பாதை ஓரத்தில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

வெலிக்கந்தை புதிய பிரதேச சபையைத் திறந்து வைக்கும் நிகழ்வு 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியிருந்தது. அந்த நிகழ்வில் மைத்ரி பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவிருந்தார். நிகழ்வு நடைபெறுவதற்கு முந்திய தினம் காலை மைத்ரியின் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்திய ஒருவர், அமைச்சர் அவர்களே நாளை வெலிக்கந்தையில் நடைபெறும் நிகழ்வுக்கு வருவீர்களா எனக் கேட்டார். அந்த நிகழ்வில் பங்குபற்றுவதாக மைத்ரிபால கூறியதும் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியவர் சற்றும் எதிர்பாராத ஒரு விடயத்தைக் கூறினார். நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டாம் எனக் கூறிய அவர் அப்படிக் கலந்து கொண்டால் விடுதலைப் புலிகள் அமைச்சரை கொன்றுவிடுவர்கள் எனக்கூறினார். எனினும் மைத்ரி அதனை நம்பவில்லை. அவர் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியவரிடம் தகவல்களை வினவினார். ஒரு மாதத்திற்கு முன்னர் நடைபெற்ற பிரதேச சபை தேர்தலில் தாம் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டதாகக் கூறிய அவர் தனது தனிப்பட்ட தகவல்கள் அனைத்தையும் கூறினார். "நான் ஒரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் என்பது உண்மை. என்றாலும் அமைச்சர் கொல்லப்படுவதை நான் விரும்பவில்லை. எனவேதான் நான் அதனைக் கூறினேன்" என்றார் அந்த நபர்.

மைத்ரி உடனே ஒரு வாகனத்தை அனுப்பி அவரை கொழும்புக்கு அழைத்து வந்தார். மைத்ரி அவரிடமிருந்து சகல விபரங்களையும் பெற்றுக்கொண்டு அப்போது பொலிஸ் மா அதிபராக இருந்த சந்திரா பெர்ணாந்துவுக்கு விடயத்தை தொலைபேசியில் கூறினார். பொலிஸ் மா அதிபர் உடனே ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியை மைத்ரியின் கொழும்பு அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார். மைத்ரிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியவர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியிடம் சகல விபரங்களையும் கூறினார். மைத்ரியைக் கொலை செய்வதற்காக விடுதலைப் புலிகள் சில நாட்களாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையும் அவர் விளக்கினார். அமைச்சர் நிகழ்வுக்கு வருகைதரும் வாகனம் எது என்பது பற்றி தமக்கு அறியத்தருமாறு கைத்தெலைபேசியூடாக கோரியதாகவும் தெரிவித்த அந்த நபர் இதற்காக பயங்கரவாதிகள் தமக்கு 10 இலட்சம் ரூபா அன்பளிப்பாகத் தந்ததாகவும் கூறினார்.

இதுபற்றிய எல்லா தகவல்களையும் அறிந்து கொண்ட மைத்ரி இந்த விடயம் உண்மையா என்பதைக் கண்டறிய தாம் அடுத்தநாள் நிகழ்வில் கட்டாயம் கலந்து கொள்வதாக அவரிடம்

கூறினார். தவல்களை வழங்கியவருடன் பொலன்னறுவைக்குச் சென்ற மைத்ரி அடுத்தநாள் இடம்பெறும் நிகழ்வுக்கு எப்படி முகங்கொடுப்பதென்பது பற்றி பாதுகாப்புத் தரப்பினருடன் திட்டமிட்டார். இதற்கு பொலன்னறுவை பொலிஸ் அதிகாரிகளும் உதவினர். தகவல் வழங்கியவர் கொடுத்த தகவல்களுக்கேற்ப பாதுகாப்பத் தரப்பினர் பொலன்னறுவை பஸ் தரிப்பிடத்தைச் சுற்றிவளைத்து விடுதலைப்புலிகள் இருவரை கைது செய்தனர். ஒருவர் அதே இடத்தில் சயனைட் அருந்தி மிக ஆபத்தான நிலைக்கு ஆளானார். அடுத்தவருக்கு சயனைட்டை அருந்துவதற்கான சந்தர்ப்பத்தை பொலிஸார் வழங்கவில்லை. சயனைட்டை உட்கொண்ட புலி உறுப்பினர் கொழும்பு பொது மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு மூன்று நாட்களுக்கு பின் உயிரிழந்தார். அடுத்தவர் பூஸா சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்.

2007 ஆம் ஆண்டு சிங்கள புத்தாண்டின் போதும் மைத்ரி அதிஷ்டவசமாக உயிர்தப்பினார். சிங்கள புத்தாண்டுக்கு மைத்ரி வழமையாக பொலன்னறுவை வீட்டிலேயே தங்கியிருப்பார். கட்சி உறுப்பினர்களும் நண்பர்களும் அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக வீட்டுக்கு வருவதுண்டு. அப்படி வருபவர்களுக்கிடையே சந்தேகத்திற்கிடமான ஒருவரை பாதுகாப்புத் தரப்பினர் கைது செய்தனர். அவரது கைகளில் ஒரு அபூர்வமான அன்பளிப்புப் பொருள் இருந்தது. மைத்ரிபால சிறிசேனவை படுகொலை செய்வதற்காகக் கொண்டுவந்த ஒரு சிறிய குண்டு அவரது கையில் இருந்த கேக் பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. பாதுகாப்புத் தரப்பினர் அவரை பரிசோதித்து சகல விபரங்களையும் கேட்டறிந்தனர். சுங்காவில் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் இனத்தவராக அவர் தன்னைக் காட்டிக்கொண்டபோதும் அவர் ஒரு தமிழர் என்ற விடயமும் அம்பலமானது. கைது செய்யப்பட்ட அந்த நபரும் பூஸா சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்.

நாட்டில் தேசிய உணவு உற்பத்தியை பலப்படுத்தும் நோக்குடன் "நாம் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்ற நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பயங்கரவாத நடவடிக்கைகள் உச்சகட்டத்தை அடைந்திருந்தபோதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நாடெங்கிலும் எடுத்துச் செல்லும் பொறுப்பு விவசாயத்துறை அமைச்சர் என்றவகையில் மைத்ரியிடம் கையளிக்கப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பெரும்போகத்தின் போதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் தேசிய 'நெற்பயிர் நடும்' விழா நடத்தப்பட்டு வந்தது.

2008 ஒக்டோபர் 09 ஆம் திகதி களுத்துறை பண்டாரகமவில் இடம்பெற்ற ஒரு தேசிய நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி கலந்து கொள்ளவிருந்தார். இந்த நிகழ்வில் பயங்கரவாதத் தாக்குதல் இடம் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் நிகழ்ச்சியை பிற்போடுமாறும் பாதுகாப்புத் தரப்பினர் அதற்கு முந்தியதினம் ஆலோசனை வழங்கினர். பாதுகாப்புத்தரப்பின் ஆலோசனைக்கேற்ப ஜனாதிபதி அந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்பதுடன் அந்த நிகழ்வை பிற்போட முடியாது என்பதால் மைத்ரி அந்நிகழ்வில் கலந்துகெண்டார். அவரது வருகையை எதிர்பார்த்து புலிப்பயங்கரவாதிகள் அங்கு காத்திருந்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் கொழும்பு நோக்கி வரும்வழியில் பொரலஸ்கமுவ சந்தி அருகே ஒரு தற்கொலைப் பெண் புலி உறுப்பினர் மைத்ரி பயணித்த வாகனத் தொடரணியின் மீது பாய்ந்தார். அப்போது மைத்ரி குண்டு துளைக்காத ஒரு பாதுகாப்பு வாகனத்திலேயே பயணித்தார். அவ்வாகனம் குண்டு துளைக்கக்கூடிய வாகனமாக இருந்திருந்தால் மைத்ரியின் உயிர் அந்த இடத்திலேயே பிரிந்திருக்கும். அன்று வெடித்த அந்த குண்டின் சத்தம் இன்னும் தனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருப்பதாக மைத்ரி இன்றும் கூறுவதுண்டு. அங்கு பல அப்பாவி உயிர்கள் பலியானதுடன் விவசாயத்துறை அமைச்சின் செயலாளராக அன்றைய தினம் காலை பதவியேற்ற பொலன்னறுவையின் முன்னாள் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விஜேதிலகவும் படுகாயமடைந்திருந்தார். மைத்ரியின் நண்பரான ஆனந்த விதானவும் அத்தாக்குதலில் காயமடைந்தார். கமநல சேவைகள் அமைச்சின் சிறிபால கம்லத் அவர்களின் வாகனமும் குண்டுத் தாக்குதலில் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தபோதும் அவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

கடந்த 30 வருடகால போரில் விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களில் இருந்து ஒரு சிலர் மட்டுமே உயிர் தப்பக்கூடியதாக இருந்தது. அந்த அதிஷ்டம் கிடைக்கப்பெற்ற ஒரு சிலரில் மைத்ரியும் ஒருவராவார். ஐந்து முறை தன்மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களிலிருந்து உயிர்தப்பியது நாட்டுக்கு சேவை செய்வதற்காகவே என்றும், தான் உயிர் தப்பியிருப்பது முன்னர் செய்த புண்ணியத்தின் பயனாகவேயாகும் என்றும் மைத்ரி தனது அன்புக்குரியவர்களிடம் கூறி இன்றும் கடந்தகால அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதுண்டு.



# இறுதி யுத்தத்தின் பதில் பாதுகாப்பு அமைச்சர்

அரசியலில் 43 வருட அனுபவத்தை கொண்ட மைத்ரிபால சிறிசேன அவர்கள் தொடர்ந்து 21 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக சேவையாற்றுகின்றார். 1989 ஆம் ஆண்டில் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக முதன் முறையாகத் தெரிவு செய்யப்பட்ட அவர் 1994 ஆம் ஆண்டு பிரதியமைச்சராகவும் 1997 ஆம் ஆண்டில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். பல்வேறு அமைச்சுக்களிலும் சேவையாற்றியுள்ள அவருக்கு மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நாட்டில் மிக முக்கிய அமைச்சாக விளங்கிய பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் பதில் அமைச்சராக கடமையாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்க ஆகிய இருவரும்

வெவ்வேறு வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கு சென்றதால் மைத்ரிக்கு இந்த வாய்ப்புக் கிடைத்தது. இராணுவத்தினருக்கும் எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தினருக்கும் இடையிலான இறுதிக்கட்ட யுத்தம் இக்காலப் பகுதியிலேயே இடம்பெற்றது. பிரபாகரன் உள்ளிட்ட எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தின் பல தலைவர்களும் நந்திக்கடலை அண்டிய பிரதேசத்தில் இராணுவத்தினரின் பிடியில் சிக்கியிருந்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மே மாதம் 17 ஆம் திகதி ஜோர்தானுக்கான சுற்றுப்பயணத்தை நிறைவு செய்துகொண்டு நாடு திரும்பிய வேளையில் எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தின் அனைத்து தலைவர்களும் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் மைத்ரிக்கு பதில் பாதுகாப்பு அமைச்சராக செயற்படக் கிடைத்தமை அவரது வாழ்வில் கிடைத்த மகத்தானதொரு வாய்ப்பாகும்.

வெளிநாட்டு சுற்றுப்பயணத்தை நிறைவுசெய்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விமானத்திலிருந்து தரையிறங்கியதும் முதலில் தாய்நாட்டை வணங்கி மரியாதை செய்தார். அதன்பின்னர் மைத்ரிபால சிறிசேன அவர்கள் மலர்மாலை சூட்டி ஜனாதிபதியை வரவேற்றார். ஜனாதிபதியும் மைத்ரிபால அவர்களை கட்டியணைத்து வெற்றியின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டமை மைத்ரிபால அவர்களின் வாழ்வில் முக்கியமானதொரு நிகழ்வாக அமைந்திருந்ததுடன், அங்கு கூடியிருந்த அனைவருக்கும் உணர்வுபூர்வமான நிகழ்வாக அமைந்தது.

  

# மாற்றத்துக்கு வித்திட்ட காரணங்கள்

ஆணாதிக்க உலகில், அதிலும் குறிப்பாக எமது நாடு போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடொன்றில், சாதாரண பெண்ணொருவர் தனது நாட்டில் பிரதம நீதியரசராவது சாதாரண விடயமல்ல.

இந்த அதியுயர் பதவியை எட்டிய எமது நாட்டின் 43 ஆவது பிரதம நீதியரசரும் முதலாவது பெண் நீதியரசருமான கலாநிதி சிராணி பண்டாரநாயக்க பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்ட விதம் சமூகத்தை ஒரு கணம் ஆட்டம் காண வைத்தது.

அரசாங்கத்தினால் பிரதம நீதியரசருக்கெதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை சட்ட விரோதமானதென உச்சநீதிமன்றம் அறிவித்திருந்தது. அதனை எள்ளளவும் மதிக்காமல் அரசாங்கம் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றியது.

அவ்வாறு பதவி விலக்கப்பட்ட பிரதம நீதியரசர் உடனடியாக அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து

வெளியேறவேண்டுமென உத்தரவிடப்பட்டது. அந்த உத்தரவை ஆதரித்த சில அமைச்சர்கள் உள்ளிட்ட சிலர் அவரது வீட்டுக்கு வெளியே வீதியில் பந்தல் அமைத்து பாற்சோறு பரிமாறி தமது சந்தோசத்தை வெளிப்படுத்தினார். அதனால் அலுவலகத்துக்கு சென்று தமது ஆவணங்களை கூட எடுக்க அவகாசம் கிடைக்காத பிரதம நீதியரசர் கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு "எனது பாதுகாப்பு உங்கள் கைகளிலேயே தங்கியிருக்கின்றது" என பொதுமக்களிடம் கூறிவிட்டு, கண்ணீர் சிந்தியவாறு வீட்டைவிட்டு வெளியேறினார்.

நாட்டின் முதன்மை பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவரான லசந்த விக்ரமதுங்க கர்ப்பிணியான தனது மனைவிக்கு மருந்து வாங்குவதற்காக வீட்டை விட்டு வெளியே வந்தவர் வீடு திரும்பவில்லை. பட்டப்பகலில் அவர் கொல்லப்பட்ட விதம் சமூகத்தை திடுக்கிட வைத்தது. அச்சம்பவம் சில ஊடகவியலாளர்களை நாட்டைவிட்டு ஓடவும் செய்தது. இலங்கையில் ஊடகத்துறை மிகுந்த சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது எனும் செய்தி உலகெங்கும் பரவத்தொடங்கியது. சர்வதேசத்தின் பார்வை நாட்டின் பக்கம் திரும்பியது.

மூன்று தலைமுறைகளுக்கு மேலாக நீடித்த யுத்தம் நாட்டை துவம்சம் செய்துகொண்டிருந்த காலமது. அந்த யுத்தத்தினை எதிர்த்துப் போராடும் படைத்தரப்பிற்கு தகுந்த தலைமையினை நாடு தேடிக்கொண்டிருந்தபோதே சரத் சந்திரலால் பொன்சேகா என்ற பெயர் மேலெழுந்தது.

"அடுத்த தளபதியின் கைக்கு இந்த யுத்தம் செல்ல இடமளியேன்" என்ற உறுதியுடன் யுத்தத்தினை முன்னெடுத்து அதில் வெற்றியும் கண்ட தளபதி சரத் பொன்சேகாவுக்கு இருந்த மனவுறுதி, அரசியலில் மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக தேர்தலில் களமிறங்கும் துணிச்சலைக் கொடுத்தது. ஆயினும் முழு அதிகாரத்தையும் அனைத்து வசதி, வாய்ப்புக்களையும் தன்வசம் கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷவுடனான போட்டியின் முடிவு சரத் பொன்சேகா எதிர்பார்த்திராத வகையில் அமைந்தது.

2010 ஜனாதிபதி தேர்தல் தோல்வியை அடுத்து வெற்றித் தளபதியென வர்ணிக்கப்பட்ட ஜெனரல் சரத் பொன்சேகா, அவரால்

வழிநடத்தப்பட்ட படையினராலேயே தர தரவென இழுத்துச் செல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து வந்த உத்தரவுகளால் வாழ்நாள் முழுவதும் அவர் பெற்ற பதவிகள், பதக்கங்கள் மாத்திரமின்றி அவரது சொந்த உழைப்பிற்காக கிடைத்த ஓய்வூதியம் கூட அவரிடமிருந்து பறிக்கப்பட்டது. இறுதியில் சிறையில் அடைக்கப்பட்டு கையில் விளக்குமாறு கொடுக்கப்பட்டது. பிரபாகரனைத் தோற்கடித்தவருக்கே இந்தக் கதியா என ஒட்டுமொத்த சமூகமும் ஒரு கணம் அதிர்ந்தது.

குடிநீரில் இரசாயனங்கள் கலந்ததனால் கம்பஹா மாவட்ட "ரதுபஸ்வல" பிரதேச மக்களுக்கு குடிநீர் பிரச்சினை ஏற்பட்டது. அதற்குத் தீர்வுகாண முயன்றும், அது சாத்தியப்படாததால் மக்கள் நீதி கேட்டு வீதியில் இறங்கினார்கள். பிரதேசவாசிகள் அனைவரும் ஒன்றுதிரண்டதனால் அது ஓர் மக்கள் போராட்டமாக மாறியது. குடிக்க நீர் கேட்பது அடிப்படை உரிமை என்பதை உணராத மகிந்த அரசு, அந்த மக்களை தம்மை எதிர்க்கத் துணிந்த நாசகாரக் கூட்டமாகவே கருதியது. நீர்வழங்கல் சபையினரை அழைப்பதற்குப் பதிலாக ஆயுதம் ஏந்திய படையினரை அழைத்து, ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க துப்பாக்கிகளை உபயோகப்படுத்த உத்தரவிட்டது. குடிநீர் கேட்டவர்களை அடித்து உதைத்ததோடு நில்லாது அவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டையும் நடத்தியதன் விளைவாக அங்கே சில மனித உயிர்களும் பறிக்கப்பட்டன.

இறுதி யுத்தத்தின் போது நாட்டைக் காத்த வீரர்களாகக் கருதி அதுவரை படையினரை போற்றிப் புகழ்ந்து வந்த தென்னிலங்கை பெரும்பான்மை சமூகம் அதே துப்பாக்கிகள் தமக்கெதிராகவும் திரும்பும் என்பதை உணர்ந்து திகைத்தது.

"ரதுபஸ்வல" என்ற வார்த்தையின் அர்த்தம் "செந்நிற மண்" என்பதாகும். அந்த மண்ணை மக்களின் குருதியால் நனைத்த அதனைச் செயலால் உணர்த்தியமை பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டுமெனும் எண்ணம் மக்கள் மனங்களில் ஏற்படுவதற்கு மேற்கூறிய சம்பவங்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன என்பதை மறுப்பதற்கில்லை.



# அந்த நீண்ட இரவு



2015 ஜனாதிபதித் தேர்தலில் நான் தோல்வியடைந்திருந்தால் எனது முழுக் குடும்பத்தையும் ஒழித்துக்கட்டத் திட்டமிடப்பட்டிருந்தது என ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அதிர்ச்சியூட்டும் தகவலை தேர்தல் வெற்றியின் பின்னர் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் நடந்த தினம் இரவு குருநாகல் மாவட்டத்தில் அமைந்திருக்கும் தனது நண்பர் ஒருவரின் தென்னந்தோப்பிற்கு தனது குடும்பத்தினர் இரகசியமாக அழைத்துச் செல்லப்பட்டு அங்கே மறைந்திருந்த சம்பவத்தை ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள் லண்டன் பிபிசியின் சிங்கள சேவையான சந்தேசயவிற்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

2015 ஜனவரி 08 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அன்றைய இரவு இடம்பெற்ற மேற்குறிப்பிட்ட சம்பவம் பற்றி ஐலண்ட் பத்திரிகைக்கு தேர்தல் முடிவுற்ற சில நாட்களின் பின்னர் தெரியவந்தது. எனினும் பத்திரிகை அதனை வெளிப்படுத்தியிருக்கவில்லை. அதேநேரம் இதுபற்றி தெரிந்திருந்த அரசியல் தரப்பினர் ஒரு சிலரும்கூட வாயைத் திறக்கவில்லை. ஜனாதிபதி இது பற்றி பிபிசி சந்தேசயவுக்கு கூறும்வரை அவரது குடும்பத்திற்கும் ஒரு சில நண்பர்களுக்கும் மட்டுமே அன்று அவர்கள் இருந்த இடத்தை அறிவித்திருந்தார்கள்.

ஜனாதிபதியானதன் பின்னர் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள் லண்டன் சென்றிருந்தபோது சந்தேசய சேவையின் சரோஜ் பத்திரணவுக்கு பேட்டியளிக்கும்போதே மேற்கூறிய நிகழ்வு பற்றி குறிப்பிட்டார். "ஜனாதிபதித் தேர்தலில் எதிர்த் தரப்பினர் வெற்றி பெற்றிருந்தால் நிலைமை முற்றிலும் மாறியிருந்திருக்கும். நானும் எனது குடும்பமும் இன்று உயிருடன் இருந்திருப்போமா என்பது சந்தேகமே. ராஜபக்ஷர்களின் ஜனநாயகம் அப்படியானதாகவே இருந்தது". என்றும் அப்பேட்டியில் அவர் கூறியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று பொது வேட்பாளர் மைத்ரிபால சிறிசேனவும் அவரது குடும்பத்தினரும் பொலன்னறுவையிலேயே வாக்களித்தனர். அதன் பின்னர் அவர்கள் தமது வீட்டைவிட்டு இரகசிய இடமொன்றுக்குச் செல்லத் தீர்மானித்தனர். தேர்தல் முடிவில் அவர்கள் பொலன்னறுவையிலேயே தங்கியிருந்தால் அவர்களைத் தேடிப்பிடிப்பது சுலபமாக இருந்திருக்கும் என்பதாலும், அவர்கள்மீது தீங்கிழைக்கப்படலாம் என நம்பகமான தகவல் கிடைத்திருந்ததாலுமே இந்த முடிவுக்கு அவர்கள் வந்திருந்தனர்.

இரவானதும் சில வாகனங்கள் பொலன்னறுவையிலிருந்து தம்புள்ளை வழியாக தொடங்கஸ்லந்தயில் அமைந்திருந்த ஒரு தென்னந்தோப்பை நோக்கிப் பயணித்தன. அந்தத் தென்னந்தோப்பு மைத்ரிபால சிறிசேனவின் நண்பரான கிரான் அத்தப்பத்துவுக்குச் சொந்தமானதாகும்.

பொது வேட்பாளராக தேர்தலில் போட்டியிட்ட மைத்ரிபால சிறிசேனவையும் அவரது குடும்பத்தினரையும் ஏற்றிச்சென்ற கறுப்புநிற பிஎம்டபிள்யூ வாகனங்கள் குறிப்பிட்ட தென்னந்தோப்பை அடைந்தபோது அப்பிரதேசவாசிகள் ஆழ்ந்த உறக்கத்திலேயே இருந்தனர். எவருக்கும் சந்தேகம் ஏற்படாத வகையில் வாகனங்கள் மிக மெதுவாக முன்நகர்ந்திருந்தது.

உயர்ந்து வளர்ந்திருந்த தென்னை மரங்கள்கூட அந்த இருளில் கண்ணுக்குத் தெரிந்திருக்கவில்லை என்பதுடன் அந்தத் தோப்பின் பாதையும் மிகவும் குறுகியதாகத்தான் இருந்தது.

மைத்ரிபால சிறிசேன குடும்பத்தினரை ஏற்றிவந்த வாகனம் மட்டும் தொடர்ந்துசெல்ல, எவருக்கும் துளிகூட சந்தேகம் ஏற்படக்கூடாது என்பதற்காக இடையில் பாதுகாப்புக்காக சில வாகனங்கள் இணைந்து கொண்டன. குறிப்பிட்ட தூரம் சென்றதும் உயர்ந்து வளர்ந்த தென்னை மரங்களின் கீழ் நிறுத்தப்பட்டன. மைத்ரியின் வாகனம் எங்கே போகிறது என்பதை இலகுவில் அறிந்து கொள்ள முடியாமல் இருப்பதற்காக எடுக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் இவை.

பொது வேட்பாளர் மைத்ரிபால சிறிசேன, அவரது மனைவி ஜயந்தி புஷ்பகுமாரி, பிள்ளைகள் தஹம், சத்துரிக்கா, மற்றும் தாரணி, மருமகன் திலின மற்றும் பேரப்பிள்ளைகள் ஆகியோர் கிரான் அத்தபத்துவின் தென்னந்தோப்பை சென்றடைந்த பின்னர்தான் நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர்.

அவர்களுக்கான இரவு உணவு அங்கே தயாராக வைக்கப்பட்டிருந்தது. உணவைச் சாப்பிட்டுவிட்டு அனைவரும் தேர்தல் முடிவுகளைக் கேட்கத் தயாராகினார்கள்.

தேர்தல் முடிவுகள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. அந்தநேரம் கொழும்பில் இருந்து வந்த தகவல்கள் சந்தோசம் தருபவையாக இருக்கவில்லை.

கொழும்பில் துருப்பினரின் நடமாட்டம் திடீரென அதிகரித்திருப்பதாக அந்தத் தகவல்கள் கூறின. இராணுவப் புரட்சியொன்றின் எத்தனிப்புப் பற்றியும் கூறப்பட்டது. அதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் அச்செய்திகளில் கூறப்பட்டன. அதேநேரம் பொது வேட்பாளர் சிறிசேனவின் கைத்தொலைபேசிக்கு கிடைத்த அழைப்புக்களில் அவர் எங்கே இருக்கிறார் என்று கேட்ட அழைப்புக்களே அதிகமாக இருந்தன. ராஜபக்ஷ தரப்பில் இருந்தவர்களில் பலர் நம்பக்கூடியவர்கள் அல்ல, எனவே இந்நிலையில் இருக்கும் இடத்தை வெளிப்படுத்துவது உசிதமானதல்ல என்று ஏற்கெனவே பொது வேட்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனால் அவர் இந்த விடயத்தில் கவனமாக இருந்தார்.

சாதாரண இரவைப் போலன்றி அந்த இரவு நீண்ட ஒரு இரவாகவே காணப்பட்டது. ஆனால் தேர்தல் முடிவுகள் சாதகமாக அமைந்தது ஓரளவு தெம்பூட்டியது. முன் இரவில் இருந்த பதற்றமான நிலை பின்னர் தேர்தல் முடிவுகள் கொடுத்த தெம்பினால் கொஞ்சம் குறைந்திருந்தது. பொழுது விடியும் வேளையில் பொது வேட்பாளர் முகத்தில் மகிழ்ச்சியும் வெற்றிப் பெருமிதமும் குடிகொண்டிருந்தது.

வெளியில் நின்றுகொண்டிருந்த பிஎம்டபிள்யூ வாகனத்தில் இலங்கையின் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. நாட்டின் புதிய தலைவரை ஏற்றிச் செல்கிறேன் என்ற பெருமிதத்தில் அந்தக்கொடி காற்றில் அங்குமிங்கும் பறந்து தனது ஆசியை வழங்கியது.

விடிந்ததும் அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சி. பொது வேட்பாளர் இப்போது இந்நாட்டினுடைய தலைவர், அவரது குடும்பத்தினருக்கு இக்கட்டான நேரத்தில் அடைக்கலம் தந்துதவிய கிரான் அத்தபத்துவின் குடும்பத்தினருக்கு மைத்ரி குடும்பத்தினர் நன்றி கூறினர். தேர்தல் முடிவு மாறுபட்டவகையில் அமைந்திருந்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய ஆபத்தைப்பற்றித் தெரிந்திருந்தும் அதனையும்மீறி தைரியமாக தமக்கு பாதுகாப்பு வழங்கியவர்களை கட்டித்தழுவி மைத்ரி குடும்பத்தினர் கிரான் அத்தபத்துவின் குடும்பத்தினருக்கு நன்றி கூறி விடைபெற்றனர்.



# பாப்பரசரும் இலங்கை அரசியலும்

மேல் மாகாண சபைத் தேர்தலை 1999 ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க தீர்மானித்தார். ஏப்ரல் மாதமானது கத்தோலிக்கர்களின் தவக்கால மாதமாகும். சோதிட ஆலோசனைக்கமைய தவக்காலத்தில் தேர்தல் நடத்துவதே சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் தீர்மானமாக இருந்தது. அப்போது அதிமேற்றிராணியாராக இருந்தவர் பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகையாவார். தேர்தலை ஒத்திப்போடுமாறு பேராயர் கோரிக்கை விடுத்தபோதிலும் சந்திரிக்கா பண்டாரநாயக்க அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. வரலாற்றில் முதற்தடவையாக தேவாலயங்களிலுள்ள அருட்தந்தையர்களுடன் கலந்தாலோசித்த பேராயர் கத்தோலிக்க மக்களை வீதியில் இறக்கினார்.



பல்லாயிரக்கணக்கில் மக்கள் வீதியில் இறங்கியதையடுத்து கத்தோலிக்க மக்களின் கருத்துக்கு மதிப்பளித்த சந்திரிக்கா தேர்தலைத் தள்ளிப்போட்டார்.

கத்தோலிக்க மக்களின் கருத்தை சந்திரிக்காவுக்கு எடுத்துக்காட்டியவர் பேராயர் நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகையாவார். இன்று பேராயராக இருப்பது நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகையல்ல. தற்போதைய பேராயர் மல்கம் கார்டினல் ரஞ்சித் ஆண்டகை ஆவார். அவர் பேராயர் மட்டுமல்ல பாப்பரசரால் நியமிக்கப்பட்ட கார்டினல் ஆவார். இருந்தபோதிலும் பாப்பரசரின் விஜயத்தை முன்னிட்டு மகிந்தவிடம் கூறி தேர்தல் திகதியை மாற்ற பேராயரால் முடியவில்லை. ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று இரண்டு மூன்று நாட்களில் பாப்பரசரின் விஜயம் இடம்பெறுவதை பெரும்பாலான கத்தோலிக்க திருச்சபை ஆயர்களும், அருட்தந்தையர்களும் விரும்பவில்லை. தேர்தலைப் பிற்போடுவதற்கு அதிமேற்றிராணியார் முயற்சியெடுக்க வேண்டுமென்றும் மகிந்த ஜனாதிபதித் தேர்தல் தினத்தை மாற்றவில்லையென்றால் பாப்பரசரின் சுற்றுப்பயணத்தை இரத்துச்செய்ய வேண்டுமென்பதே அவர்களது கருத்தாக இருந்தது

ஆயினும் பாப்பரசர் ஆயர்கள் சபையூடாக மகிந்தவிடம் கோரிக்கையொன்றை விடுத்ததாக தெரிய வருகிறது. ஜனாதிபதி தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெற வேண்டுமென்றும்

ஒருவேளை மகிந்த தேர்தலில் தோல்வியடைய நேர்ந்தால் அமைதியாக ஜனாதிபதி பதவியிலிருந்து விலகவேண்டும் என்பதுமே அக்கோரிக்கையாகும். மகிந்த அதற்கு உடன்பட்டதாக அறிய முடிகிறது. இது சிறந்த போக்காகும். ஜனாதிபதி தேர்தலின்போது வாக்கு மோசடியைத் தவிர்ப்பதுடன் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த தோல்வியடைந்தால் ஜனாதிபதி பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கு முயற்சியெடுத்தால் அதனை தவிர்ப்பதற்கு இது நல்லதொரு அழுத்தமும் ஆகும். தேர்தல் மோசடியாக இடம்பெற்றால் எதிர்க்கட்சியினர் தேர்தல் முடிந்து மறுநாளே வீதியில் இறங்குவார்கள். அவ்வாறே தேர்தல் வன்முறையாக இடம்பெற்றால் தேர்தல் நாளுக்கு மறுநாள் முழுநாடும் எதிர்க்கட்சிகளால் முடக்கப்படும். அப்போது கொழும்பும், நாட்டின் ஏனைய பகுதிகளும் சத்தியாக்கிரகங்கள், ஆர்ப்பாட்டங்களால் நிறையலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பாப்பரசர் தனது விஜயத்தை இரத்துச் செய்தால் மகிந்த ஜனாதிபதியாக இருந்தால்கூட அது அவருக்கு பாரிய தோல்வியாகும். அதேபோல் மைத்ரி வெற்றி பெற்று மகிந்த தொடர்ந்தும் ஜனாதிபதி பதவியில் இருந்தால் அதன் போதும் பாப்பரசரின் விஜயம் இரத்துச் செய்யப்படும். அதன்படி பார்த்தால் பாப்பரசரின் சுற்றுப் பயணமானது தேர்தலை சுதந்திரமான நியாயமான தேர்தலாக மாற்றுவதற்கு அழுத்தம் கொடுக்கும் காரணியாக மாறியது. மகிந்த அந்த காரணிகளிலிருந்து விலகவோ தப்பவோ முடியாது.

பாப்பரசரை அழைத்துவர மகிந்த எடுக்காத முயற்சியே இல்லை எனலாம். அதற்காக அவர் இரு தடவைகள் பாப்பரசரைத் தரிசிக்கச் சென்றார். தனது சகோதரரும் பாதுகாப்பு செயலாளருமான கோட்டபாய ராஜபக்ஷவையும் பாப்பரசரை தரிசிப்பதற்காக அனுப்பினார். இந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு வருமாறு பாப்பரசருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. பாப்பரசரை தான் அரசியல் இலாபத்துக்காக இலங்கைக்கு அழைக்கவில்லை என்று காட்டுவதற்காக அவர் பாப்பரசருக்கு அழைப்பு விடுப்பதற்காக ரோம் சென்றபோது பதில் எதிர்க்கட்சியில் இருந்த ஜோன் அமரதுங்கவையும் அழைத்துச் சென்றார். மகிந்தவின் பலமான கோரிக்கை காரணமாகவே ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து இரண்டு மூன்று நாட்களில் இலங்கைக்கு வருவதற்கு பாப்பரசர் தீர்மானித்தார். அதன்படி பார்க்கும்போது மகிந்தவை வைத்து சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்துவதற்காக பாப்பரசரினால் மேற்கொள்ளப்பட்ட அழுத்தத்தைக் குறைத்து மதிப்பிடமுடியாது.

1970 ஆண்டிலேயே பாப்பரசரொருவர் முதற்தடவையாக இலங்கைக்கு வருகை தந்தார். அதுவும் வேறொரு நாட்டுக்குப் பயணம் செய்யும்போதே பாப்பரசர் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்திருந்தார். பாப்பரசரை கட்டுநாயக்காவுக்கு வருமாறு 1965-70 காலப்பகுதியில் நாட்டை ஆட்சிசெய்த பிரதமர் டட்லி சேனநாயக்க அழைப்பு விடுத்திருந்தார். பாப்பரசரை இலங்கைக்கு அழைத்து வரவேண்டும் என்ற தேவையிருந்தது. சோதிட ஆலோசனைக்கமைய உரிய காலத்துக்கு முன்னரே பொதுத் தேர்தலை நடத்தி அதில் வெற்றி பெற்று பாப்பரசரை வரவேற்கவே டட்லி விரும்பினார்.

தேர்தல் முடிவடைந்து இரண்டு மூன்று மாதங்களிலேயே பாப்பரசர் வருகைதர இருந்தார். ஆயினும் 1970 பொதுத் தேர்தலில் டட்லி தோல்வியடைந்தார். 1970 தேர்தலில் வெற்றிபெற்று பிரதமரான சிறிமாவோ அம்மையாருக்கே பாப்பரசரை வரவேற்கும் வாய்ப்பு கிடைத்தது.

அடுத்தாக பாப்பரசர் இலங்கைக்கு வருகை தந்தது 1995 ஜனவரியிலாகும். அந்த சுற்றுலாவுக்காக பிரேமதாச அரசாங்கமே பாப்பரசருக்கு அழைப்பு விடுத்தது. ஜனாதிபதி பிரேமதாச 1994 இல் ஜனாதிபதி தேர்தலை நடத்தி இரண்டாவது பதவிக்காலத்துக்கும் ஜனாதிபதியாகி பாப்பரசரை வரவேற்க விரும்பினார். ஆனால் பிரேமதாச 1993 மே முதலாந் திகதி கொலை செய்யப்பட்டார். அடுத்ததாக டீ.பீ.விஜேதுங்க ஜனாதிபதியானார். பாப்பரசரை வரவேற்பதற்கு தனக்கு வாய்ப்பு கிடைக்குமென அவர் நினைத்தார். இருப்பினும் அந்த வாய்ப்பு சந்திரிக்காவுக்கே கிடைத்தது. 1994 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று 1995 ஜனவரியில் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட சந்திரிக்காவே பாப்பரசரை வரவேற்றார்.

இந்த வரலாற்றை வாசிக்கும் போது இலங்கைக்கு வருகைதந்த பாப்பரசர்களுக்கு அழைப்பு விடுத்தது ஒரு அரசாங்கம், பாப்பரசர் இலங்கைக்கு வரும்போது ஆட்சியில் இருப்பது வேறொரு அரசாங்கமாகும். பாப்பரசர்கள் இலங்கைக்கு வந்த போதெல்லாம் அரசாங்கம் மாறிவிட்ட சந்தர்ப்பங்களாகவே இருந்தன. முதற் தடவையாக 1970 இல் பாப்பரசர் வந்தபோது மாற்றம் ஏற்பட்டு இரண்டு மூன்று மாதங்களாகியிருந்தன. பாப்பரசரின் இரண்டாவது வருகை 1994 இல் இடம் பெற்றது. அது மாற்றம் இடம்பெற்ற ஒரு மாதத்திலாகும். அவ்வாறே பாப்பரசர் இலங்கைக்கு வரும்போது

எப்போதும் அதிகாரத்திலிருந்தது பண்டாரநாயக்கார்களே 1970 இல் பண்டாரநாயக்கா அம்மையார். 1994 இல் சந்திரிக்கா அம்மையார்.

இம்முறை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு சந்தித்த மனிதர்களில் மிகுந்த எளிமையானவராக மைத்ரிபால சிறிசேன இருக்கின்றார் என ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களை சந்தித்த பின்னர் பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் அவர்கள் தெரிவித்தமையைக் குறிப்பிட்டுக் கூறலாம்.



# பொது வேட்பாளர்

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ஒரு பொது வேட்பாளர் தேவையென்ற நிலை காலத்தின் கட்டாயத் தேவையாக இருந்த போதிலும் தகுந்த ஒருவரைத் தேர்ந்தெடுப்பது குதிரைக் கொம்பாகவே இருந்தது.

2010இற்குப் பின் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியினால் உருவாக்கப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தாக்கங்களுக்கு எதிரான நேரடிப் பதிலாகவே பொதுவேட்பாளரென்ற எண்ணக்கரு உருவாகியது. அதற்கமையவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்காக அன்றைய இலங்கையின் அரசியல் களத்தில் இருந்த மிகவும் தகுதி வாய்ந்த அல்லது தலைசிறந்த முன்னுதாரணமான பொது வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்தெரிவானது தனி நபர்கள் பல்வேறு குழுக்கள் வெவ்வேறாகவும் கூட்டாகவும் எடுத்த பெரும் முயற்சியினதும் பாரிய அர்ப்பணிப்பினதும் கூட்டு

விளைவாகும். அவற்றுடன் இணைந்த இயற்கை நீதியும் அதில் கலந்திருந்தது எனலாம்.

பொது வேட்பாளர் என்றதும், மாதுளுவாவே சோபித தேரர் தலைமை தாங்கிய நீதிமிக்க சமூகத்திற்கான தேசிய அமைப்பே ஞாபகத்திற்கு வருகின்றது. அவரது அவ்வமைப்பு மக்களை கவரத் தொடங்கியது முதல் மகிந்த ராஜபக்ஷவிற்கும் அவரது அரசாங்கத்திற்கும், பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது.

ஆயினும் ஆரம்பத்தில் சமூக மாற்றத்திற்கான அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையினை சோபித தேரரிடம் முன்வைத்தபோது "இந்த நாட்டு மக்களுடனும் தலைவர்களுடனும் அரசியல் செய்வது முடியாத காரியம். எதைக் கூறி அதிகாரத்திற்கு வந்த போதிலும் ஆட்சிபீடம் ஏறியதும் அனைத்தையும் மறந்து விடுகின்றனர்" என்ற கருத்தையே அவர் முன்வைத்தார். இருப்பினும் இறுதியில் நீதிமிக்க சமூகத்திற்கான தேசிய அமைப்பின் செயற்பாடுகள், தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு அதன் முதலாவது செய்தியாளர் மாநாடு 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தேசிய நூலக சேவைகள் மன்றத்தில் நடத்தப்பட்டதுடன், அதன் முதலாவது பொதுக்கூட்டம் ஜயவர்த்தன நிலையத்தில் நடத்தப்பட்டது.

நீதிமிக்க சமூகத்திற்கான தேசிய அமைப்பின் செயற்பாட்டினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையையும் இல்லாதொழிக்க வேண்டும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட பொது வேட்பாளர் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கருத்தும் வலுப்பெற்றதுடன் அவ் அமைப்பின் தலைமைத்துவத்தை சோபித தேரருக்கே ஏற்க நேர்ந்தது. அவரது அரசியல் ஆளுமையும் கவர்ச்சிமிக்க குரல் வளமும் யுத்த வெற்றியின் முன் அனைத்தையும் அடிபணிய வைத்திருந்த ஒரு சமூகத்தை திரும்பிப் பார்ப்பதற்கும் சிந்திப்பதற்கும் தூண்டியது.

அப்பின்னணியில் ஹைட்பார்க் மைதானத்தில் 2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இவ்வமைப்பின் பொதுக்கூட்டத்தின்போது "நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினை ஒழிப்போம், பொது வேட்பாளர் மூலம் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்போம்" என்ற கோசம் எழுப்பப்பட்டது. இக்கோசத்தினை முதன்மைப்படுத்தி அதன் நகர்வுகளை மேற்கொள்ள அவ்வமைப்புக்குத் தேவையான நிதியுதவி பெரும்பாலும் கரு ஜயசூரியவிடமிருந்தே கிடைக்கப் பெற்றது.



காலத்தின் தேவையை உணர்ந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்களும் காலப்போக்கில் இவ்வமைப்புடன் இணைந்து கொண்டார். சோபித தேரரின் தலைமையிலான இவ்வமைப்பின் செயற்பாடுகளை ரணில் விக்ரமசிங்க விரும்பாத போதிலும் மகிந்த ராஜபக்ஷவிற்கும் ரணில் விக்ரமசிங்கவிற்குமிடையிலான போட்டியில் ராஜபக்ஷவுக்கே வெற்றி கிடைக்கும் ஆகையால் பொது வேட்பாளரைக் கொண்டே மகிந்த ராஜபக்ஷவை தோல்வியுறச் செய்யமுடியுமென்ற கருத்தையும், ஜனாதிபதித் தேர்தலை பொது வேட்பாளர் வெல்லும் பட்சத்திலேயே நாடாளும் வாய்ப்பு ரணில் விக்ரமசிங்கவிற்கு கிடைக்கப்பெறும் என்பதையும் கலாநிதி ரஞ்சித் கப்ரால் மற்றும் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன ஆகியோரால் ரணில் விக்ரமசிங்கவிற்கே எடுத்துக் கூறப்பட்டது. இதற்கிடையே 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சோபித தேரரைச் சந்தித்த சத்துர சேனாரத்ன, "எவர் வந்தாலும் வராவிட்டாலும் எங்கள் அப்பா அரசாங்கத்தை விட்டு வெளியே வரத் தீர்மானித்துவிட்டார் அது நிற்சயமாக நடைபெறும்" என்றும் தமது தந்தையுடன் இன்னும் பல அமைச்சர்களும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாகவும் கூறியதுடன் "எங்கள் அப்பாவை ஒரு முடிவெடுக்க வைப்பது மிகவும் கஸ்டமான விடயம், ஆனாலும் ஒரு

முடிவை எடுத்துவிட்டால் எவ்விதத்திலும் அதனை மாற்றமாட்டார்'' என்றும் கூறினார்.

2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இறுதி சனிக்கிழமையன்று கோட்டை நாகவிகாரைக்கு வந்த ரணில் விக்ரமசிங்கவிடம் ''எமது அமைப்பின் செயற்பாடுகளுக்கு முதல் தேர்தல் வெற்றி கிடைத்திருக்கின்றது. அமைச்சர் ராஜித சேனாரத்ன திட்டவட்டமாக அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாக உறுதியளித்திருப்பதாக அவரது மகன் என்னிடம் கூறினார்'' என சோபித தேரர் கூறினார். இருப்பினும் அக்கருத்தினை எடுத்த எடுப்பிலேயே ஏற்றுக் கொள்ள ரணில் விக்ரமசிங்க தயக்கம் காட்டினார்.

பொது வேட்பாளரை தெரிவு செய்யும் முயற்சியில் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்னவின் பங்களிப்பையும் எம்மால் மறந்துவிட முடியாது. சந்திரிக்கா பண்டாரநாயக்க, கோட்டை ஸ்ரீ நாகவிகாரையின் சோபித தேரர் மற்றும் அமைச்சர் மைத்ரிபால சிறிசேன ஆகியோரை ஒன்றிணைப்பதிலும் அவர்களுடன் காத்திரமான தொடர்பை பேணுவதிலும் ஜயம்பதி பெரும் பங்கினை ஆற்றினார். 2005ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னரும் தொடர்ந்து சந்திரிக்கா பண்டாரநாயக்கவுடன் உறவினைப் பேணிவந்த ஒரு சிலரில் ஜயம்பதியும் ஒருவராவார். அதன் விளைவாக ஜயம்பதி மகிந்த ராஜபக்ஷவின் உலகில் சதாகால எதிரியாக இருப்பாரென்பதில் ஐயமில்லை.

2010ஆம் ஆண்டில் பொது வேட்பாளர் முயற்சி தோல்வி கண்டிருந்த பின்னணியில் 2012ஆம் ஆண்டளவில் மீண்டும் மார்க்ஸிய கொள்கையாளரான குமார் டேவிட், பத்திரிகையாளர் மகிந்த ரத்நாயக்க ஆகியோருடன் பொது வேட்பாளரின் அவசியம்பற்றி ஜயம்பதி தொடர்ச்சியான கலந்துரையாடல்களை முன்னெடுத்து வந்தார். ஆயினும் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகச் செயற்பட்டதன் விளைவாக கலாநிதி ஜயம்பதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக சுமார் 06 மாதங்கள் நாட்டைவிட்டு வெளியேறி வாழவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

மீண்டும் நாடு திரும்பிய ஜயம்பதியிடம் அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடுமாறு 2014ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் சந்திரிக்கா பண்டாரநாயக்க கேட்டுக்கொண்டார். அதற்கு இணங்கிய ஜயம்பதி அம் முயற்சியின் போது

முகம்கொடுக்க நேர்ந்த சங்கடங்களையும் சகித்துக் கொண்டு அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவை சந்தித்து, "நீங்களும் கசப்பு கசாயம் குடிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது" என்றார். அதற்கு பதிலளித்த அமைச்சர் மைத்ரிபால சிறிசேன "ஆமாம் டொக்டர், கசப்புக் கசாயம் குடிக்க வேண்டி வரும் போலதான் எனக்கும் தெரியிது" என்றார். சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கும் அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவிற்குமிடையிலான தொடர்ச்சியான கலந்துரையாடல்களை முன்னெடுக்கும் பொறுப்பை சந்திரிக்காவின் விசுவாசியான பி.தஸநாயக்க என்பவர் ஏற்றுக் கொண்டார். அவசியமான நேரங்களில் கலாநிதி ஜயம்பதியும் அதில் கலந்து கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்குமிடையிலான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் முக்கிய பொறுப்பை சந்திரிக்கா பண்டாரநாயக்க ஜயம்பதிக்கு வழங்கியிருந்தர். அதற்கமைய 2014ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் சந்திரிக்காவின் வேண்டுகோளின் பேரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை ஜயம்பதி சந்தித்தார். அச்சமயம் சம்பந்தன் வெளிநாட்டு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார். அச்சந்திப்பின்போது சுமந்திரனிடம், பலம்மிக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர் ஒருவரை பொது வேட்பாளராக சந்திரிக்கா பண்டாரநாயக்க களமிறக்க இருப்பதாக ஜயம்பதி தெரிவித்தார். அதனைச் செவிமடுத்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், அம்முயற்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வமற்ற இணக்கப்பாட்டினை தெரிவித்தார்.

மறுதினமே அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவை விஜயராம உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்த ஜயம்பதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற செய்தியினை தெரிவித்தார். அத்தோடு அடிக்கடி நாகவிகாரைக்குச் சென்று, சோபித தேரர் உள்ளிட்டோரிடமும் கலந்தாலோசிப்பதையும் ஜயம்பதி வழக்கமாக கொண்டிருந்தார். இவ்வாறு இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் ஒருநாள் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இராப்போசன விருந்தொன்றின் போது ரணில் விக்ரமசிங்க மற்றும் மலிக் சமரவிக்ரம ஆகியோரை சந்திக்கும் சந்தர்ப்பம் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்னவுக்கு கிடைத்தது. ஆயினும் அது ஒரு ஆழமான அரசியல் கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பமாக அமையவில்லை.

அதன் பின்னர் ஜயம்பதிக்கும் மங்கள சமரவீரவிற்குமிடையிலான சந்திப்பொன்றின் போது வெற்றியீட்டத்தக்க ஒரு வேட்பாளருக்கு ஆதரவளிக்க தாம் விரும்பிய போதிலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெளியில் ஒரு வேட்பாளரைப்பற்றி தம்மால் நினைத்துப் பார்க்க முடியாதிருப்பதாக மங்கள சமரவீர தெரிவித்தார். அதே நேரம் தமது ஆட்சிக்காலத்திலிருந்தே மைத்ரி - மங்கள இருவருக்குமிடையே ஏற்பட்டிருந்த முறுகல் நிலையினை அறிந்திருந்த சந்திரிக்கா, மங்களவுடனான பேச்சுவார்த்தைகளின்போது அமைச்சர் மைத்ரி பற்றி எந்தவொரு வார்த்தையும் பேசவேண்டாம் என ஜயம்பதியிடம் மிக உறுதியாகத் தெரிவித்திருந்தார். அதேவேளை ஒக்டோபர் மாதமளவில் சட்டத்தரணி உபுல் ஜயசூரியவின் இல்லத்தில் கூடிய ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அத்துகோரள ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாசவை பொது வேட்பாளராக நிறுத்த வேண்டுமென்ற கருத்தை முன்வைத்தனர். அதன் போது சஜித் பிரேமதாச பொது வேட்பாளராவதை எவ்விதத்திலும் ரணில் விக்ரமசிங்க ஏற்றுக்கொள்ளமாட்டார் என்ற விடயத்தினை ஜயம்பதி எடுத்துரைத்தார். அதனை அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

ஒக்டோபர் நவம்பர் மாதமளவில் ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாளராக போட்டியிடக்கூடாது என்ற கருத்து கட்சியினுள் தலைதூக்கி இருந்தது. சிலர் நேரடியாகவே ரணில் விக்ரமசிங்கவிடம் அக்கருத்தை கூறியிருந்தார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் "என்னால் வெல்லமுடியாது என்றால் யாரால் வெல்லமுடியும் என்று நீங்களே ஒரு பெயரைக் குறிப்பிடுங்கள்" என்று ரணில் விக்ரமசிங்க கூறிவந்தார். இப்பின்னணியில் அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக ஏற்றுக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியினரை சம்மதிக்க வைப்பதற்காக ரவி கருணாநாயக்க, எரான் விக்ரமரத்ன, ருவான் விஜயவர்த்தன, ஆர். யோகராஜன் மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் கடும் முயற்சியினை எடுத்துக் கொண்டார்கள் என்பதே ஜயம்பதி விக்ரமரத்னவின் கருத்தாகும். இதற்கிடையே ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவிடமிருந்து ஜயம்பதிக்கு ஒரு அழைப்பு வந்தது. அதற்கமைய அன்றிரவே ஜயம்பதி, கருணாரத்ன பரணவிதானவையும் அழைத்துக் கொண்டு அமைச்சர் மைத்ரியின் இல்லத்திற்குச் சென்றார். அங்கே சென்றதும் பரணவிதான ஓட்டிச் சென்ற அதே வாகனத்தில் அமைச்சர் மைத்ரிபாலவும் ஏறிக்கொண்டார். அச்சமயம் அவர்களுடன் பாதுகாவலர்கள் எவரும் இருக்கவில்லை. தொடர்ந்தும் பரணவிதானவே வாகனத்தை ஓட்டிச் சென்ற போதிலும் செல்லுமிடத்தை அவர் அறிந்திருக்கவில்லை.

அமைச்சர் மைத்ரிபால கூறும் வழியே பரணவிதான வாகனத்தை செலுத்தினார். கடைசியில் அவ்வாகனம் டி.ஆர்.விஜேவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள சீனோர் விடுதியைச் சென்றடைந்தது. அங்கே இராப்போசனத்தை உண்டவாறு மூவரும் கலந்துரையாடலை ஆரம்பித்தனர். அவ்வேளை சந்திரிக்கா பண்டாரநாயக்க கூறிய சில தகவல்களை ஜயம்பதி, அமைச்சர் மைத்ரியிடம் கூறினார். இக்கலந்துரையாடலின் போது பொது வேட்பாளர் பற்றி எந்த விடயமும் கலந்தாலோசிக்கப்படவில்லை. ஆயினும் தாம் எதிர்காலத்தில் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து அரசியலில் ஈடுபட விரும்பவில்லை என்ற தனது நிலைப்பாட்டை அமைச்சர் மைத்ரி திடமாகவும் மிகுந்த உறுதிப்பாட்டுடனும் வெளிப்படுத்தினார்.

ஒக்டோபர் மாதத்தில் இடம்பெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்ற வாதப்பிரதி வாதங்களின் விளைவாக கட்சியின் அங்கத்தவர்களுக்கிடையே பிளவு ஏற்பட்டது. அதன்போது கட்சியின் மூத்த தலைவரான பேராசிரியர் திஸ்ஸவிதாரண அடுத்த பொது வேட்பாளாராக ரணில் விக்ரமசிங்கவே போட்டியிடுவார் என அடித்துக் கூறினார். அதன்போது ஜயம்பதி, பொதுவேட்பாளராக அமைச்சர் மைத்ரிபால சிறிசேன போன்ற ஒருவர் களமிறங்கினால் கட்சியின் நிலைப்பாடு எவ்வாறு அமையுமென வினவினார். அதற்கு தமது நெஞ்சின்மீது கைவைத்தவாறு திஸ்ஸவிதாரண "பொது வேட்பாளாராக மாட்டேன்"; என மைத்ரி என்னிடம் உறுதியாகக் கூறியிருக்கின்றார் என மிகுந்த உறுதியுடன் கூறினார். ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்ற அந்த விவாதத்தின் விளைவாக முதன் முறையாக இலங்கை கமியுனிஸ்ட் கட்சி மற்றும் லங்கா சமசமாஜ கட்சி ஆகிய இரு பழம்பெரும் கட்சிகளும் இரண்டாக பிளவுபட்டன.

இறுதியில் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்த அவ்விரு கட்சிகளினதும் அங்கத்தவர்களது அங்கத்துவம் பறிக்கப்பட்டதுடன், அவர்கள் பொது வேட்பாளராக களமிறங்கிய அமைச்சர் மைத்ரியின் வெற்றிக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி கட்சியிலும் பொது வேட்பாளர் விடயம் பிளவை ஏற்படுத்தியதுடன் அக்கட்சியிலிருந்து வெளியேறியோரும் மைத்ரிக்கு ஆதரவாக செயற்பட்டனர்.



இதற்கிடையே ஒரு நாள் ஜயம்பதியை அழைத்த மாதுளுவாவே சோபித தேரர் "ஐயா இவர்கள் அனைவரும் என்னை பொது வேட்பாளராக வரச்சொல்கின்றார்கள் ஆனால் ஒரு அரசியல்வாதிதான் பொது வேட்பாளராக வரவேண்டும். நான் பொது வேட்பாளராக வருவதில் பிரயோசனம் இல்லை" என்றார். இருந்தபோதிலும் பொது வேட்பாளராகப் போட்டியிட அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க தகுதிவாய்ந்த ஒருவர் கிடைக்காத பட்சத்தில் அச்சவாலை ஏற்று தாம் பொது வேட்பாளராகக் களமிறங்கத் தயாரென்ற விடயத்தையும் சோபித தேரர் கூறிவந்தார். பொது வேட்பாளராக போட்டியிட தாம் ஆர்வம் கொண்டிருக்கவில்லையென்ற உண்மையினை வெளிப்படையாகக் கூறினால் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் பொது வேட்பாளரை களமிறக்கும் முயற்சி சோர்வடைந்துவிடும் என்ற அவரது கணிப்பே அதற்கு காரணமாகும். தாம் ஒருபோதும் பொதுவேட்பாளராக போட்டியிடப் போவதில்லை என்பதில் மிக உறுதியாக இருந்த சோபித தேரரின் பொதுவேட்பாளர் தெரிவாக கரு ஜயசூரியவே இருந்தார்.

சோபித தேரரின் பொது வேட்பாளர் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை ஒழித்தல் ஆகிய இரு

கருத்துக்களும் அரசாங்கத்தின்மீது ஏற்படுத்திய தாக்கம் மிகவும் பலமானதாக இருந்தது. அதன் விளைவாக 2014 ஆம் ஆண்டில் ஒருநாள் கோட்டை ஸ்ரீ நாகவிகாரைக்கு சென்ற அமைச்சர் பசில் ராஜபக்ஷ சோபித தேரருடன் சுமார் மூன்று மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்னவுடன் இணைந்து பொது வேட்பாளர் வேலைத்திட்டத்திற்கு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கியவராக சட்டத்தரணி ஜே.சி.வெலிஅமுனவும் இருந்தார். மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் துறையில் புகழ் பெற்ற வழக்கறிஞரான வெலிஅமுன பொது வேட்பாளர் பற்றிய பேச்சுக்களில் பல்வேறு விதமான கருத்துக்களைக் கொண்டிருந்த எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஒருவராகவே விளங்கினார். குறிப்பாக மாதுளுவாவே சோபித தேரர், ரணில் விக்ரமசிங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகிய மூவராலும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க ஒருவராக வெலிஅமுன இருந்தார். அத்தோடு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையின்போதும் அரசுக்கு எதிரான போராட்டத்திலும் அவர் முன்னிலை வகித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு எதிராக சோபித தேரர் முன்னெடுத்த போராட்டத்தினால் ஏற்பட்ட சமூக தாக்கத்தினைக் கருத்தில்கொண்டு, மகிந்த ராஜபக்ஷ மூலமாகவே அவருக்கும் நாட்டுக்கும் ஆகக்குறைந்த இழப்புக்கள் ஏற்படும் வகையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினை இல்லாதொழிக்கச் செய்து, நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதே சோபித தேரரின் நோக்கமாக இருந்தது. ஆயினும் வெலிஅமுன உட்பட்ட சிலர் அது சாத்தியமில்லை என்று வாதாடினர்.

நாகவிகாரையில் சோபித தேரரின் தலைமையில் உருவாகிவரும் பொதுவேட்பாளர் பற்றிய பேச்சுவார்த்தைகளில் கரு ஜயசூரியவிற்கு முக்கியத்துவம் கிடைத்து வருவதை மிகவும் சூட்சுமமாக உணர்ந்த ரணில் விக்ரமசிங்க, 2014ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையினை உருவாக்கினார். அதன் முக்கிய நோக்கம் அச்சபைக்குள் கரு ஜயசூரியவை கொண்டுவந்து அவரைப் பலவீனப்படுத்துவதே ஆகும் என்ற கருத்தை சிலர் முன்வைத்தனர்.

இப்பின்னணியில் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி எந்தளவு வலுவிழந்திருந்தது என்பதை

கீழ் வரும் உரையாடல் தெளிவுபடுத்துகின்றது. நாரஹேன்பிட்டி அபேராமையில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலின்போது உலப்பனே சுமங்கல தேரர் அப்போதைய அமைச்சராக இருந்த வஜிர அபயவர்த்தனவிடம் "நாம் எப்படியாவது சோபித தேரரின் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்று இறுதியில் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்போம்" என்று கூறியுள்ளார். அதற்கு பதிலளித்த அமைச்சர் வஜிர அபயவர்த்தன "தேரரே புத்த பகவானுக்கு இணையாக எவரும் இருக்கின்றாரோ? அதேபோல் மகிந்தவிற்கு மாற்றுத் தேர்வாக எவருமே இல்லை. மகிந்த இருக்கும்வரை அவர்தான் ஜனாதிபதி. அவர் உயிருடன் இருக்கும்வரை அவரை எம்மால் தோற்கடிக்க முடியாது. அதுவரை கட்சியை எப்படியாவது தக்கவைத்துக் கொள்வதனை மட்டுமே நாம் செய்யலாம்" என்று கூறியிருக்கின்றார். அவர் மாத்திரமின்றி ஒட்டுமொத்த ஐக்கிய தேசியக் கட்சியுமே தோல்வியினை தமது உரிமையாக ஏற்றுக் கொள்ளும் மன நிலைக்கே தள்ளப்பட்டிருந்தது.

இந்த அரசியல் பின்னணியிலேயே ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இணை இயக்கமாக "பிவிதுரு ஹெடக்" (தூய்மையான எதிர்காலம்) அத்துரலிய ரத்தன தேரரின் தலைமையில் அரசியலில் இறங்கியது. நிறைவேற்று அதிகாரத்தினைக் கொண்ட ஜனாதிபதி முறைமையினை முற்றாக ஒழிப்பதற்குப் பதிலாக அதன் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்பதனையும் ஜனாதிபதி பதவியின் தான்தோன்றித்தனமான அதிகாரங்களை மாத்திரம் நீக்க வேண்டும் என்ற கருத்தினை முன்னிலைப்படுத்தி 2014 ஜுன் மாதம் முதல் நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பிற்கு சமாந்தரமாக ஆனால் அதற்கு முற்றிலும் வேறுபட்ட பாதையில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்தது. நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் பிரகடனப்படுத்தப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பதாகவே "பிவிதுரு ஹெடக்" (தூய்மையான எதிர்காலம்) அமைப்பு அரசியல் களத்தில் களமிறங்கியது. 19 ஆவது சீர்திருத்தம் எனும் முன்மொழிவு ஜாதிக ஹெல உறுமய கட்சியினால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். ஹெல உறுமய கட்சிக்குள் எழுந்த பல்வேறு வாதப்பிரதிவாதங்களின் பலனாகவே 19ஆவது சீர்திருத்தம் எனும் ஆவணம் உருவாக்கப்பட்டது. இதற்கிடையே ரத்தன தேரரின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் நந்த சில்வா அந்த அமைப்புக்குள் அழைத்துவரப்பட்டார். 19 ஆவது சீர்திருத்த யோசனையின் வெளியீட்டு விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற போது சரத் சில்வா அந்த



யோசனைப் பற்றி விரிவுரை ஒன்றையும் நிகழ்த்தினார். ரத்தன தேரர் மற்றும் அமைச்சர் சம்பிக ரணவக்க ஆகியோர் ஆரம்பத்தில் நாளுக்குநாள் செல்லும் திசை அறியாது சென்று கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் பயணத்தை அவர்களது அறிவுக்கு எட்டிய வரை சரியான பாதைக்குக் கொண்டுவரும் நோக்கிலேயே இச் செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் மைத்ரி விவசாய அமைச்சராக இருந்தபோதும், 2010 ஆம் ஆண்டின் பின்னர் சுகாதார அமைச்சராக இருந்தபோதும் அவர் ஆரம்பித்த சிகரட் மற்றும் போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கைகள் "மருந்துச் சட்டமூலம்" ஆகிய சமூகப் பொறுப்புமிக்க வேலைத்திட்டங்களை முடக்க பசில் ராஜபக்ஷ தனது முழு அதிகாரத்தையும் பிரயோகிக்க முயற்சித்து வந்தார். அதன்போது நச்சுத்தன்மைமிக்க இரசாயன உபயோகம் மற்றும் சூதாட்டம் ஆகியவற்றுக்கு எதிரான மைத்ரியின் செயற்பாடுகளுக்கு ரத்தன தேரர் ஒத்துழைப்பு வழங்கினார்.

இதற்கிடையே ரத்தன தேரர் தமது அமைப்பின் சார்பில் உருவாக்கிய சீர்திருத்தத்திற்கான முன்மொழிவுகளுடன் நாட்டின் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து உரையாடும் வேலைத்திட்டத்தினையும் ஆரம்பித்தார். அதற்கமைய முதலில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களை

சந்தித்து பேசியதுடன், அடுத்தாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவையும் சந்தித்தார். இச்சந்திப்பின் பின்னர் ரத்தன தேரரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட மகிந்த ராஜபக்ஷ, ரத்தன தேரரிடம் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்ததற்கான காரணங்களை வினவினார். அத்தோடு தம்மை சந்தித்து கலந்துரையாடாது ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தது பற்றி குறை கூறினார்.

அதன் பின்னர் ஒரு நாள் மகிந்த ராஜபக்ஷவை ரத்தன தேரர் சந்தித்தார். வழக்கம்போல் கேலிப்பேச்சுக்களுடன் நீண்ட நேரம் வேறு விடயங்களை கதைத்த போதிலும் ரத்தன தேரர் முன்வைத்த யோசனைகளைப்பற்றி மகிந்த ராஜபக்கஷ எதனையும் பேசவில்லை. இறுதியில் ரத்தன தேரரே தமது யோசனைகள் பற்றிய கலந்துரையாடலை ஆரம்பித்த போதிலும் ராஜபக்ஷ எடுத்த எடுப்பிலேயே இப்போது அதற்கு நேரமில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் பார்க்கலாம் என்றார். ஜனாதிபதித் தேர்தல் பற்றி ஊகங்கள் தெரிவிக்கப்பட்டு வந்த போதிலும் மகிந்தவே ஜனாதிபதித் தேர்தல் பற்றி கூறியது அதுவே முதற்தடவையாகும்.

2014 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக பேருவளையில் நடந்த மாநாட்டில் ரத்தன தேரர் தாம் முன்வைத்திருக்கும் யோசனைகளைப் பற்றி கருத்து வெளியிட முற்பட்டார். அதன்போது அவரை அமைச்சர் ரோகித அபேகுணவர்த்தன கடுமையாக எதிர்த்தார். ஆயினும் மகிந்த ராஜபக்ஷவின் தலையீட்டால் ரத்தன தேரரின் யோசனைகளை முன்வைக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இந்த சம்பவமே ரத்தன தேரரின் தூய்மையான எதிர்காலம் அமைப்பிற்கு அவர்களது இரண்டாவது மாநாட்டை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்த உந்து சக்தியாக அமைந்தது. இம்மாநாட்டில் பங்குபற்றுமாறு ரத்தன தேரர் ரணில் விக்ரமசிங்கவிற்கு அழைப்பு விடுத்ததை ஹெல உறுமைய அவ்வளவாக விரும்பாததால் அம்மாநாட்டின் சம நிலைத் தன்மையை பேணுவதற்காக அதில் கலந்து கொள்ளுமாறு ரத்தன தேரர், பசில் ராஜபக்ஷவை அழைக்க வேண்டியிருந்தது. அதையடுத்து சோபித தேரர், ரணில் விக்ரமசிங்க, பசில் ராஜபக்ஷ, இடதுசாரித் தலைவர்கள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், என மண்டபம் நிரம்பி வழியும் அளவுக்கு மக்கள் பங்களிப்பு கிடைத்திருந்த இக்கூட்டத்தின் இறுதி உரையை நிகழ்த்திய ரத்தன

தேரர், தமது அமைப்பினால் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசியல் யாப்பின் 19 வது சீர்திருத்தத்திற்கு இணங்காது ஜனாதிபதித் தேர்தலை மகிந்த ராஜபக்ஷ பிரகடனப்படுத்துவாராயின் "எமது முழுப் பலத்தையும் ஒன்று திரட்டி மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்போம். தோற்கடித்தே தீருவோம். இது உறுதி" என மிகுந்த உறுதிப்பாட்டுடனும், திடமாகவும் அடித்துக் கூறினார். அதன்போது அவரது அக்கருத்தினை ஆமோதித்து சபையில் எழுந்த கரகோசம் சில நிமிடங்கள் நீடித்தது. அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் பங்கேற்றிருந்த அச்சபையில் இது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கூட்டத்தின் பின்னர் அனேகமான நாட்களில் காலை வேளையில் ரத்தன தேரர் அமைச்சர் மைத்ரியின் விஜயராம இல்லத்திற்கு சென்று வருவதை வழக்கமாக்கிக் கொண்டார். அவ்வாறான சந்திப்புக்களில் இடம்பெறும் கலந்துரையாடலின் போது மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியும் தோல்வியும் அமைச்சர் மைத்ரி அவர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில், தொடர்ந்தும் இருப்பது அல்லது வெளியேறுவது என்ற விடயத்திலேயே தங்கியுள்ளர் என ரத்தன தேரர் கூறிவந்தார். அடுத்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்காது அரசியலில் இருந்துகூட விலகிச் செல்ல அமைச்சர் மைத்ரி தயாராக இருக்கின்றார் என்பதனை ரத்தன தேரர் நன்கு அறிந்திருந்ததனாலேயே அவர் மைத்ரியிடம் அத்தனை உறுதியாக அவ்விடயத்தை கூறிவந்தார். அத்தோடு அமைச்சர் மைத்ரியுடனான கலந்துரையாடல்களின்போது பொது வேட்பாளராக போட்டியிட அவர் தகுதியானவர் என்ற விடயத்தையும் ரத்தன தேரர் மைத்ரியிடம் அடிக்கடி எடுத்துக் கூறினார்.

2014 செப்டெம்பர் ஒக்டோபர் மாதமளவில் ரணில் விக்ரமசிங்கவிற்கும் ரத்தன தேரருக்குமிடையிலான தொடர்புகள் மிக நெருங்கிய ஒன்றாக வளர்ந்திருந்தது. நாக விகாரையினை மையமாக கொண்டு சோபித தேரரின் தலைமையில் கரு ஜயசூரியவை பொது வேட்பாளராக களமிறக்கும் நீதிமிக்க சமூகத்திற்கான தேசிய அமைப்பின் செயற்பாட்டுக்கு ரணில் விக்ரமசிங்க காட்டிய கடுமையான எதிர்ப்பே மேல் குறிப்பிட்ட ரத்தன தேரருக்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையிலான உறவு பலமடைய மிக முக்கியமன காரணமாக அமைந்தது.

அத்தோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியினை முற்றாக இல்லாதொழிக்க வேண்டுமென்ற கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த நீதிமிக்க சமூகத்திற்கான தேசிய அமைப்பின் நிலைப்பாட்டினை விட "தூய்மையான எதிர்காலம்"

அமைப்பின் மறுசீரமைப்பு யோசனைகள் நடுநிலைமையை கொண்டிருந்தமையும் அவ்வமைப்பினுள் விக்ரமசிங்க எதிர்ப்பு பாரிய அளவில் காணப்படாமையும் ரணில் விக்ரமசிங்க அந்த அமைப்பின்பால் ஈர்க்கப்பட காரணமாக அமைந்திருக்கலாம். ஒரு தடவை ரணில் விக்ரமசிங்க "தூய்மையான எதிர்காலம்" அமைப்பின் சீர்திருத்தங்கள் பற்றி பாராளுமன்றில் புகழ்ந்து பேசினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இது இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் ரத்தன தேரர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவை சந்தித்து பொதுவேட்பாளர் பற்றிய அவர்களது நிலைப்பாடு என்ன என்பதை வினவினார். அதற்கு அனுர குமார திசாநாயக்க, பொது வேட்பாளர் யார் என்பது பற்றி நாம் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. மகிந்த ராஜபக்ஷவை தேற்கடிப்பதற்கான ஒத்துழைப்பை மாத்திரமே தமது தரப்பு பெற்றுத்தரும் என கூறினார். அதன்போது பலமான அல்லது வலுவான அரசியல் வேலைத்திட்டம் ஒன்றும் ஆழமான அர்ப்பணிப்பும் இன்றி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நகர்வுகளுக்கு இடையே ரத்தன தேரருக்கும் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையிலான சந்திப்புக்கள் அடிக்கடி இடம்பெறும் நிலை ஏற்பட்டது. அவ்வாறான சந்திப்பொன்றின்போது பொது வேட்பாளராக அமைச்சர் மைத்ரி பற்றிய பேச்சு





மேலோங்கியிருப்பதாக ரத்தன தேரர் ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்தார். அதைக் கேட்ட ரணில் விக்ரமசிங்க ஆச்சரியமடைந்தார். பிறிதொரு தினத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது பொது வேட்பாளர் சந்திரிக்கா பண்டாரநாயக்கவே என ரணில் விக்ரமசிங்க, ரத்தன தேரரிடம் தெரிவித்தார். மைத்ரியோடு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 20 உறுப்பினர்களாவது வெளியே வருவார்களாயின் மைத்ரியை பொது வேட்பாளர் ஆக்குவது பற்றி சிந்திக்க தாமும் தயார் என்ற விடயத்தை ரணில் ரத்தன தேரரிடம் தெரிவித்தார். அதையடுத்து ரத்தன தேரர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 20 உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார். அவர்களில் 12 பேர் அரசாங்கத்தைவிட்டு வெளியேறத் தயார் என்ற விடயத்தை ரத்தன தேரரிடம் தெரிவித்தனர். பொது வேட்பாளர் பற்றிய கலந்துரையாடலில் கலந்துகொண்ட எவருமே அது தொடர்பான விபரங்களை அலரி மாளிகைக்கு கொண்டு செல்லாதிருந்தமை குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பம்சமாகும்.

இந்தப் பின்னணியில் ரத்தன தேரர் சஜித் பிரேமதாசவுடனும் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தி வந்தார். அதிலிருந்து சஜித் பிரேமதாச பொது வேட்பாளராக வர விரும்பவில்லை என்பதும், பொதுவேட்பாளராக கரு ஜயசூரியவை கொண்டு வருவதையும் அவர் பெரிதாக விரும்பவில்லை என்பதும் தெரிய வந்தது. அத்தோடு

நவம்பர் மாதம் 12 ஆம் திகதியன்று "தூய்மையான எதிர்காலம்" அமைப்பினால் முத்தைய்யா விளையாட்டரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் பொது வேட்பாளர் பற்றிய செயற்பாட்டின் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. அக்கூட்டம் ரத்தன தேரரின் முழுமையான ஏற்பாட்டில் நடந்தேறியது. அதில் ரணில், சஜித், கரு, மங்கள மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் லால் காந்த ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நீதிமிக்க சமூகத்திற்கான தேசிய அமைப்பும் தூய்மையான எதிர்காலம் அமைப்பும் பொது வேட்பாளருக்கான அவசியத்தை உணர்ந்திருந்த போதிலும் நீதிமிக்க சமூகத்திற்கான தேசிய அமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை முழுமையாக இல்லாதொழிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததுடன், தூய்மையான எதிர்காலம் அமைப்பு நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. ஆயினும் இவ்விரு அமைப்புக்களினதும் நிலைப்பாடுகளில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதன் கட்டாயத் தேவை அனைவராலும் உணரப்பட்டது. இந்த பொது இணக்கப்பட்டின்போது இரு அமைப்புக்களுக்கும் இணங்கக்கூடிய விடயங்களை ஒன்றிணைப்பதற்கான பொது ஆவணத்தினை சட்டத்தரணி ஷிரால் லக்திலக மற்றும் அசோக அபேகுணவர்த்தன ஆகியோர் ஒன்றிணைந்து உருவாக்கினர்.

இவ்வாறு இந்த இரு அமைப்புக்களும் ஒன்றிணைந்ததன் பின் சோபித தேரரும் ரத்தன தேரரும் இணைந்து ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர். அதிலிருந்து இவ்விரு அமைப்புக்களும் ஒன்றிணைந்து செயற்படத் தொடங்கின. இக்கூட்டணியினால் உருவாக்கப்படும் பொது வேட்பாளர் தமக்கு பாரிய சவாலாக அமைவாரென்ற கணிப்பீட்டின் காரணமாக ரணில் விக்ரமசிங்க இக்கூட்டணியை பெரிதாக விரும்பவில்லை. அதேநேரம் சோபித தேரரும் ரணில் விக்ரமசிங்க மீது ஆர்வம் கொண்டிருக்கவில்லை. இந்நகர்வுகள் இவ்வாறு முன்நகர்ந்து சென்றதன் விளைவாக பொது வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க தவிர்ந்த வேறொருவரே களமிறங்க வேண்டுமென்ற கருத்து மேலோங்கத் தொடங்கியது.

## பொது வேட்பாளரும் சந்திரிக்காவும்

2005ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அனுர பண்டாரநாயக்க பெரிதும் விரும்பினார். அவரை ஆதரித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களும் பெருமளவில் அவருக்கு துணையாக இருந்தார்கள் ஆயினும்



சந்திரிக்கா, சுனேத்திரா ஆகிய இரு சகோதரிகளும் அனுரவை அழைத்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற எண்ணத்தை கைவிடுமாறு கோரினார்கள். சகோதரிகளின் உருக்கமான வேண்டுகோளை ஏற்ற அனுர பண்டாரநாயக்க அவரது எண்ணத்தை மாற்றிக் கொண்டார். ஆயினும் சந்திரிக்கா பண்டாரநாயக்கவை சந்தித்த சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் குழு, அனுர பண்டாரநாயக்கவிற்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொடுக்குமாறும் மகிந்த ராஜபக்ஷவிற்கு அந்த வாயப்பினைக் கொடுக்க வேண்டாமென்றும் மிக உறுதியாகக் கேட்டுக் கொண்டது.

உருவாகியிருக்கும் நிலைமைகளை கூட்டிக் கழித்துப் பார்த்த சந்திரிக்கா பண்டாரநாயக்க, கட்சியின் தலைவர் என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்க தீர்மானித்தார். அத்தோடு நின்றுவிடாது ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதி என்ற வகையிலும் கட்சியின் தலைவி என்ற வகையிலும் மாவட்ட ரீதியில் 15 பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்க முன்வந்ததுடன் அவ்வாறான இரண்டு பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக

அவரது ஆதரவையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொடுத்தார். இருந்த போதிலும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்ததில் இருந்தே சந்திரிக்காவை ஓரம்கட்ட எண்ணிய மகிந்த, படிப்படியாக சந்திரிக்காவுடனான உறவை தளர்த்திக் கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதன் பின்னர் நடத்தப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் முதலாவது மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட சந்திரிக்கா பண்டாரநாயக்க "நீங்கள் வெற்றிபெற வேண்டும் என்பதனாலேயே நான் உங்களுக்கு வேட்பு மனுவை வழங்கினேன். உங்களைத் தோற்கடிப்பதற்காக அல்ல. ஆகையால் கட்சி சார்பில் செயற்பட எனக்கும் வாய்புத்தாருங்கள்" என கேட்டுக் கொண்டார். ஆயினும் 2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டமொன்று நடத்தப்பட்டது. அன்றைய தினம் சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் பிறந்த நாள் என்பதால் அவருக்கு அது ஒரு முக்கிய நாளாகவே இருந்தது. இருப்பினும் அன்று நடத்தப்பட்ட கட்சியின் விசேட மத்திய குழுக் கூட்டத்தின் நோக்கம் சந்திரிக்காவை கட்சித் தலைமையிலிருந்து நீக்குவதாகவே அமைந்திருந்தது. அத்தோடு சந்திரிக்காவுடனான தொடர்புகளை துண்டித்துக் கொள்வதற்கான பின்னணியும் மகிந்த ராஜபக்ஷ வினால் உருவாக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்ற சில தினங்களில் பாராளுமன்றத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவை சந்தித்த மகிந்த, "மங்கள, எனக்கு உங்களுடனும் அமைச்சர் கதிர்காமருடனும் கொஞ்சம் பேசவேண்டும்" என்றார். அவரின் வேண்டுகோளை ஏற்ற அமைச்சர் மங்கள, அமைச்சர் கதிர்காமரின் இல்லத்தில் குறிப்பிட்ட சந்திப்பை ஏற்பாடு செய்தார். அச் சந்திப்பின் போது மகிந்த ராஜபக்ஷ, தமக்கு அவர்களின் ஒத்துழைப்பை பெற்றுத் தருமாறு கேட்டுக் கொண்டார். அதற்கு அவர்கள், "கட்சி உங்களை வேட்பாளராக நியமித்திருப்பதால் முழு ஒத்துழைப்பும் உங்களுக்குக் கிடைக்கும்" எனக் கூறினார்கள். அதன்போது தம்மைப் பிரதமராக நியமித்ததால் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு அநீதி நேர்ந்தது என்பதை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் ஜனாதிபதியாகும் வாய்ப்பு தனக்கு கிடைக்கும் பட்சத்தில் பிரதமர் பதவியினை கதிர்காமருக்கு வழங்க தாம் தீர்மானித்திருப்பதாகவும் கதிர்காமரிடம் கூறினார்.

அதற்குப் பதிலளித்த கதிர்காமர், ஏற்கனவே தாம் 74 வயதை எட்டியிருப்பதால் வருட இறுதியில் அரசியலிலிருந்து ஓய்வுபெற்று தமது அனுபவங்களை வைத்து நூலொன்றை எழுத எண்ணியிருப்பதால் தனது நெருங்கிய நண்பனாகிய மங்கள சமரவீரவை நன்றாக கவனித்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். அதற்கு மகிந்த ''நீங்கள் பிரதமர் பதவியை வேண்டாமென்றால் அதை நான் மங்களவிற்கு கொடுக்காது வேறு யாருக்கு கொடுக்க'' என்றார். அதன்போது அதற்கு பதிலளித்த மங்கள தனக்கும் பிரதமர் பதவி பற்றிய கனவு இருந்த போதிலும் ஜனாதிபதி தேர்தலை வென்றதன் பின்னர் பிரதமர் பதவியில் அனுர பண்டாரநாயக்கவை அமர்த்துவதே சிறந்ததெனக் கூறினார். ஆயினும் மங்களவின் அந்த வேண்டுகோள் கடைசிவரை நிறைவேற்றப்படவில்லை. மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதி வேட்பாளர் என்ற வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்த போது அவரின் வெற்றியின் பின்னர், அனுர பண்டாரநாயக்கவிற்கு பிரதமர் பதவி கிடைக்கப்பட வேண்டும் என்பதே பண்டாரநாயக்கர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

1994 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றதையடுத்து ஜனாதிபதி சந்திரிக்கா, மகிந்த ராஜபக்ஷ விற்கு அமைச்சர் பதவியினைப் பெற்றுக் கொடுத்தார். அதனைப் பெற்றுக்கொண்ட மகிந்த ''சிறிமாவோ பண்டாரநாயக்கவுடனும் உங்களுடனும் நான் பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்ததால் உங்களிடமிருந்து அமைச்சர் பதவி கிடைக்குமென நான் எதிர்பார்க்கவில்லை. இதனை பெற்றுத் தந்தமைக்கு உங்களுக்கு மிக்க நன்றி'' என கண்களில் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஓய்வுபெற்ற ஜனாதிபதிக்கென ஒரு அலுவலகமும் தேவையான அலுவலர் குழாமும் சட்ட ரீதியாகவே உரித்தாகின்றது. அதற்கமைய ஓய்வு பெற்ற ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கும் அச்சலுகை கிடைக்கப் பெற்றிருந்தது. அவரது டொரிங்டன் வீட்டு வளாகத்துக்குள்ளேயே அந்த அலுவலகம் அமைந்திருந்தது. ஆயினும் 2011ஆம் ஆண்டு எவருமே எதிர்பாராத விதமாக அவ் அலுவலகத்தினை மூடிவிடுமாறு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கு முன்னதாக ஓய்வுபெற்ற முன்னாள் ஜனாதிபதிகளாகிய ஜே.ஆர்.ஜயவர்த்தன, டி.பி.விஜேயதுங்க ஆகியோரின் அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருந்த பின்னணியிலேயே சந்திரிக்கா பண்டாரநாயக்கவின்

அலுவலகம் மூடப்பட்டது. நீதிமன்ற உத்தரவை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க கடிதம் மூலமாக உடனடியாக அவ் அலுவலகத்தை மூடிவிடும்படி உத்தரவிட்டிருந்தார்.

தமது தந்தையினால் ஆரம்பிக்கப்பட்டு தாயினால் முன்னெடுக்கப்பட்டு 17 வருடங்களாக எதிர்க்கட்சியில் இருந்துவந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினை ஆளும் கட்சியாக மாற்றி 11 வருடங்களாக அக்கட்சியினதும் நாட்டினதும் தலைவியாக இருந்து வந்தவரின் அலுவலகமே அவ்வாறு ஒரேநாளில் இழுத்து மூடப்பட்டது. அச்செயல் சந்திரிக்கா பண்டாரநாயக்கவை பெரிதும் பாதித்தது.

சந்திரிக்கா பண்டாரநாயக்கவை ஓரம்கட்டிய மகிந்த, காலப்போக்கில் அவருடன் தொடர்புகளைக் கொண்டிருந்த மூத்த உறுப்பினர்களையும் ஓரம்கட்டத் தொடங்கினார். இதனால் சந்திரிக்கா பண்டாரநாயக்கவை சந்திப்பதை கட்சி உறுப்பினர்களும் தவிர்த்துக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டது. இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத மூத்த உறுப்பினர்கள் சந்திரிக்கா பண்டாரநாயக்கவை சந்திக்கும் போதெல்லாம் "கட்சியையும் நாட்டையும் மகிந்தவிடமிருந்து காப்பாற்றுங்கள்" என்ற கோரிக்கையினை அடிக்கடி முன்வைக்கத் தொடங்கினர். 2007 ஆம் ஆண்டளவில் ஆரம்பமான இந்நிலைமை படிப்படியாக அதிகரித்து 2010 அளவில் சந்திரிக்கா பண்டாரநாயக்கவை மீண்டும் அரசியலுக்கு வரும்படி கோரும் அளவிற்கு வந்திருந்தது. அதைத் தொடர்ந்து சந்திரிக்கா பண்டாரநாயக்கவே பொது வேட்பாளராகப் போட்டியிட வேண்டுமென்ற கோரிக்கையும் பரவலாக எழத் தொடங்கியது. ஆயினும் "எனது காலம் முடிந்து விட்டது. நான் இனியும் அரசியலுக்கு வரப்போவதில்லை" என்ற நிலைப்பாட்டை சந்திரிக்கா அவர்கள் உறுதியாகக் கொண்டிருந்ததால் கட்சியின் சார்பில் பொது வேட்பாளராக யாரை களமிறக்குவது என்ற கேள்வி அவர் முன் எழுந்தது.

அவர் ஜனாதிபதியாக இருந்தபோது கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர்களாக உருவாக்க வேண்டியவர்களாக, அனுர பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, மைத்ரிபால சிறிசேன ஆகிய சிரேஷ்ட உறுப்பினர்களை இனம் கண்டிருந்தார். அவர்களில் அனுர காலமாகிவிட்டார். மங்கள ஐக்கிய தேசியக் கட்சிக்கு சென்றுவிட்டார். மைத்ரி மட்டுமே கட்சியில் எஞ்சியிருந்தார். ஆகையால் மைத்ரியைப் பற்றி சிந்தித்துப் பார்த்த சந்திரிக்கா பண்டாரநாயக்க மிகுந்த நம்பிக்கைக்குரிய ஒருவரை மைத்ரியிடம்

தூது அனுப்பினார். அதற்கு எடுத்த எடுப்பிலேயே "என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது" என மறுத்துவிட்டார் மைத்ரி. அவ்வாறு காலம் கடந்து கொண்டிருக்கையில் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சந்திரிக்கா பண்டாரநாயக்க, மீண்டும் தமது தூதரை மைத்ரியிடம் அனுப்பி வைத்தார். அதன்போது மைத்ரி "அவர் (மகிந்த) தலைவர், நான் செயலாளர். அப்படியிருக்கையில் இது எப்படி சாத்தியமாகும்" என்ற பதிலையே தூதுவரிடம் கொடுத்திருந்தார். ஆயினும் 2014 மே மாதமளவில் சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் தூதுவர் மீண்டும் மைத்ரியை சந்தித்தார். அப்போது மைத்ரியின் நிலைப்பாட்டில் சாதகமான மாற்றம் ஏற்பட்டிருந்தது என்பதை "எல்லோரது ஆதரவும் கிடைக்கப் பெறுமாக இருப்பின் மாத்திரம் தம்மால் அதைப்பற்றி சிந்தித்துப் பார்க்க முடியும்" என்ற அவரது பதிலிலிருந்து ஊகித்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. அதையடுத்து இம்முறை சாதகமான பதில் மைத்ரியிடமிருந்து கிடைத்திருக்கின்றது என்ற விடயத்தை தூதுவர் சந்திரிக்கா பண்டாரநாயக்கவிடம் தெரிவித்தார்.

மைத்ரியின் இந்த சாதகமான போக்கைக் கண்டு உற்சாகமடைந்த சந்திரிக்கா பண்டாரநாயக்க ஒருநாள் மைத்ரிபால சிறிசேனவை அவரது அமைச்சில் சந்தித்து "உங்களிடம் கொண்டு வரப்பட்ட தூதுகள் யாவும் நூற்றுக்கு நூறு உண்மையானவை. அவற்றை நீங்கள் நம்பலாம். இப்போது நான் ஒரு பொதுக் கூட்டமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்கின்றேன். உங்களையே நாம் பொது வேட்பாளராக்கவுள்ளோம்" என்றார். சந்திரிக்கா பண்டாரநாயக்க கூறியதை செவிமடுத்த அமைச்சர் மைத்ரி "சுதந்திரக் கட்சியிலிருந்து எத்தனைபேர் வெளியே வருவார்கள்? என்று கேட்டார். அதற்கு சந்திரிக்கா பண்டாரநாயக்க, சுமார் 40 பேர் வரை வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். கடைசியில் 20 பேரையாவது எடுக்கக் கூடியதாக இருக்கும் என கூறியதுடன் தமக்கு நேருக்கு நேர் நின்று கொண்டிருந்த மைத்ரியின் முகத்தைப் பார்த்து "ஒருபோதும் நான் உங்களைக் காட்டிக் கொடுக்கமாட்டேன். நான் அனுப்பி வைக்கும் தகவல்கள் மீது கவனத்தை செலுத்துங்கள்" என்று கூறி விடைபெற்றார்.

மறுநாள் காலையில் மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து மைத்ரிக்கு அழைப்பு வந்தது. "சந்திரிக்கா அமைச்சுக்கு வந்தாவாமே, உங்களோடு கதைத்துக் கொண்டும் இருந்தவவாம், என்ன சொல்கிறா?" என்று வினவினார். இவ்வாறு காலம் கடந்து செல்கையில் மீண்டும் சந்திரிக்கா மைத்ரி இருவருக்கும் தத்தமது



கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் அவசியம் ஏற்பட்டது. ஆயினும் உயர் தொழில்நுட்ப உதவியுடன் தமக்குத் தேவையான அனைத்துத் தொலைபேசி அழைப்புக்களையும் ஒட்டுக்கேட்கும் செயற்திட்டத்தை அச்சமயம் மகிந்த தரப்பினர் செயற்படுத்தியிருந்தனர். ஆகையால் அதிலிருந்து தப்பியே இருவரும் தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்ள வேண்டியிருந்தது.

இதற்கிடையே அடிக்கடி சந்திரிக்கா பண்டாரநாயக்கவை சந்தித்து வந்த ரணில் விக்ரமசிங்க "உங்களால் மட்டுமே சில சுதந்திரக் கட்சிக்காரர்களை வெளியே எடுக்க முடியும்" எனக் கூறிவந்தார். அதற்கு சந்திரிக்கா பண்டாரநாயக்க, "என்னால் அதை செய்ய முடியாது. என் பேச்சைக் கேட்டு அவர்கள் வெளியே வரமாட்டார்கள். ஆகையால் அதற்கான ஒரே வழி எதிர்க்கட்சிகளின் கூட்டு ஒன்றை உருவாக்குவதே" என பதிலளித்து வந்தார். அத்தோடு ஒரு பொதுப் பெயரில் பொதுச் சின்னத்தின் கீழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க முடியுமாக இருந்தால் தம்மால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு குழுவை வெளியே எடுக்க முடியும் என்றார்.

சந்திரிக்கா பண்டாரநாயக்க பொது வேட்பாளராக களமிறங்கும் பின்னணியிலேயே எல்லோரையும் ஒன்று திரட்ட முடியும் என்பதே அப்போதைய அரசியல் சமூகத்தின் பொதுவான நிலைப்பாடாக இருந்தது. ஆயினும் தாம் மீண்டும் செயற்பாட்டு அரசியலுக்கு வரப்போவதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த சந்திரிக்கா பண்டாரநாயக்க, தமது அந்த நிலைப்பாட்டை இரகசியமாக வைத்துக் கொண்டதுடன் பொது



வேட்பாளரைப் பற்றிய சமூகத்தின் ஆர்வத்தினை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் பொது வேட்பாளர் யார் என்ற கேள்வி எழும்போதெல்லாம் "சரி சரி, சரியான நேரத்தில் சரியான பொது வேட்பாளரை நான் களமிறக்குவேன். அதுவரை அது யாரென்று மட்டும் கேட்க வேண்டாம்" என்று கூறியவாறு நிலைமைகளை சமாளித்து வந்தார். அவரது வார்த்தைகளை ஏனையோரும் ஏற்றுக் கொண்டதனால் பொது வேட்பாளர் பற்றிய வேலைத்திட்டங்களை சுமூகமாக முன்னகர்த்த முடிந்தது.

எதிர்க் கட்சியுடனான தொடர் சந்திப்புக்களும் பேச்சுக்களும் முன்னகர்ந்து கொண்டிருக்கையில் அவற்றிற்கு தலைமை தாங்கியவர் என்ற வகையில் "எமது சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்களை நான் ஒரு போதும் காட்டிக் கொடுக்க மாட்டேன். முதலில் நீங்கள் ஒன்று சேர்ந்து செயற்படுங்கள். அடுத்தபடியாக நாம் எதிர்க் கட்சியின் கூட்டமைப்பினை உருவாக்குவோம்" என்ற தமது நிலைப்பாட்டினை சந்திரிக்கா பண்டாரநாயக்க ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்தார்.

சம காலத்தில் சந்திரிக்கா பண்டாரநாயக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் முஸ்லிம் காங்கிரசுடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். அதன்போது அவர்களது முதன்மைக் கேள்வியாக "ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து எத்தனை உறுப்பினர்கள் வெளியே வருவார்கள்?" என்பதே எழுப்பப்பட்டது. அத்தோடு

சந்திரிக்கா பண்டாரநாயக்க பொது வேட்பாளராக போட்டியிடுவார் என்பதே அவர்களது எதிர்பார்ப்பாகவும் இருந்தது. இதேவேளை மக்கள் விடுதலை முன்னணியுடனான கலந்துரையாடலை மங்கள சமரவீர முன்னெடுத்து வந்தார். சந்திரிக்கா பண்டாரநாயக்க தமக்கு விசுவாசமான சிலரிடம் "மைத்ரியைப் போன்ற ஒருவர் பொது வேட்பாளராக வந்தால் எப்படி" என்ற கேள்வியை கேட்டுப்பார்த்த போதிலும் அதன் போதெல்லாம் "இல்லையில்லை நீங்களே பொது வேட்பாளராக வரவேண்டும்" என்ற பதிலே அவர்களிடமிருந்து கிடைத்தது.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவருடன் முறுகல் நிலையிலிருந்த சில விமர்சனங்களையும் முன்வைத்து வந்த அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அரசைவிட்டு வெளியேறும் பட்டியலில் முதலிடத்தில் இருந்துவந்த அதேநேரம் இதோ வெளியேறுகிறேன். அதோ வெளியேறுகின்றேன் என்று காலத்தை கடத்திய போதிலும் இறுதிவரை வெளியேறவில்லை. அத்தோடு பல தடவைகள் சந்திரிக்கா பண்டாரநாயக்க உள்ளிட்ட முன்னோடிகள் பலருடனும் இரகசிய கலந்துரையாடல்களுக்கு வருவதாக கூறிவிட்டு கடைசி நேரத்தில் அக் கலந்துரையாடலில் பங்கேற்காது இருப்பதையும் அவர் வழக்கமாக கொண்டிருந்தார். அவரைப்போல் இன்னும் பலர் அந்தப் போக்கினை பின்பற்றினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். மகிந்த ராஜபக்ஷ மீது இருந்துவந்த அதீத அச்சமே இதற்கு காரணமாகும். ஆயினும் அவ்வாறான இரகசிய சந்திப்புக்களில் தாம் கலந்து கொள்வதாக கூறிய வார்த்தையினை காப்பாறும் வகையில் நடந்துகொண்ட துமிந்த திஸாநாயக்க, பல தடவைகள் சந்திரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டார். இன்னும் சிலர் ஸ்கைப் தொழில்நுட்பம் ஊடாக அவ்வாறான கலந்துரையாடல்களில் கலந்து கொண்டனர்.

இதற்கிடையே மாகாண சபைத் தேர்தலில் ஊவா மாகாணத்தில் ஏற்பட்ட சாதகத் தன்மையினை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள திட்டமிட்ட ரணில் விக்ரமசிங்க சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் பொது வேட்பாளராகக் களமிறங்காத பட்சத்தில் தாமே பொது வேட்பாளராக களமிறங்கப் போவதாக அறிவித்தார். ஆயினும் சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பல முக்கியஸ்தர்களும் "மகிந்த ராஜபக்ஷ வுடன் போட்டியிட்டு ரணில் விக்ரமசிங்கவினால் ஒருபோதும் வெற்றியீட்ட முடியாது" என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தனர்.

இதேவேளை பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் ரணில் விக்ரமசிங்கவிற்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது பொது வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க களமிறங்கினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை ரணில் விக்ரமசிங்கவிற்கு வழங்க முடியாது எனவும், அப்படி ரணில் போட்டியிடுவாராயின் தமிழ்த் தரப்பு, ஒரு தமிழரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கும் எனவும் சம்பந்தன் ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்தார்.

அதேசமயம் "தூய்மையான எதிர்காலம்" அமைப்பின் தலைவர் அத்துரலியே ரத்தன தேரருக்கும் ரணில் விக்ரமசிங்கவிற்குமிடையிலான சந்திப்பின் போது ரத்தன தேரர், ரணில் விக்ரமசிங்க தவிர்ந்த ஒருவர் பொது வேட்பாளராகப் போட்டியிட்டால் தாம் அரசாங்கத்தைவிட்டு வெளியேறி பொது வேட்பாளரின் வெற்றிக்காக பாடுபடுவதாக தெரிவித்தார். மாதுளுவாவே சோபித தேரரும் இதே நிலைப்பாட்டையே கொண்டிருந்தார்.

இவ்வாறு தாம் பொது வேட்பாளராக களமிறங்குவதற்கு எதிரான கருத்துக்கள் தலைதூக்கி வருவதை உணர்ந்த ரணில் விக்ரமசிங்க தாம் போட்டியிட்டு வெற்றிகொண்ட பின்னர் பிரதமராக பதவி வகிக்கும் அதேவேளை பெயரளவிலான ஜனாதிபதிப் பதவியினை சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கு பெற்றுக் கொடுப்பதாக தெரிவித்தார். ஆயினும் ரணிலின் கருத்துக்களை செவிமடுத்த சந்திரிக்கா பண்டாரநாயக்க, தாம் எந்தவித அரசியல் பதவியினையும் ஏற்கப் போவதில்லை என தெரிவித்ததுடன், இதுவரை தாம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் படி மைத்ரி உள்ளிட்ட ஒரு பிரிவினர் அரசாங்கத்தைவிட்டு வெளியேறுவதற்கு சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் ரணில் விக்ரமசிங்கவிடம் கூறினார். இதற்கிடையில் கட்சிக்குள்ளிருந்து தலைதூக்கும் எதிர்ப்பை சமாளிக்கும் நோக்கிலும் கரு ஜயசூரியவை பொது வேட்பாளராக களமிறக்க விரும்பும், சோபித தேரரையும் கரு ஜயசூரியவையும் சமாளிக்கும் நோக்கிலும் தாம் பதவிக்கு வந்த பின் உருவாக்கப்படும் புதிய அரசியல் யாப்பின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படுவதனால் உருவாக்கப்படும் பெயரளவிலான ஜனாதிபதிப் பதவியை கரு ஜயசூரியவிற்கு கொடுக்க இருப்பதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். அதற்கு கரு ஜயசூரிய தாம் எதற்கும் சம்மதம் என்ற பதிலை வழங்கினார்.



இதற்கிடையே 2014 ஆம் ஆண்டு தெற்கு மற்றும் மேல் மாகாண சபைகளுக்கான தேர்தல்களின் முடிவில், அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலருடனான கலந்துரையாடலின் போது அவ்வாண்டின் இறுதியில் தாம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவிருப்பதற்கான சமிக்ஞையினை மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டார். இந்த அரசியல் சமிக்ஞை வெளியிடப்பட்ட மறுதினமே அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவை சந்தித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க, "மறுபடியும் இவரை ஜனாதிபதியாக்க நான் ஒரு போதும் விரும்பவில்லை, என்னால் ரணிலுக்கும் உதவ முடியாது. ஒரு பொது வேலைத்திட்டம் உருவானால் மாத்திரமே என்னால் இணைந்து செயற்பட முடியும். அப்படி இல்லாவிட்டால் அரசியலில் இருந்து விலகிக்கொள்ளவே எண்ணியுள்ளேன்" என கூறினார். அமைச்சர் மைத்ரியின் கருத்தும் அதுவாகவே இருந்து. மைத்ரியை சந்தித்த அமைச்சர் சம்பிக்க அடுத்தபடியாக அமைச்சர் ராஜித சேனாரத்னவையும் சந்தித்தார். அவரும் மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு உதவ தாம் தயாரில்லை என உறுதியாகத் தெரிவித்தார்.

இதற்கிடையே 2014 செப்டெம்பர் மாதத்தில் ஒரு நாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வை சந்தித்தார். அச்சந்திப்பின்போது 2010 இற்கு பின்னர் தமது அமைச்சின் செயற்பாடுகளை சுதந்திரமாக செயற்படுத்த விடாது அனைத்து விடையங்களிலும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலையிடுவதாகவும், ஊடகவியலாளர் பிரகீத் என்னெலிகொடவின் கொலையின் பழியை தம்மீது சுமத்துவதாகவும் முறையிட்டதுடன், மிகுந்த ஆதங்கத்துடனும் உத்வேகத்துடனும் தொடர்ந்தும் பேசிய சம்பிக்க "உங்களது குடும்ப உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து இந்த அரசாங்கத்தை நடத்துவதையிட்டு எல்லா அமைச்சர்களும் மிகுந்த வேதனை அடைந்திருக்கின்றார்கள். அந்த நிலைமை அவர்களால் தொடர்ந்தும் பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு உக்கிரமடைந்திருக்கின்றது. எம்மாலும் இவற்றை இதற்கு மேலும் பொறுக்க இயலாது. நாம் எமது இளம் பருவத்தில் ஜேஆர் உடனும் மோதியிருக்கின்றோம். பிரேமதாசவுடனும் மோதியிருக்கின்றோம்." என்றதும் மகிந்த ராஜபக்ஷ அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்து எழுந்து "தம்பி இந்த விசயங்களை நீ எனக்கு சொன்னது நல்லது" என்றார். அதன்போதும் தனது பேச்சை நிறுத்தாத சம்பிக்க "நீங்கள் உங்கள் தவறுகளை திருத்திக் கொள்ளுங்கள். இந்த விடயங்களுக்கு சாதகமான பதில்களைத் தேடுங்கள்" என்றதும் மகிந்த ராஜபக்ஷ "ஏன் நீங்கள் என்னைத் தோற்கடிக்கவா? இந்தப்

பணமும் பலமும் இருக்க என்னைத் தோற்கடிக்க முடியுமென நீங்கள் நினைக்கிறீங்களா?'' என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த சம்பிக்க ''2005 இல் நீங்கள் வெற்றி பெற்றது டிரான் அலஸினால் என்று நினைக்கக்கூடும். ஆனால் சரத் என் சில்வா, சமல் மற்றும் பசில் ஆகியோருக்குத் தெரியும் 2005 இல் நாம் எப்படி வேலை செய்தோமென்று. ஆனால் நாங்கள் செய்த எல்லாவற்றையும் தான் செய்ததாகவே பசில் உங்களுக்குக் காட்டியிருப்பார். ஒரு வேலையை கையிலெடுத்தால் அதை எப்படி செய்துமுடிக்க வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும்'' என்றார். அதைக் கேட்டு மீண்டும் தாமிருந்த கதிரையைவிட்டு எழுந்த மகிந்த ''நானும் தெற்கே பெலியத்தையை சேர்ந்தவன். எனக்கும் 40 வருட அரசியல் அனுபவம் இருக்கு. அது உங்களுக்கும் தெரியும்'' என்றார். அதன்போது சம்பிக்கவும் தாமிருந்த கதிரையைவிட்டு எழுந்தவாறு, ''ஜனாதிபதி அவர்களே எனக்கென்று இழப்பதற்கு சொத்துக்களோ, குடும்பமோ எதுவுமே இல்லை. நாம் மோதிப் பார்ப்போம்'' என்று கூறிவிட்டு அலரி மாளிகையை விட்டு வெளியேறினார்.

பின்னர் இந்த முரண்பாட்டை சமரசம் செய்யும் நோக்கில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர்களுக்கும் மகிந்த ராஜபக்ஷ வுக்குமிடையே ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. அச்சந்திப்பின்போது ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் ''2005 இல் உங்களுக்கு கிடைத்த மக்கள் ஆணையை மிகச்சிறந்த முறையில் செயற்படுத்தி பயங்கரவாதத்தை முடித்து வைத்தீர்கள். இருந்தபோதிலும் 2010 முதல் இதுவரை நிகழ்ந்தவற்றைப் பற்றி எவருக்குமே திருப்தி இல்லை. ஆகவே நாமும் நாடும் சந்தோசப்படக்கூடிய ஒரு விடயத்தை செய்துவிட்டு தேர்தலுக்குப் போவோம். மக்களும் நாடும் சந்தோசப்பட வேண்டுமானால் நீங்கள் இந்த அரசியல் சீர்திருத்தங்களை செய்தே ஆகவேண்டும்'' என்றார். அதற்கு பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, ''நீங்கள் சொல்லும் அரசியல் சீர்திருத்தங்களை செய்ய இப்போது நேரமில்லை. வேண்டுமானால் உங்கள் யோசனைகளை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துவிடலாம்'' என்றார். அதனைத் தொடர்ந்து ஜாதிக ஹெல உறுமயவிற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான உறவு மென்மேலும் விரிசலடையத் தொடங்கியது. இச்சந்திப்பின் பின்னர் 2014 நவம்பர் 19 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அரசாங்கத்தைவிட்டு வெளியேறுவதற்கு முன்பாக 15 ஆம் திகதி அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவை சந்தித்த சம்பிக்க, தாம் மேற்கொள்ளப்போகும் சவால் மிக்க தீர்மானத்தைப் பற்றித் தெரிவித்தார். அத்தோடு மைத்ரி பொது

வேட்பாளராக களமிறங்குவாராயின் நிச்சயம் தனதும் தனது கட்சியினதும் முழு ஆதரவையும் வழங்குவதாக கூறினார். அப்போதுகூட இன்னும் சில தினங்களில் தாம் பொது வேட்பாளர் என்னும் சவாலை ஏற்கவிருக்கின்ற விடயத்தை சம்பிக்கவிடம் கூறாது அமைச்சர் மைத்ர மௌனம் சாதித்தார்.

இந்த சந்திப்புக்களின் பின்னர் சம்பிக ரணவக்க நவம்பர் 20 ஆம் திகதி தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தைவிட்டு வெளியேறும்போது மகிந்த ராஜபக்ஷ தொலைபேசியில் சம்பிக்கவை தொடர்பு கொண்டு "சம்பிக்க, நீங்கள் கெட்டிக்காரன். உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது. அரசியல் ரீதியாக உங்களிடம் எனக்கு எந்தக் கோபமும் இல்லை. உணர்ச்சிவசப்பட்டு இந்த நேரத்தில் எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்" என்றார். அதற்கு சம்பிக ரணவக்க "உணர்ச்சிவசப்பட்டு முடிவெடுப்பவனாக இருந்திருந்தால் 2011 ஆம் ஆண்டே நான் அரசாங்கத்தைவிட்டு விலகியிருப்பேன். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் நீங்களும் உங்கள் குடும்பத்தவர்களும் போகும் போக்கு சரியானதாக இல்லை. இந்தப் பிரச்சினைகளை எதிர்கால சந்ததியினர் துப்பாக்கி முனையால் தீர்த்துக் கொள்ளும் வரை வளரவிடாது இதனை நாம் தேர்தல் மூலம் தீர்த்துக் கொள்ளுவோம்" எனப் பதிலளித்தார். அதைக் கேட்ட மகிந்த ராஜபக்ஷ "நான் தோற்றுவிடுவேன் என்றா நினைக்கிறீர்கள்" என்று கேட்டார். "ஆம் அதற்கான சூழல் உருவாகிவிட்டது" என்றார் சம்பிக்க. பலத்த சிரிப்புடன் பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ "அப்படியா, நாம் தேர்தலின் பின்னர் சந்திப்போம்" எனக்கூறி உரையாடலை முடித்துக் கொண்டார்.

இதற்கிடையே இலங்கை அரசியலில் தேர்தல்களின் போது தாம் சார்ந்த வேட்பாளரை வெற்றியீட்டச் செய்வதில் கைதேர்ந்தவரான மங்கள சமரவீரவை, மீண்டும் தம்மோடு சேர்த்துக் கொள்ள மகிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் எடுத்துக்கொண்ட கடும் முயற்சிகள் கடைசிவரை கைகூடாது போய்விட்டது. அதற்கு சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கும் மங்கள சமரவீரவிற்குமிடையிலிருந்த ஆழமான நட்பும் விசுவாசமுமே காரணமாக அமைந்தது.

இப்பின்னணியில் பாராளுமன்றிலும் வெளி இடங்களிலும் எதிர்க் கட்சி உறுப்பினர்களை சந்திக்கும் போதெல்லாம் ஆளும் கட்சியின் சில உறுப்பினர்கள் "இந்த அரசாங்கத்தை வீழ்த்த ஏதாவது செய்யும் உத்தேசம் இல்லையா?" என்று கேட்கின்ற நிலை ஏற்பட்டது.



நாளுக்கு நாள் அரசியல் சூழ்நிலை இவ்வாறு சூடுபிடிக்கத் தொடங்கியதால் சந்திரிக்கா பண்டாரநாயக்க மீதான பொது வேட்பாளர் பற்றிய தாக்கமும் அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் உடனடியாக அமைச்சர் மைத்ரியுடன் கதைத்து ஒரு தீர்க்கமான முடிவை எட்டவேண்டிய கட்டாய நிலை சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கு ஏற்பட்டது. இருப்பினும் சுதந்திர சதுக்கத்திற்கு அருகே அமைந்திருந்த அவரது வீடு உட்பட்ட அப்பிரதேசத்தின் உள்வரும் வெளிச் செல்லும் அனைத்துத் தொலைபேசி அழைப்புக்களையும் ஒட்டுக்கேட்கும் நிலை ஏற்பட்டிருந்ததால் சாதாரண தொலைபேசி அழைப்பின் மூலம் அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவை தொடர்புகொள்ள முடியாமல் இருந்தது. அத் தடையை தாண்டியே மைத்ரியுடனான தொடர்பை ஏற்படுத்த வேண்டியிருந்தது. அதன்போது சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் நீண்டகால நம்பிக்கைக்குரியவராக இருந்துவந்த "திஸா மற்றும் அவரது மகன் சஷிமால் ஆகியோர் உதவிக்கு வந்தனர். சஷிமால் தமது கையடக்க தொலைபேசியுடன் விஜயராமையில் அமைந்திருந்த அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவின் வீட்டுக்குச் சென்றார். சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் ஒரு பிரத்தியேக இலக்கத்தில் *"வைபர்"* தொழில் நுட்பம் ஊடாக மைத்ரியுடன் தொடர்பு கொண்டார். சுமார் 10 நிமிடங்கள் நீடித்த அந்தக்

கலந்துரையாடலின் முடிவில் மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்க முன்வருவதாக சந்திரிக்கா பண்டாரநாயக்கவிடம் உறுதியளித்தார்.

அந்த உறுதிமொழியை அடுத்து சந்திரிக்கா, மலிக் சமரவிக்ரம மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை சந்திக்க வேண்டுமென்ற செய்தியை அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அச்செய்தி கேட்டு அவ்விருவரும் சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் வீட்டுக்கு வந்து அவரைச் சந்தித்தனர். அச்சந்திப்பின்போது சந்திரிக்கா பண்டாரநாயக்க, ரணில் விக்ரமசிங்கவிடம் "ரணில், பொது வேட்பாளர் யார்?" எனக் கேட்டார். அதற்கு அவர் "எனது கட்சி நான் போட்டியிடுவதையே விரும்புகின்றது" என்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மையானோர் ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாளராகப் போட்டியிடுவதை விரும்பவில்லை என்பதை நன்கு அறிந்து வைத்திருந்த சந்திரிக்கா பண்டாரநாயக்க "அப்படியா" என்றுவிட்டு அடுத்த கேள்வியையும் அவரே கேட்டார். "உங்களால் வெல்ல முடியுமென நினைக்கின்றீர்களா?" அதற்கு ரணில் விக்ரமசிங்க, "தமிழ்-முஸ்லிம் தலைவர்கள் எனக்கு ஆதரவு தருவதாக இணக்கம் தெரிவித்திருக்கின்றார்கள்" என்றார். ரணிலின் பதிலையடுத்து "இல்லை ரணில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்னையும் சந்தித்தார்கள். உங்களால் வெல்லமுடியாது என்றே அவர்களும் கருதுகின்றார்கள். அத்தோடு நான் போட்டியிடுவதாக இருந்தால் "நூற்றுக்கு நூற்றியொரு வீதம் ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் என்னிடம் கூறினார்கள்" என்ற சந்திரிக்கா பண்டாரநாயக்க, "நீங்கள் நல்லவராக இருந்தபோதிலும் உங்களால் மகிந்தவை தோற்கடிக்க முடியாது என்றே அவர்கள் கருதுகின்றார்கள்" என்று கூறியதுடன், "என்னென்ன காரணத்திற்காகவோ நீங்கள் 17 தடவைகள் மகிந்தவிடம் தோற்றிருக்கின்றீர்கள். அதனால் உங்களின் புகழ் சரிந்திருக்கின்றது ஆகையால் மகிந்தவுடன் போட்டியிட ஒரு புது முகம் வருவது நல்லதென்பதே அவர்களின் கருத்தாக இருக்கின்றது" என்றார். சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் அந்தக் கருத்தை அருகிலிருந்த மலிக் சமரவிக்ரமவும் ஆமோதிப்பதாகவே அமைந்தது.

அதுவரை சந்திரிக்கா பண்டாரநாயக்காவை நேரடியாக சந்தித்திராத போதிலும் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமும் தூதுவர் மூலமாக ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் நிச்சயம் தோல்வியடைவார் என்ற விடயத்தை சந்திரிக்கா பண்டாரநாயக்கவிடம் தெரிவித்திருந்தார். தருணம் பார்த்து

சந்திரிக்கா பண்டாரநாயக்க அவ்விடயத்தை, "நீங்கள் வந்தால் நிச்சம் தோற்கடிக்கப்படுவீர்கள்" என்றும் "நான் போட்டியிடுவதாக இருந்தால் அமைச்சர் பதவியை விட்டு வரத் தயார் என்றும்" நீங்கள் போட்டியிடுவதை அவர்கள் அவ்வளவாக விரும்பவில்லை என்றும், ஹக்கீமும் என்னிடம் தெரிவித்தார்" என ரணில் விக்ரமசிங்கவிடம் கூறினார். அத்தோடு "சுதந்திரக் கட்சிக்காரர்களின் நிலைப்பாடு என்ன என்பது பற்றியும் எனக்குத் தெரியவில்லை. இருந்த போதிலும் ஐ.தே.க. தலைமைத்துவத்தின் கீழ் போட்டியிடுவதை அவர்களும் விரும்பமாட்டார்கள் அதனால் அவர்களது நிலைப்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்படக்கூடும்" என்றார்.

இவ்வாறு சந்திரிக்கா பண்டாரநாயக்க ஒன்றின்பின் ஒன்றாக முன்வைத்த விடயங்களை மிகப் பொறுமையாக செவிமடுத்துக் கொண்டிருந்த ரணில் விக்ரமசிங்க "சரி அப்படியென்றால் நான் பின்வாங்கத் தயார். ஆனால் அது உங்களுக்காக மட்டுமே" என்றார். அதற்கு பதிலளித்த சந்திரிக்கா "என்னால் பொது வேட்பாளராக போட்டியிட முடியாது என்ற விடயத்தை நான் ஏற்கனவே மலிக் சமரவிக்ரமவிடம் கூறியிருக்கிறேன். உங்களது கட்சியின் ஏனையோரிடமும் இதை நான் சொல்லியிருக்கிறேன். ஆகையால் வெல்லக்கூடிய ஒரு நல்ல பொது வேட்பாளரை நாம் தேர்ந்தெடுப்போம். நீங்களும் இதற்கு சம்மதம் என்றால் நானே போட்டியிடுவதுபோல் பூரண அர்ப்பணிப்புடன் செயற்பட்டு சுதந்திரக் கட்சியின் வாக்குகளையும் பெற்றுத் தருவேன்" என்றார். அவர் அதைச் சொல்லி முடிப்பதற்குள் "உங்களால் போட்டியிட முடியாவிட்டால் யாரைப் போட்டியிட வைப்பது? என்று கேட்டார் ரணில். அவரது அந்த தீர்க்கமான கேள்விக்கு சொல்ல வேண்டிய பதிலை நாசூக்காக தேர்ந்தெடுத்த சந்திரிக்கா பண்டாரநாயக்க மிகுந்த நம்பிக்கையுடன் "உங்களுக்கும் சம்மதம் என்றால் நான் அதை உங்களிடம் சொல்கின்றேன்" என்றதுடன் தனது பதிலைக் கேட்டு ரணில் விக்ரமசிங்கவின் மனம் புண்படாது இருக்கவேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு "இதைப்பற்றி நான் பெரிதும் சிந்தித்துப் பார்த்தேன். நன்றாக ஆராய்ந்தும் பார்த்தேன். உங்களது கட்சியில் உங்களைத் தவிர வேறு தகுதியானவர் எவருமில்லை. ஆயினும் துரதிஷ்ட வசமாக நீங்களும் தொடர் தோல்விகளைச் சந்தித்திருக்கின்றீர்கள். எமது தரப்பில் என்றால் ஒருவர் இருக்கின்றார்" என்றார். அதைக் கேட்ட ரணில் விக்ரமசிங்க மிகுந்த பரபரப்புடன் "அது யார்?" என்றார். அதற்கு மிகுந்த அபிமானத்துடன் "மைத்ரி" என்றார் சந்திரிக்கா பண்டாரநாயக்க. அதைக்கேட்டு வியந்த ரணில் விக்ரமசிங்க "மைத்ரி" என உச்சரித்ததுடன்

"அவர் வர விரும்புகின்றாரா" எனக் கேட்டார். அதற்கு சந்திரிக்கா "மைத்ரியிடம் இதைப்பற்றி நான் பேச ஆரம்பித்து பல மாதங்கள் ஆகின்றன. நீங்களே உங்களை பொது வேட்பாளராக அறிவித்துக் கொள்வதற்கு முன்பிருந்தே நான் அவருடன் பேசி வந்திருக்கிறேன். ஆரம்பத்தில் அவரும் அதைப் பெரிதாக விரும்பவில்லை. ஆனால் இப்போது அவர் சம்மதம் தெரிவித்திருக்கின்றார்" என்றார்.

மைத்ரியின் பெயரைக் கேட்டதும் திகைத்துப்போன ரணில், "அவர் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளாரா?" என மீண்டும் வினவினார். அதற்கு சந்திரிக்கா "அப்படித்தான் தெரிகிறது. நீங்களும் இதற்கு சம்மதம் என்றால் என்னால் அவரை சம்மதிக்கவைக்க முடியும்" என்றார்.

மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக அவரைத் தோற்கடிக்கும் நோக்கில் பொது வேட்பாளராக களமிறங்க அமைச்சர் மைத்ரிபால சிறிசேன தயார் என்ற செய்தியினை சந்திரிக்கா பண்டாரநாயக்க மூலமாக முதல் முறையாக கேட்டறிந்த ரணில், அதையிட்டு மிகுந்த ஆச்சரியம் அடைந்திருப்பார் என்பதும், மிக முக்கியமான சந்தர்ப்பம் வரும்போது மைத்ரி தமது நிலைப்பாட்டை விட்டு விலகிவிடுவாரா, உண்மையிலேயே மைத்ரி இந்த சவாலை ஏற்கப் போகின்றாரா, அல்லது காலத்தை கனியவிட்டு தகுந்த தருணம் பார்த்து பொது வேட்பாளர் தாமேயென மகிந்தவிடம் கூறி அதனால் ராஜபக்ஷவினருக்கு ஏற்படும் தாக்கத்தைக் கொண்டு அவர்களை மிரட்டி பிரதமர் பதவியை தமதாக்கிக் கொண்டு பொது வேட்பாளர் வேலைத்திட்டத்தை தவிடுபொடியாக்கி விடுவாரா என்ற எண்ணங்கள் ரணில் விக்ரமசிங்கவின் மனதில் ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவர் சந்திரிக்காவிடம் கேட்ட "மைத்ரியை நம்ப முடியுமா?" என்ற அடுத்த கேள்வி அதனையே உறுதிப்படுத்துகின்றது. அதற்கு "நீங்கள் என்னை நம்புவதாக இருந்தால் அவரையும் நம்புங்கள்" என்ற சந்திரிக்காவின் பதிலும் மிக உறுதியாகவே அமைந்தது. "நீங்களே அப்படிச் சொல்வதால் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்" என ரணில் விக்ரமசிங்க தெரிவித்ததை அடுத்து இலங்கை அரசியலில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்த அடித்தளம் அமைத்த அந்தக் கலந்துரையாடல் முடிவுக்கு வந்தது.

இந்த சந்திப்பின் பின்னர் ஒரு நாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் தமது இல்லத்தில் நடத்திய கலந்துரையாடலின் முடிவில் "சம்பந்தன் ஐயா அவர்களே, மைத்ரிபால சிறிசேனவைப் பற்றிய உங்களின் கருத்து என்ன?" என



சந்திரிக்கா வினவினார். அதற்கு பதிலளித்த சம்பந்தன் "சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரா? அவரொரு நல்ல மனிதர், ஆனால் அவர் போட்டியிட முன்வருவாரென நம்பமுடியுமா?" என்ற கேள்வியை எழுப்பினார். அதற்கு சந்திரிக்கா பண்டாரநாயக்க "நிச்சயம் நம்பலாம்" என்றார்.

இவ்வாறு தமது அனைத்து அரசியல் அனுபவங்களையும் அறிவையும் சிறந்த முறையிலும் உகந்த வகையிலும் பயன்படுத்திய சந்திரிக்கா பண்டாரநாயக்க, எதிர்க் கட்சியின் சகல தரப்புக்களுடனும் நம்பிக்கைக்குரிய கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதற்குரிய பலம்மிக்க பின்னணியினை உருவாக்கினார். இதற்கு சமாந்தரமாக 2014 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சோபித தேரர் ஆகியோரின் தலைமையில் 19 அமைப்புக்களும், கட்சிகளும் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற உடன்பாட்டை எட்டியதன் மூலம் பொது வேட்பாளர் எனும் கனவு நனவாகும் சாத்தியக்கூறுகள் தென்படத் தொடங்கியது. ஆயினும் அதே தினத்தன்று உச்ச நீதிமன்றம் மகிந்த ராஜபக்ஷவிற்கு மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற தீர்ப்பினை வழங்கியது.

அதைத் தொடர்ந்து நவம்பர் 13ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர்

சந்திப்பில் கலந்துகொண்ட சுகாதார அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவிடம் ஊடகவியலாளர்கள் முதன்முறையாக ஒரு புதுக் கேள்வியை முன்வைத்தனர். “நீங்கள் பொது வேட்பாளராக வரப்போகின்றீர்களா? எதிர்க் கட்சியிடமிருந்து அதற்கான அழைப்பு கிடைத்திருக்கின்றதா?” அதற்கு சிரித்தவாறே பதிலளித்த மைத்ரி “எவர் எதிர்க்கட்சிக்கு போவார்? எதிர்க்கட்சிக்காரர்கள்தானே ஆளும்கட்சிக்கு வந்துகொண்டிருக்கின்றார்கள்” என்று சமாளித்தார். ஜனாதிபதித் தேர்தலை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் வரை பொது வேட்பாளராக போட்டியிடப் போகும் விடயத்தை பரம இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டியது அன்றைய சூழ்நிலையில் கட்டாயத் தேவையாகவே இருந்தது.

இதற்கிடையே அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மகன் சத்துர சேனாரத்ன, அத்துரலிய ரத்தன தேரரின் தூய்மையான எதிர்காலம் அமைப்பின் அரசியல் செயற்பாடுகளுக்கு உதவியவாறு புதிய அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தமது தந்தைக்கு உடந்தையாக செயற்பட ஆரம்பித்ததுடன் பொது வேட்பாளர் விடயத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தார்.

அமைச்சர் ராஜிதவிற்கும் சம்பந்தனுக்குமிடையிலான ஒரு கலந்துரையாடலின் போது “தகுந்த பொது வேட்பாளரை தேர்ந்தெடுக்க முடியுமாக இருந்தால் தமிழ்த் தரப்பு நிபந்தனைகள் அற்ற முழு ஆதரவையும் வழங்கத் தயார்” என சம்பந்தன் ராஜிதவிடம் தெரிவித்தார்.

இந்தப் பின்னணியிலேயே ரணில் விக்ரமசிங்க, ராஜித சேனாரத்ன ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்போது ரணில் விக்ரமசிங்க தாம் பொது வேட்பாளராக போட்டியிடுவதையே தமது கட்சி விரும்புகின்றது எனவும், தனது வெற்றி நிச்சயம் என்பதைப் பற்றியும் புள்ளி விபரங்களுடன் ராஜிதவிடம் எடுத்துக் கூறினார். ரணில் விக்ரமசிங்கவின் கருத்தை செவிமடுத்த ராஜித, தமது கருத்துக்களை முன்வைத்தார். “தலைவர் அவர்களே, நீங்கள் என்னதான் புள்ளிவிபரங்களை முன்வைத்த போதிலும் நீங்கள் போட்டியிட்டால் தோல்வியே நிச்சயம். அதை நிரூபிக்க போதுமான புள்ளி விபரங்களும் ஆதாரங்களும் என்வசம் இருக்கின்றது. நீங்கள் போட்டியிடுவதாக இருந்தால் தமிழ்த் தரப்பு தனித்துப் போட்டியிடுமென சம்பந்தன் என்னிடம் தெரிவித்திருக்கின்றார். ஹக்கீம், ரிஷாட் ஆகியோரும் அரசாங்கத்தைவிட்டு வெளியேற மாட்டார்கள். சுருங்கச் சொன்னால் நீங்கள் இத்தேர்தலில் போட்டியிட்டால் தேர்தல் முடிந்த மறுதினமே

உங்கள் அரசியலும் முடிவுக்கு வந்துவிடும். எஞ்சியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் சிதைந்து போய்விடும். அவர்கள் எல்லோருமே ராஜபக்ஷவிடம் சென்றுவிடுவார்கள். நாட்டிலுள்ள அத்தனை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் உங்களை குறை கூறுவார்கள். ஆகையால் இத்தருணத்தில் புத்தி சாதூரியமாக நீங்கள் ஒரு அடி பின்வாங்கினால் உங்களுக்கே பிரதமராகும் வாய்ப்பும் கிடைக்கும். இது ஒரு தாயப் பந்தயம், இரண்டு காய்களைக் கொடுத்து மூன்று காய்களை எடுப்பதே நல்லது என்பதால் உங்கள் மனதை நீங்களே சமாளித்துக் கொள்ளுங்கள். அதை மீறி நீங்கள் தேர்தலில் போட்டியிட்டால் எமக்கும் வேறு வழியில்லாது போய்விடும். தண்டவாளத்தில் தலையை வைக்க எம்மால் முடியாது. இதையெல்லாம் கூறிய பின்னரும் நீங்களேதான் போட்டியிடப் போகின்றீர்கள் என்றால், விரும்பியோ விரும்பாமலோ மகிந்தவின் தேர்தல் வெற்றிக்கான வேலைகளையே என்னால் செய்ய நேரிடும்'' எனக் கூறினார்.

அதற்கு ரணில் ''அப்படியென்றால் இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?'' எனக் கேட்டார். அதற்கு ராஜித, ''நீங்கள் பொது வேட்பாளரை ஏற்றுக்கொள்வதே நல்லது. அதுவொரு வரலாற்று சிறப்புமிக்க முடிவாகவே அமையும். அம்முடிவிலேயே உங்கள் அரசியல் எதிர்காலமும் தங்கியிருக்கின்றது'' என்றார். அதற்கு ரணில் விக்ரமசிங்க, ''அப்படியானால் பொது வேட்பாளராக உங்களது தெரிவு யார்?'' என்று கேட்டார். அதற்கு ராஜித சேனாரத்ன, ''கரு ஜயசூரிய'' என்றார். அதற்கு ரணில், ''தயவுசெய்து



எனது கட்சியினைத் தவிர்ந்த ஒருவரை பொது வேட்பாளராக முன்மொழியுங்கள்'' என்றதுடன், ராஜித சேனாரத்னவையே பொது வேட்பாளராக போட்டியிடுமாறும் அதற்கு தேவையான அரசியல் பலத்தையும் நிதியுதவிகளையும் தாம் வழங்கத் தயார் எனவும் தெரிவித்தார். அதற்கு ராஜித, ''2015 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் முஸ்லிம் வாக்குகள் நிச்சயம் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமைவதால், பொது வேட்பாளராக போட்டியிடுபவர் கணிசமான அளவு சிங்கள பௌத்த வாக்குகளையும் பெறக்கூடியவராக இருக்க வேண்டுமெனவும், தாம் சிங்கள பௌத்த வாக்காளர்களை பெருமளவு கவரக்கூடியவர் அல்ல'' எனவும் தெரிவித்தார். இத் தீர்க்கமான கலந்துரையாடலின்போதுகூட மைத்ரி பற்றி சந்திரிக்கா பண்டாரநாயக்கவிற்கும் தமக்கும் இடையிலான கலந்துரையாடலைப்பற்றி ஒரு வார்த்தையைக்கூட ரணில் விக்ரமசிங்க ராஜித சேனாரத்னவிடம் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மறுநாள் காலை அமைச்சர் மைத்ரிபால சிறிசேனவைச் சந்தித்த ராஜித சேனாரத்ன, முதல்நாள் தமக்கும் ரணில் விக்ரமசிங்கவிற்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் முழு விபரத்தையும் தெரிவித்தார். அச்சமயம் ''தாமும் மீண்டும் ராஜபக்ஷவினருடன் அரசியலில் ஈடுபட விரும்பவில்லை'' என்பதை மைத்ரியும் திட்டவட்டமாக தெரிவித்தார். அவரின் கருத்தை ஆமோதித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, முதல்நாள் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் பார்க்கும் போது, பொது வேட்பாளராக போட்டியிட மிகச்சிறந்த தகைமைகளை அமைச்சர் மைத்ரியே கொண்டிருப்பதாகக் கூறினார். ஆயினும் அதற்கு சாதகமான பதிலை தெரிவிப்பதை மைத்ரி தவிர்த்துக் கொண்டார்.

இந்த சந்திப்பின் இரு தினங்களுக்கு பின்னர் மீண்டும் ரணில் விக்ரமசிங்கவிற்கும், ராஜித சேனாரத்னவுக்குமிடையிலான சந்திப்பொன்று நடந்தது. அதன்போது ரணில் தம்மை பொது வேட்பாளராக போட்டியிடுமாறு கட்சியினுள் பெரும் அழுத்தம் ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தார். ரணிலின் பேச்சை செவிமடுத்த ராஜித, ஏற்கனவே முன்வைத்த விடயங்களையே மீண்டும் மிகத் தெளிவாக முன்வைத்தார். அவ்விடயங்களை செவிமடுத்த ரணில் அப்படியானால் பொது வேட்பாளராக தேர்ந்தெடுப்பது யாரை என்ற கேள்வியை மீண்டும் எழுப்பினார். அதற்கு ராஜித ''அமைச்சர் மைத்ரிபால சிறிசேன'' எனப் பதிலளித்தார். அதைக்கேட்டு அவர் வியந்ததைப் போன்ற உணர்வே ரணிலிடமிருந்து வெளிப்பட்டது.

இந்த சந்திப்பு இவ்வாறு முடிவடைந்த பின்னணியில் கபீர் ஹஸீமை தொலைபேசியில் தொடர்புகொண்ட சந்திரிக்கா பண்டாரநாயக்க தமக்கும் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்குமிடையே ஒரு பேச்சுவார்த்தையை நடத்த கபீரின் இல்லமே உகந்த இடமாகத் தென்படுவதால் அச்சந்திப்பினை ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டார். 2014 நவம்பர் மாதம் 14 ஆம் திகிதி இரவில் ஏற்பாடு செய்யப்பட்ட அச்சந்திப்பின்போது சந்திரிக்காவிற்கும் ராஜிதவிற்குமிடையில் சுமார் ஒன்றரை மணித்தியால பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

அச்சந்திப்பின் பின்னர் மீண்டும் மிக முக்கியமான சந்திப்பு ஒன்றை நடத்த அவரது வீட்டை தயார்படுத்தித் தருமாறு கபீர் ஹஸீமிடம் சந்திரிக்கா கேட்டுக் கொண்டார். அதைத் தொடர்ந்த 18 ஆம் திகதி இரவு கபீர் ஹஸீமின் இல்லத்தில் அச்சந்திப்பிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் சந்திரிக்கா பண்டாரநாயக்கவுடன் ராஜித சேனாரத்ன, மைத்ரிபால சிறிசேன ஆகிய இருவரும் கலந்து கொண்டனர். மூவருக்குமிடையிலான அந்த 90 நிமிட கலந்துரையாடலின் போதே அதிலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டிய அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட்டன. மீண்டும் 20ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு இடம்பெற்ற சந்திரிக்கா-ராஜித சந்திப்பையடுத்து அதிகாலை மூன்று மணியளவில் ராஜித-மைத்ரி சந்திப்பு இடம்பெற்றது. அதன்போது "நான் மாத்திரமாவது நாளை அரசாங்கத்தைவிட்டு வெளியே வருகிறேன். நீங்கள் மற்றவர்களுடன் பின்னர் வெளியே வாருங்கள்" என்றார் மைத்ரி. அதற்கு ராஜித, தாமும் மைத்ரி, அரசாங்கத்தைவிட்டு வெளியேறும் தினத்திலேயே வெளியே வருவதாக மைத்ரியிடம் உறுதியளித்தார்.

2014 நவம்பர் 20 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவின் சோதிடரின் தெரிவான பிற்பகல் 1.32 இல் அமைந்த சுபமுகூர்த்தத்தில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலைப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பமிட்டார். அதற்கமையவே 2015 ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

நவம்பர் 21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சந்தித்து மிகுதித் திட்டத்தை செயற்படுத்த மைத்ரியுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டுக்கு அமைய அன்றைய தினம் காலை ராஜித சேனாரத்ன அவரது மனைவியிடம் "சுஜாதா, இன்று நான் அரசாங்கத்தையும் அமைச்சர் பதவியையும் விட்டு விலகப் போகின்றேன்" என்றார். அதுவரை அவரது மனைவிகூட அதைப்பற்றி அறிந்திருக்கவில்லை. ஆகையால் அச்செய்தி கேட்டு அவர் திகைத்துப் போனார்.

இதற்கிடையே ரணில் விக்ரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தை கூட்டி ஒரு பொது வேட்பாளரை ஏற்றுக் கொள்வதென்ற தீர்மானத்திற்கு கட்சியின் சம்மதத்தை மிகுந்த சவால்களுக்கு மத்தியில் பெற்றுக் கொண்டார்.

அதேவேளை சந்திரிக்காவின் சம்மதத்துடன் கபீர் ஹஸீமின் ஏற்பாட்டில் ''நாடக ஒத்திகைக்காக'' என ஒதுக்கிக் கொள்ளப்பட்ட கொழும்பு புதிய நகர மண்டபத்தில் பொது வேட்பாளரை நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்புக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அப்பின்னணியில் அன்றைய தினம் பாராளுமன்றத்திலிருந்து சுதந்திர சதுக்க வீதியில் அமைந்துள்ள சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் வீட்டுக்கு முதலில் மைத்ரிபால சிறிசேன வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அங்கிருந்து முக்கியஸ்தர்கள் குறிப்பிட்ட நேரத்தில் புதிய நகர மண்டபத்திற்குச் சென்று நடத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு பற்றிய நேரடித் தொலைக்காட்சி ஒளிபரப்பை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை கபீர் ஹஸீம் தனது நண்பரான கிளி மஹாராஜாவிடம் கதைத்து ஏற்பாடு செய்திருந்தார்.

ஏற்கனவே வகுத்துக்கொண்ட திட்டங்களுக்கு அமைய பாராளுமன்றில், ரணில் விக்ரமசிங்க ராஜித சேனாரத்னவிடம் சாதகமான சமிக்ஞையை காட்டினார். அதற்கமைய ராஜித, மைத்ரி இருவரும் பாராளுமன்றில் சந்தித்து சில வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டதன் பின் அங்கிருந்து அவ்விருவரும் ஒரே வாகனத்தில் டொரிங்டனில் அமைந்துள்ள சந்திரிக்காவின் இல்லத்தை வந்தடைந்தனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய சவாலை ஏற்றவர் என்ற வகையில் தமது இல்லத்திற்கு வந்த மைத்ரிபால சிறிசேனவை சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆரத்தழுவி மிகுந்த அன்புடன் வரவேற்றார். அதையடுத்து மேல்மாடியில் அமைந்துள்ள தமது அலுவலக அறைக்கு மைத்ரியை அழைத்துச் சென்ற சந்திரிக்கா பண்டாரநாயக்க, அங்கே தமது ஆசனத்தைக் காட்டி ''மைத்ரி இங்கே அமர்ந்து உங்கள் மனதை ஒருமைப்படுத்திக்கொண்டு இன்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் நீங்கள் கூறப்போகும் விடயங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றார். அதன்படி சுமார் 20 நிமிடங்கள் அவ்வறையில் தங்கி தமது கையெழுத்தாலேயே தாம் சொல்லப்போகின்ற விடயங்களை மைத்ரி குறித்துக் கொண்டார்.



அதற்கு சமாந்தரமாக கபீர் ஹஸீம் தமது நெருங்கிய சகாக்கள் சிலரின் உதவியுடன் புதிய நகர மண்டபத்தின் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஏற்பாடு செய்தார். அம் மண்டபத்தில் நடத்தவிருக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது உபயோகப்படுத்தப்படும் மேடைப் பின்னணி திரையை நிர்மாணிக்கும் பொறுப்பை ஏற்றிருந்த ராஜித சேனாரத்னவின் புதல்வர் சத்துர சேனாரத்ன தமது விசுவாசத்திற்குரிய சில நண்பர்களுடன் முதல்நாள் இரவு முழுவதும் அவ்வேலைகளை மேற்கொண்டார். ''மைத்ரி ஆட்சி'' (கருணைமிகு ஆட்சி) என்ற வாசகத்தை முன்மொழிந்த சத்துர அப்பணிகளை மிக நேர்த்தியாக மேற்கொண்டார்.

அந்த சூழ்நிலையிலும்கூட மகிந்த ராஜபக்ஷவின் சில கையாட்கள் ''இங்கே எந்தப் பொது வேட்பாளரும் வரப்போவதில்லை. பிற்பகல் இரண்டு மணிக்கு மைத்ரி அலரி மாளிகையில் பிரதமர் பதவியை ஏற்கப் போகிறார்'' என்றும் ''சுய விருப்பத்தின் பேரில் பிரகடனப்படுத்திய ஜனாதிபதித் தேர்தலை மகிந்த விரும்பினால் இப்போதுகூட இரத்துச் செய்துவிட முடியும்'' என்றும் கதைகளை ஒன்றின்பின் ஒன்றாக பரப்பிக் கொண்டிருந்தனர்.

சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் வீட்டில் பகல் போசனத்தை முடித்துக்கொண்ட மைத்ரிபால சிறிசேன அங்கிருந்து ராஜித

சேனாரத்னவுடன் ஒரே வாகனத்தில் புதிய நகர மண்டபத்தை நோக்கி புறப்பட்டார். பிற்பகல் 3.10 மணியளவில் அவ்விருவரும் புதிய நகர மண்டபத்தை அடைந்தனர். 3.15 மணியளவில் சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் அங்கே வந்தடைந்தார். பொது வேட்பாளர் யாரென்ற விடயத்தை அறிய மிகுந்த ஆவலுடன் இருந்த, அனைவரும் எதிர்பார்த்திருந்த அந்த உணர்ச்சிபூர்வமான ஊடக சந்திப்பு மைத்ரிபால சிறிசேனவைத் தொடர்ந்து மேடைக்கு வருகைதந்த ராஜித சேனாரத்ன, ரஜீவ விஜேசிங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்க, அர்ஜுன ரணதுங்க, வசந்த திசாநாயக்க, துமிந்த திசாநாயக்க, எம்.கே.டி.எஸ். குணவர்த்தன ஆகியோரின் பங்கேற்பில் மாலை 3.20 மணிக்கு ஆரம்பமானது.

"தாமதம் மன வருத்தத்தை தரும், தாமதமின்றி செயற்படுதல் மனநிறைவைத் தரும்" என்ற பௌத்த உபதேசத்தினையும், குரோதத்தால் குரோதம் தணியாது" என்ற புத்த பகவானின் உபதேசத்தையும் முன்மொழிந்தவாறு தமது பேச்சை ஆரம்பித்த மைத்ரிபால சிறிசேன, தம்மை பொது வேட்பாளராக்கும் கூட்டு முயற்சியின்போது அதற்கு பூரண ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்த ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் அர்ப்பணிப்பிற்கும் நன்றி கூறியதுடன் தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவியில் அமர்த்துவதாக உறுதியளித்தார்.

ஒட்டுமொத்த நாட்டினதும் சமூக பொருளாதார செயற்பாடுகள் பற்றிய தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் ஒரு தனிக் குடும்பத்தின் கைகளுக்குள் அகப்பட்டிருப்பதாகவும் குடும்பமயமாகியுள்ள அந்த அதிகாரங்கள் உச்ச அளவில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதன் மூலம் முழு நாட்டையும் அவர்கள் அழிவுப் பாதையில் இட்டுச் செல்வதாகவும் தெரிவித்த மைத்ரி, தான் ஜனாதிபதிப் பதவியை ஏற்று 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை இரத்துச் செய்து நாட்டில் மீண்டும் சட்டத்தின் ஆதிக்கத்தினை நிலைநாட்டுவதாகவும், 17 வது சீர்திருத்தத்தினை மீண்டும் அமுல்படுத்துவதன்மூலம் பொலிஸ், தேர்தல், பொதுச் சேவைகள், நீதித்துறை ஆகிய சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதாகவும் உறுதியளித்ததுடன் அரசியல் யாப்பின் 18 ஆவது சீர்திருத்தம் பெருந்தவறானதாகும் எனவும் அதனை உடனடியாக இரத்துச் செய்வதாகவும் கூறினார்.

அவரையடுத்து சந்திரிக்கா பண்டாரநாயக்க, ராஜித சேனாரத்ன ஆகியோரும் அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத்

தெரிவித்தனர். இவ்வாறு, ஜனவரி 08 ஆம் திகதி நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொதுவேட்பாளராக மைத்ரிபால சிறிசேன களமிறங்கிய செய்தி பரவப் பரவ அச் சந்தோச செய்தியின் வெளிப்பாடாக நாடெங்கும் பட்டாசு ஒலி எழத் தொடங்கியது.



# சர்வதேச ரீதியில் இருளில் இருந்த இலங்கை

பல தசாப்தங்களுக்கு முன் ஜப்பான் நாடானது யுத்தத்தில் சிக்கி மிக மோசமாக பாதிக்கப்பட்டது. அந்நேரம் "குரோதத்தால் குரோதம் தணியாது" என்ற பௌத்த போதனையை முன்மொழிந்தவாறு மீண்டும் தலைதூக்க முயலும் ஜப்பானுக்கு சர்வதேசம் எவ்வித தயக்கமும் இன்றி உதவிக்கரம் நீட்ட வேண்டுமென்ற பகிரங்க வேண்டுகோளினை நம்நாட்டின் முன்னாள் ஜனாதிபதியாகிய ஜே.ஆர்.ஜயவர்த்தன சர்வதேசத்திடம் முன்வைத்தார்.

அச்சமயம் ஜே.ஆர்.ஜயவர்த்தன அந்த மனிதாபிமான வேண்டுகோளை முன்வைத்த விதத்தால் கவரப்பட்ட சர்வதேசம் ஜப்பானின் எழுச்சிக்கு கைகொடுத்தது. இலங்கையர் அன்று செய்த இந்த உதவியினை ஜப்பான் இன்றும் நன்றி உணர்வுடன் ஞாபகத்தில் வைத்திருக்கின்றது. இது வரலாறு கண்ட உண்மை. ஜப்பான் எப்போதும் எம்மீது மதிப்பை கொண்டிருப்பதற்கு இதுவொரு முக்கிய காரணமாகும்.



ஒரு பௌத்த நாடு என்ற வகையில் ஆசியாவைச் சேர்ந்த இன்னுமொரு பௌத்த நாடாகிய எமது நாட்டுடன் மத ரீதியான நட்பும் இந்த இரு நாடுகளுக்குமிடையே உறவு நீடித்து வருவதற்கு ஒரு காரணமாகும்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி நமது நாட்டின் காட்டுவழிப் பயணத்தின் பாதை மாறியமையே இம்முறை 2016 ஜப்பானில் இடம்பெற்ற உச்சி மாநாட்டிற்கான அழைப்பு







இலங்கைக்குக் கிடைத்தமைக்கான மிகமுக்கிய காரணமாகும். அதுவரை சர்வதேசத்தால் ஓரம் கட்டப்பட்டு ஜனநாயகம் கைவிடப்பட்டு மனித நாகரீகத்திற்கு மாறான வழியில் சென்றுகொண்டிருந்த இலங்கை தனிமைப்படுத்தப்பட்டு பொருளாதார தடைகளை சந்திக்கவிருந்த தருணத்திலேயே நாட்டின் ஆட்சி மீண்டும் ஜனநாயக பாதைக்கு கொண்டுவரப்பட்டது. அம்முயற்சிக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்பதற்காகவே அதற்கு தலைமைத்துவத்தை பெற்றுக்கொடுத்த ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களுக்கு 2016 இல் ஜப்பான் தனது நாட்டில் இடம்பெற்ற ஜி 7 நாடுகளின் உச்சி மாநாட்டுக்கு வருகைதரும்படி அழைத்திருந்தது.

உலகின் வளர்ச்சியடைந்த முன்னணி நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், கனடா, ஜேர்மனி, இத்தாலி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் பங்குபற்றும் இம் மாநாட்டில் நமது நாட்டுக்கும் அழைப்புக் கிடைத்தமை வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும்.

உகண்டா, லிபியா, சுவாசிலாந்து போன்ற மனித உரிமைகளும் தனிமனித சுதந்திரமும் மதிக்கப்படாத இருண்ட தேசங்களின் நேசநாடாக இருந்துவந்த இலங்கை, இன்று உலகப் புகழ்பெற்ற







நாடுகளுடன் கைகோர்த்து நிற்கின்றது என்ற விடயம் நம்நாட்டின் எதிர்காலம் சுபீட்சமடையக் காரணமாக அமையும்.

சர்வதேச ரீதியில் இருளில் இருந்து வந்த இலங்கை இன்று வெளிச்சத்திற்கு வந்திருப்பதனாலேயே நம் நாட்டுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

உலக சொத்துக்களில் நூற்றுக்கு 60 வீதமானவை இந்த ஏழு நாடுகளுக்கே உரித்தாகியுள்ளதுடன் உலகின் மொத்த உற்பத்தியில் 46 வீதமான உற்பத்திகள் இந்த நாடுகளிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஜி-7 உறுப்பு நாடு அல்லாத ஒரு நாட்டுக்கு அவர்களது தலைவர்கள் மாநாட்டின் அபிவிருத்தி சார்ந்த கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைப்பது மிகவும் அரிதான ஒரு சந்தர்ப்பமாகும்.



# அரசியலில் உச்சம் தொட்ட கிராமப்புற இளைஞன்

பாராளுமன்ற அரசியலில் மட்டுமல்ல உள்ளூராட்சி அரசியலை எடுத்துக் கொண்டாலும் கூட தனது பதவியை ஒரு தடவைக்கு மேல் தக்கவைத்துக் கொண்டு அரசியலில் தொடர்ந்து நிலைத்திருக்க முடியாத அரசியல்வாதிகள் பலர் எம்மிடையே உள்ளனர். அதேவேளை கிடைத்த பதவியை ஒரு முறையல்ல பலமுறை தக்க வைத்துக்கொண்டு தொடர்ந்து பல தசாப்தங்களாக அரசியலில் நீண்ட கால அனுபவம் பெற்று உயர்ந்த இடத்தை பிடித்தவர்களும் உள்ளனர். ஒருசிலருக்கு மட்டும் இவ்வாறான வாய்ப்பு கிடைக்க பல காரணங்கள் இருக்கலாம். வரலாற்றுக் காரணங்கள், குடும்பப் பின்னணி, மக்களால் ஏற்றுக்

கொள்ளப்படுதல் ஆகியவற்றுடன் அதிஷ்டத்தைக் கூட இன்னுமொரு காரணமாக கூறலாம்.

சிக்கலான இந்த பின்னணியில் நாட்டின் அதி உயர்ந்த பதவிக்கு உரிமை கோர சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு முடிந்திருக்கிறது என்றால் அது எளிதான விடயமல்ல. உண்மையிலேயே அது ஒரு பாரிய வெற்றியாகும். ஆயினும் அது சாத்தியமாகக் கூடிய ஒன்றுதான் என்பதை ஆசியாவின் அண்மைக்கால வரலாறு கண்முன்னே நிரூபித்துக் காட்டியிருக்கிறது. அதற்குச் சிறந்த உதாரணமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் நம்நாட்டின் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவையும் குறிப்பிடலாம்.

ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் அரசியல் வாழ்க்கையைப் பற்றி நோக்கும்போது அவரது வாழ்க்கையில் சேர்ந்துள்ள ஏராளமான அனுபவங்கள், அவரது இளமைப் பருவம், குடும்பப் பின்னணி, அர்ப்பணிப்பு, பொறுமை, திடமான நம்பிக்கை, முயற்சி, புரிந்துணர்வு, தன்னம்பிக்கை ஆகியவை கருத்திற் கொள்ளப்பட வேண்டிய அம்சங்களாகும்.

அவரது தன்னம்பிக்கை பற்றிய தெளிவான சாட்சியாக 2015 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர் மேற்கொண்ட தைரியமான தீர்மானத்தைக் குறிப்பிடலாம்.

விடயங்களை நன்றாக மதிப்பீடு செய்யும் அதே நேரம் தன்னம்பிக்கையுடன் கூடிய அரசியல்வாதிகளால் மாத்திரமே அவ்வாறானதோர் தைரியம் மிக்க தீர்மானத்தை எடுக்க முடியும். அவருடன் பணியாற்றிய ஒருவர் என்ற ரீதியில் நான் இந்த விடயத்தை அவதானித்திருக்கிறேன். அவற்றில் ஒரு சில அனுபவங்களை பகிர்ந்து கொள்ளக் கிடைத்தமை மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

பொலன்னறுவை கச்சேரியில் நான் பணியாற்றிக் கொண்டிருந்த போதுதான் மைத்ரிபால சிறிசேனவை முதன் முதலாக சந்தித்தேன், இளமைத் துடிப்பும் கவர்ச்சிகரமான ஆளுமையும் மிக்க ஒருவராகவே அவர் அப்போது தென்பட்டார். அனைவரும் அன்பாக அவரை 'மைத்ரி' என்றே அழைத்தனர். அப்போது அவருக்கு குறிப்பிடும்படியான அந்தஸ்து எதுவும் இருக்கவில்லை. அவரது அரசியல் கட்சியின் அதாவது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் லீலாரத்ன விஜேசிங்கவின் நெருங்கிய சகா என்று மட்டுமே அவரைப் பற்றி எனக்குத் தெரிந்திருந்தது.

மைத்ரிபால சிறிசேனவின் அரசியல் வாழ்க்கைக்கு 20 ஆண்டுகள் பூர்த்தியாகியதை முன்னிட்டு ஒரு விழா 2009 இல் பொலன்னறுவையில் நடைபெற்றது. அந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு மைத்ரியிடமிருந்து எனக்கும் அழைப்பு வரவே நானும் அங்கு சென்றேன். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தனக்கு எப்படி வந்தது என்பதை அவர் அன்று அந்த விழாவில் கூறினார்.

தோபாவெவ வித்தியாலயத்தில் இடம் பெற்ற மாறுவேட போட்டியொன்றில் காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவைப் போல் வேடம் தரிதத மைத்ரி, முதல் பரிசை பெற்றுள்ளார். அதனையடுத்தே ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியில் சேர்ந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் தனக்கு ஏற்பட்டதாக அவர் கூறுகிறார். அன்று அவர் சிறிய எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவைப் போல் இருந்திருக்கக்கூடும் என நினைக்கிறேன்.

## அரசியல் ஆரம்பம்

ஆரம்பத்தில் அவர் சண்முகதாசனின் சீன கம்யுனிஸ்ட் கட்சி மீது ஆர்வம் கொண்ட ஓர் ஆதரவாளராகவே இருந்திருக்கின்றார். அச்சமயம் அந்தத் தலைவர்களுடன் அரசியல் கருத்து முரண்பாடு காரணமாக ஏற்பட்ட அதிருப்தியினாலேயே அதிலிருந்து விலகியிருக்கின்றார்.

இருப்பினும் அந்த அரசியல் ஆரம்பம் தீவிரமான ஒரு கோணத்தில் உலகை நோக்குவதற்கும் தைரியமாக செயற்படுவதற்கும் அவரை பயிற்றுவித்திருந்தது. இதற்கு அண்மைக்கால உதாரணமாக நல்லிணக்கப் பொறிமுறை மற்றும் கையேற்கப்பட்ட காணிகளை மீளளித்தல் தொடர்பில் அவர் மேற்கொண்ட தீர்மானங்களைக் குறிப்பிடலாம்.

1971 இல் மைத்ரி மட்டக்களப்பு சிறையில் அடைக்கப்பட்டமையும் அவரது இவ் அசையாத மனோ தைரியத்திற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். சேகுவராக் குழுவின் உறுப்பினர் என்ற போலியான ஒரு முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டார். அன்று தமன்கடுவ பிரதேசத்தின் வருமான உத்தியோகத்தராகப் பணியாற்றிய ஞானவிபுல முனசிங்கவின் வீட்டில் தனக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டபோதும், அதன் பின்னர் மட்டக்களப்பு சிறைக்கு கொண்டு செல்லப்பட்டு

ஏனைய சிலருடன் இருட்டு அறை ஒன்றினுள் அடைக்கப்பட்டதையும் அவர் நினைவு கூர்ந்தார்.

அண்மையில் நானும் அவருடன் இச் சிறைச்சாலைக்குச் சென்றேன். அதில் அடைக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கப்பட்ட சிறிய ஒரு ஜன்னலை அவர் எனக்கு காண்பித்தார். எவ்வாறாயினும் தற்போது அவர் பெற்ற அந்த சிறைச்சாலை வாழ்விலும் நல்ல பண்புகள் சிலவற்றை காண்கின்றார். க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு சிறைச்சாலையிலிருந்தே கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் சிறையில் அடைக்கப்பட்ட கற்ற இளைஞர்கள், ஆசிரியர்கள், சட்டத்தரணிகள் ஆகியோர் தனது படிப்பிற்கு உதவியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜா-எல இடைத் தேர்தலின்போது ஐ.தே.க ஆதரவாளர்கள் அவரை சாக்கடையில் தள்ளியமை, முல்கிரிகல இடைக்காலத் தேர்தலின்போது காலஞ்சென்ற காமினி அத்துக்கோரளவினால் தனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து பின்தொடர்ந்த சம்பவங்கள் போன்றவை அவரது அரசியல் உறுதிப்பாட்டுக்கு காரணமாக அமைந்திருக்கலாம். சாக்கடையில் இருந்து எழுந்து அழுக்கடைந்த ஆடைகளுடன் வீட்டுக்குச் சென்ற விதத்தினை இன்று புன்னகையுடன் ஞாபகப்படுத்தும் அவர், இரண்டாவது சம்பவத்தினால் 1989 பொதுத் தேர்தலின் பின்னர் அவருக்கும் அத்துக்கோரளவிற்கும் இடையே மிகுந்த நட்புறவு ஏற்பட்டதாகவும், அதனால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின்கீழும் சில உத்தியோகபூர்வ உதவிகளை பெற்றுக்கொள்ள முடிந்ததாகவும் அவர் ஞாபகப்படுத்துகின்றார்.

எவ்வாறாயினும் சிறைக்கூடத்திற்கு வெளியே அவர் பெற்றுக்கொண்ட ஜனநாயக பாடம் காரணமாக அவர் நேர்மையான நல்லொழுக்கமுள்ள, மற்றவர் மீது கருணை காட்டும் ஒரு நபராக உள்ளார். 2015 ஜனவரிக்கு முன்னரும் அதன் பின்னரும் நான் அவருடன் பணியாற்றும்போது தொலைபேசி உரையாடலின் முதலாவது வினாவாக அமைவது "எங்கே இருக்கிறீர்கள்?" என்பதாகும் இவ்வாறே அவர் ஏனையவர்களுடனும் உரையாடலை மேற்கொள்வதை நான் அவதானித்துள்ளேன்.

அவர் என்னை பெயர் சொல்லி அழைப்பாராக இருப்பின் நான் மிகவும் மகிழ்ச்சியடைய வாய்ப்பு இருந்தபோதிலும் அவர் ஒருபோதும் என்னை பெயர் சொல்லி அழைப்பதில்லை என்பதை கவலையுடன் குறிப்பிடுகின்றேன். 40 ஆண்டுகளைக் கடந்து

செல்லும் எமது தனிப்பட்ட நட்பு இருந்த போதிலும், சிலவேளை எனது வயதிற்கு மதிப்பளிக்கும் நோக்கில் அவ்வாறு அவர் நடந்து கொள்கிறார் என்றே கருதுகிறேன்.

ஆரம்பத்தில் அவர் எனக்கு "மைத்ரி" ஆக இருந்தார். நான் அவருக்கு "சேர்" ஆக இருந்தேன். அவர் அமைச்சரானபோது எனக்கு அவர் "சேர்" ஆனார். நான் காலத்திற்கு காலம் வகித்த பதவிக்கு அமைய அவருக்கு நான் "செயலாளர்" அல்லது "அரசாங்க அதிபர்" ஆக இருந்தேன். 2015 ஜனவரி 09 ஆம் திகதிக்குப் பின்னர் எனக்கு அவர் "மேன்மைதங்கியவர்" ஆனார். அவருக்கு நான் "ஆளுநர்" ஆனேன். அவரை "கௌரவ" ஜனாதிபதி என அழைக்க வேண்டுமென ஜனாதிபதி அலுவலகம் தீர்மானித்தாலும் முன்னரைப்போன்றே எமக்கு அவர் "மேன்மைதங்கியவர்" ஆனார். அது பதவிவழி வந்த ஒரு அழைப்பு முறையாகும்.

மனோகரமான ஒரு தோற்றத்தைக் கொண்ட மைத்ரி, புன்னகைத்த முகத்துடன் தினமும் கச்சேரிக்கு வந்துபோன ஒருவராவார். அவர் அவ்வாறு வந்தது விவசாயிகளின் நீர்ப் பிரச்சினை, காணிப் பிரச்சினை மற்றும் விவசாய பிரச்சினைகளுக்காகவே ஆகும். அவர் முன் வைத்த விடயங்கள் இலகுவானவையாக இருந்தபோதிலும் அவர் அதனை 25 வயதினை பூர்த்தி செய்த ஓர் இளைஞனிடம் காணக்கிடைக்காத அறிவுத்திறன் படைத்த ஒருவர் போன்றே அவற்றை முன்வைத்தார். சேவை ஓய்வுபெற்றவர்களுக்கான குடியேற்றத்தில் லக்ஸ உயன பாடசாலையில் இருந்த காலம் முதல் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் யதார்த்தத்தை விளங்கிக் கொண்டிருந்த அவர் தனது அனுபவங்களையும் முறையீடுகளுடன் சேர்த்து எம்மிடம் முன்வைப்பதற்குப் பழகியிருந்தார்.

பாரிய சூறாவளியினால் பொலன்னறுவை பெரிதும் பாதிக்கப்பட்ட 1978 நவம்பர் 23ஆம் திகதி வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்டத்தில் இல்லாதிருந்த குறையினையும், பராக்கிரம சமுத்திரத்தின் அணைக்கட்டு உடைந்துபோகும் அபாயத்தினை தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவர் முன் வந்ததன் மூலம் அப்பிரச்சினையை நிவர்த்தி செய்தார். அதனைவிடவும் மிகப்பெரிய, இலங்கையை அழிவினை நோக்கி இட்டுச் செல்வதற்கு இருந்த நிலையில் 2015 ஜனாதிபதி தேர்தலில், பொருத்தமான பலமுள்ள வெற்றியீட்டக்கூடிய ஓர் வேட்பாளர் இல்லாதிருந்த இடைவெளியை நிரப்புவதற்கு அவர் முன் வந்தமையே அவரது மிகப்பெரிய அர்ப்பணிப்பாகும்.

மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக போட்டியிட அவர் முன்வரப் போவதைப் பற்றிய இரகசியத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டபோது (அச்சம்பவத்திற்கு ஒருசில தினங்களுக்கு முன்னர்) அவர் மறைமுகமாக என்னிடம் அதை தெரிவித்தார். அதைக் கேட்டதும் நான் அவரிடம் கேட்ட வார்த்தைகள் இன்னமும் என் ஞாபகத்தில் இருக்கின்றது. நான் அவரது முதுகில் தட்டி நேரே அவரது விழிகளை நோக்கி இவ்வாறு கேட்டேன். "இது உங்களது வாழ்வையும் உங்களது குடும்ப உறுப்பினர்களது வாழ்வையும் மிகுந்த அபாயத்திற்கு உட்படக்கூடிய காரியம் என்பதை நீங்கள் அறிந்து வைத்துள்ளீர்களா?" அதற்கு அவர் "ஆம்" என பதிலளித்தார். "நீங்கள் அவ்வாறான ஒரு சவாலை ஏற்கத் தயாரா?" என நான் கேட்டேன். அவர் அதற்கும் "ஆம்" என பதிலளித்தார். அனுபவம் மிகுந்த ஒரு படை வீரரின் தன்னம்பிக்கையினை அப்போது நான் அவரது விழிகளில் மிகத் தெளிவாக கண்டேன். நான் பொதுவாக எப்போதுமே அவரை வாழ்த்துவதுபோல் "உங்களுக்கு இறைவன் துணை" என வாழ்த்தினேன்.

வெற்றியடைய வேண்டுமாயின் எந்தவொரு அரசியல்வாதியிடமும் இலட்சியம் காணப்படல் வேண்டும். மைத்ரி இளம் உத்தியோகத்தர் ஒருவராக இருந்தபோது, அதாவது கிராம உத்தியோகத்தராக சேவை புரிந்தபோதே அதை அவரிடம் நான் கண்டேன். நான் பொலன்னறுவை அரசாங்க அதிபராக சேவையாற்றிய இறுதி கட்டத்தில் அவர் என்னைச் சந்தித்த நாள் இன்னும் ஞாபகத்தில் உள்ளது. பொதுவாக அவ்வாறான ஒர் சந்திப்பை நேரடியாக மேற்கொள்வதற்கு கிராம உத்தியோகத்தர் ஒருவருக்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. .ஆயினும் நாம் இருவரும் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினைக் கொண்டிருந்தமையினால் அச்சந்திப்பு இடம்பெற்றது.

புன்னகை பூத்த முகத்துடன் வழமைபோல் அன்றும் அவர் எனது அறையில் நுழைந்தார். பாராளுமன்ற உறுப்பினர் எச்.ஜி.பி. நெல்சனின் ஆதரவாளர்கள் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் மைத்ரியை துன்புறுத்துவதை நான் அறிந்திருந்தேன். பொதுவாக இலங்கையில் எதிர்க் கட்சியினரிடம் பழிவாங்குதல் எமது அரசியலின் ஒரு பழக்கமாக இருக்கின்றமையினால் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மேடைகளில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்ட மைத்ரிக்கு அவ்வாறான அரசியல் துன்புறுத்தல்கள் ஏற்படுவது ஒரு புதுமையல்ல என அவர் சிந்தித்திருப்பார். அவரது அலுவலகத்தில்

"கிராம சேவகனே வீட்டுக்கு போ" போன்ற சுவரொட்டிகளை யார் தொங்க விட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். இவ்வாறான தொந்தரவுகள் பற்றி முறையிடுவதற்கும் என் மூலமாக ஏதேனும் உதவி பெற்றுக் கொள்வதற்குமே மைத்ரி என்னை சந்திக்க வந்ததாக அவரைக் கண்ட நான் நினைத்தேன்.

## இராஜினாமா கடிதம்

ஆயினும் எனது கணிப்பு தவறாக இருந்தது. அரசியலில் நுழைவதற்கான தேவை அவருக்கிருந்தது. வெளிநாடு ஒன்றில் இடம்பெற இருக்கின்ற இளைஞர் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு விடுமுறை கோருவதற்காகவே அவர் என்னை சந்தித்ததாக நினைக்கிறேன். அது அனுர பண்டாரநாயக்க அவர்களினால் அவருக்கு வழங்கப்பட்ட, கியூபா நாட்டில் இடம்பெற்ற மாநாட்டில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் என நினைக்கின்றேன். அரசியல் செல்வாக்கற்ற சாதாரண ஒரு கிராம சேவகர் என்ற ரீதியில் அதற்கான வாய்ப்பு இல்லை என்பதனை நான் அவருக்குக் கூறினேன். ஆயினும் விடுமுறை கோரி அவர் தொந்தரவு கொடுத்தமையால் எவ்வகையிலும் அதற்கு இடமளிக்க முடியாதென நான் உறுதியாகக் கூறினேன். வாழ்க்கையில் தவறான ஒரு திசையை நோக்கி அவர் செல்வதாக உணர்ந்த நான் 48 மணித்தியாலங்களுக்குள் இதுபற்றி சிந்தித்து ஒரு முடிவை எடுத்த பின் மீண்டும் என்னைச் சந்திக்குமாறு கூறி, வேறு வகையில் கூறின் அவரை எனது அலுவலகத்தில் இருந்து விரட்டி விட்டேன்.

அதற்கு சம்மதித்த அவர் வழமைபோல் நட்புறவு கலந்த புன்னகையுடன் மீண்டும் மறுநாள் என்னை சந்திப்பதற்கு வந்தார். "மைத்ரி நீர் தொடர்ந்தும் தொழிலில் ஈடுபடுவீர்தானே?" என அவரிடம் நான் வினவினேன். "சேர் நீங்கள் எனக்கு விடுமுறை வழங்குவதாயின் தொடர்ந்தும் தொழிலில் இருப்பேன். இல்லையென்றால் தொழிலைவிட்டு விலகுவேன்" என புன்சிரிப்புடன் பதிலளித்தார். எவ்வாறாயினும் என்னிடம் விடுமுறை கோர முயற்சிப்பதாக நினைத்த நான் "மைத்ரி நான் விடுமுறை தரமாட்டேன்" என உறுதியாக கூறினேன். உடனே தனது சட்டைப் பைக்குள் இருந்து எடுத்த கடிதம் ஒன்றை என்னிடம் கொடுத்தார். அது சேவையிலிருந்து நீங்குவதற்கான கடிதமாகும்.

இவ் இளைஞன் தனது எதிர்காலத்தை நாசம் செய்துகொள்ளப் போவதாகவே அப்போது நான் நினைத்தேன். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நீண்டகாலத்திற்கு பதவியில் இருப்பதற்கான

சாத்தியங்களே தென்படுகிறது ஆகவே அரச சேவையை விட்டுச் செல்லல் என்ற முடிவு புத்திசாதுர்யமானது அல்ல எனவும், "உமக்கு தொழில் இன்றி ஒன்றுமே செய்ய முடியாது போகும்" முன்பு நான் அவருக்கு வழங்கிய அறிவுரைகள் அவரது மனதில் பதியவில்லை என எனக்குத் தோன்றியது.

அவரது கடிதத்தை கையில் எடுத்த நான் ஆசைகள் நிறைந்த அவரது முகத்தை சுமார் மூன்று நிமிடங்கள் வரை நோக்கினேன். அவரது விழிகளை நேரடியாக பார்த்த நான் "அவரது விதி அரசியல் என்றால் அவர் இவ்வாறு அதனை நம்புவதாயின் நான் அவருக்கு வாய்ப்பளிக்கக்கூடாதா?" என நினைத்தேன். நான் அவரது இராஜினாமாவிற்கான அனுமதியை வழங்குவதற்கு இணங்கி "மைத்ரி, நீர் அரசியல் வாழ்வை எதிர்பார்ப்பீராயின் அது அவ்வாறே ஆகட்டும். நான் உனது வெற்றிக்காக பிரார்த்திக்கின்றேன்." எனக் கூறி அந்த இராஜினாமா கடிதத்தில் கையொப்பமிட்டேன். புன்னகைத்த முகத்துடன் மைத்ரி அங்கிருந்து விடைபெற்றார்.

அன்று என் மனதில் ஏற்பட்ட குழப்பமான சிந்தனைகள் அனைத்தும் இன்று பொய்யாகி உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. என்னுடைய கணிப்புத் தவறாகிவிட்டது. அவர் அரசியலில் உச்சக்கட்ட வெற்றியை அடைந்துவிட்டார். அவர் தொழிலுக்காக அரசியலில் ஈடுபடாத, எந்தவித இன, மத, குழு பேதங்களையும் கொண்டிராத, மனிதர்களுக்காகவே சேவையாற்றுவதற்காக அரசியலில் தம்மை ஈடுபடுத்தியும் கொண்டுள்ளார். அத்தோடு மிக மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கையையும் வாழ்ந்து வருகின்றார்.

அந்தக் காலத்தில் அவர் அரசியலில் ஈடுபடும்போது அவரது தந்தை "நீ கவுன்சிலுக்கு (பாராளுமன்றத்திற்கு) போகவா போகிறாய்?" என கேட்டதாக அவர் எம்மிடம் கூறியுள்ளார். முன்னர் நான் குறிப்பிட்ட அவரது வாழ்வின் தீர்க்கமான மூன்று நிமிட நேரம் "மேலதிகாரி, கீழ்மட்ட ஊழியர்" என்ற உறவில் இருந்து விடுபடுதலுக்கு அடையாளமாக "கவுன்சிலுக்குள்" நுழைந்ததனை குறிப்பிடலாம். 2015 ஜனவரியில் நான் அவரது ஆலோசகராக நியமிக்கப்பட்டதன் பின்னரும் அவர் எனது "மேலதிகாரி" ஆனதன் மூலமும், முன்னர் பாதுகாப்புச் செயலாளராக பல்வேறு சிக்கலான பிரச்சினைகளின்போதும் என்னுடன் ஒன்றாக இருந்து அவற்றை எதிர்கொண்ட தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பரிந்துரைக்கமைய நான் சில தினங்களின் பின்னர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டதன் பின்னரும் இவ் உறவு நீடித்துச் செல்கின்றது.

அவர் அரசியலில் பிரவேசிக்கவில்லையாயின் என்ன நடந்திருக்குமென சிலர் கேட்கின்றனர். அவரது பாராளுமன்ற வாழ்வின் 20 ஆண்டுகள் பூர்த்தி விழா 2009 ஆம் ஆண்டு தோப்பாவெவ விளையாட்டரங்கில் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

"இன்று இங்கு வருகை தந்துள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான அப்போதைய பொலன்னறுவை அரசாங்க அதிபராக இருந்த ஒஸ்டின் பெர்ணாந்து அவர்கள் எனது இராஜினாமா கடிதத்தைப் பொறுப்பேற்காது இன்னும் சிறிது காலம் எனக்கு அழுத்தம் தந்திருப்பாராயின் அல்லது எனது இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொள்ளாது இருந்திருந்தால் நான் தொடர்ந்தும் கிராம சேவகர் பதவியில் இருந்திருக்கக் கூடும். அவ்வாறு இருந்திருப்பின் ஓய்வுபெறும் வயதை அண்மித்துள்ள ஒரு கிராம அலுவலராகவே இன்று நான் இருந்திருப்பேன்!" என்றார்.

இதுதான் ஒருவரது விதி. நான் அவ்வாறு செய்யாததையிட்டு இன்று தம் ஆட்சியை இழந்த ஒருசிலர் என்னைக் குறைகூறக் கூடும். ஆயினும் அன்று மைத்ரி விலகத்தான் வேண்டுமென்று நான் எடுத்த தீர்மானமானது எனது வாழ்வில் நான் எடுத்த சிறந்த நிர்வாகத் தீர்மானமாகும் என நான் கருதுகிறேன். வயதில் சிறியவராக இருந்தாலும் தன்னோடு ஒட்டிப் பிறந்த விடா முயற்சி மற்றும் தலையெழுத்தை யாராலும் மாற்ற முடியாது என்பதே இதிலிருந்து நான் கற்றுக்கொண்ட பாடமாகும்.

என்னை அவரது ஆலோசகராக நியமிக்கும் நியமனக் கடிதத்தை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னர் அதை தனது நெஞ்சோடு வைத்துக்கொண்ட அவர் "இது வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வு நிகழும் ஒரு நாள் அல்லவா?" என வினவினார். "ஆம் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களே," என நான் பதிலளித்தேன்.

என்னை கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக நியமித்தபோது, அவர் கிராம உத்தியோகத்தராக இருந்தபோது, அவரது மேலதிகாரியாக இருந்த அரசாங்க அதிபர் ஒஸ்டின் பெர்ணாந்து அவர்களுக்கு ஆளுநர் பதவியை வழங்கமுடிந்தமை பற்றி மகிழ்ச்சியடைவதாக குறிப்பிட்டார். அதன் மூலம் அவரது நேர்மை மற்றும் அவரிடம் இருந்த பண்பு என்பன வெளிப்படுத்தப்பட்டது. ஜனாதிபதி அலுவலக உத்தியோகத்தர்களிடம் அதற்கு வெளியிலும் இதன் பின்னர் நான் பெற்ற கௌரவம் ஆகியன இப் புதிய பதவியே காரணமாக அமைந்தது. 2016 சர்வதேச கூட்டுறவு தின வைபவத்தின்போது மீண்டும் ஜனாதிபதி அவர்கள் தனது எளிமை

சுபாவத்தை வெளிக்காட்டினார். வரலாற்றில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட முதலாவது கூட்டுறவு பணியாளர் தாமே என்பதை அங்கே அவர் குறிப்பிட்டார்.

## தேர்தல் நடவடிக்கை

அவரது தேர்தல் நடவடிக்கையானது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய மற்றுமொரு முக்கிய விடயமாகும். எனது அறிவின்படி அவரது வெற்றி தொடர்பாக மிகுந்த நம்பிக்கை கொள்ளாமை காரணமாக பணம் படைத்தவர்கள் அவரது தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பாரியளவு நிதியுதவியினை செய்யவில்லையென நினைக்கின்றேன். ஒட்டுமொத்த அரச பொறிமுறையைப் போன்றே தம்முடன் போட்டியிட்ட அவரது போட்டியாளரும் மிகப் பலம் வாய்ந்தவராகக் காணப்பட்டார்.

நான் அவருக்காக, தேர்தல் பிரச்சாரத்தின்போது மேற்கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் எழுதிய கட்டுரைகள் இன்னும் என் ஞாபகத்தில் இருக்கின்றது. அவரது கட்சி மாற்றத்துடன் நான் எழுதிய "அனைவரதும் உறவினர் மைத்ரி" எனும் கட்டுரையினை அனைத்து சிங்கள செய்திப் பத்திரிகைகளுக்கும் அனுப்பியபோதும், "லங்காதீப" தவிர்ந்த வேறு எந்த செய்தித் தாள்களும் அதனைப் பிரசுரிக்கவில்லை. "லங்காதீப" கூட அதன் தலைப்பினை மாற்றியே பிரசுரித்தது. எவ்வாறாயினும் 2015 ஜனவரி 05ஆம் திகதி அளவில் இந்த மனோபாவம் ஓரளவு மாற்றமடைந்திருந்தது. "மவுபிம" செய்தித்தாள் "ஜனாதிபதி வேட்பாளர் சிறிசேனவிற்கும் புலிப் பயங்கரவாதிகளுக்கும் இடையிலான போலி ஒப்பந்ததிற்கு" சவால் விடுத்து நான் எழுதிய ஒரு கட்டுரையை வெளியிட்டது. காற்றின் திசை மாற்றமடைந்ததா எனத் தெரியவில்லை.

தற்போதைய பிரதமரின் ஆலோசனைக்கமைய நாம் தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் வாக்கு எண்ணும் பணிகள் தொடர்பாக வாக்கெடுப்பு நிலைய பிரதிநிதிகள் மற்றும் வாக்கு எண்ணும் பிரதிநிதிகள் சிலரைப் பயிற்றுவித்தோம். பெரும்பாலும் இப் பயிற்சி சிறிகொத்தவிலேயே இடம்பெற்றது. முழு தேர்தல் நடவடிக்கைகளும் சிறிகொத்தவிலேயே இடம்பெற்றது என்பதை மறக்க முடியாது, மறக்கவும் கூடாது. ஜனாதிபதி வேட்பாளர் கட்சி அலுவலகம் ஒன்று காணப்படாமையே இதற்கான காரணமாகும்.

தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் மாரசிங்க, முகுந்தன் கனகி, விக்டர் சமரவீர, சுமனதிஸ்ஸ

தாம்புகல மற்றும் தற்போதைய அமைச்சர் தலதா அத்துகோரள, அவரது உதவி சட்டத்தரணி நந்தபால விக்கிரமசூரிய மற்றும் நான் உள்ளிட்டோர் வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களில் இடம்பெறும் முறைகேடுகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டோம். பயிற்சிகள் வழங்கினோம். எனினும் ஜனாதிபதி வேட்பாளர் சிறிசேன அரச ஊழியர்கள் மீது கொண்ட பூரண நம்பிக்கையினாலோ என்னவோ வாக்கு எண்ணல் முறைகேடுகள் தொடர்பான எமது கருத்துக்களுடன் இணங்கவில்லை. அது அவரது நீண்டகால அரசியல் அனுபவம் மற்றும் அரச ஊழியர்கள் மீது கொண்ட நம்பிக்கையினால் ஏற்பட்ட ஒன்றாகும்.

தேர்தல் தினம் "சிறிகொத்த"வில் அமையப்பெற்ற தேர்தல் முடிவுகளை மீளாய்வு செய்யும் நிலையத்தில் நான் பணியாற்றியது நினைவிருக்கிறது. 2015 ஜனவரி 09ஆம் திகதி அதிகாலை 2.00 மணி வரை நாம் எதிர்கொண்ட போட்டியில் வெற்றி கிடைக்குமா என்ற சந்தேகம் நிலவியது. அவர் போட்டியிடுவதற்கு தீர்மானித்த ஒரு சில நாட்களுக்கு முன்னர் நான் அவரிடம் வினவிய "உங்களது உயிரும் குடும்ப உறுப்பினர்களது உயிர்களும் மிகுந்த அபாயத்திற்கு உட்பட முடியுமென்பதை நீங்கள் அறிந்து வைத்துள்ளீர்களா?" எனும் வினா எனது ஞாபகத்திற்கு வந்தது. அவர் நிலைமையினை பிழையாக மதிப்பீடு செய்தாரா என எதிர்மறை ரீதியாக நான் சிந்தித்தேன். எனது நீண்டகால நண்பன் படுகுழியில் விழுவாரா என்ற அச்சத்தில் சிந்திக்கத் தொடங்கினேன். மணிக்கூட்டின் டிக் டிக் எனும் ஓசையின் நடுவே நேரம் நகர்ந்து செல்கின்றபோது நாம் வெற்றியை நோக்கி சென்றுகொண்டிருந்தமை தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது.

எவ்வாறாயினும் அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்கு அவர் எங்கு உள்ளார் என நாம் அறியவில்லை. நான் நினைத்தவாறே அவர் மிகுந்த அச்சம் கொண்டுள்ளார் என நினைத்தேன். இருப்பினும் ஜனாதிபதி வேட்பாளர் மைத்ரிபால சிறிசேனவுக்கு பல்வேறு பிரதேசங்களில் கூட்டங்களை நடத்துவதற்கும் விசேடமாக கொழும்பில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்குமான பாதுகாப்பு நிலைமையினை தைரியமாக சமாளிப்பதற்கு ஐ.தே.கட்சியின் தலைமைத்துவம் முன்வந்தமை பற்றி அறிந்து வைத்திருந்த எமக்கு, தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அவர்கள் இருக்கின்ற இடம் தெரிய வராமையானது ஒரு புதுமையன்று.

நான் ஜனவரி 10 ஆம் திகதி காலையிலேயே அவரது வீட்டுக்குச் சென்றேன். பலத்த பாதுகாப்பு அங்கு காணப்பட்டதுடன் எனக்கு வீட்டு வாசற் கதவு திறக்கப்படவில்லை. சுகாதார சேவை அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நீண்டகாலம் சேவையாற்றிய பாதுகாப்பு உத்தியோகத்தர் ரஞ்சித் அவர்கள் தலையிடும் வரை எனக்கு வெளியில் காத்திருக்க நேர்ந்தது.

ரஞ்சித் மற்றும் மற்றைய பாதுகாப்பு அதிகாரியான சூலா ஆகியோருடன் நானும் தற்போதைய பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி அவர்களும் அமைச்சர் சிறிசேனவின் வீட்டுக்கு நிதமும் சோதனைகள் எதுவுமின்றி சென்றுவந்த விதம் ஞாபகத்திற்கு வருகின்றது. "பெரியவரின்" புதிய பதவியானது பாதுகாப்பு சூழலை மாற்றியிருந்தது. அது அவ்வாறு அமைய வேண்டியிருந்தது.

தேர்தலுக்கு முன்னர் அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் வரவேற்பறை வெறுமையாகக் காணப்பட்டது. நான் அவருடன் ராஜபக்ஷவின் ஆட்கள் பற்றிய விமர்சனங்கள், அவரது இதயத்தில் பதிந்து இருந்த ஒரு கருத்திட்டமான மொரகஹகந்த களுகங்க கருத்திட்டத்தை அவரிடமிருந்து பறித்தெடுக்கப்பட்ட விதம், இதன் காரணமாக அமைச்சுப் பதவி இல்லாமல் போனமை மற்றும் அதனை மீண்டும் பெற்றுக்கொள்ள சென்றபோது கேட்க நேர்ந்த இழிவான பேச்சுக்கள், அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல் நடவடிக்கைகள் மற்றும் அமைச்சரவையின் நிர்வாகம் என்பனபற்றி விரிவான அரசியல் கலந்துரையாடல்களை மேற்கொண்டமை ஞாபகத்திற்கு வருகின்றது. விசேடமாக மொரகஹகந்த – களுகங்க கருத்திட்டம் பற்றி அவர் கருத்துரைக்கையில் அவரது கண்கள் கலங்கியதாகவே நான் உணர்ந்தேன்.

அவ் வரவேற்பறையில் அன்றைய தினம் சுமார் 25 நபர்கள் அமர்ந்தருந்தனர். சற்று நேரத்தின் பின் அங்கே வந்த அவர் நேரே என்னிடம் வந்து "இப்போது இங்கே பலர் இருப்பதால் உங்களுடன் நான் பின்னர் கதைக்கின்றேன் மீண்டும் சந்திப்போம்" எனக் கூறினார். அவர் அப்படிக் கூறும்போது அதில் சுவாரஷ்யம் பொதிந்திருந்தது. பெரியவரின் பதவி மாற்றமானது எமது உறவில் பாதிப்பினை ஏற்படுத்தவில்லை என எனக்குத் தோன்றியது.

ஜனாதிபதி என்ற ரீதியில் அவர் 19வது அரசியலமைப்பிற்கு அங்கீகாரத்தினை பெற எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு உதவி செய்ய எமக்கு நேர்ந்தது. அதன் ஆரம்ப கட்டமைப்பு பிரதமர் உள்ளிட்ட குழுவினால் தயாரிக்கப்பட்டதுடன், பாராளுமன்ற

உறுப்பினர் சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்தினவின் தலையீட்டில் ஜனாதிபதியின் ஆலோசகர் திலக் ரணவிராஜா அவர்களின் ஒருங்கிணைப்பில் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டது. ஜனாதிபதி அவர்கள் தனிப்பட்ட ரீதியில் இது தொடர்பாக ஆர்வம் காட்டியதுடன், அவரது அலுவலகத்தில் பல அரசியல் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இருப்பினும் பாராளுமன்றத்தில் கலந்துரையாடலுக்காக அது முன்வைக்கப்பட்டபோது ஜனாதிபதியின் பிரத்தியேக தலையீடு தேவைப்பட்டதுடன் அதன் மூலம் 19வது அரசியலமைப்புத் திருத்தத்தை அங்கீகரிக்க கூடியதாக இருந்தது. அவர் தனிப்பட்ட ரீதியில் பாராளுமன்றத்தில் செயற்படவில்லையாயின் அது தோல்வியடைந்திருக்கும். ஆயினும் அவரின் தலையீட்டால் அது மாபெரும் வெற்றியாக அமைந்தது. ஆயினும் துரதிஷ்டவசமாக 20வது அரசியலமைப்பு திருத்தத்தை அங்கீகரிப்பதற்கு அரசாங்கத்தினால் முடியவில்லை.

## சிறந்த பேச்சாளர்

எத்தகைய ஒரு கலந்துரையாடலில் பங்குபற்ற வேண்டுமானாலும் உடனடியாக ஒரு உரையை நிகழ்த்துவதற்கான திறமையை அவர் பெற்றிருந்தமை மிகவும் பாராட்டுக்குரிய விடயமாகும். 100 நாள் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரை இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். உரையைத் தயாரிப்பதற்காக அவரைச் சந்திப்பதற்கு எமக்கு அழைப்புக் கிடைத்தது. அரைமணிநேர கலந்துரையாடலின் பின்னர் உரையை ஒளிப்பதிவு செய்வதற்கு ஜனாதிபதி அவர்கள் தயாராக இருந்தார். முப்பது நிமிட உரையை மூன்று பகுதிகளாக நிறைவு செய்வதற்கு தயார் எனக் குறிப்பிட்ட அவர் 15 நிமிடங்கள் கொண்ட இரண்டு பகுதியாக அதனை நிறைவு செய்தார். அதன் பின்னர் உரையை மாற்ற வேண்டி ஏற்படுமோ என எண்ணுகையில் எல்லோரும் திருப்தியடைந்த நிலையில் அவ் உரை, மாற்றங்கள் ஏதும் செய்யப்படாமலே ஒளிபரப்பப்பட்டதுடன், அது சிறப்பாகவும் அமைந்திருந்தது. மிக முக்கியமான ஒரு தலைப்பு தொடர்பாகஇதேபோன்று செயற்படக்கூடிய திறமை அவரிடம் உள்ளது. இந்திய பிரதமர் மற்றும் இந்திய ஜனாதிபதி ஆகியோரைச் சந்தித்ததன் பின்னர் பல்வேறு அரச தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களை நியூயோர்க் நகரில் சந்தித்தமை எனக்கு நினைவுக்கு வருகின்றது.

இந்தியா சென்ற ஜனாதிபதி அவர்களுக்கும் இந்திய ஜனாதிபதிக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலில் இந்திய ஜனாதிபதி அவர்கள் முன்வைத்த சுமார் 25 நிமிடநேர கருத்துத் தெரிவிப்பைத் தொடர்ந்து எமது ஜனாதிபதி அவர்கள் எந்தவொரு குறிப்பையும் பார்க்காது அதேயளவுக்கு தெளிவாகவும் சரியான தகவல்களைக் கொண்டும் பதிலளித்தமை என் நினைவில் உள்ளது.

ஒரு பிரச்சினையை ஆராய்ந்து தேவையான விடயத்தைத் தெரிவுசெய்து பதில் அளிப்பதில் அவரது திறமை குறிப்பிடத்தக்கதாகும். ஜீ7 அல்லது ஐக்கிய நாடுகள் சபை பொதுச்சபை கூட்டத்தின்போது பிரித்தானியா, இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, மற்றும் சீனா விஜயங்களின்போது வெளிநாட்டு பிரமுகர்களின் பார்வை ஆச்சரியமளிக்கும் வகையில் அவரை நோக்கியதாகவே இருந்தது.

## எதிர்காலம் பற்றிய எதிர்வுகூறல்

தற்போது அவர் முகங்கொடுக்க வேண்டியுள்ள சவால்கள் ஏராளம். அவை நாம் அறிந்து வைத்துள்ள வரலாறு அல்லது முன் அனுமானங்களின்படி பார்க்கும்போது எமக்கு சிலவேளை விளங்கிக்கொள்ள முடியாமலும் இருக்கும்.

பொலன்னறுவையில் ஒரு சாதாரண கிராமவாசியாக இருந்து ஜனாதிபதி பதவி வரையான அவரது வாழ்க்கைச் சரிதம் உண்மையாக நிகழ்ந்ததைப் போன்றே, அவரது தலைமைத்துவத்தின் கீழ் மிகவும் வளமான முன்னேற்றமான ஒரு நாடு தொடர்பான உண்மையும் அதேபோன்று நிகழும் என்று நான் நினைக்கிறேன். இது அவரைப் புகழ்வதற்காகக் குறிப்பிடுவதன்றி மனச்சாட்சிக்கு ஏற்ப நம்பிக்கையுடன் குறிப்பிடும் ஒரு விடயமாகும்.

வெற்றி தொடர்பாகக் குறிப்பிடுகையில் 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதி பரக் ஒபாமா அவரது வெற்றி உரையின்போது குறிப்பிட்ட "நாம் எதிர்பார்க்கும் ஒரே மாற்றம் இந்த வெற்றி மட்டுமல்ல. இது அந்த மாற்றத்தை ஏற்படுத்த எமக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை மட்டுமே ஏற்படுத்தும். முன்பு சென்ற பாதையிலேயே நாம் செல்வோமானால் அந்த மாற்றம் ஏற்பட முடியாது" என்ற விடயம் எனக்கு நினைவுக்கு வருகிறது.

பழைய பாதையிலேயே மீண்டும் செல்ல சிலர் முண்டியடித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் இக்கூற்று எமது நாட்டுக்கும் மிகவும் பொருத்தமானது என நான் நினைக்கிறேன்.

மேலும் பின்நோக்கிச் செல்ல விரும்பாத ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்கள் தொடர்பிலும் இது ஒரு உண்மையாகும் என நான் நம்புகிறேன். அரசியல் வாழ்க்கைக்கு வருமாறு அவர் விடுத்த கோரிக்கைக்கு "உடன்படுகிறேன்" என்று நான் குறிப்பிட்ட அந்த நாளை நினைவு கூர்வதுடன், இந்த எதிர்பார்ப்பு மற்றும் இலக்கை அடைவதில் அதிகம் மகிழ்ச்சியடையும் நபர் நானாகவே இருப்பேன் என நான் நினைக்கிறேன்.



# இன்றைய தலைவர்களே இன்றைய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வேண்டும்

**ஜனாதிபதி கௌரவ மைத்ரிபால சிறிசேன அவர்கள் 2016.12.01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை**

எமது நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமான ஒரு துறை குறித்து இன்று கலந்துரையாடப்படுகிறது. தேசிய நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் இன்றைய தினம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள இடர் முகாமைத்துவ அமைச்சு என்பன மிகுந்த முக்கியத்துவம் பெற்ற விடயங்களாகும். இடர் முகாமைத்துவம் பெரும்பாலும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் நிலைமைகளுக்கு முகம்கொடுக்கும் ஒரு அமைச்சாகும். தேசிய ஐக்கியம், நல்லிணக்கம் இல்லாத ஒரு நாட்டில் இனங்களுக்கிடையே ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டம் இல்லையென்றால் அது ஒரு பாரிய அனர்த்தமாகவே

இருக்கும். உலக நாடுகளில் மொழிப் பிரச்சினை, மதப் பிரச்சினை மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் அதிகரித்துள்ள போதும் அபிவிருத்திசார்ந்த பிரச்சினைகள் என ஏராளமான பிரச்சினைகள் உள்ளன. நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பும் கூட மொழி, சமயம், கலாசாரம் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து பேச முடியும். உலக வரலாற்றில் இலட்சக்கணக்கான உயிர்ப்பலிகள் ஏற்பட்டு இரத்த ஆறுகள் ஓடிய சோகமான நிகழ்வுகள் குறித்தும் பேச முடியும். எமது நாட்டில் உள்ள பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்ட ஒரு பிரச்சினையல்ல என்பதை நாம் அறிவோம்.

1930 முதல் 1980 வரையான எட்டு தசாப்தங்களை எடுத்துக்கொண்டால் சிங்கள, முஸ்லிம் கலவரங்கள் மற்றும் சிங்கள, தமிழ் கலவரங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றின் மூலம் ஏற்பட்ட பொருளாதார அழிவுகளைப் பார்க்கிலும் மிக மோசமாக மக்கள் மத்தியில் ஐக்கியம் சீர்குலைதல், அச்சமும் பீதியும் ஏற்படுதல், சுதந்திரம் ஜனநாயகம் மனித உரிமைகள் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதன் காரணமாக சமூகம் சின்னாபின்னமடைந்து போகிறது. 1930 இல் ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் கலவரம் எமது நாட்டு வரலாற்றில் ஒரு மிகப்பெரும் அனர்த்தமாகப் பதிவானது. சிங்கள தமிழ் கலவரத்திற்குப் பின்னர் வடக்கு தலைவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் ஆட்சிக்குவந்த அனைத்துத் தலைவர்களும் தாம் அதிகாரத்திற்கு வருவதற்காகப் பயன்படுத்திக் கொண்டது தொடர்பில் எமக்கு நிறைய அனுபவங்கள் உள்ளன.

எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்காவிற்கும் செல்வநாயகத்திற்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நிறைவேற்ற விடவில்லை. எமது மதிப்பிற்குரிய தேரர்கள் ரோஸ்மிட் பிளேசில் அமைந்துள்ள அவரது இல்லத்தின் முன்னால் போராட்டம் நடத்தினர். பண்டாரநாயக்க தமது வீட்டிலிருந்து வீதிக்கு வந்து அவரது சட்டைப்பையில் இருந்த லைட்டரை எடுத்து, மகா சங்கத்தினர் முன்னால் பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தத்தை தீவைத்து நீங்கள் எதிர்ப்பதாக இருந்தால் நான் அதனைச் செய்யப்போவதில்லை எனக்கூறினார். 1965 ஆம் ஆண்டுக்குப் பின்னர் டட்லி செல்வநாயகம் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்துக்கும் இதேபோன்ற எதிர்ப்புகள் எழுந்தன. டட்லி செல்வநாயகம் ஒப்பந்தமும் இரத்தானது. பிரச்சினைகள் மேலும் மேலும் அதிகரித்தன. நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்குவந்த அனைத்து அரசாங்கங்களும் அமைச்சரவையை அமைத்தபோது எத்தனை

அமைச்சுக்களை வடக்குக்கும் கிழக்கிற்கும் வழங்கினார்கள் என்ற கேள்வி உள்ளது. அப்பகுதியில் நியாயமான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படாமைக்கு இதுவே போதுமான சான்றாகும்.

80 களில் நாட்டில் மிக மோசமான பல பிரச்சினைகள் தலைதூக்கின. 1976 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மேயர் துரையப்பா படுகொலையும் அதற்குப் பின்னர் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கறுப்பு ஜுலை கலவரமும் இந்த நாட்டில் ஏற்பட்ட மிகமோசமான துரதிஷ்ட நிகழ்வுகளாகும். பிரபாகரனின் தலைமையில் எல்ரிரிஈ பயங்கரவாதம் உருவான நிலைமையை நாம் அறிவோம். நாம் அவற்றுக்கு முகங்கொடுத்துள்ளோம். எனது பொலன்னறுவை மாவட்டத்தில் பல இறந்த உடல்களை தோளில் தூக்கிச் சென்றுள்ளேன். எல்லைக் கிராமங்களில் மக்களைக் கண்டபடி வெட்டியும் கொத்தியும் கிராமங்களைச் சீரழித்ததையும், வடக்கு கிழக்கில் மட்டுமன்றி யுத்தம் கொழும்பு நகரத்தையும் தெற்கில் மாத்தறை வரையிலும் கண்டி தலதா மாளிகைக்கும் சென்றதை நாம் அறிவோம். இந்த மோசமான அனுபவங்களுக்கு நாம் முகங்கொடுத்துள்ளோம். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அன்று இருந்த நிலைமையில் இந்து – லங்கா ஒப்பந்தத்தைக் கொண்டுவந்தார். இந்த நாட்டில் இந்த பிரச்சினைகளை சாதாரணமாகவும் இலகுவானதாகவும் பார்க்கின்றவர்கள் இருக்கிறார்கள். நாம் வழங்கப்போகும் புதிய அரசியலமைப்புத் தீர்வுகளை மலினப்படுத்தும் வகையில் அதனை தரக்குறைவாகப் பேசுவது, இந்த நாட்டில் எதிர்காலத்தில் மீண்டும் இரத்த ஆறுகள் ஓடுவதை விரும்புகின்றவர்களாகும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். இந்து – லங்கா உடன்படிக்கைக்கு அன்று இந்த நாட்டில் எதிர்ப்புகள் இருந்தன. ஜே ஆர் ஜயவர்த்தனவின் அரசாங்கத்தில் பிரதமராக இருந்த பிரேமதாச அதனை எதிர்த்தார். அவரது அமைச்சரவை அதனை எதிர்த்தது. நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்புக்கு மத்தியில் பகலில் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து ராஜீவ் காந்தியுடன் ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தன இந்து - லங்கா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இதன் பெறுபேறாக 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு அதன் மூலம் மாகாண சபைகள் முறைமை ஏற்படுத்தப்பட்டது. எனினும் பிரச்சினைக்கு உண்மையான தீர்வு கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாக மாற்றம் பெற்றது மட்டுமன்றி அது சர்வதேச பிரச்சினையாகவும் மாறியது. யுத்தத்தின் காரணமாக அநேகமான இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். இன்றும்கூட தென்னிந்தியாவில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட



இலங்கையர்கள் அகதி முகாம்களில் தங்கியுள்ளார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. இது எமது நாட்டுக்கு அபகீர்த்தியாகும். சர்வதேச மாநாடுகள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களுக்கு முன்னால் சென்று பேசும்போது இது ஒரு அபகீர்த்தி என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

யுத்த காலத்தில் நான் புலிகளின் ஐந்து தாக்குதல்களுக்கு முகங்கொடுத்துள்ளேன். என்னைத் தாக்குவதற்காக வந்த அனைத்து எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகளும் இறந்து விட்டனர். பொலன்னறுவையிலும் சிலர் சயனைட் அருந்தி இறந்து விட்டனர். என்னைக் குண்டுவைத்துத் தாக்குவதற்காக வந்தவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். இந்த நாட்டில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, முதல் கடற்படைத் தளபதி, அரசியல்வாதிகள், பாதுகாப்புத் தலைவர்கள் மற்றும் எமது நாட்டின் சிரேஷ்ட படைவீரர்களின் உயிர்த்தியாகங்களின் காரணமாக யுத்தத்தில் பௌதீக ரீதியாக வெற்றி பெற்றோம். துப்பாக்கிச் சத்தங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தோம். பிரச்சினை தீர்ந்து விடவில்லை என்பதை நாம் அறிவோம். துப்பாக்கிச் சத்தப் பிரச்சினையை வெற்றிகொண்டபோதும் நாடு பிளவுபடும் என்ற கருத்தைத் தோற்கடிப்பதற்கு இன்னும் முடியவில்லை. இந்த நாட்டில் உண்மையான சமாதானம் ஏற்பட்டுள்ளது என்ற கருத்தில் நான் உடன்படவில்லை. சமாதானம் குறித்த பிரச்சினையை மனச்சாட்சிக்கு ஏற்புடையவாறு பேசுவதற்கு தேசிய ரீதியாகவும் சர்வதேச

ரீதியாகவும் இந்த நாட்டை பிளவுபடுத்துவது தொடர்பில் எல்ரிரிஈ அல்லது ஈழம் குறித்து பேசுபவர்களின் கருத்தைத் தோற்கடிப்பதன் மூலமாகும். புதிய அரசியல்யாப்பு தொடர்பாக நாம் கலந்துரையாடி ஒரு சிறந்த நிலையை அடைந்துள்ளோம். பண்டாரநாயக்க யுகம், டட்லி சேனாநாயக்க யுகம், ஜே.ஆர்.ஜயவர்த்தன யுகம், மற்றும் சந்திரிக்கா யுகத்தில் அரசியல் தீர்வைப்பெற்றுக் கொள்ளும் முயற்சியில் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்களை குறைத்துமதிப்பிட்டு நாட்டை பிளவுபடுத்துவதற்கு முயற்சிப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எமது நாட்டில் சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை விதைக்கின்றனர். மதிப்பிற்குரிய மகாசங்கத்தினரிடத்தில் பிழையான கருத்துக்களை ஏற்படுத்துகின்றனர். நாட்டுக்கு வெளியே உள்ள இலங்கையர்களிடத்தில் இணையத்தளங்களினூடாக பிழையான தகவல்களை வழங்குகின்றனர்.

பாதுகாப்புப் படையினரைப் பலவீனப்படுத்துகின்றனர். நாட்டைத் துண்டாடுகின்றனர். பௌத்த சமயத்திற்குரிய இடத்தை இல்லாது செய்ய முயற்சிக்கின்றனர் என்று சொல்கிறார்கள். இவற்றின் மூலம் எதனை எதிர்பார்க்கின்றனர். இதன் மூலம் கடந்த காலங்களில் சில தலைவர்கள் அதிகாரத்திற்கு வருவதற்காக இந்த பிரச்சினையைப் பயன்படுத்திக் கொண்டதைப் போல சில தலைவர்கள் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இப் பிரச்சினையிலிருந்து நழுவிச்சென்றதைப் போன்று, எதிர்க்கின்றவர்கள் எதிர்காலத்தில் அதிகாரத்திற்கு வருவதற்காக சந்தர்ப்பவாதிகளாகவும் குறுகிய அரசியல் அபிலாஷை களுடனும் எத்தகைய சான்றுகளும் இன்றி பேசிவருகின்றனர். அவர்கள் எல்லோரும் இந்த நாட்டின் எதிர்காலத்தில் ஏற்படும் நிலைமைகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் எனவேதான் நாம் மிகத் தெளிவாக ஒரு நிலையான தீர்வை வழங்கியுள்ளோம். ஆன்மீக ரீதியாகவும் கருத்து ரீதியாகவும் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து அரசியல் தீர்வுடன் புதிய அரசியல்யாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த பிரச்சினையில் நாம் ஒரு நேர்மையான அரசாங்கமாக செயற்பட்டுவருகிறோம். இதில் அனைத்து தரப்பினரினதும் நேர்மையான அர்ப்பணிப்பு அவசியமாகும். நாம் வழங்கும் தீர்வு அனைவருக்கும் நியாயமானதொரு தீர்வாக இருக்க வேண்டும். அந்தத் தீர்வு இந்த நாட்டின் சிங்கள, தமிழ் என அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வாக

இருக்க வேண்டும். இந்தப் பிரச்சினை தொடர்பில் பொறுப்புடன் செயற்படும் அனைவரும் இப்பிரச்சினைக்கு உண்மையான தீர்வைப் பெற்றுக்கொண்டு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படையில் செயற்படுவது அவசியமாகும்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றி மக்கள் கருத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தால் மக்கள் கருத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நாட்டில் ஒரு பொதுக்கருத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். கட்சி, சமயம் மற்றும் பிரதேச பேதங்களுடன் செயற்படுவது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதை கடந்தகால அனுபவங்களில் இருந்து நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினை குறித்து பேசுகின்ற அனைத்து தரப்புகளும் பிரச்சினை தொடர்பாக பேசுவதைப்போன்று பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்காக விட்டுக் கொடுப்புடன் செயற்படுவது அவசியமாகும். எமக்குத் தேவை அரசியல் வீரர்களல்ல. எமக்குத் தேவை பிரச்சினைகளை நியாயமாகத் தீர்த்துவைக்கும் வீரர்களே.

தேசப்பற்றும் மனிதாபிமானமும் கொண்ட ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு, சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும்



மதிக்கும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் பாடுபட வேண்டும். அத்தகையதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் விடயத்தில் எதிர்கால அதிகாரம் குறித்த எதிர்பார்ப்புகளை வைத்துக்கொண்டு பிரச்சினையைத் தீர்ப்பதை குழப்புவதாயின் அந்த எதிர்பார்ப்புகளை வைத்துள்ளவர்களுக்கு இந்த நாட்டின் எதிர்கால ஆட்சியை முன்னெடுக்கின்ற வாய்ப்பு கிடைக்கப்போவதில்லை என நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

எதிர்காலத் தேர்தல் அதிகாரத்தை எதிர்பார்த்து பிரச்சினையைத் தீர்க்க முயலும் குறுகிய மனப்பான்மையுடன்தான் கடந்த சில தசாப்தங்களாக மிக மோசமான யுத்த நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிற்று. நாட்டை துண்டாடாமல் தெளிவான ஒரு தீர்வை நோக்கி நாம் செல்ல வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, புதிய அரசியலமைப்பு தொடர்பில் நாம் பேசுகின்ற விடயங்கள் குறித்து அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்ததை நான் பார்த்தேன். அவர், புதிய அரசியலமைப்பு நாட்டை துண்டாடுவதற்காகவே தயாரிக்கப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார். மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் ஒரு அமைச்சராக இருந்தவர் என்றவகையில் இது தொடர்பாக அவர் முன்வைத்த ஒரு கருத்து எனக்கு நினைவிருக்கிறது. 2009 மே மாதம் அதிகாரப்பகிர்வு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை செயலாளரிடம் அவர் கூறிய விடயங்கள் எனக்கு நினைவிருக்கிறது. இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு அவர் தெரிவித்த விடயங்களும் உள்ளன.

எனவே அதிகாரத்தில் இருக்கின்றபோது ஒரு விதத்திலும் அதிகாரம் இல்லாதபோது அதிகாரத்திற்கு வருவதற்காக வேறு விதத்திலும் இந்தப் பிரச்சினையை பயன்படுத்துவதாயின் அது தேசத்தின் துரதிஷ்டமாகும். எனவே இந்த உயர்ந்த சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த நாட்டிலுள்ள படித்தவர்கள், கல்விமான்கள் உள்ளிட்ட அனைவரும் எமது தாய்நாட்டை ஒரு சிறந்த நாடாக ஆக்குவதற்கும் இந்த நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் ஒத்துழைப்புத் தருமாறு நாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின்போது அப்பிரதேசங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சட்டபூர்வ நிறுவனங்களை அமைப்பதற்கு அன்று பாராளுமன்றத்திற்கு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அன்று நான் அரசாங்கத்தில் ஒரு அமைச்சராக இருந்தேன். சுனாமி நிவாரணச்சபை பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அன்றைய ஜனாதிபதி

சுனாமி நிவாரணச்சபை சட்டத்தை பாராளுமன்றத்திற்குக் கொண்டுவந்தபோது எவரும் அதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. நான் அதனைச் சமர்ப்பிக்கிறேன் என நான் அன்று கூறினேன். அன்று நான் சுனாமி நிவாரணச்சபை சட்டத்தை முன்வைத்தபோது சிலர் என்னைச்சுற்றி சத்தமிட்டனர்.

எனவே, எமக்கு தேசத்துரோகிகளாக வேண்டியதில்லை. தேசப்பற்றுள்ளவர்களாக ஆவதற்கு இந்த நாட்டில் அனைவரும் ஒரு நியாயமான தீர்வுக்குச் செல்ல வேண்டும். 19 ஆவது திருத்தத்தில் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சு என்ற ஒரு புதிய அமைச்சு உருவாக்கப்பட்டது. இங்கு சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த நிறுவனத்தினால் ஒரு பயனும் இல்லை எனக்குறிப்பிட்டனர். அத்தகைய நிறுவனங்கள் செயற்படுகின்றபோது எழும் தடைகள் குறித்து அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த நிறுவனங்கள் செயற்படுகின்றபோது வடக்கில் சில தலைவர்களது ஒத்துழைப்பு கிடைப்பதில்லை. நான் எப்போதும் கூறுகின்ற விடயம் இந்த நல்லிணக்க கொள்கையைப் பலப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படுவது அவசியமாகும் என்பதாகும்.

நான் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு நன்றி தெரிவிக்கிறேன். எனது 50 வருடகால அனுபவத்தில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வடக்கிலுள்ள தலைவர்களில் ஒரு சிறந்த தலைவர் சம்பந்தன் என்பது எனது நம்பிக்கையாகும். அப்பாத்துரை அமிர்தலிங்கம் ஒரு சிறந்த தலைவர். அவரையும் எல்.ரி.ரி.ஈ யினர் படுகொலை செய்தனர். சம்பந்தன் வடக்கிற்கு மட்டுமன்றி தமிழத் தேசிய கூட்டமைப்பு என்றவகையில் ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகிறார். இந்த ஒத்துழைப்பு வடக்கு கிழக்கு அரசியல் தலைவர்களிடமிருந்து எப்போதும் கிடைப்பதில்லை என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். எமக்கு இருக்கும் பிரச்சினை நாளை இருக்கும் தலைவர்கள் அல்ல. இன்று இருக்கும் தலைவர்கள் யார் என்பதை கண்டறிந்து பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். எனவே பிரச்சினையை காலம் தாழ்த்துவது தேசத்தின் துரதிஷ்டமாகும். பிரச்சினைக்குத் தீர்வை வழங்காது குழப்புவது நாளை பிறக்கவிருக்கும் பிள்ளைகளுக்குச்செய்யும் ஒரு தேசியக் குற்றமாகும்.

சிலர் அதிகார மோகத்தில் விமர்சனங்களை முன்வைக்க முடியும் என்றாலும் நாம் பிரச்சினைகளை விளங்கிக்கொண்டு



செயற்பட வேண்டும். அந்த பிரக்ஞையும் அறிவும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கிறேன். அறிவுபூர்வமாக பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு நாம் அனைவரும் செயற்பட வேண்டும். நாம் பத்திரிகையாளர் மாநாடுகளை நடத்த முடியும், ஊர்வலங்கள் செல்ல முடியும் என்றாலும் வடக்குக்குச் சென்று அந்த பிரச்சினையை வடக்கு மக்களுடன் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தலைவர்கள் எத்தனைபேர் உள்ளனர் என நான் கேட்கிறேன். அந்த மக்கள் 27 வருடங்களாக முகாம்களில் உள்ளனர் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கச் சென்றால் இங்கு பத்திரிகையாளர் மாநாடுகளை நடத்தி ஊர்வலங்கள் சென்று இராணுவத்திற்கு சொந்தமான இடங்களை பகிர்ந்தளிப்பதாக கூக்குரல் இடுகின்றனர்.

வடக்கு மக்கள் கோருவது அவர்களுக்குச் சொந்தமான காணிகளையாகும். இதுபற்றி பேசுபவர்கள் அவர்களுக்கு. இத்தகைய நிலை ஏற்பட்டிருக்குமானால், யுத்தத்தினால் அவர்களது சொத்துக்களை இழந்திருப்பார்களானால் அதனைக்கோருவது நியாயமற்றதா என நான் கேட்கிறேன். எனவே போலிப் பிரசாரங்களை மேற்கொள்வதை விடுத்து, மக்களை பிழையாக வழிநடத்துவதை விடுத்து, இந்தப் பிரச்சினை குறித்து பிழையான

வியாக்கியானங்களை செய்வதை விடுத்து உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்.

குறிப்பாக இந்த நாட்டின் மகா சங்கத்தினர்களிடம் சிலர் சென்று நாம் நாட்டை துண்டாடுவதாக கூறுகின்றனர். இந்த அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் நாங்கள் நிராகரிக்கிறோம். எனவே நாம் எதிர்கால பிள்ளைகள் சமாதானமாக வாழக்கூடிய வகையில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாத வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.



சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் நாட்டின் அதி உயர் பதவிக்கு வருவது எளிதான விடயமல்ல. உண்மையிலேயே அது ஒரு பாரிய வெற்றியாகும். ஆயினும் அது ஒரு சாத்தியமாகக்கூடிய விடயம்தான் என்பதை ஆசியாவின் அண்மைக்கால வரலாறு கண்முன்னே நிரூபித்துக் காட்டியிருக்கிறது. அதற்கு சிறந்த உதாரணமாக நம் நாட்டின் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை குறிப்பிடலாம். அவரது அரசியல் வாழ்க்கை அர்ப்பணிப்பு திறமை பொறுமை திட நம்பிக்கை தளரா முயற்சி புரிந்துணர்வு போன்றவற்றால் போசிக்கப்பட்டதாகும்.

ISBN : 978-955-1948-07-8

9 789551 948078